உ

பரமபதி துணை.

இராமதேவர்,

திருவாய்மலர்ந்தருளிய,

கற்பம் ஆயிரமென்னும்,

வைத்திய காவியம் ௲.

அரும்பத உரையுடன்

மதுரை, வடக்குமாசி வீதி

வைத்தியம்,

எஸ். வன்னியக் கோனாரவர்களால்

பரிசோதிக்கப் பெற்று

மதுரை, புதுமண்டபம், புக்ஷாப்,

இ. ராம.

குருசாமிக் கோனார் சன்.

அவர்களாற் றமைத்து.

மதுரை, வடக்குமாசிவீதி குருசாமிக்கோனார் தெரு,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது

இதன்] 1933. [விலை ரூ 1—8—0

Registered Copy Right.

உ

பரமபதி துணை.

இராம தேவர் திருவாய் மலர்ந்தருளிய,

கற்பம் ஆயிரமென்னும்,

வைத்திய காவியம் ௲.

காப்பு.

அண்டமெனுங் கேசரியாள் பாதங்காப்பு
அருள்பெருகும் பூரணத்தி னறிவேகாப்பு
குண்டமெனுங் குண்டலியாள் குறியேகாப்பு
குருவான பராபரத்தின் குணமேகாப்பு
மண்டலங்கண் மூன்றுமொன்றாய் நிறைந்துநின்ற
மகத்தான ரவிமதியின் சுடரேகாப்பு
பிண்டமெனும் பொருளான அண்டபிண்டம்
பேரண்டம் நிறைந்தகணே பதிகாப்பாமே. (1)

பதியான பதிநிறைந்த பூரணத்தால்
பக்குவமாய்த் திசைநாதங் கண்டுதேறி
கெதியான மோக்ஷமென நின்றேனப்போ
கேசரத்தின் கேசரியாள் இருபைகூர்ந்து
மதியான மதியமூர்த்த மீய்ந்தாளப்போ
வரிசையுட னுரிசையதாய் வணங்கிப்பெற்றேன்
ததியான காலமென்று மனதுகூர்ந்து
சங்கையுட னுபதேசம்ஆ ஊமென்றாளே. (2)

குண்டலி யென்பது—கணேசர். வல்லபை வீற்றிருக்கு மிடம்.

ஆவென்ற திசைதீட்சை யதிதம்பெற்றே னதன்பிறகு ஊவென்ற வருளைப்பெற்றேன், கூவென்ற நாதமடா மௌனம் பெற்றேன் கூர்மையுடன் மூன்றினுட விவரம்பெற்றேன், சரீ வென்ற சொல்லகற்றுந் தன்மைபெற்றேன் தயவான புலத்தியர் தன் னருளினாலே, மாவென்ற மௌனமதை மனதிற்கொண்டு மகத்தான குருவினுட வளங்கண்டேனே. (3)

வளங்கண்டு குருவினுட வண்மைகண்டு மகத்தான சிவ சத்தி பூசைசெய்து, நலங்கொண்டு சஞ்சாரச் சமாதிகொண்டேன் நன்மையுட னஷ்டதிசை சுற்றும்போது, தலங்கண்டே னத் தலத்தி னுதங்கண்டேன் தயவான மனோன்மணியாள் தன்மை பெற்றேன், உளங்கனியு மனோன்மணியாள் வாவாவென்று வுண்மையென்ற பொருளீய்ந்தா ளுருப்பெற்றேனே. (4)

உருவான பொருளறிந்து வுண்மைபெற்றேன் உண்மை யுடன் வாராம தேவாயென்றாள், கருவான கருக்குருவு மெனக்கே யீந்தாள் கைபாகம் முறைபாகங் கணக்கின்பாகம், திருவான வொருபாகங் குருவின்பாகம் செம்மையுடன் நன்றாகச் செப்பி னாள்பார், குருவான குருவருளா ளாத்தாளென்னைக் கூப்பிட்டுக் காப்பிட்டுக் குறிசொன்னாளே. (5)

குறியான குறியறிந்து மூலம்பார்த்து குணமான வாறு வரை மேலேசென்று, நெறியான சுழிமுனையில் வாசிபூட்டி நேரான மயிர்ப்பாலத் தப்பாற்சென்று, அறிவான மதியிரவிக் கப்பாலேகி யக்கினியின் சுடரதிலே யமர்ந்துநின்று, பறியான பரப்பிரமக் குருவைப்போற்றி பதியான வாயிரத்தெட் டிதழ்கண்டேனே. (6)

கண்டேனே யாயிரத்தெட் டிதழுக்குள்ளே கருணையுள்ள மதியமுர்தங் கருத்தாய்க்கொண்டு, செண்டெனவே யண்டவரை சுற் றித்தானும் திரும்பினே னொருகொடியிற் றிரும்பியந்த, அண்டர் பிரா னருளதனால் முடிவிற்கண்ட வாயிரத்தெட் டிதழ்பெறுக வடி யேன்றானும், விண்டபொரு ளாயிரமாய்ப் பாடியந்த விபரமதைக் கருக்குருவாய் விளம்பினேனே. (7)

ஆறுவரை—ஆறாதாரம். கருக்குரு—முப்பூக்குரு.

விளம்பினசொல் ராமனுட வாக்கியமென்று விருதுபெற்ற சித்தரெல்லா மகிழ்ந்துபோற்றி, நலம்பெறவே யவரவர்க ளெடுத்துப் பார்த்து நன்மையுள்ள வாயிரத்தைப் பதனம்பண்ணி, வளம்பெறவே யிருந்தார்க ளப்போதையா மகத்தான புலத்தியரின் மகிமையாலே, கிளம்பிமிக வப்பதியிற் சித்தரோடே கெணிதமுடன் வாதாடி யிருந்தேன்பாரே. (8)

இருந்துகொண்டு வாதாடிக் கேழ்விபேசி யின்பமுடி வானதொரு வாயிரத்தை, வருந்திமிக வாங்கிநல்லோர்க் கீய்ந்தேனப்பா வரிசையுள்ள வாயிரத்தின் வளமைகேளு, அருந்தவமா மந்திரத்தி னதிகசித்து வருமையுள்ள வழலைமுறை யானவாறு, தெரிந்துகொண்டு முப்பூவின் குருவின்வாறு தெவிட்டாத காயாதி கற்பவாறே. (9)

வாரான வசியமுத லெட்டுவித்தை மகத்தான திலதமொடு மையின்போக்கு, கூரான செயநீரின் மெழுகின்போக்கு கூர்மையுள்ள செந்தூரச் சரக்கின்போக்கு, நேரான வேதையிலே யனந்தம்போக்கு நிட்டைமுதற் சமாதினுட கற்பப்போக்கு, தேறாத மனத்தோர்க்கு ஞானப்போக்கு திறமான நுட்பமுதல் சாற்றுவேனே. (10)

திறமான சகலசித்து மாதியந்தம் தீர்க்கமுள்ள வாதியந்த மண்டபிண்டம், உறவான அண்டபிண்ட நாதவிந்து வொடுங்கி நின்ற தலமதுதா னண்டமாச்சு, பரமான வண்டமடா வாதியுப்பு பகருகின்ற வாதியுப்பு கல்லுப்பாச்சு, சிரமான கல்லுப்பாஞ் சுத்தவெள்ளை சிவசிவா வென்னசொல்வேன் பிர்மமாச்சே. (11)

ஆச்சப்பா பிரமமென்ற கபாலந்தன்னை யரனெடுத்து வுலகமதி லமுதுகொண்டார், பேச்சப்பா பேசாம லமுதுகொண்ட பெருமையினாற் சிவனெனவே பேருண்டாச்சு, நீச்சப்பா வெகுநீச்சு வண்டக்கூறு நேர்மையுள்ள வண்டமடா வழலையாச்சு, பாச்சப்பா வண்டமென்ற வழலைதன்னைப் பாடுகிறேன் கருக்குருவாய்ப் பாடுவேனே. (12)

வேதை—ரசவாதம். வழலை பூநீர்.

வ ழ லை

பாடுகிறேன் வழலைமுறை நன்றாய்க்கேளு பரமான வண்டமென்ற கல்லைவாங்கி, நாடுகிறேன் கல்லூரலி லிட்டுக்கொண்டு நலமாக விருப்புலக்கை யதனாற்குத்தி, வாடுகிறேன் வகையென்ன மாப்போல்க்குத்தி வரிசையுடன் மாவாக்கி யதன்மேலப்பா, கூடு கிற சுத்தசலந் தன்னிற்போடு கூர்மையுடன் கரைத்திறுத்து மறுநாள்தானே. (13)

தானேதா னிறுத்திடுவாய் பத்துமுறையப்பா தயவாக விறுத்துநன்றாய் ரவியிற்போடு, வீணேதான் றிரியாமல் மன தாய்ப்பார்த்து விபரமுடன் காய்ந்தபின்பு சொல்லக்கேளு, தேனென்ற பழச்சாற்றிற் பொடியைக்கொட்டி திறமாக வடுப் பேற்றிக் குமுறக்காச்சி, வானென்ற நீர்வற்றக் காய்ச்சினக்கால் மகத்தான கல்லுப்புக் கசிவுபோச்சே. (14)

கசிவான யெண்ணைகக்கி வெள்ளையாச்சு கருணையுள்ள வண்டமென்ற கல்லுப்புத்தான், உசிதமுள்ள பூநீரென் றிதற்குப்பேரு உரிமையென்ற வழலையென் றிதற்குப்பேரு, சுசிதமுள்ள வுவருப்பென் றிதற்குப்பேரு சுத்தமுள்ள விந்துவென் றிதற்குநாமம்வசிகரமா மாதியுப்பு வென்றும்பேரு மகத்தான சிவமென்ற பேருமாச்சே. ()

பேரான சிவத்துக்குச் சத்திகேளு பெருமையுள்ள அகாரமொடு உகாரம் ரண்டும், கூரான அகாரமடா விந்துவிந்து குறியான உகாரமடா நாதநாதம், நேரான நாதவிந்து காரசாரம் நேர்மையுட னதன்விபரம் நன்றாய்க்கேளு, பாரான பிருதிவியு மப்புமாச்சு பகருகின்ற வப்புமுப்பு மொன்றாய்ப்போச்சே. (16)

ஒன்றாகச் சேர்த்துநன்றாய்க் கரைத்துக்கொண்டு வுரிமையுடன் றெளியவைத்துத் தெளிவைவாங்கி, நன்றாகப் பீங்கானில் வார்த்துநல்ல ரவிமுகத்திற் காயவைப்பாய் நீர்கள்வற்ற, சென்றடா ரவிமுகத்தில் நன்றாய்க் காய்ந்தால் சிவசிவா வுப்புநிற மென்னசொல்வேன், பன்றான பரப்பிரம வஸ்துவுக்கு பசுமையுள்ள சத்தியுப்பு வென்றும்பேரே. (17)

விந்து—ரசம், பூநீர்—முப்பு

பேரான சத்தியென்று மிதற்குப்பேரு பெருமையுள்ள நாதமென்று மிதற்குப்பேரு, கூரான காரமென்று மிதற்குப் பேரு கூர்மையுள்ள பூரமென்று மிதற்குப்பேறு, நேராகச் சத்தி சிவ மொன்றாய்க்கூட்டி நேர்மையுள்ள பழச்சாற்றாற் கரைத்து மைந்தா, மாராத ரவிமுகத்தில் வைத்தால்நல்ல மீர்க்கமுட னிரண்டுமொன்றா யுப்பாய்ப்போச்சே. (18)

உப்பான வுப்பதற்கு நாமங்கேளு வுரிமையுள்ள வாதி யென்றும் பரமாமுப்பு, செப்பாத பரத்துக்கு வுயிரேதென்றால் சிவசிவா சொல்லுகிறே னன்றாய்க்கேளு, தப்பாமற் சொல்லுகிறே னாகாசந்தான் றன்மையுள்ள சத்தமடா நாதமாச்சு, அப்பான வாதியென் விந்துவோடே யருமையென்ற நாதமதை நன்றாய்ச்சேரே.

சேர்த்துநன் றாகநீர் விட்டுவாட்டித் திரமாக வீராறு சாம மாட்டி, பார்த்துநன்றாய்ப் பதமாக வட்டுப்பண்ணி யரிதியென்ற ரவிமுகத்திற் பதமாய்வைத்து, கார்த்துநன்றாய் நீர்வற்றக் காய்ந்த தானால் கணீலென்ற சத்தமடா வுப்புவேகம், போற்றிமிக வோட்டில்வைத்து வோடுமூடி பூட்டுவாய் தெரியாமல் மணந் தான் செய்யே. (20)

செய்துநன்றாய்க் காய்ந்தபின்பு நலமாய்க்கேளு சிவபூசை நன்றாகச் செய்துகொண்டு, மெய்யதனாற் சற்குருவைத் தொழுது போற்றி விபரமுடன் மனதறிந்து புடத்தைப்போடு, கைதவரா மனதாகக் காருகாரு காய்ந்துநன்றாய்த் தணலாறி யெடுத்துப்பாரு, கொய்தமலர் முப்பூவை யென்னசொல்வேன் கூர்மையுட னீறி யது சுண்ணமாச்சே. (21)

சுண்ணமென்று மிதன்பெருமை சொல்லக்கேளு சருக் கான கடுங்காரச் சுண்ணமாகும், விண்ணான வாதியுப்புச் சுண்ண மென்றும் விருதுபெற்ற வழலையுட சுண்ணமென்றும், கண்ணான மதியிரவி சுண்ணமென்று கருவான முப்பூவின் சுண்ணமென்று, வண்ணனைதன் மார்க்கமுள்ள சுண்ணமென்று வரிசையுட னுரிசை யுள்ள சுண்ணமாச்சே. (22)

முப்பூ-சகலநீற்றி னத்தின்குரு. பழச்சார்-எழுமிச்சம்பழச்சார்.

ஆச்சப்பா விந்தமுறை சுண்ணப்போக்கு வாயிரத்தைப் போலொருநூல் சொல்லாதையா, பேச்சப்பா பேசுதற்கு நாவு முண்டோ பெலராம தேவனுட னூலைக்கண்டால், மூச்சப்பா வோடாது முன்பின்னாக முனையான சுழிமுனையில் நடனங் காணும், காச்சப்பா கசடான வறிவைநீயுங் கசடகற்றி வாயி ரத்தைப் பாருபாரே. (23)

பாரப்பா முப்பூவை யெடுத்துக்கொண்டு பாங்கான குப்பி யிலே பதனம்பண்ணி, காரப்பா சதாசிவத்தை வாசிகொண்டு கருவான வாசியினால் மூலம்பாரு, நேரப்பா வம்மூலஞ் சுழினை மூலம் நேரான மூலமடா வண்டமாச்சு, கூரப்பா வடிமூல மேலா தார குணமான வாதாரப் போக்கைக்கேளே. (24)

போக்கான போக்கறிந்து போக்கைக்கண்டு போக்குவரத் தாகிநின்ற புதுமைகாணூர் வாக்கான மனதறிந்து போக்கைக்கண் டால், வஸ்தாகி நின்றதலம் வண்மைகாணும், தாக்கான வளமை தனைக் கண்டால் மைந்தா, தருவான வைந்துருவு முனக்கேசித்தி நாக்கான ருசிதனையு மறிந்தாலந்த, நலமான வைந்துருவு முனக்கேசித்தி. (25)

முப்பொருளின் அடி நடு மூலம்.

சித்தான முப்பொருளின் விபரங்கேளு சிவசிவா வடிநடுவு முடியுமாச்சு, முத்தான வடிவென்று வுகாரமாச்சு மூர்க்கமுள்ள சத்தியென்று மிதற்குப்பேரு, வித்தான நாதமென்றுங் காரமென் றும் விசையான சருகென்று மமுர்தமென்றும், வத்தான வாசி யென்றும் பூரமென்று மகத்தான பச்சையென்று முப்பூவாமே. ()

ஆமப்பா வடிமூலஞ் சொன்னேன்மைந்தா வரகார நடு மூல மார்தான்காண்பார், நாமப்பா சொல்லுகிறோம் அகாரமாச்சு நடுவான வகாரமடா சிவந்தானாச்சு, தாமப்பா சிவமென்று லாரறியப் போறார் தயவான சிவமதுதான் விந்துவிந்து, வாமப்பால் மதி நிறைந்த கங்கையென்று மகத்தான சயிலமென்றுஞ் செய நீரெண்ணே. (27)

கெங்கை—சுத்தசலம். சதாசிவம்—அண்டம்.

நீரான செயநீரென் றிதற்குப்பேரு நினைவான சாரமென் றிதற்குப்பேரு, கூரான ஆசிநீருப் பென்றும்பேரு குருவான வுப்பென்று மப்பென்றும்பேரு, ஊரான கங்கையென்றுஞ் சமுத் திரந்தானென்று முண்மையுள்ள வறுவகையென் றிதற்குப்பேரு, தாரான சடாதார வமுர்தமென்று தயவான விந்தென்று விரமாச்சே. (28)

விரமென்ற நடுவான வகாரஞ்சொன்னேன் விசையான முடி மூலஞ் சொல்லக்கேளு, தாரமென்ற நடுவான வகாரபீடந் தய வான மௌனமடா வாதியாதி, பாரமென்ற வாதியென்று மதற்குப் பேரு பரமான சத்தமென்று மதற்குப்பேரு, காரமென்ற வெடி யுப்பு வென்றும்பேரு கமலமென்றுஞ் சிப்பியென்று மிதற் குப்பேரே. (29)

பேரான வாகாசப் புரவியென்றும் பிலமான கும்பிடுகல் லென்றும்பேரு, நேரான காரமென்றும் ரவிதானென்றும் நிலை யாத பாரமென்றுங் கல்லுப்பென்றும், கூராத வெள்ளையென்றுங் கும்பமென்றும் குணமான வாணக்கல் லென்றும்பேரு, மாராத மௌனமென்றும் பொருள்தானென்றும் மகத்தான வழலையென் றும் பேருண்டாச்சே. (30)

ஆமப்பா வழலையுப்பு வதீதஞ்சொன்னே மாயிரத்தெண் கமலமதி லமுர்தமுண்டு, தாமப்பா சொன்னகரு வாயிரத்திற் சமுசயங்க ளில்லாமல் வழலைசொன்னோம், வாமப்பா விந்நூலிற் கருவுகோடி வகுத்துரைத்தார் சித்தர்களு முனிவர்தாமும், காமப் பால் கானற்பா லிரண்டுங்கொண்டு கருவான வாயிரத்தைக் கருவாய்ப்பாரே. (31)

கருவறியா மாந்தருக்குக் கருச்சொல்லாதே க்ருவுருவா யிரத்துக்குக் கருச்சொல்லாதே, உருவறியா ருருவிந்த வுகமை காணார் உருவமற்ற திருவறியா ரொடுக்கங்காணார், மருவறியார் மலரினுட வாசங்காணார் வாசமுள்ள பூமலரில் மனதுகூர்ந்து தருவான வைந்தருவா மமுர்தவண்டந் தன்மையுள்ள வண்ட மடா வமுர்தமாமே. (32)

ஆழாரத்தேன்கமலம்—பிரம மிருக்குமிடம்.

ஆமப்பா மூன்றினுட விபரஞ்சொல்லி யன்பான முப்பூவின் விபரஞ்சொன்னேன், நாமப்பா சொன்னவுப்பு விபரந்தானும் நாதாக்கள் சொல்லார்கள் கருவாய்ச் சொன்னேன், தாமப்பா வாயிரத்தின் சகஸ்திரந்தன்னை தன்மையுடன் பூரணமாய்த் தான்கண்டோர்கள், காமப்பால் மதியமுர்தச் சுண்ணப் போக்கை கருவாள ரறிவார்கள் மற்றோர்காணார். (33)

காணாத கருத்துடையார் மெத்தவுண்டு காசினியிற்கண்டறிந்துநா வடக்கிப்பேசு, தோணாத பொருளதனைத் தோற்றிவிக்குஞ் சுரூபமுள்ள வாயிமாஞ் சகஸ்திரந்தன்னை, பேணாத மாந்தருக் கீயவேண்டாம் பேணிநின் றவர்களிடம் பேசவேண்டாம், கோணுமற் குருபதத்தைப் பூசைபண்ணி கூர்மையுட னுயிரத்தைப் பூசைபண்ணே. (34)

வெடியுப்புச் சுண்ணம்.

பண்ணப்பா வின்னமொரு கருவைக்கேளு பருவமுடன் வெடியுப்புச் சுண்ணஞ்சொல்வேன், கண்ணப்பா வெடியுப்பு வைந்தாங்காய்ச்சல் கம்பியுப்புக் கொண்டுவந்து சொல்லக்கேளு நண்ணப்பா பீங்கானி லுப்பைக்கொட்டி நடுவான பச்சைநீர் விட்டுக்கிண்டி, விண்ணப்பா ரவிமுதத்தி லுலரப்போட்டு விபரமுடன் பத்துமுறை யிப்படியேகாய்ச்சே. (35)

காய்ச்சிநன்று யெடுத்திடவே யுப்பில்நின்றுற் கசடான ஆறலற்றுக் கட்டிப்போச்சு, தாட்சியில்லாக் கட்டாச்சுவ டிதானப்பா தன்மையுடன் கட்டினது தந்தம்போலாம், மாய்ச்சல்செய்யு மூறலற்றுக் கட்டுமுப்பூ மகத்தான விந்துப்பு வென்றும்பேரு, நீச்சென்று நீச்சான வுப்புச்சுண்ணம் நினைவாகச் சொல்லுகிறே மனதாய்க்கேளே.

கேளடா வெடியுப்புப் பலமோபத்து கிருபையுள்ள விந்துவும் பலமோபத்து, நாளடா சருகதுவு மதற்குரெட்டி நலமாக விந்துநீர் தன்னுலாட்டி, கோளடா வாராம லாறுசாமங் குழுறவே யரைத்தபின்பு பழச்சார்விட்டு, மாளடா வரைத்திடுவா யைந்துசாம மார்க்கமுட னரைத்தபின்பு வட்டுப்பண்ணே. (37)

நடுவான பச்சைநீர்—அமுரி. சருகு—மலப்புளி.

பண்ணியதோர் வட்டதனை ரவியிற்போட்டு பசுமையாய்க் காய்ந்தபின்பு சுரண்டிப்பாரு, உண்ணியே கனீரென்று சத்தங் கேட்டால் உத்தமனே வோட்டில்வைத்து வோடுமூடி, தண் ணியே மண்சீலை வலுவாய்ச்செய்து தன்மையுடன் குளிவெட்டிப் புடத்தைப்போடு, புண்ணியனே புடமாறி யெடுத்துப்பாரு பொருமிவெகு சுண்ணமதாய் நீறிப்போச்சே. (38)

போச்சென்று விடுக்காதே கடுங்காரமாகப் போக்கொன்று சொல்லுகிறேம் நன்றாய்க்கேளு, பேச்சொன்று மில்லையடா கல்வத் திட்டு பேணியே நாதர்நீர் விட்டுவாட்டி, மாச்சென்று விடுக் காமல் நன்றாயாட்டி மார்க்கமுடன் முன்போலே காயப்போடு, காச்சென்ற காய்ச்சலது நன்றாய்க்காய்ந்தால் கருவாகப் புடம் போட நீறிப்போச்சே. (39)

நீறிநின்ற நீறதுவு மதிககாரம் நீள்புவியில் மாந்தருக்குச்சொல் லவேண்டாம், கூறிநின்ற சுண்ணமதைப் பதனம்பண்ணிக்குருவான பராபரத்தைத் தொழுதுபோற்றி, தேறிநின்று மனதறிவால் மனதைக் காரு தேருத மனமானல் சித்துபொய்யாம், ஆறிநின்று அசார மதைச் செபித்துக்கொண்டு வரகரா வின்னமொருசுண்ணங்கேளே

கற்பூரச் சுண்ணம்.

சுண்ணமென்ற வெடியுப்புச் சுண்ணஞ்சொன்னேன் சுரூப முள்ள கற்பூரக் கட்டிவாங்கி, திண்ணமுடன் வானென்ற செய நீர்வாங்கி செம்மையுடன் முப்பூவிற்பண விடைதான்போட்டு, வண்ணமுடன் றெளிவிறுத்துச் சுண்டக்காய்ச்சி வளமைபெறப் பதினறு திட்சைசெய்து, நண்ணயமாய்க் கலக்கிரவி முகத்தில் வைக்க நன்மையுடன் றெளிந்ததுவு நாதமாச்சே. (41)

நாதமென்ற நீர்தன்னைப் பீங்கானில்விட்டு நன்மையுள்ள கற்பூரக் கட்டிதன்னை, சேதமிக வாராமல் தோய்த்துத்தோய்த்து திறமாக ரவிதனிலே காயப்போடு, பேதமிக வாராமற் பத்துமுறை காய்ச்சு பெலமாக இறுகியது கட்டிப்போகும், நீதமுடன் கட்டி யதற் கடையாளமென்ன நிட்சயமாய்த் தீபமதற் கேருதொன்றே.

நாதநீர்—அண்டக்கரு. வானென்ற செயநீர்—சவுக்கார செயநீர்.

ஒண்டான பொருளெல்லா நாதமாகு முடன்சேர்ந்த கரு வெல்லாம் விந்துவாகும், பண்டான சேதியிது முப்பூவாகும் பார் மக்கா ளிப்பூவில் சாரஞ்சேரில், குண்டாத சலமாகு மச்சலத்தில் குருவான துருசியதிற் றேய்த்துத்தோய்த்துக், செண்டான ரவி தனிலே காயப்போடு சிவசிவா பொருமியது சுண்ணமாச்சே. ()

ஆச்சப்பா ரசந்தனிலே சுண்ணம்போட்டு அருளான செயநீரை விட்டரைத்து, பேச்சப்பா வொன்றுமில்லை வட்டு பண்ணி பேய்மக்கா ளோட்டில்வைத்துச் சீலைசெய்து, காச்சப்பா காடையென்ற புடத்தைப்போடு கணபதிக்கும் வடுகனுக்கும் பூசை பண்ணு, மூச்சப்பா போகாம லடங்கிநீறு மூதண்ட மானதொரு குருவுமாச்சே (44)

குருவிலொரு பணவிடைதா னெடுத்துக்கொண்டு கூசாமற் றேனதிலே யீந்தாயானால், தருகாதே மேகமொடு வாங்குங்குஷ் டந் தாழ்வான சூலையொடு பௌத்திரங்கள், மருகிவருங் குன்ம மொடு மூர்ச்சைவாய்வு மண்டியிடு மேலீளைச்சல் வயிறுகாந்தல், கிருகிருப்பு நீரிழிவு பவுத்திரங்கள் கெடியாகக் கண்டவுட னோடிப்போமே. 45)

போமேதான் முன்குருவில் விராகனெட்டு புகழுடைய ரசபற்பம் விராகனொன்று, ஆமேதா னிரண்டுமொன்றாய்ச் செய நீர்விட்டு அமர்த்தியே யரைத்துருட்டிக் கயிறுசெய்து, தாமேதா னிழலுலர்த்திப் பதனம்பண்ணித் தனியிஞ்சிச் சாற்றிலிடச் சய ரோகங்கள், நாமேதான் குளிர்சுரங்கள் சன்னிதோஷம் நாடாம லோடிவிடும் நயந்துபாரே. (46)

நயந்துமிகக் கொண்டாடி ராமனாலே காட்டுவா யஷ்டாங்க முழுதுமாடும், பயந்துமிக விந்நூலைப் பதனம்பண்ணி பார் தனிலே யொருத்தருக்கும் பகரவேண்டாம், தோய்ந்துமிக வுன் னுடைய பாதந்தன்னைத் தொழுதுகொண்டு செய்பவர்க்கிந் நூலீய் வாய்நீ, சயந்தனிலே யிப்புகுந்த வாறுபோலே தான்றிறியுஞ் சண் டாளர் தனக்கீயாதே. (47)

காடைப்புடம்—ஒரெருப்புடம்.

துருசுச் சுண்ணம்.

தனதாக வின்னமொரு கருவைக்கேளு தாயான மனோன்மணியாள் தந்தவித்தை, மனதாகச் சொன்னமடா மகிழ்ந்துகேளு மங்கையுட நாதமடா வாலைவாலை, செனனமா மில்லையினித் தாயைப் போற்றி செகசோதி யானதொரு காயைவாங்கி, குணமாகக் கமலைப்பால் தன்னிற்போடு குமுறவே தீயெரித்து வவித்திடாயே. ( )

அவித்தபத மென்னவென்றாற் கிள்ளிப்பாரு ஆவெண்ணெய் போலிருந்தா லிறக்கிவைத்து, தவித்து மிக வாடாதே சர்க்கரைதேனூட்டி தயவாகப் பிசைந்துருட்டித் தாயைப்போற்றி, குவித்துமுக வருதிங்கள் சென்றுபாரு கூறவொண்ணு வெங்காயச் சுண்ணமாச்சு, பவித்திட்டே முப்பூவும் பூரச்சுண்ணம் பக்குவமா யிடைக்கிடையே சேர்த்துக்கொள்ளே. (49)

சேர்த்துநன்றாய்ப் பழச்சாற்றாற் சாமமாட்டித் திறமாக வில்லைசெய்து காயவைத்து, போர்த்துமிகச் சற்குருவைத் தொழுது போற்றி பூப்புடத்தில் வைத்தெடுக்கச் சுண்ணமாகும், பார்த்திபனே யிச்சுண்ணம் பதனம்பண்ணி பங்கயத்தின் றெரிசனத்தைப் பற்றிக்கொண்டு, பூத்தமலர் வாசனையாற் கற்பங்கொண்டு பூரணத்தைப் பற்றிமன தறிவில்நில்லே. (50)

அறிவான பூரணமே தெய்வந்தெய்வம் ஆலயத்துத் தெய்வமெல்லா மாசுவாகும், குறியான சுழியறிந்து வாசிபூட்டிக் கும்மெனவே தப்பித்துக் குறிகண்ணூட்டி, சரியான பதினெட்டு வெழுத்துக்கெல்லாந் தானவனாய் நின்றதோ ரெழுத்தைக்கண்டால், பரியான பரதேசி நீயேயாகும் 'பக்குவமா யாயிரத்தைப் பதனம்பண்ணே. (51)

பதனமதா யாயிரத்தைப் பற்றிப்பாரு பார்க்கையிலே மனதறிவாற் பாருபாரு, விதனமெல்லாந் தானகன்று வறிவுண்டாகும் வேதாந்தச் சித்துமிக வறிவிற்றங்கும், சதமான வட்டசித்துந் தானேதோற்றுஞ் சதாசிவத்தி னருள்பெருகித் தான்றாகி, மதமான வாங்கார மடிந்துபோகும் மகத்தான சிவயோகி யாவாய்பாரே. (52)

காய்—அண்டம். திங்கள்—ஒருவாரம்.

சவர்க்காரம்.

பாரப்பா சவர்க்காரஞ் சொல்லக்கேளு பாடினார் சவர்க்காரம் வெவ்வேருக, நேரப்பா தெட்சணு மூர்த்திதானும் நிலைத்திட்டா ராயிரத் திருநூறுக்குள், சாரப்பா சவர்க்காரம் நன்ருய்ச்சொன்னார் தருவான புலத்தியர்தன் கடாட்சத்தாலே, பேரப்பா நான்பெற்ற தவப்பேருலே பெருமைவிட்டு வாயிரத்தைப் பேசினேனே. (53)

பேசினதோர் சவர்க்கார மென்னவென்ருற் பேரண்ட மான தொரு வண்டபிண்டம், வாசிநிறைந் திருந்ததொரு வண்டபிண் டம் மகத்தான சத்திசிவ வுப்புவுப்பு, கூசிமனம் போகாம லுப்பு வாங்கி கூர்மையுடன் றகர்த்துக்கல் லுரலிற்ருக்கி, பாசிமனக் கசடகற்றி யிருப்புக்கோலால் பக்குவமாய் நொருக்கிநன்ரு யிடித் துப்போடே. (54)

இடித்துநன்ருய்த் தோண்டியொரு பாண்டத்திட்டு இள சான வமுரியிட்டுக் கரைத்துமைந்தா, பிடித்துநன்ருய்க் கரைத் தரவி முகத்தில்வைக்கப் பிரியமுடன் மறுநாள்தா னிறுத்துப் போடு, வடித்துமிக முன்போல வமுரிவிட்டு வரிசையுடன் பத்து முறை சுத்திசெய்து, துடித்துமனம் பதருமல் மைந்தாமைந்தா சுருக்கான ரவிமுகத்திற் காயப்போடே. (55)

போட்டுநன்ருய் காய்ந்தபின்பு வுரலிற்ருக்கிப் புத்தியுட னிடித்துநன்ருய் மாவதாக்கி, தேட்டிமையா யம்மாவிற் சேரு தற்கு திறமாக மருந்துவகை செப்பக்கேளு, தாட்டிமையாய்ச் சரு கோடு வீரம்பூரந் தயவான வெடியுப்பு இந்துகூட்டி, நாட்டுவாய் நவச்சாரங் கல்லுப்போடு நலமான துரிசுடனே பூரீர்தானே. ()

தனதாக ராமனுட வைத்தியத்தைத் தாரணியில் விள் ளாதே தனதாம்வித்தை, மனதாக வின்னமொரு கருவைக்கேளு மானிலத்திற் சகலபிணி மாண்டுபோக, இனமான வண்டமென்ற கல்லைவாங்கி யிடுசமனுய்ப் பிண்டமென்ற நாதந்தானும், குண மாக ரவிபீச மொட்டிலொன்று கூட்டியே விரவிநன்ருய்க் கூறக்கேளே. (57)

பேரண்டம்—அண்டம், பிண்டநாதம்—கெந்தகம்.

கேளப்பா வாய்குவிந்த கலசந்தன்னிற் கெட்டியா யிட்டுமே லோடுமூடி, ஆளப்பா தமரிட்டுச் சீலைசெய்து ஆனகுழித் தைலமதை யனபாய்வாங்கு, சூளப்பா குப்பிதன்னிற் பதனம் பண்ணிச் சுந்தரஞ்சேர் சர்க்குருவைத் தொழுதுபோற்றி, வாளப்பா யிக்கருவை வெளிவிடாதே மணிமந்திர வழிதமாய் வணங்கிப்பாரே. (58)

பாரப்பா யித்தைலம் பதனம்பண்ணிப் பார்தனிலே மனிதருக்கு வருநோய்க் கெல்லாம், காரப்பா பணவிடைதா னுவிற் றீத்த கரைகாணு தேரடிவிடு மின்னங்கேளு, சீரப்பா குளிர் சுரமுந் தோஷம்போகுஞ் சிவசிவா மகோதரமுங் குட்டசூலை, நேரப்பா வோடிவிடுந் தைலப்போக்கு, நிசஞ்சொன்னேன் குரு வருளைத் தேர்ந்துகூடே. (59)

கூடவே யின்னமொரு குருவைக்கேளு குவிந்ததொரு முட்டையிலே யைந்தாந்திங்கள், நாடவே யினமறிந்து கருவை வாங்க நானென்று சொல்லுகிறே னன்றாய்க்கேளு, வாடவே வேண்டாங்காண் ரவிபிரசத்தில் மாட்டுவாய் களஞ்சியெடை வெல் லங்கூட்டி, போடவே மூன்றுநாள் காய்வெதும்பி பொற் கொடிக்கு விதனமண்டி வருகுந்தானே. (60)

தானென்ற காரியங் கட்டிவாங்கிச் சாற்றுவாய் முப்பூவைக் கீழ்மேலிட்டு, கோனென்ற பிங்கானில் வைத்துநல்ல கொடிக் கள்ளிப் பாலிலொரு சேரைவார்த்து பானென்ற ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க படபடத்து வுருகியது பசுமையாகி, மானென்ற மெழுகுபத மாகிநிற்கும் மக்களே யிம்மெழுகைப் பதனம்பண்ணே.

பண்ணியதோ ரிம்மெழுகை யுலகத்தோர்க்குப் பகராதே யிந்நூலை வெளிவிடாதே, உண்ணியதோர் பொருள்கோடி குவித் திட்டாலு மொருத்தனுக்கு மிராமனுட னூலீயாதே, தண்ணி மையா யுன்னிடத்திற் றெண்டுபண்ணிச் சதாகால முனதுபதஞ் சார்வோர்க்கெல்லாம், புண்ணியமா யிதனிலொரு பொருளைச் சொல்லு புத்தியுடன் குருபதத்தைப் பூண்டுபாரே. (62)

ரவிமுகம்—சூரியன்: தீத்தல்—தடவுதல்.

பூண்டுகொண்டு பூரணமே தெய்வமென்று, புத்தியுடன் மனதறிவாற் பூசைபண்ணி ஆண்டுகொண்டு வவள்பதத்தைத் தொழுதுநின்று, லரகரா சிவயோக மதுதாலுண்மை வேண்டு வது பூரணத்தை வேண்டவேண்டும், வேதாந்தப் பதியில்மன நிறுத்தவேண்டும், தூண்டாத மணிவிளக்கைத் தூண்டவேண் டும் தூண்டுவது பூரணத்தாற் றாண்டிப்பாரே. (63)

பாரப்பா சத்தியுட பூசைசொன்னேன் பரமகுரு ராம னுடவாக்கியத்தால், சாரப்பா ரேசகபூ ரகமும்பண்ணிச் சார்ந்து கொண்டு கும்பத்திற் சார்ந்தாயாகில், நேரப்பா குருவினுட பதியைப்பாரு நேர்ந்துகொண்டு வப்பதியில் நினைவைத்தாக்கி, கூரப்பா ரகுராம தேவனென்று கொண்டாடி யிந்நூலைக் கூர்ந்துபாரே. (64)

கூர்ந்துபார் கொங்கணவர் நூலைப்பாராய் கொண்டதிலே பட்சணியின் குருவைப்பாராய், தேர்ந்துகொண்டு வெந்தனுட நூலைப்பாராய் தெரிந்ததிலே யைம்பதுமுப் பதுவும்பாரு, சாந் தமாய்ப் பொதியைமுனி சூஸ்திரத்தில் தன்மையுள்ள பட்சணி யில் சார்ந்துபாரு, நேர்ந்துபா ரெந்தநூல் தன்னிலேதா னிச் சயமாய் வைத்தியத்தை நிறுத்தினேனே. (65)

நிறுத்தியொரு கருமையைச் சொல்லக்கேளு, நேரான தாமரையின் கொடியைவாங்கி கறுத்ததொரு காரமை ஓட்டில் வைத்துக், கனலடுப்பிற் றனெரித்துக் கருக்கிக்கொண்டு, பெருத்த தொரு வைங்கோலத் தைதயிலந்தன்னில் பிரளவே யரைத்து வொரு சிமிழில்வைத்து, நிறுத்தியே குருபதத்தைப் பூசித்தேதா நேரான குருபதத்தை நினைவிற்காணே. (66)

காணவே சிமிளெடுத்துக் காற்றில்வைத்துக் கனகமணிப் பூரணத்தைத் தியானஞ்செய்து, பேணவே ரேசகபூ ரகமுஞ்செய்து பிலமாகக் கும்பகத்தில் திலதம்போட்டு, தோணவே நோயாளி தன் னைப்பாரு தொடர்ந்தபிணி ஓடிவிடுஞ் சொன்னேனப்பா, பூணவே மையெடுத்து நாவில்தீற்றப் பொல்லாத தோஷமொடு காசம்போமே (67)

தாமரையின்கொடி-ஆதிக்கொடி, ஐங்கோலம்-அழிஞ்சித்தையிலம்.

காசம்போம் விஷப்பாண்டு கண்டமாலை கபாலவிஷ சூலை முதல் கன்னப்புற்று, பேசவொண்ணு நெஞ்சடைப்பு மூர்ச்சை வாய்வு பின்மூல மின்மூலம் பீதரோகம், பூசலற்றுச் செய்கின்ற குன்மரோகம் போகாத நோய்களெல்லாம் போவதற்கு, வாச முள்ள மையெடுத்து நிவிலத்திற்றி வஞ்சகமாய்க் கண்ணிலிட வாங்கிப்போமே. (68)

போமப்பா வின்னமொரு சேதிகேளு பூவான பூரசத்தின் சேதிசொல்வேன், நாமப்பா வைங்கோலத் தைதயிலந்தன்னி லைந்து தர முறுக்கியதைச் சாய்ப்பாயாகில், ஓமப்பா நீர்வற்றிக் கட்டிப் போகு முற்பனமாய் முப்பூவைக் கவசஞ்செய்து, ஆமப்பா வை தெருவிற் புடத்தைப்போடு அப்பனே நீ நியது சுண்ணமாச்சே. ()

சுண்ணமொரு பணவிடைதான் றேனிற்கொள்ளத் துலை யாத வெட்டையொடு சூலைபோகும், எண்ணவொண்ணுச் சயமீளை யிருமல்போகு மெழுந்தபுற்றுக் கிரந்திமுதற் பதினெட்டும்போம், திண்ணமுடன் பித்தநாற் பதுவும்போகுந் தீராதபட்சமென்ற வாதம் போகும், அண்ணமென்ற வுண்ணுக்கில் ரோகம்போகு மறைய வெண்ணு வியாதியெல்லா நேயமாமே. (70)

நேயமுட னாதியந்தக் காயங்கண்டால் நிலைத்துதடா வாத சித்து யோகந்தானும், பாயமென்ற வஷ்டமா சித்திகாணும் பாங் கான பரலோகம் வெளியாய்க்காணும், காயமென்ற சடலமது வழி வோயில்லை கரைகாணு யேமமென்ற பொருள்தான் தோன்றும், மாயமென்ற வுலுத்தர்களோ காணப்போகார் மகத்தான மதி யமூர்த தேகமாச்சே. (71)

ஞானம்.

ஆச்சப்பா தேகமென்ற வருளைக்காணர் அருளான பூரணத்தி னுதிகாணர், பேச்சப்பா பூரணத்தின் பெருமைசொல்வேன், பெரு மையுள்ள சதுரகிரி முடியில் மைந்தா, பாச்சப்பா சதுரகிரி முடி யைக்கண்டால் பதிவான கொடிமுடியில் குகைதானுண்டு, வாச் சப்பா வக்குகையில் வாசிதேவர் வாசிபதி வாசியென்று தவஞ் செய்வாரே. (72)

பூரசம்—சிறுகண்நாகம்; ஆதியந்தம்—அண்டச்சவுக்கராம்,

தவஞ்செய்த சற்குருவாம் வாசிதேவர் தன்மையுட னவர் பதத்தைப் பூசைசெய்து, நவஞ்செய்து நவக்கிரக மறிந்தேனந்த நடுவான மனுக்கிரக மெங்கேயென்றேன், சிவஞ்செய்த சிவமகிமை தன்னாலந்தத் திருவான வனுக்கிரகந்தோன்று மென்றார், பவமான நந்தியொளி தன்னில்நின்று பார்த்தனடா வனுக்கிரகம் பதி வைத்தானே. (73)

பதியான பதியறிந்து பதியிற்செல்ல பரமான வாசியின் மேற் பற்றியேறி, கெதியான மோட்சமென்று சொன்னேனந்த கேசரத்தி னனுக்கிரக கிரியையாலே, மதியான பிரபையொளி தன்னிலேறி மகத்தான ரவியொளியி லமுர்தங்கண்டேன், நதியான மதியமுர்த பூரணமேயென்று நன்மையுடன் கண்டுகொண்டு நின்றேன்பாரே. (74)

பாரப்பா பதியறிந்து தலத்தில்நின்றேன் பண்பாக நிற்கை யிலே வாசிதேவர், நேரப்பா மனதுகந்து வடியேன்றன்னை நிச்சய மாய் வாராம தேவாவென்று, ஆரப்பா வுனக்கீடு சொல்லப் போறே னாறிவா ரம்பலத்தி னருளைக்கண்டாய், காரப்பா சமாதி நிட்டை யோகதீட்சை கருத்துறவே யெட்டிரண்டும்ப த்தென்றாரே.

பத்தென்று சொன்னவுடன் பற்றியேறிப் பதியறிந்து பதி யுடனே பத்தைக்கண்டு, சித்தென்று பூரணத்தைச் சிமிழில் வாங்கிச் சிவமான பூரணத்தைக் கையிலேந்தி, வித்தென்று ரண்டு மொன்றாய்க் கூடும்போதில் விளக்கொளியின் றீபமதை யென்ன சொல்வேன், முத்தென்று பூரணத்தைக் கொண்டதாலே முத்த னென்றும் பேரானேன் முழுதுந்தானே. (77)

தானான பூரணமே சமூலம்வாங்கித் தன்மையுள்ள ரவி பீசங் கூடச்சேர்த்து, ஊனான காயாதி கர்ப்பமென்று வுண்மை யுடன் பரணிதனிற் பதனம்பண்ணி, கோனான குருபதத்தைத் தொழுதுபோற்றி குருவான கற்பமென்று குறித்துக்கொண்டு, தேனான வமுர்தமெனக் கொண்டேனந்த சிவயோக சமாதி கற்பத் தியல்புதானே. (77)

எட்டேன்பது—அகாரஞ், சந்திரன்.

சவர்க்காரச் சுண்ணம்.

இயல்பாக முன்சொன்ன சவர்க்காரத்தை யின்பமுள்ள சுண்ணமதாய்ச் செய்வதற்கு, மயலாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு மார்க்கமுள்ள பழச்சாற்றிற் ருேய்த்துத்தோய்த்து, நய மான ரவிமுகத்தில் நவநாட்போடு நாடிநின்ற வெண்ணெயெல் லாங் கக்கிப்போகும், செயமான சவர்க்காரத் தெண்ணெய்போலச் சிவசிவா சவர்க்காரங் கட்டிப்போச்சே. (78)

கட்டிநின்ற சவர்க்காரங் கல்வத்திட்டுக் கணக்காகச் சரி யிடையாய்க் காரசாரம், திட்டமுள்ள வீரமுடன் பூரஞ்சேர்த்துச் சிவசிவா யைந்துமொன்ருய்க் கூட்டிக்கொண்டு, சட்டமுள்ள வறு வகைநீர் தன்னுலாட்டிச் சமரசமா யாட்டிநன்ருய் வட்டுப்பண்ணி, இட்டமுடன் ரவிமுகத்திற் காயப்போடு ஈரம்வற்றிக் காய்ந்த பதஞ் சுக்காம்பாரே. (79)

சுக்காகக் காய்ந்தபின்பு வோட்டில்வைத்துச் சுகமாக வலு வறிந்து புடத்தைப்போடு, தொக்காகப் புடமாறி யெடுத்துப்பாரு சுகமான சுண்ணும்பு யென்னசொல்வேன், சிக்காத பொருள்க ளெல்லா மிதிலேசிக்குஞ் சிவசிவா சரக்குகளுங் கட்டிப்போகும், தக்காத பொருள்களெல்லாந் தக்குந்தக்குந் தயவான சுண்ணமதைப் பதனம்பண்ணே. (80)

பண்ணினதோர் சுண்ணும்பு முப்புவாச்சு பதிவான சவர்க் காரச் சுண்ணமாச்சு, புண்ணியனே வழலையென்ற சுண்ணமாச்சுபூமி தனில் விளைவான பூநீருச்சு, தண்ணிமையா யிச்சுண்ணங் காரச்சுண் ணந் தயவான கடுங்காரக் கல்லுச்சுண்ணம், திண்ணமுள்ள சுண்ண மதிற் செயலைக்கேளு திருவான பூரணத்திற் சேர்த்துக்கொள்ளே

சேர்த்துநன்ருய்ப் பிசைந்துரவி முகத்திற்வைக்கச் சிவ சிவா பூரணத்தின் செயலைச்சொல்வேன், பூத்தமலர் வாசனைதான் பூரம்பூரம் பூரணத்தின் வாசனையைப் புகலப்போமோ, பார்த்தி பனே பூரணந்தான் மெழுகாய்ப்போகும் பக்குவமா யம்மெழுகைப் பரணிதன்னில், சாத்திநன்ருய்ப் பரணிதனைப் பதனம்பண்ணித் தன்மையுடன் பூரணத்தைப் பணிந்துபோற்றே. (82)

காரம்—சீனிக்காரம். சாரம்—நவச்சாரம்.

பணிந்துமிகப் பூரணத்திற் பணவிடைதான்கொள்ளப் பர மான தேகமதற் கழிவேயில்லே, கணிந்துமிக மண்டலமே கொண்ட போது காயமதிற் சட்டைதள்ளிக் கசடுபோகும், தணிந்துமிக வாண் டொன்றிற் சகலசித்துந் தானுகத் தோன்றுமடா தன்மையாக, முனிந்திரண்டு வாண்டுதனி லட்டசித்து முக்கியமுடன் ருேணுமடா முழுதுந்தானே. (83)

கட்டுவகைச் செய நீர்.

தானென்ற சவர்க்காரச் சுண்ணத்தோடே தன்மையுள்ள சார மது பத்துக்கொன்று, மானென்ற கல்வமதில் மத்தித்தாக்கால் மார்க்கமுட னிளகிவரும் பதத்தில்மைந்தா, பானென்ற பீங்கானில் வழித்துவைத்துப் பரிதிமுகங் காணும லரையில்வைக்க, தேனென்ற சலமாகு மைந்தாபாரு திறமான காசியென்ற குப்பிவாங்கே. ()

வாங்கியந்தக் குப்பிதனிற் றெளிவிறுத்து மார்க்கமுடன் மறுபடியும் நிழலில்வைக்க, பாங்குபெற நீர்சொலிக்கு நீரைவாங்கிப் பத்துமுறை யிப்படியே பதமாய்வாங்கி, சாங்கமாய்க் குப்பிதனிற் பதனம்பண்ணிச் சார்வான செயநீரில் வீரம்பூரம், ஆங்கதி கொண் டேயதிலே பொடித்துப்போட்டு வரகரா ரவிமுகத்தில் வைத்துப்பாரே. (85)

பார்க்கவே ரவியொளிதா னீரிற்சென்று பரிதிநீர் செந் நீராம் செயநீர்மைந்தா, ஏர்க்கையுட னின்னீர்தான் கட்டுவகை செயநீ ரெட்டோடு சரக்கையெல்லா மிருத்திக்கட்டு, மார்க்கமுட னின்னீரைப் பதனம்பண்ணு மகத்தான கட்டுவகை செய நீரப்பா, ஆர்க்குமிதை யரையாதே யமர்ந்துகொண்டு வாயிரத் தின் கருவறிந்து ராமாவென்னே. (86)

என்னவே யின்னமொரு செய்திசொல்வே னின்பமுட னுயிரத்தெட் டிதழைப்போற்றி, முன்னமே சொன்னசவர்க் காரச்சுண்ண முக்கியமுடன் கல்வத்தி லிட்டுக்கொண்டு, சுண்ண மதற் கெட்டிரண்டு வீரஞ்சேர்த்து சுத்தமுள்ள புழுகதுவும் பத் துக்கொன்று, நன்னயமாய்க் கல்வத்தி லரைக்கும்போது நன்மை யுட னிளகிமெழு காகும்பாரே. (87)

பூரம்—பச்சைக்கற்பூரம். ரவிமுகம்—சூரியன்பார்வை.

பாரப்பா மெழுகெடுத்து வுருட்டிநல்ல பதிவான பீங்கா னிற் பக்கத்தப்பி, சேரப்பா பூரணசங் திரிகைதன்னி னினைவாக வைத்திருக்கச் சலந்தானூறும், வாரப்பா குப்பிதனில் வார்த்துக் கொண்டு மார்க்கமுடன் பின்னுநீ வைத்துப்பாரு, காரப்பா விப் படியே பத்துமுறைவைக்க கருவாக ஊறுமடா செயநீர்தானே. ()

தானென்ற செயநீரைக் குப்பிக்கேற்றி தன்மையுடன் பத் னமதாய் வைத்துப்போற்று, ஊனென்ற விந்துநீ ரிதுதான்மைந்தா வுறுதியுள்ள விந்துநீ ரார்தான்காண்பார், கோனென்ற வின் னீரைச் சரக்கில்மைந்தா கூர்மையுடன் சுருக்கிடவே கட்டிநல்ல, தேனென்ற செந்தூர நிறம்போலாகுந் திறமாக வின்னீரைப் பதனம்பண்ணே. (89)

பதனமுள்ள கட்டுவகை செயநீர்சொன்னேன் பக்குவ மாய்ச் செந்தூர நீருஞ்சொன்னேன், விதனமெல்லாந் தீர்வதற்கு வுப்புச்சொன்னேன், விசையான சவர்க்கார விரிவுகொண்டு பதல மதா யைங்கோலத் தைலஞ் சொன்னேன் பக்குவமாய்ப் பூரண த்தின் வகையுஞ்சொன்னேன், சதமாக விருப்பதற்கு கற்பஞ் சொன்னேன் றயவாக வின்னமொரு சேதிகேளே. (90)

மெழுகுவகைத் தைலம்.

கேளப்பா மெழுகுவகைத் தைலந்தன்னைக் கெணித முடன் சொல்லுகிறேன் கேளுகேளு, நாளப்பா பூர்வமாம் பக்ஷ நாளில் நலமான வாதியந்தக் கருவைப்பற்றி, வாளப்பா தன்னாலே மார்க்கஞ்செய்து வரிசையுட னிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, கோளப்பர் வாராமற் காரசாரங் குறிப்புடனே ரண்டுமொன்றாய் கூட்டிக்கொள்ளே. (91)

கூட்டிநன்றாய் ரவிமுகத்தி லுலரப்போடு கூர்மையுடன் பழச்சாறு விட்டுக்கிண்டி, நாட்டிநன்றா யிப்படியே பத்துமுறை செய்தால் நலமான காரமடா கட்டிப்போச்சு, தாட்டிகமாய்க் கட்டிநின்ற காரத்தோடே தயவாக வாதியந்தக் கருவைச்சேரு, மாட்டிடுவாய் வீரமுடன் பூரம்ரண்டு மார்க்கமுடன் கணக்காகச் சேர்த்துப்போடே. (92)

ஆதியந்தக்கரு—அண்டத்தின் நாதவிந்து.

சேர்த்துநன்ருய்ப் பிசைந்துருட்டி வட்டுப்பண்ணிச் செம்மை யுடன் ரவிமுகத்திற் காயப்போடு, கார்த்துநன்ருய்க் காய்ந்தபின்பு கலசத்திட்டு கருவாகக்குழித் தைலமிறக்கிக்கொண்டு பார்த்திபனே தைலமதைப் பரணிதன்னிற் பருவமுடன் விட்டுநன்ருய்ப் பதனம் பண்ணி, பூத்தமலர் வாசனைபோற் பதனம்பண்ணு புண்ணியனே மெழுகுவகைத் தைலமாச்சே. (94)

திலதவகைத் தைலம்.

ஆச்சப்பா மெழுகுவகைத் தைலஞ்சொன்னே னப்பனே திலதவகைத் தைலங்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை கரிச லுப்பு பேணியே கொண்டுவந்து பாண்டத்திட்டு, பாச்சப்பா தண் ணீரை விட்டுமைந்தா பக்குவமாய்க் களிப்போலே கிண்டிக் கொண்டு, காச்சப்பா ரவிதனிலே காயப்போடு கமலமென்ற வண்டமதைப் போட்டுச்சேரே. (94)

சேர்த்துநன்ருய் பிசைந்துருட்டி வட்டுப்பண்ணித் திற மாகக் காய்ந்தபின்பு பாண்டத்திட்டு, கார்த்துநீ குழித்தைலம் நன்ருய்வாங்கிக் கருணைபெறக் குப்பிதனைப் பதனம்பண்ணி, பார்த்திபனே சற்குருவின் பாதம்போற்றி பராபரத்தி னருள் பெருகப் பருவமாகத், தேற்றிமனம் பூரணமாய் பூரணத்தைலஞ் செப்பாதே நூலிருக்கு தென்றுதானே. (95)

அஞ்சனத் தைலம்.

தானென்ற திலதவகைத் தைலஞ்சொன்னேன் றன்மை யுட னஞ்சனத்தின் தைலஞ்கேளு, கோனென்ற குருவருளாற் சொல்வேன்மைந்தா குருவான வைங்கோலச் சமூலம்வாங்கி, வானென்ற வாளரத்தாற் கண்டமாக்கி மார்க்கமுடன் கல்லுரலி லிட்டுக்கொண்டு, நானென்ற வாணுவத்தா லிருப்புக்கோலால் நையவே யிடிக்கையிலே தாரஞ்சேரே. (96)

சேரப்பா தாரமுடன் காரசாரஞ் செம்மையுடன் சேர்த்து நன்று யிடிந்துமைந்தா, தூரப்பா கனத்ததொரு பாண்டத்திட்டு சுகமாக ரவிமுகத்திற் காயப்போட்டு, காரப்பா தினந்தோறுங் கிண்டிகிண்டி கசிந்ததொரு நீர்வற்றிக் காய்ந்ததாலல், வீரப்பா செய்யாமல் ரவிபிசந்தான் விபரமுட னவ்வளவு சேர்த்துக்கொள்ளே.

கரிசலுப்பு—பூநீர் உப்பு. ஐங்கோலச்சமூலம்—அண்டச்சமூலம்.

சேர்த்துநன்றாய்க் காகமதி லிட்டுக்கொண்டு செம்மையுடன் குழித்தைலம் நன்றாய்வாங்கி, பார்த்திபனே சற்குருவைத் தியானம்பண்ணிப் பதிவான தைலமதைப் பரணிதன்னில், வார்த்து மிகப் பரணிதனைப் பதனம்பண்ணு வரிசையுட னீசானம் வணங்கிக்கொண்டு, தேற்றிமனந் தறிவாலே யறிவிற்கூடி திகம்பரமாமம்பரத்திற் சேர்ந்துநில்லே. (98)

நில்லென்று நிலையறிந்து நிலையினின்று நிட்சயமாய் மதியமுர்தம் பூசைபண்ணி, சொல்லொன்றுந் தவறாம லறிவிற்கூடி துருவமுள்ள வாயிரத்தைப் பூசைபண்ணி, சல்லென்று மடிபிடிக்குஞ் 'சமயத்தோரை தானகற்றி யவர்களிடம் பேசவேண்டாங், கல்லென்ற கல்லறிந்து களலைத்தாண்டி கற்பூர தீபமதைக் கண்ணுற்பாரே. (99)

கண்ணான மனக்கண்ணாற் றன்னைப்பார்த்து கமலமென்ற வாயிரத்தெட் டிதழைப்போற்றி, ஒண்ணான மூலமதி லொளியைக் கண்டு வுறுதியுடன் வாசியைநீ யொளியிலேற்றி, கண்ணான மூலமதி லாராதாரங் கருவான மூலமடா மேலாதாரம், விண்ணான மேன்மூல மாராதாரம் விள்ளுநேற றுதியந்தங் தனதாம்பாரே. ()

பாரப்பா வாதியந்த மண்டபிண்டம் பகர்ரார்கள் சிவயோகப் பண்புள்ளோர்கள், நேரப்பா ராமனுட வாக்கியந்தன்னி னிட்சயமாய்ச் சடாதாரக் கோர்வைதோன்றுஞ், சாரப்பா சாரமெல்லாந் தோன்றுமென்று தயவாகச் சித்தர்கள்தா னிந்தநூலே, ஆரப்பா வறிவார்கள் குகைக்குள்வைத்து வழுத்திமிகப் பதனமதாய் வைத்தார்பாரே. (101)

பாரான குகையினிடஞ் சென்றேனந்த பதிவான சித்தரெல்லா மொன்றாய்க்கூடி, நேராக வாராம தேவாவென்றார் நிச்சயமா யவர்கள்பதம் பணிந்தேனப்போ, கூறுதபொருளை யெல்லாங் கூறலாமோ கூறினதை செபத்தோர்கள் கண்டாரானல், தேராத யோகியெல்லாந் தேறிப்போவார் செம்மையுடன் கைலாயமிடங்கொள்ளாதே (102)

பரணியென்பது—குப்பி.

கொள்ளாத பொருளையெல்லாங் கூறுவாரை கொண்டருள வேண்டுமென்று கேட்டாரப்பா, நல்லோர்க ளறிந்துகுறை தீர வேண்டி நாட்டினேன் சமுசயங்க ளில்லாமற்றான், சொல்லாத விடங்களிலே யிந்தநூல்தான் செலுத்தினவர் சிரசுவெடித் திருக்குமென்று, சொல்லாமற் சொன்னதொரு சாபஞ்சொன்னேந் துருவமுள்ள வாயிரத்தைப் பதனம்பண்ணே. (103)

மாரணத் தைலம்.

பண்ணப்பா வஞ்சனத்தின் தைலஞ்சொன்னேன் பக்குவமாய் மாரணத்தின் தைலங்கேளு, விண்ணப்பா ஞானியென்ற வண்டம்வாங்கி விபரமுடன் கருவெடுத்து வதனோடொக்க, பெண்ணப்பா பேய்நரியி னஞ்சுகூட்டி பேசாம னஞ்சுபா ஷாணங் கூட்டி, நண்ணப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு நாட்டிநன்று யரைத்திடுவாய் மெழுகுபோலே. (104)

மெழுகான பதங்கண்டு வழித்துமைந்தா விபரமுடன் பீங்கான்றன் பக்கத்தப்பி, நழுகாமல் ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க நன்றாகச் சூடேறித் தைலமீறும், குழுகுழென்ற தைலமதா யிருக்குமப்பா கூறாகப் புஷ்டியெல்லாங் கரைந்துபோகுஞ், சுளுக்கான தைலமா ரணத்துக்காகுஞ் சுத்தமுள்ள குப்பிதனிற் பதனம்பண்ணே. (105)

பதனமிகப் பதனமதாய் பதனம்பண்ணு பார்தனிலே யின்னூலைக் காட்டாதையா, வதனமுள்ள மகத்துகளுக் கிடறுசெய்யும் வஞ்சகர்க்குச் சங்கார முருத்திரனாகும், விதனமென்ற விதனமெல்லாந் தீர்க்குமிந்த விசையான தைலமடா யார்தான்செய்வார், சதமான கருவிகா ணுதியான சங்கற்ப மானதொரு தைலந்தானே.

தானான தைலமடா யார்தான்செய்வார் தன்மையுள்ள சித்தரடா செய்வாரப்பா, ஊனான கருமான மென்னசொல்வேனுறுதிவெகு வுருதியடா வுண்மையுண்மை, கோனான குருவருளாற் சொன்னதிந்தக் குருவான வாயிரத்தைக் குணமாய்ப்போற்றி தேனான மதியமுர்தங் கொண்டால்மைந்தா செம்மையுட னட்டசித்துங் கைக்குள்ளாமே. (107)

ஞானி அண்டம்—கோழிமுட்டை. நஞ்சு—பித்து.

அட்டசித்துத் தைலம்.

ஆமப்பா மாரணத்தின் தைலஞ்சொன்னே னரகராவட்ட சித்துத் தைலங்கேளு நாமப்பா சொல்லுகிறே னன்றுய்க்கேளு நலமான காயமடா வைங்காயந்தான், வாமப்பா வாலையைத்தான் பூசைசெய்து மகத்தான மனதில்தா னெண்ணிக்கொண்டு, தாமப்பா தகர்த்துவொரு பாண்டத்திட்டு தவறுமற் காடிவிட்டுக் கலக்கிடாயே. (108)

கலக்கிரவி முகத்தில்வைத்து கருவைக்கேளு கருவென்ற வீரமுடன் பூரஞ்சேர்த்து, பிலக்கவொரு துடுப்பிட்டு வடுப்பி லேற்றிப் பிரியமுடன் றீயெரிக்கும் வகைக்கேளு, சலக்கரணை யாகவே மைந்தாமைந்தா சருகுகம்பு விறகதனுற் றனலைத்தாக்கு, துலங்கமதாய் நீர்வற்றிக் கடுகின்மேலே தோன்றுமடா யெண்ணை நல் லெண்ணைதானே (109)

தானென்ற யெண்ணைதனை வடித்துக்கொண்டு தயவான வகலப்பீங்கான் றன்னிலூற்றி, கோனென்ற சற்குருவைத் தொழுது போற்றிக் குணமாகச் சில்லிட்டுச் சீலைமூடி, மானென்ற ரவிமுகத் தில் வைத்தால் மைந்தா மகத்தான யெண்ணையது துஞ்சாதையா, கானென்ற ரவிபடா திருந்தாலையா கருவான யெண்ணையது துஞ்சும்பாரே. (110)

பாரப்பா துஞ்சிநின்ற யெண்ணைவாசம் பார்க்கவென்று நல்லெண்ணை யீடோயில்லை, காரப்பா யெண்ணையந்த யெண்ணை யாகும் கருக்குருவாய் நின்றதொரு யெண்ணைதன்னை, சேரப்பா மனந்தேறிப் பதனபண்ணு சிவசிவா பதனமதாய் வைத்துக் காரு, ஆரப்பா வறிவார்களாதியந்த மன்பான யெண்ணைதனைப் பதனம்பண்ணே. (111)

பதனமுட னெண்ணையது பதனம்பண்ணி ப்க்குவமாய்க் கடுகதுவும் பதனம்பண்ணி, சதமான சற்குருவைத் தியானஞ் செய்து சதாகாலம் பூரணத்திற் சார்ந்துகொண்டு, அதமான புத்தியைத்தா னகலத்தள்ளி யாயிரத்தைத் தானெடுத்து வன் பாய்ப்பார்த்து, சுதமான தொழிலெடுத்துச் சுகத்தைப்பாரு தூண் டாத மணிவிளக்கின் சுடரைப்போற்றே. (112)

ஐங்காயம்—பிண்டம். சருகுகம்பு—யெட்டிவிறகு

போற்றியே யத்தீப்சுடரினின்று பொருளான பரம வெளி தன்னிலேறி, ஆற்றியே யாதார மூலதார மண்பாக வாறு வரை யருளைப்பெற்று, தேற்றியே வாசிகொண்டு திறமாயேறித் திறமாக வாயிரத்தெட் டிதழைப்போற்றி. காத்துமிக மதியமுர்தங் கொண்டால்மைந்தா கருணையுள்ள பூரணமாந் தேகமாமே. (113)

சர்வமோகத் தைலம்.

ஆமப்பா வட்டசித்துத் தைலஞ்சொன்னே னரகரா வின்னமொரு தைலங்கேளு, நாமப்பா சொல்லுகிறே னாட்டி லுள்ள நலமான சிவசெந்து வவற்றினுக்கு, தாமப்பா சருவ மோகத் தைலஞ்சொல்வேன் றரணிதனி லின்னூலைக் காட் டாதையா, வாமப்பா மதியாலே மதனைநாத மனம்பற்றி விளை யாடு மங்கைதானே. (114)

தானென்ற மங்கையடா வங்கமங்கந் தயவான வங்கமடா நீலிநீலி, தேனென்ற நீலியடா வவுரிப்பச்சை தெவிட்டாத போதமடா சமூலவாங்கி, மானென்ற சமூலமதைக் கண்டமாக்கி மகத்தான கல்லுரலி லிட்டுக்கொண்டு, கோனென்ற கெந்தியுடன் றுரம்வீரங் கூர்மையுடன் சிவசத்தி யொன்றாய்த்தாக்கே. (115)

தாக்கியொன்றாய் நன்றாக விடித்துகொண்டு தப்பாமற் றுளிதனிற் றேண்டிமைந்தா, பாக்கியமாய் ரவிதனிலே காயப் போடு பண்பாக நீர்வற்றிக் காய்ந்ததானால், தூக்கியே மறு பாண்டத் திட்டுமைந்தா சுகமாகக் குழித்தைலஞ் சுருக்காய் வாங்கி, நோக்கியொரு பரணிதன்னி லிட்டுநன்றாய் நுண்மை யுடன் வாய்மூடிச் சீலைசெய்யே. (116)

சீலைசெய்து பூமிதனிற் சமாதிவைத்து திறமாக மண்ட லஞ்சென் றெடுத்துப்பாரு, மாலையிட்ட தைலமடா அன்னி நல்ல மஞ்சள்நிறம் போலிருக்கு மைந்தாபாரு, வாலையென்ற தைலமடா வென்னசொல்வேன் மகத்தான தைலமடா வாலை யாச்சு, ஆலமென்ற வாலையடா சொல்லபோமோ சுகமாகத் தைலமதைப் பதனம்பண்ணு. (117)

பரமவெளி—அண்டஆகாயம். அவுரிபச்சை—நாபிக்கோடி.

பண்ணியதோர் தைலவகை யெல்லாஞ்சொல்வேன் பரமகுரு வருளாலே மைந்தாகேளு, உண்ணியே மூலமதின் மனதைவைத்து வுறமடா வாசியைநீ யுறுதிபண்ணி, சென்னி தனிற் றீபமதில் வாசிபூட்டி திறமாக வாசியினுன் மௌனங் கொண்டு, நன்னியே பூரணத்தைப் பூசைபண்ணி நற்கமலத் தாயிரத்தை நன்றாய்ப்போற்றே. (118)

போற்றியே யாயிரத்தைக் காட்டாதையா பூரணமாய் மனதடக்கி யறிவிற்சேர்ந்தால், நாற்றிசைக்கு முன்னுடைய கீர்த்தி யுண்டு நாவடக்கமில்லாமற் வெளியிற்போட்டால், பார்த்திபனே யுன்னுடம்பைக் காணமாட்டாய் பஞ்சுதனி லக்கினிபோற் பற்றிப் போகும், கூற்றனென்ற மறலியவன் கொடுமைசெய்வான்கூர்மை யுட னுயிரத்தைப் பதனம்பண்ணே. (119)

பண்ணப்பா பதனமிகப் பதனம்பண்ணு பார்தனிலே கருக்குருவைப் பகரவேண்டாம், கண்ணப்பா மனக்கண்ணாற் கனலைத்தாண்டி கருவான வாருதலங் கடந்தப்பாலே, விண்ணப்பா நடுமையம் ரவியின்வீடு மேலான பராபரத்தின் வீட்டுக்குள்ளே, நண்ணப்பா வவ்வீட்டி லொளிதானுண்டு நலமான விண்ணி னொளி யாகாசமாச்சே. (120)

ஆச்சப்பா வாகாய மாதியந்த மங்லமென்றப் பிருதிவியா மங்கமங்கம், ஆச்சப்பா வங்கமென்ற வாதியந்த மருமையுள்ள பொருளதுவும் பேசவேண்டாம், காச்சப்பா ரவியிலொரு கருவைக் கேளு கருணையுடன் கருவான கடுக்காயாகும், பாச்சப்பா பரிவு டனே நீயுமேதான் பதிவான கடுக்காய்ச்சூரணத்தைக்கேளே. ()

கடுக்காய்ச் சூரணம்.

கேளப்பா கடுக்காயாண் டென்றதாகுங் கிருமையுள்ள செங்கடுக்காய் வாங்கிக்கொண்டு, ஆளப்பா வக்கடுக்காய் விரைதான் போக்கி யப்பனே சமூலங்கை வசமேசெய்து, கோளப்பா வாராம லிற்றுக்கிக் குமுறவே யிடித்துநீ பாண்டத்திட்டு, நீளப்பா பழச்சாறு விட்டுநன்றா நிட்சயமாய்க் கிண்டிநன்றாய் ரவியில்வையே.

நடுமையம்—மூலாதாரம். ரவிவீடு—சூரியன்வீடு.

வைத்ததவு மறுதினம்நீ வடித்துப்போட்டு மார்க்கமுடன் பின்னுமந்தப் படியேவார்த்து, சுத்தமுட னிப்படியே பத்து முறை செய்தாற் சுகமான கடுக்காயின் குடிலப்போச்சு, பத்தி யுடன் குடிலமது நீங்கிப்போன பதிவான கடுக்காயின் பொடியை வாங்கி, வெற்றிபெற ரவிமுகத்திற் காயப்போட்டு விசையாகக் காய்ந்தபின்பு வின்னங்கேளே. (123)

கேளடா காய்ந்தபொடி தன்னைவாங்கிக் கிருபையுடன் கல் லுரலி லிட்டுக்கொண்டு, தூளடா போலவுமே யிடித்துக்கொண்டு சுகமான பாண்டத்தி லிட்டுக்கொண்டு, பாளடா போகாமற் காடி வார்த்து பக்குவமாய்க் கிண்டிமறு பாண்டத்தூற்றி, கோளடா வாராமற் றெளியவைத்துக் கூர்மையுடன் றெளிவிறுத்துக் குணத் தைக்கேளே. (124)

குணமென்ன வுறைந்துநின்ற புஷ்டிவாங்கிக் கூர்மை யுடன் பீங்கானில் வழித்துப்போட்டு, கணமென்ன ரவிமுகத்திற் காயப்போடு கசிவான நீர்வற்றிக் காய்ந்ததானால், தனமென்ன விதற்குநிக ருண்டோபிள்ளாய் தன்மையுடன் றூளாகப் பொடித் துப்போடு, மனமென்ன விப்படிக்குப் போதாதென்ன மகத்தான வமூர்தசர்க் கரையுமாச்சே. (125)

வல்லாரைச் சூரணம்.

ஆச்சப்பா கடுக்காய்ச்சூ ரணத்தைச்சொன்னே னன்பாக வல்லாரைச் சூரணத்தைக்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை வல் லாரைதான் பேணியே முளைத்ததோ ராறுமாதம், கூச்சப்பா வல் லாரை கொண்டுவந்து குணமாகச் சமூலமதா யுலர்த்திக்கொண்டு, மாச்சன்மிகச் செய்யாமன் மைந்தாகேளு மார்க்கமுட னிடித்துத் தூளாகப்பண்ணே. (126)

தூளாகப் பண்ணியதோர் பொடியைத்தானுஞ் சுகமாகப் பாண்டமதி லிட்டுக்கொண்டு, பாளான பசுவின்பா லமுரிரண்டு பக்குவமாய்ச் சரியிடையாய்ப் பாண்டத்தூற்றி, நாளான மறு நாள்தா னிறுத்துப்போட்டு நன்மையுடன் மறுபடியு முன்போல் வார்த்து, கோளான் கோளறவே யிறுத்துப்போடு குணமாக விப் படியே பத்துமுறைசெய்யே. (127)

கோளறவே—குச்சி, காம்பு, நீங்க.

செய்யவே கசடற்றுத் துய்யவெள்ளை செம்மையுட னிருக்குமடா வல்லாரைதான், பையவே தானெடுத்து ரவியிற்போடு பாலகனே யீரம்வற்றக் காய்ந்ததானால், நையவே கல்லுரலில் மாப்போலப்பண்ணி நன்மையுட னேவிட்டுப் பிசைந்துரைந்தா, உய்யவே பீங்கானி லெடுத்துவைத்து வுத்தமனே ரவிமுகத்திற் காயப்போடே. (128)

போட்டுநன்றாய் ரவிமுகத்திற் காய்ந்துதானாற் பொறுமையுடன் றானாக வரைத்துக்கொண்டு, தாட்டிகமாய்ப் பரணிதனி லடைத்துக்கொண்டு சமரசமாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி, வாட்டமில்லா வல்லாரைச் சூரணத்தை வணக்கமுடன் றன்றொூது பதனம்பண்ணி, தேட்டமுடன் வல்லாரை முறைதானப்பா செகத்திலே யாரறியப் போறார்பாரே. (129)

அண்டச் சூரணம்.

பாரப்பா வல்லாரை முறைதான்சொன்னேன் பராபரமா மண்டசூ ரணத்தைக்கேளு, ஆரப்பா வறிவார்க ளண்டக்கூறு வப்பனே யண்டமென்று லார்தான்காண்பார், நேரப்பா நின்றவர்க ளண்டங்காண்பார் நினைவாக வண்டமடா கும்பிடானை, காரப்பா மாங்கிஷத்தோ டெடுத்துவந்து கருவெடுத்து மேற்றோடு பதனம்பண்ணே. (130)

பதனமுள்ள கருவெடுத்துப் பீங்கானுள்ளே பக்குவமாயதைவழித்து வைத்துக்கொண்டு, விதனமெல்லாந் தானகல ரவிபிசத்தை மிக்கவே யெட்டிரண்டு மாகச்சேர்த்துச், சதனமதாய்த் தான்பிசைந்து ரவியில்வைக்க க்ஷணத்திலே தண்ணீர்போற் றூனேயாகுஞ், சுதமான தண்ணீரைப் பாண்டத்தாற்றி சுத்தமாய் மேற்றோட்டை யுடைத்துப்போடே. (131)

போட்டெடுத்து வடுப்பேற்றி யனலைமூட்டி பொருந்திநீர் வற்றமட்டு மெறித்துப்போடு, தாட்டிகமாய்த் தோடெடுத்துக் கல்வத்திட்டு சமர்த்தாகத் தானுருக்கிப் பழச்சார்வார்த்து, மாட்டிநன்றாய்த் தானரைத்துக் காடிதன்னில் மார்க்கமுடன் றனரைத்து மைந்தாகேளு, நாட்டியே பாண்டித்தி லிறுத்துப்போடு நன்றாக வடியினின்ற கப்பிவாங்கே. (132)

கும்பிடானை—குளத்துச்சிப்பி. மாங்கிஷம்—மாமிஷம்.

வாங்கியே கல்வத்தி லாட்டிக்கொண்டு மார்க்கமுடன் றெளிவிறுத்துக் கரைத்துமைந்தா, தாங்கியே கரைத்துநன்றா யிறுத்துமைந்தா சமரசமாய் ரவியில்வைத்துத் தெளிவைவாங்கி, சாங்கமா யடிமண்டி தன்னைவாங்கி சார்வாக ரவிமுகத்திற் காயப்போடு பாங்குபெற ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தாற் பால்போலே வெள்ளையென்ற பொடியதாமே. (133)

அண்ட மெழுகு.

ஆமப்பா வண்டரு ரணத்தைச்சொன்னே னரகரா வண்ட மெழு கதனைக்கேளு, தாமப்பா தன்னிலையைத் தான்றான்கண்டு சமரசமாய் ஞானியென்ற தலைமையாலே, நாமப்பா சொல்லுகிறோம் ஞானியண்ட நாளதுவே சென்றதோர ண்டம்வாங்கி, வாமப்பாற் றன்னாலே சுத்திசெய்து. மார்க்கமுடன் ரவிமுகத்தி னவநாட்போடே. (134)

போடுவது ரவிபீசுஞ் செலுத்திநின்றாற் பூரணமாய்க் காய்ந்தபின்பு சொல்லக்கேளு, வாடுவது வேண்டாமே மக்காள்மக்காள் மகத்தான வீரமுடன் பூரஞ்சேர்த்து, சூடுவது வழுரி தன்னா லரைத்துமைந்தா சுகமாக வண்டமதிற் சூட்டிபின்பு தேடுவது வதன்மேலே முப்புச்சூடு திறமாக மண்ணரைத்துச் சீலைசூடே. (135)

சூடப்பா மண்சீலை வலுவாய்ச்செய்து சுத்தமுள்ள பாண்டமரை யுப்பையிட்டு, போடப்பா வண்டமதை யதன்மேல் வைத்துப் பொரும்பவுமே மேலுநன்றா யுப்பைக்கொட்டி, சாடப்பா மேலோடு பதியமூடிச் சந்துவாய் தெரியாமல் மண்ணுஞ் செய்து, நாடப்பா சமாதிவைப்பா யரைக்குள்ளாக நன்றாக வைத்தபின்பு நாட்டங்கேளே. (136)

வா சி .

நாட்டமென்ன நாட்டமுட னுடிப்பாரு நடுவான நாடியடா வந்தமந்தம். தேட்டமுட னந்தமென்ற நாடிதன்னிற் சிவசிவா வாசியைநீ திறமாய்ச்சூடு, வாட்டமென்ன வாசியைநீச் சூடிமைந்தா வரிசையுடன் ரேசகபூ ரகமும்பண்ணி தாட்டிகமாய்க் கும்பகத்தின் மேலேசென்று தாயான மனோன்மணியைத் தியானஞ்செய்யே. (137)

நடுவோனநாடி—சுழிமுனைநாடி.

செய்யப்பா சொல்லுகிறேன் சமாதிதன்னிற் செயலாக நீயிருந்து பூசைசெய்து, பொய்யப்பா போகாமல் மண்டலமூன் றுநாற் போதமாய்க் குருபூசை பொருந்தச்செய்து, மெய்யப்பா வாலைதனைப் பூசைசெய்து மேலான பராபரத்தைக் காணுதற்கு, பையப்பா சமாதிதனைத் திறந்துவந்த பாண்டமதைத் தானெடுத் துப் பணிந்துகொள்ளே. (138)

பணிந்துமிகத் தொழுதுகொண்டு பாண்டந்தன்னைப் பக்குவமாய்த் தான்றிறந்து மைந்தாபாரு, தணிந்துமிகச் சற்குருவைத் தொழுதுபோற்றித் தாயாரை ரவிமுகத்திற் றிசைநாள்வைத்து கனிந்துமிகக் கருணையினாற் கனிந்துகூர்ந்து காயதி கற்பமெனக் கருத்தில்வைத்து, அணிந்ததொரு பாண்டமதை யடுப்பிலேற்றி யன்பாகத் தீமூட்டி யெரித்திடாயே. (139)

எரித்தபத மென்னவென்றாற் யானைமேலே யேகுமடா வாவியது மைந்தாமைந்தா, குறித்ததோ ராவிதனைக் கண்டால் மைந்தா குணமாகத் தானிறக்கி யாறவைத்து, பெருத்ததொரு மந்திரத்தைத் தியானம்பண்ணிப் பேசாம லுப்புடைத்து வண் டம்வாங்கி, கருத்துறவே கலசமதை யெடுத்துப்பாரு கருவெல்லா மொன்றாகித் திரண்டுபோமே. (140)

திரண்டபத மென்னவென்றால் மெழுகுபோலே செம்மையுடன் றானுருண்டு விருக்குமப்பா, உருண்டதொரு மெழுகெடுத் துப் பரணிதன்னி லுத்தமனே தானடக்கிப் பதனம்பண்ணு, முரண்டகத்தில் மெய்ஞ்ஞான முடிவின்மைந்தா முச்சுடரி லச் சுடரை முயன்றுபாரு, சுருண்டிருந்த கற்பூர தீபமான சிவ சிவா மெழுகதனைப் பதனம்பண்ணே. (141)

பண்ணப்பா பதனமதா யிந்தநூலைப் பகராத மூடரிடம் பகர்ந்தா யானால், விண்ணப்பா தகர்ந்திடுமே மெய்தான்சொன் னேன் வேதாந்த வாயிரத்தைப் பதனம்பண்ணி, நண்ணப்பா குருவினுட பதத்தைப்போற்றி நலமாக மாணாக்கா மகிழ்ந்துகேளு முண்ணப்பா வெகுசாபஞ் சொன்னேன்சொன்னேன் மூக்காலு மாயிரத்தைப் பதனஞ்செய்யே. (142)

திசைநாள்—எட்டுநாள்.

பிண்ட மெழுகு.

செய்யப்பா வண்டமெழு கதனைச்சொன்னேன் சிவசிவா பிண்டமெழு கதனைக்கேளு, மெய்யப்பா வண்டபிண்டம் ரெண்டுங் கண்டால் மேலான பராபரத்தைக் காணலாகும், பொய்யப்பா வென்றெண்ண வேண்டாஞ்சொன்னேன் பூரணமாய் மனதுகந்து கேளுகேளு, மையப்பா மூலமுத லாராதாரம் பாங்கான வாதார மெய்தான்பாரே. (143)

பாரப்பா மெய்யான பிண்டந்தன்னிற் பக்குவமாய் நெஞ்சதனை யகற்றிப்போட்டு, நேரப்பா நின்றதிலே கோரைபோக்கி நிச்சயமா யமுரிவிட்டு முன்போலப்பா, சேரப்பா ரவிமுகத்திற் காயப்போட்டுத் தினந்தோறுங் குருபதத்தைச் சிந்தைவைத்து, காரப்பா வாயியுட பாதக்தன்னிற் கருணைபெற வப்புமுப்புங் கட்டிப்போமே. (144)

கட்டிப்போம் ரவிமுகத்திற் றிசைநாள்வைக்கக் கம்பியுப்பு கரைந்துசதை யொன்றாய்நிற்குந், திட்டமுடன் கல்லுரலி லிட்டுக் கொண்டு திறமான விருப்புலக்கை தன்னாற்குத்த, புஷ்டிசதை யொன்றாகிப் புளிபோனிற்கும் பிலமாக வீராறு சாமமாட்டு, அட்டியில் லாமலே யிடித்துப்பாரு வஷ்டதிசை யொன்றான வருளைப்பாரே. (145)

அருளான வகையொன்று சொல்லக்கேளு வாக்கையுட நிலைதன்னை யார்தான்காண்பார், திருவான வஸ்திசதை யொன்றாய்ச்சேர்ந்து செம்மெழுகு போலவே யிருக்குமப்பா, உருவான மெழுகினுட வாசங்கேளு, வுற்றகெந்த மலர்வாச முண்மை யுண்மை, கருவான மெழுகெடுத்துப் பரணிதன்னிற் கருத்துறவே யடக்கமதாய்ப் பதனம்பண்ணே. (146)

சாத்திரம் படிக்கும் விதம்.

பண்ணப்பா வடக்கமதாய்ப் பதனம்பண்ணி பங்கயமா மாயிரத்தெட் டிதழைப்போற்றி, விண்ணப்பா தானேக்கி யமுர் தங்கொண்டால் விசையான வாசியதற் குயிர்தானச்சு, கண்ணப்பா போல்வுமே யிந்தநூலைக் காசினியி லொருவரிடங் காட்டவேண்டாந், தண்ணப்பா தன்னிலையைத் தானுன்கண்டு தனதாக வாயிரத்தைப் பதனம்பண்ணே. (147)

அண்டபிண்டம்—பிரமமிருப்பிடம்.

பதனமதாய்ப் பண்ணினால் ராமன்வாக்கியம் பழுதொன்று மில்லையடா நிசமாமைந்தா, மதனமதா யிந்தநூற் றன்னைப்பார்த்து மனதடங்கிக் கருவுருவை வணங்கிப்பாரு, விதனமெல்லாந் தானாக வாயிரத்தைக்காண விள்ளாத கருக்களெல்லா நன்றாய்த்தோன்று, முதன்மையுள்ள வாயிரத்தை வணங்கிப்போற்ற முத்திதரு மெய்ஞ் ஞான முதலைப்பாரே, (148)

பாரப்பா பரணிதனி லிருக்குமந்த பசுமையுள்ள மெழு கெடுத்துக் கல்வத்திட்டு, ஆரப்பா அறிவார்கள் வீரம்பூர மாகரா வெட்டிரண்டு மாகச்சேர்த்து, காரப்பா கல்வத்தில் மத்தித்தாக் காற் கடுங்கார மானதொரு மெழுகாமப்பா, சாரப்பா விம் மெழுகைப் பதனம்பண்ணிச் சதாசிவத்தி லனுதினமுஞ் சார்ந்துநில்லே. (149)

மை.

சார்ந்துநிகப் பிண்டமெழு கதனைச்சொன்னேன் சங்கை யுடன் மைவகையைச் சாற்றக்கேளு, கூர்ந்துகொண்ட கூர்மையி னாற் பூடுவாங்கி குறிப்பொன்று சொல்லுகிறே னன்றாய்க்கேளு, வார்ந்துகொண்டு வளமாக மைந்தாநீதான் வகையுடனே வாலை தனைத் தியானஞ்செய்து, தேர்ந்துகொண்டு ரணகளத்திற் சென் றமேதான் சிமிளென்ற வட்டகையாந் தங்கந்தானே. (150)

தங்கமென்ற பாத்திரத்திற் சூரிதன்னாற் றன்மையுடன் றனெடுத்து வைத்துக்கொண்டு, அங்கமுடன் வலமிடாய்க் குறிப் பாய்வாங்கி யன்பாக வலபுறத் தங்கந்தன்னிற், பங்கமில்லா விட துபுறக் கருவைமைந்தா பாத்திரமாய் வெள்ளிதனிற் பதனம் பண்ணி, சங்கையுட னிருவகைப்பாத் திரத்தில்வைத்த சதுரான கருக்கள்ரண்டும் பதமாய்ப்பண்ணே. (151)

பண்ணுவது வெந்தவித மென்றால்மைந்தா பத்தியுடன் கற்பூரம் பொடித்துப்போட்டு, உண்ணுவது ரவிமுகத்தில் வைத் துப்பார்க்க வுருகியது கரிபோலே தண்ணீராகும், நண்ணுவது ரவிமுகத்தி லைந்துநாள்வை நாட்டமுள்ள கருக்கள்ரண்டு மையாய்ப் போகும், தண்ணிமையாய் வந்தமையை யானைக்கொம்பு தனித்ததோர் சிமிழ்தனிலே பதனஞ்செய்யே (152)

பூடு—திகைப்பூடு. கரு—முப்பு.

செய்யப்பா பதனமதா யடக்கம்பண்ணிச் சிவபூசை குரு பூசை திரமாய்ச்செய்து, மெய்யப்பா சொல்லுகிறே மாரா தார மேன்மூலா தாரமடா பிரமமாச்சு, பையப்பா பரப்பிரம கமலாசனத்திற் பத்திவைத்த வுறுதியடா சாத்திரசுரூபம் பொய்யப்பா போகாது சாத்திரந்தான் பொருளான வாயிரத்தைப் போற்றிக்காரே. (153)

காரப்பா கருணைதருங் கமலவீடு கற்பூர தீபமது தோன் றும்வீடு, நேரப்பா வாசிசத்தி யுகந்தவீடு நினைவாலே நினை வறிந்து நிலைக்கும்வீடு, பாரப்பா பரமகுரு புணர்ந்தவீடு பராபர மாய் நிறைந்துநின்ற பரமவீடு ஆரப்பா வறிவார்க ளந்தவீடு வம்பரமாய் நின்றதொரு வரூபவீடே. (154)

வீடப்பா வந்தரங்க மானவீட்டில் மேலான வீட்டி லொரு விபரங்கேளு, கூடப்பா வெமகூட பருவதத்திற் குரு வான சித்தரா பிரம்பேருண்டு, நாடப்பா வுள்ளூரில் வாழ் வாரப்பா நாட்டமென்ன வவர்களுக்கு நயனநாட்டந், தேடப்படா நாட்டமென்ற கமலவீட்டிற் றேனருவி பாய்ந்தடா வமுர்தந்தானே. (155)

தானான வமுர்தத்தைத் தான்றான்கண்டு சங்கையுடன் றானருந்தத் தன்மைகேளு, ஊனான காயமடா வுறுதியாச்சு வுத்தமனே வாதியதற் குறவுமாச்சு, பூனான மூலமது வலுத்துப்போச்சு பூரணமாந் தேகமெனப் புகலலாச்சு, கோனான குருமகிமை கூறலாச்சு குருவான வட்டசித்து மையைப் பாரே. (156)

பாரப்பா வட்டசித்து மையைச்சொன்னேன் பக்குவமா யறிந்துணர்ந்த பண்புள்ளோர்க்கு, நேரப்பா நின்றபொரு டானேதோற்று நின்மலமாங் கற்பூர தீபங்காணும், ஆரப்பா வறிவார்கள் தீபப்போக்கு வத்தீபங் கண்டவனே யாசானுகுந், தேரப்பா தீபசுடர் தன்னிற்றேர்ந்து சிந்தைமன தொன்றான கருவைக்கேளே. (157)

கமலவீடு—இருதயம். கற்பூரதீபவீடு—சுழிமுனைவீடு.

திராவகம்.

கேளப்பா கருவான திராவகத்தின்போக்கு கெட்டியாய்ச் சொல்லுகிறே னுண்மையாக, வாளப்பா மனதறிந்து மனநினின்று மனவாக்குக் காயமதை மருவிக்காரு, ஆளப்பா மனவாக்குக் காயத்தாலே யாயிரத்தெட் டிதமறிந்து வமுர்தங்கொள்ளு, கோளப்பா வாராம லமுர்தங்கொண்டாற் குடிலமறுந் திராவ கத்தை யுரைக்கிறேனே. (158)

உரைக்கிறேன் திராவகத்திற் கருவைக்கேளு வுத்தமமா மைங்கோலத் துப்புவுப்பு, தரைக்குமேல் வளர்ந்தவுப்பு யார்தான் காண்பார் தன்மையுள்ள வுண்டையடா மெளனப்பூடு, அரைக் கிறே னப்பூடு சமூலம்வாங்கி யரகரா கண்டித்து வுலர்த்திமைந்தா, நிரைக்கிறே னுலர்ந்ததைநீ யனலிற்றாக்கி நீறாக வெந்தபின்பு சாம்பல்வாங்கே. 159)

வாங்கியந்த சாம்பலைக் காடிதன்னில் வரிசையுடன் றான் கரைத்துத் தெளிவைவாங்கி, ஓங்கியதோர் பாண்டமதிற் றெளிவைக்காய்ச்ச வுறுதியுள்ள வுப்பாச்சு வின்னங்கேளு, பாங்கு பெற முன்னிறுத்த புஷ்டிதன்னிற் பக்குவமாய்க் காடிவிட்டுக் கலக்கிமைந்தா, சாங்கமாய்த் தெளிவிறுத்துக் காய்ச்சிப்பின்பு சம ரசமாய்ப் பத்துமுறை யிவ்வண்ணங்காய்ச்சே. (160)

காய்ச்சிநன்றா யெடுத்தவப்பு வொன்றாய்ச்சேர்த்து கமல மென்ற பீங்கானில் ரவியிற்போடு, கூச்சமறக் கடுரவியிற் காய்ந்து தானுற் கூர்மையுள்ள நாதவுப்பை யென்னசொல்வேன், பேச் சான பேச்சிலதை காணப்போமோ பெருமையென்ற மௌன முள்ள நாதவுப்பை, வாச்சுதென்று மனமுறண்டு செய்யாமற்றான் வரிசையுடன் பரணிதனிற் பதனம்பண்ணே. (161)

பண்ணியதோ ருப்பதிலே பலமோமூன்று பாங்கான கல் லுப்பு யிந்துப்போடு, உண்ணியதோர் சாரமுடன் துருசுதுத்த முத்தமனே பூநீறு முப்புச்சுண்ணந், தன்மையுட னிடைசரியா யெடுத்துக்கொண்டு தானெடுத்து விடைசரியாய்ப் பேதிகூட்டி, புண்ணியனே யிந்தவிடைக் கம்பிசேர்த்து பொடியாகச் செய்த பின்பு புகலக்கேளே. (162)

ஐங்கோல உப்பு—அமுரி மூலப்புளி உப்பு.

கேளடா பொடிசெய்த லவணமெல்லாங் கெடியுள்ள கலசமதி லிட்டுக்கொண்டு, தாளடா புத்தோடு வில்லைபோலே தமர் செய்து வாய்நடுவே கமலமூடி, தாளடா சேர்ந்ததெல்லாஞ் சீலை செய்து தான்கவியக் குகைமூடிக் குகையின் றாரில், கோளடா வாராமற் பணம்போற் போற்று குறிப்பாகக் காசியென்ற மேருவாங்கே. (163)

வாங்கியே விலாப்புறத்திற் றமர்தான்செய்து வகையான குகைத்தமரிற் சேர்த்துமூடி, பாங்குபெற மண்சீலை வலுவாய்ச் செய்து பருதிதனிற் காயவைத்துப் பின்புகேளு, சாங்கமாய்ச் சிவபூசை சத்திபூசை தன்மையுடன் றான்செய்து வடுப்பிலேற்றி, காங்கைமிக வேறுமா லெரிப்பாய்மைந்தா கருத்துறவே தானெரித்துக் கருத்தாய்ப்பாரே. (164)

பாரடா குப்பியுட மூக்குக்குள்ளே பன்னீர்போற் றிராவ கந்தான் புகையோடொக்க, சாரடா போலவுமே வருகுமைந்தா தன்மையுள்ள பீங்கானில் வாங்குவாங்கு, காரடா விப்படியே திராவகத்தைவாங்கி கனதியுள்ள பீங்கானிற் பதனம்பண்ணி, வீரடா செய்யாமற் குருவைப்போற்றி விபரமுட னின்னமொரு முறையைக்கேளே. (165)

வெடியுப்புத் திராவகம்.

கேளப்பா வெடியுப்புத் திராவகத்தைக் கெணிதமுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு, நாளப்பா வெடியுப்பு பலமோ வைந்து நலமான சீனமுடன் றுரிசுதுத்தம், நீளப்பா கல்லுப்பு வன்னபேதி நிலையான பூநீறு மொன்றாய்கூட்டி, கோளப்பா வாராமற் பொடியாய்ச்செய்து குறிப்பொன்று சொல்லுகிறே னன்றாய்க்கேளே. (166)

கேளப்பா முன்சொன்ன திராவகத்தைவாங்கிக் கிருபையுடன்பொடிசெய்து வுப்பிலிட்டு, மாளப்பா பிசறிநன்றாய்க் கலசத்திட்டு மார்க்கமுடன் முன்போல வரிசைசெய்து, நாளப்பா தினம்பார்த்துக் குருவைப்போற்றி, நன்மையுடன் சிவபூசை சத்திபூசை கோளப்பா வாராமற் செய்துகொண்டு குறிப்பாக வடுப்பேற்றிக் குருவைக்காரே. (167)

பருதியென்பது—சூரியன்.

குருவான சற்குருவைத் தொழுதுபோற்றிக், குணமாக வடுப்பேற்றி யனலேமூட்டி, அருமையுடன் நீயெரிப்பாய் மைந்தா கேளு வழகான திராவகந்தா னிவியோடே, பெருமையுடன் வருகுமடா பீங்கான்றன்னில் புண்ணியனே தானிறக்கி வைத்துக்கொண்டு, உருமையுடன் மனதறிவார் பதனம்பண்ணி யுற்றசிவ சத்தியைநீ பூசைபண்ணே. (168)

கல்லுப்புத் திராவகம்.

பண்ணப்பா வின்னமொரு வரிசைகேளு பாங்கான கல்லுப்புத் திராவகந்தான், நண்ணப்பா கல்லுப்பு பலமோபத்து நன்றாக விடித்துத்தூ ளாக்கிக்கொண்டு, தண்ணப்பா வெடியுப்புச் சீனக்காரந் தன்மையுள்ள துரிசுடனே துத்தங்கூட்டி, பொன்னப்பா போலிருக்கு மன்னபேதி புரிசமுள்ள பூநீறு மொன்றாய்ச்சேரே. (169)

சேர்த்துநன்றாய்ப் பொடித்ததெல்லா மொன்றாய்க்கூட்டித் திறமாகக் கலசமதி விட்டுக்கொண்டு, கார்த்துநன்றாய் முன்போலப் பாங்குசெய்து கற்பூர தீபமதைக் கருத்தாய்ப்போற்றி, வார்த்துநன்று யடுப்பேற்றி யனலேத்தாக்கி வரிசையுடன் பார்த்திருக்க வளமைகேளு, பார்த்திபனே குப்பியுட மூக்கிலேதான் பரியுமடா புகையோடே நீர்தான்பாரே. (170)

பாரப்பா நீரான திராவகத்தைப் பழுதில்லாப் பரணிதனிற் பதனம்பண்ணி, நேரப்பா சற்குருவைத் தொழுதுபோற்றி நிலையான வாசியைநீ நிலேத்துக்கொண்டு, காரப்பா பராபரத்தைக் கருத்துள்வைத்து கருவான கமலமல ரமுர்தங்கொண்டு, சேரப்பா குருபாதந் தினமேபோற்றிச் செம்மையுட னின்னமொரு கருவைக்கேளே. (171)

கரியுப்புத் திராவகம்.

கேளப்பா கரியுப்பு பலமோபத்து கெணிதமுடன் சுத்திசெய்து வெடுத்துக்கொண்டு, தாளப்பா வெடியுப்பு சீனக்காரந் தன்மையுட னிந்துப்பு வளையலுப்பு, வாளப்பா துரிசுதுத்தம் காரசாரம் வளமான கூடனெடு சரியாய்க்கூட்டி, கோளப்பா வாரமற் பொடித்துக்கொண்டு கூர்மையுள்ள பழச்சாற்றாற் பிசறிவையே. (172)

கமலமல ரமுர்தம்—அண்ணாக்கின் அமுர்தம்.

பிசறிநன்றாய்க் கலசத்தின் முன்போல்மைந்தா பெருமையுடன் கைபாகஞ் செய்துகொண்டு, அசதியில் லாதிருந்து வடுப்பி லேற்றி யருள்பெருகும் பூரணத்தை யன்பில்வைத்து, திசமான தீட்சையினு லனலைமூட்டிச் செம்மையுடன் குருபதத்திற் சேர்த்து நில்லு, வசயறவே யனலேறி யாவிமீறில் வருகுமடா திராவகந் தான் வரிசைபாரே. (173)

வரிசையுடன் றிராவகத்தை வளமாய்வாங்கி மைந்தனே மீங்கானிற் பதனம்பண்ணி, உரிசையுடன் பூரணத்தை வணங்கி மைந்தா வுன்மனையிற் கற்பூர தீபம்பாரு, புரிசமுட னின் னூல்தா னுயிரத்தில்மைந்தா பூட்டாத கருக்களெல்லாம் பூட்டி வைத்தேன், அருமையுட னின்னூலைப் பதனம்பண்ணி யவை யடக்க மாகநீ யெடுத்துப்பாரே. (174)

பார்க்கையிலே பிறரொருவ ரறியாமற்றான் பதனமுடன் றனெடுத்துப் பாருபாரு, தீர்க்கமுடன் பாராமற் பிறருக்கீய்ந்தாற் சிவசிவா வுனதுசிரம் வெடித்துப்போகும், மார்க்கமுடன் வாக்கிய மாம் ராமன்வாக்கிய மகத்தான சித்தருடன் சேருசேரு, ஏர்க்கை யுடன் பதனமதாய்ப் பார்க்கவேணு மில்லாட்டாற் சாபம்வந் தெய்துந்தானே. (175)

தானவனுய் நின்றகருக் குருவாமின்னூற் சமுசயங்க ளில்லையடா தனதாம்வித்தை, மோனமுள்ள வித்தையடா முழுது மாடு முக்காலுஞ் சத்தியமாய்ச் சொன்னவார்த்தை, நானவனுய் நின்றகுரு வெடுத்துப்பார்க்க நலமான பூரணமுங் கைக்குள்ளாகும், கோனருளாற் சொன்னதடா விந்தநூல்தான் குருவான வாயிரத்தைப் பதனம்பண்ணே. (176)

சாதிலிங்க வாலை.

பண்ணப்பா வின்னமொரு கருவைக்கேளு பராபரத்தா யெந்தனுக்குப் பகர்ந்தவித்தை, நண்ணப்பா சாதிலிங்க வாலை தன்னை நன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா, விண் ணப்பா தாளுேக்கிக் குருவைப்போற்றி விபரமுடன் சாதிலிங்கக் கட்டிவாங்கி, தண்ணப்பா லிங்கமரை வீரம்வாங்கி சமர்த்தாக ரெண்டையுமே பொடியாய்ச்செய்யே. (177)

வாலையென்பது—ரசம்.

செய்தபொடி பீங்கானி லிட்டுக்கொண்டு செய்யாத வைங் கோலத் தைலம்விட்டு, உய்தமுடன் பிசைந்துருட்டிப் பீங்கான் பக்க முறுதியுட னப்பிறவி முகத்தில்வைப்பாய், தொய்தமுடன் ரவிகாங்கை யதனிற்சென் று சுழன் றுரசம் வடியுமடா செம்மை யாக, வைதமுடன் ரசமான வாலைதன்னை வாஞ்சனையாங் குப்பி தனிற் பதனம்பண்ணே. (178)

பண்ணப்பா விச்கருவை வெளிவிடாதே பரமான வாலை யடா வாலைப்பெண்தான், மண்ணப்பா பொன்னுகும் வாலைபதங் கண்டால் மகத்தான வாலைதனை யார்தான்காண்பார், விண் ணப்பா ரண்டபகி ரண்டமெல்லாம் விளையாடும் வாலைபதம் விரும்பிப்போற்று, உண்ணப்பா மதியமுர்த முண்டுதேறு வுரிமை ரச வாலைதனை யுகந்துகேளே. (179)

இரச வாலை.

கேளப்பா காந்தமதாற் கிண்ணம்பண்ணிக் கிருபையுள்ள ரசமதனை யதனில்வார்த்து, வாளப்பா துருசுபொடித் திட்டு மைந்தா வரிசையுட னங்கோல மதனில்வார்த்து, தாளப்பா வடுப்பேற்றித் தீயைமூட்டிச் சமரசமாய்த் தாளெரிக்க மைந்தா கேளு, சூளப்பா சூழ்ந்ததொரு குடிலங்நீங்கி சுயமாக ரசமது தான் வாலையாச்சே. (180)

ஆச்சப்பா ரசவாலை யார்தான்காண்பா ரசையாது வக்கினிக்கு வாலைதானும், பேச்சப்பா ரசவாலை நிறந்தானென்ன பேய்மக் கள் மஞ்சனிற வாலையாச்சு, நீச்சப்பா ரசவாலை நிசவாலையாச்சு நீழ்திசையில் வாலைரச மார்தான்காண்பார், மூச்சப்பா வடங்கி நின்ற வாலைரசந்தன்னை மூர்க்கமுள்ள பரணிதனிற் பதனம்பண்ணே.

நூற்கோர்வை.

பண்ணுவது விந்தரசம் பதனம்பண்ணு பங்கயத்தி னமுர்த மதைப் பண்பாய்கீயும், உண்ணுவது வாசியினு லுண்ணவேணு; முத்தமனே மனமொன்றாய் நிற்கவேணுந் தன்னுடைய வனு வறிந்து தானேதானுய்ச் சமரசமாய்ப் பலதிரட்டு வைந்நூற் சொன்னேன், கண்ணறிந்து கண்ணொளியாய்க் கனலைத்தாண்டி காலறிய விருநூற்றில் யோகம்பாரே. (182)

குடிலமென்பது—திரை, அழுக்கு.

பாரப்பா விஞ்ஞானத்தை நூற்றிற்சொன்னேன் பாடினே னெண்பதிலே வைத்தியந்தன்னை, காரப்பா வைப்பதிலே பட் சணியைச்சொன்னேன் கருவான முப்பூவை முப்பதிலேசொன் னேன், நேரப்பா பாஷைபதி னெட்டுஞ்சொன்னே னினிவாகச் சோசியத்தைப் பத்திற்சொன்னேன், ஆரப்பா வறிவார்க ளாயி ரத்தைத்தானு மருமையுள்ள கருவுருவா யின்னூற்றுனே. (183)

தானவனுய் நின்றதனுல் மைந்தாமைந்தா தானுரைத்த நூல்களுந் தன்மையாக, மோனமுள்ள தண்டகநூற்றிற் சொன் னேன் முக்கியமுள்ள தண்டகத்தை யார்தான்காண்பார், கோனரு ளாற் றண்டகத்தைக் கூர்ந்துபார்த்துக் குணமாக வாயிரத்தின் கருவறிந்தால், வானவர்கோன் மகுடபதி நீயேயாவாய் மந்திர மாந் தண்டகநீ மனதிற்காணே. (184)

காணப்பா வாயிரமு மாயிரத்திற்சுருக்கங் கருவான தண் டகத்தைக் காட்டாதையா, வீணப்பா வெறுவாயைப் பசப்பு மாந்தர் விசையுள்ள மந்திரத்தை யறியாமாந்தர், நாணப்பா வென்றவகம் பிடித்தமாந்தர் நாடுகளின் மெத்தவுண்டு நலமாய்க் கண்டு, தோணப்பா வவர்களிடம் பேசவேண்டாஞ் சுருபநிலை யறிந்தவரோ டொக்கப்பேசே (185)

பேசுவது பேச்சரிந்து பேசவேணும் பேசையிலே கரு வுருவாய்ப் பேசும்போது, நேசமுட னறிந்துகரு வறிந்தால் மைந்தா நிட்சயமா யவர்களுட னன்றாய்பேசு, கூசிமனக் குழப்புமிகுங் குறும்பரோடே கூடாதே யமுர்தநிலை கூர்ந்து பாரு, வாசமுள்ள வாசியடா கருவாய்ப்பாரு மகத்தான போதை யிலே மருவிக்காரே. (186)

மருவையிலே பூரணத்தை மருவவேணும் வாசியடா கரு வறிந்து வணங்கவேணுந், திருவான போதையிலே திருந்த வேணுந் தீபவொளி ஞானமதிற் சேரவேணுங், குருவான சற் குருவைக் காணவேணுங் கூர்மையுள்ள நந்தியொளி பிரபை வேணுங் கருவான கருவதனை யறிவவேணுங் காயாதி கற்பமென்ற கருணைபாரே (187)

கடுக்காயென்பது—அண்டம்.

காயாதி கற்பம்.

பாரப்பா காயதி கற்பந்தன்னைப், பக்குவமா யவரவர்கள் செய்யுமார்க்கம், ஆரப்பா வறிவார்க ளடிமையாலே யறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் வாசிதேவர், நேரப்பா சிவபூசை யாண்டு நூறு நிட்சயமாய்ச் செய்தபின்பு சத்திபூசை, வீரப்பா செய்யாம லைம்பதாண்டு விபரமுட னேசெய்யிற் பலித்துப்போச்சே. ()

வாசிதேவர் கடுக்காய்க் கற்பம்

போச்சென்று விடுகாதே சத்திசிவமிரண்டும் பூரணமாய்க் கொண்டபின்பு வாதியந்தம், பேச்சொன்று மில்லையடா பத்தாந் திங்கட் பெருமையுள்ள காயதிலே கடுக்காய்பாரு, காச்சென்ற காயதிலே செங்கடுக்காய்தானுங் கசப்புண்டு துவர்ப்பில்லை கண்டுபார்த்து, பூச்சென்ற வாசியது வடங்குங்காயில் முக்காலும் பச்சையடா கடுக்காய்வாங்கே (189)

வாங்கடா வகப்பட்ட கடுக்காய்தன்னை வாய்கண்ட வுரலிலிட்டு மாப்போற்குத்தி, பாங்குபெற விடித்தகடுக் காயைமைந்தா பக்குவமாய்ப் பாண்டமதி லிட்டுக்கொண்டு, தீங்கில்லாக் காடியைநீ வார்த்துமைந்தா திறமாகக் கலக்கிவைத்துத் தெளிவைவாங்கி, சாங்கமதாய் நீர்வற்றக் காய்ச்சிப்பாரு சமர்த்தாகக் காய்ச்சையிலே யுப்பாம்பாரே. (190)

பாரப்பா வுப்பதற்கு நாமங்கேளு பசுமையுள்ள சர்க்கரையுமுப்புவுப்பு, நேரப்பா வுப்பெடுத்து மேருக்கேற்றி நிட்சயமாய்ச் சற்குருவைத் தொழுதுபோற்றி, காரப்பா மேருதனைத் தோத்திரமேசெய்து கருவான வுப்பதிலே கடுகுபோலே, வாரப்பா வெடுத்துநா வதனில்வைக்க வாரிதிபோ லமுர்தமது வடியுந்தானே.

தானான வமுர்மதைத் தானேகொண்டு தாண்டினு ரண்டவரை வாசிதேவர், ஊனான கர்மமென்ற வுப்புதன்னி லுத்தமனே கடுகளவு வெடுத்துக்கொண்டு, கோனான குருவருளால் மண்டலமேல்காண்டால் குருவான வாசியது வடங்கும்வீட்டில், பூனான வாசியது தானடங்கிற் பொறுமையென்ற போாச்சு யோகமாச்சே. (192)

காடியேன்பது—அமுரித்திராவகம்.

திருமூலர் வல்லாரைக் கற்பம்.

ஆச்சப்பா திருமூலர் செய்தமார்க்க மனையடக்கஞ் சொல்லுகிறே னையாவையா, நீச்சப்பா வல்லாரை யாறுமாத நிலைத்ததோ ராரையடா யார்தான்காண்பார், பேச்சப்பா வொன்றுமில்லை குருவருளாற்கேட்டு பெருமையுள்ள வல்லாரை யெடுத்துவந்து, காச்சப்பா ரவிதனிலே யுலர்த்திமைந்தா கருவதனைப் பொடியாக விடித்துக்கொள்ளே. (193)

இடித்தபொடி தனக்குரெட்டி ரெட்டிப்பாக வெய்தமுள்ள சருகதுவுங் கூடச்சேர்த்து, தடித்ததொரு பாண்டத்தி லிட்டு மைந்தா தன்மையுடன் குழித்தைல மிறக்கிக்கொண்டு துடித்து மிகத் திரியாமற் றயிலந்தன்னைத் துரிதமுடன் பரணிதனிலடைத்துக்கொண்டு, நடுத்தரமாய் நின்றவண்ட வோட்டுப்பற்ப நன்மையுடன் பணவிடைதா னெடுத்துக்கொள்ளே. (194)

எடுத்துவிடக் கரத்தில்வைத்துத் தைலம்விட்டு வின்பமுடன் றன்குழைத்து வுருட்டிமைந்தா, அடுத்ததொரு மந்திரத்தைத் தியானஞ்செய்து வன்பாகக் குருபதத்தைத் தொழுது போற்றி, கடுத்ததொரு கற்பமதைக்கொண்டுயோறு கருத்துறவே மண்டலந்தான் கொண்டால்மைந்தா, அடுத்ததோர்க் காயமதற் கழிவோவில்லை யரகரா மூலமதற் குறுதியாச்சே. (195)

ஆச்சப்பா மூலமதற் குறுதியாச்சு வதனாலே வாசியது பிலத்துப்போச்சு, மூச்சப்பா வோடாது வண்டத்தோடு மூனையான தீபமதின் மேலேசென்று, பேச்சப்பா சொல்லரிது புகையோடொக்கப் பெரிதான தீபமது தூபத்தோடே, போச்சப்பா மூலவன்னி தன்னிலேதான் புகுந்ததினாற் றிருமூலர் போனாரே. ()

போரான திருமூலர் மூலத்தாலே பெரிதான வண்டவரை சுத்தினார்கள், நேரான வண்டவரை தன்னினின்று நீடுழி காலமெல்லா மூலரானார், கூரான திருவென்ன மூலமென்ன குணமான மைந்தனே கேளுகேளு, வாரான சருகதுவுந் திருவேயாச்சு மகத்தான கோரையது மூலமாச்சே. (197)

வல்லாரையென்பது—வழலையாகும்.

ஆச்சென்ற வண்டமது சத்தமாச்சு வடங்காத நாதமடா விந்துவிந்து, நீச்சென்ற நாதவிந்து நிலைதன்னாலே நின்றாரே திருமூலர் நிசமாய்மைந்தா, பாச்சென்ற பரவிந்து நாதந்தன்றாற் பதின்கோடி யூழியடா லெக்கோயில்லை, பேச்சென்ற ஆழியொரு நாழிகையாய்நின்று பிலத்தாரே திருமூலர் பெருமைதானே. ()

சட்டைநாதர் கற்பம்.

தானென்ற நாதமடா சட்டைநாதன் றன்மையுட னவ ரிருந்த நேர்மையப்பா, நானென்ற வானுவத்தை நீதானென்று நம்புதலாற் காயமென்ற வெங்காயத்தை, ஊனென்ற வெங்காய மென்னவென்று லுறுதியுள்ள சத்தியடா சட்டையாச்சு, தேனென்ற சத்தியாஞ் சத்திவாங்கித் திறமான சத்தியென்ற வுப்பைவாங்கே. (199)

வாங்கியந்த வுப்போடே யண்டஞ்சேர்த்து மகத்தான கெந்தியுமே கூடச்சேர்த்து, சாங்கமா யுரவிவிட்டு யிடித்துமைந்தா தாளியென்ற பானையிலே யெடுத்துவைத்து, பாங்குபெற ரவி முகத்திற் பாண்டத்தோடே பத்தியுடன் காயவைப்பாய் கிண்டிக் கிண்டி, தூங்காத புத்தியுடன் பத்துநாள்வை சுகமாக மறுநாள் தான் கேளுகேளே. (200)

கேளப்பா சட்டிகொண்டு மேல்வாய்மூடி கெட்டியாய் மண்சீலை வலுவாய்ச்செய்து, கோளப்பா வாரிமற் றமர்தான் போட்டு கூர்மையுடன் குழித்தைலம் நன்றாய்வாங்கி, ஆளப்பா மேருதன்னிற் பதனம்பண்ணி, யன்பாக குருபதத்தை வணங்கிப் போற்றி நீளப்பா நிறைந்ததொரு வண்டபற்ப நினைவாகப் பணவிடைதான் கையிலேந்தே. (201)

ஏந்தினதோர் பற்பமதிற் றயிலம்விட்டு ஏகமென்ற வட்சரத்தைத் துதித்துமைந்தா, சாந்தமாய்க் குழைத்துருட்டி நாவின்மேலே சங்கையுடன் வைத்திடவே கங்கைமீறி, பாந்தமா யமுர்தமது கருவிபோலே பக்குவமா யூறுமடா ரவியைப்போற்றி, காந்தியென்ற வமுர்தமதைக் கொண்டுதேறி கணக்கில்லாக் கோடிவரை யிருந்தார்பாரே. (202)

ஊழியென்பது—நெடுங்காலம், யுகமுடிவு.

பாரப்பா சட்டைதனைச் சட்டைஇன்று பக்குவமா யேறினதால் முனிதானுச்சு, ஆரப்பா வறிவார்கள் சட்டமுனிமார்க்க மாதியந்தப் பொருளையெல்லா மறிந்தாரையா, நேரப்பா சகலமுமே யறிந்துகொண்டு நினைவாக நிகண்டுமுறை நன்றாய்ச்சொன்னார், தேரப்பா தனக்கழகு சிரசுபோலச் சித்தர்களின் பாடலுக்குத் தீபந்தானே. (203)

போகர் கற்பம்.

தானென்ற தீபமதைத் தானேகண்டார் தன்மையுள்ள போகருட முறையைக்கேளு, ஊனென்ற விந்துவுட நாதம்ரண்டு முத்தமனே யிதற்குப்பேர் காரசாரம், மோனமுள்ள காரமுடன் சாரங்கூட்டி[1] மூதண்டக் குருவிலொரு பணவிடைதான்போட்டு, மானென்ற ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க மார்க்கமுட னீர்வற்றி யுப்பாய்ப்போமே. (204)

உப்பான வுப்பதற்கு நாமங்கேளு வுத்தமனே மதியரன் விந்துவிந்து, அப்பனே மதியுப்பு வென்றேபேரு வரகார வுப்பெடுத்துக் கல்வத்திட்டு, செப்பாத வமுர்தம்விட்டு வாட்டிமைந்தா செம்மையுடன் வட்டதுபோற் பிடித்துக்கொண்டு, முப்பான பொருளென்று புடத்தைப்போடு மூர்க்கமுட னெடுத்துப்பார் சுண்ணமாச்சே. (205)

ஆச்சப்பா சுண்ணமதை மேருக்கேற்று வருள்பெருகு சற்குருவி னடியைப்போற்றி, பாச்சப்பா கடுக்காய்ச்சூ ரணத்திலே தான் பக்குவமா யிருவிரலா லெடுத்துக்கொண்டு, பேச்சப்பா பேசாத சுண்ணந்தன்னிற் பெருமையுடன் பணவிடைதான் கூடச்சேர்த்து, நீச்சப்பா வைங்கோலத் தைலத்தாலே நிட்சயமாய்த் தானுருட்டிப் பொசித்திடாயே. (206)

பொசித்தவுடன் பூரணத்திற் பற்றியேறிப் பூண்டாரே யோகமதி லனந்தங்காலம், கசித்துமனங் கசிவதனாற் போகநாதர் கடந்தாரே கோடிவரை யூழிகாலம், உசிதமனப் பக்குவத்தால் யோகஞ்செய்து ருசியான மதியமுர்தந் தானேகொண்டு, பசித்தகுண மில்லாத வாலைதன்னைப் பணிந்தாரே போகருட யோகம்பாரே. (207)

---

[1] மேருவென்பது—குப்பி.

பாரப்பா போகருட சீஷவர்க்கம் பதந்தன்னை நிச்சயமாய்க் கொண்டுதேர்ந்தால், வீரப்பா செய்யாமற் கொண்டு தேர்ந்து வெகுகோடி காலமட்டும் வாழ்ந்தாரையா ஆரப்பா வவரைப்போற் சித்திபெற்று வடலான பிவ்வுலகில் வாழ்ந்தாரையா, கூரப்பா கொங்கணவர் புத்தியாலே குறியாகப் பூரணத்தின் குறிகண்டாரே. (208)

கொங்கணர் கற்பம்.

குறியான குறியென்ன வென்றுகேட்டாற் கொங்கணமாமுட்டையென்ற வண்டம்வாங்கி, நெறியானு வண்டமதை யெடுத்துக்கொண்டு நேராகத் தானெடுத்துக் குடித்தாரையா, வெறியான லகிரியினு லண்டமேறி மேலான வண்டமெல்லா நொடியிற்சுற்றி, சரியாக வாறுவரை சென்றுவேறி க்ஷணத்திலே சிலம்பொலியைக் கண்டார்பாரே. (209)

பாரப்பா சிலம்பொலியைக் கண்டுதேறி பத்தியுட னவரிருக்கும் பதியிற்சென்றார், ஆரப்பா வவர்போலே யுராதாரமளவுடனே கண்டவர்க ளொருவரில்லை, பேரப்பா பெற்றவரிலிவர்போல்காணேம் பெருமையுட னிவர்திறத்தைப் பேசுவார்கள், காரப்பா கொங்கணவர் கற்பத்தாலே கருவான போகருமே கரைகண்டாரே. (210)

கருவூரார் கற்பம்.

கண்டாரே கருவூரார் செனித்தமார்க்கங் காசினியி லாரறிவார் கருப்பேர்தன்னை, உண்டாரே யுண்டுமனந் தேறிக்கொண்டு வுதயகிரி வாசமதா யுரைத்தாரையா, பண்டான கருவூரார் மார்க்கம்போலே பத்திகொண்டு தேரினவ ரொருவரில்லை, அண்டர்பிரா னருளறிந்தோ னவரேயாகு மாக்கையிலே பெற்றவனே யருள்காண்பானே. (211)

சுந்தரானந்தர் கற்பம்.

அருளான சுந்தரானந்தர்தானு மனுபவித்த காரணத்தை யன்பாய்க்கேளு, இருளான விருளறுக்கு மதிதான்மைந்தா வின்பமுள்ள மதிதானும் விந்துவிந்து, குறியான குறியறிந்து விந்துதன்னைக் குறியாகத் தானறிந்து கொண்டாரப்பா, நெறியான விந்நிந்து கொண்டதாலே நீடுலகிற் சித்தரெல்லா மெச்சினாரே. (212)

ஆக்கையென்பது—சரீரம்.

பாரப்பா சித்தரெல்லா மெச்சிக்கொண்டு பரிதிமதி தனை யறிந்து பணிந்ததாலே, நேரப்பா சுந்தரா னந்தனென்று நேர்மை யுடன் குருனழைத்தா ரப்போதானும், பேரப்பா பெற்றதி னூற் சுந்தரானந்தர் பேருலகிற் சுந்தரர்போல் வாழ்ந்தாரப்பா, ஆரப்பா வவர்போலே பேருபெற்று ரரகரா மதியமுர்தத் தன்மைதானே. (213)

மச்சமுனி கற்பம்.

தானென்ற தத்துவத்தைத் தானேகண்டு தன்சார்பு நிலை யெனவே தன்மைபெற்று, கோனென்ற மச்சமுனி பெற்றயார்க் கங் குவலயத்தி லாரறியப் போருரையா, ஊனென்ற மச்ச மடா வுந்திப்பூடு வோங்காரக் கம்பமடா முக்கால்முக்கால், தேனென்ற முக்காலாய் நின்றபூடு செம்மையுடன் சொல்லு கிறே னுண்மைபாரே. (214)

பாரப்பா வுந்தியென்ற கமலம்வாங்கிப் பக்குவமாய்த் தண் ணீரில் விரைத்துக்கொண்டு, நேரப்பா நீர்வற்றச் சுண்டிற்றூல் நேர்மையுடன் ரவிதனிலே காயப்போட்டு, காரப்பா பத்திர மாய்க் காயப்போடு கல்லுரலிற் றுனிடித்துத் தோண்டிமைந்தா, வீரப்பா செய்யாமற் காசுபோலே, வில்லைசெய்து பத்திரமாய்க் காயப்போடே. (215)

போட்டெடுத்துப் பரணிதனிற் பதனம்பண்ணி புத்தி யுடன் சட்டிதனில் நெய்யைவார்த்து, தேட்டுடனே யடுப்பேற்றித் தீயைமூட்டிச் செம்மையுட வில்லையிலே யொன்றுபோட்டு, தாட்டிகமாய் வேகவைத்து விறக்கிக்கொண்டு தன்மையுடன் வில்லை தின்று நெய்யையுண்டால், கூட்டுடைய தேகமதிற் சட்டைதள்ளிக் கூர்மையுடன் ரவியொளிபோற் றேகமாமே. (216)

ஆமப்பா தேகமதை யென்னசொல்வே னரகரா பிரமலபி யயர்ந்துபோச்சு, வாமப்பாற் கொண்டதொரு லகிரிமீறி வாழ்ந் தாரே நவகோடி காலமட்டும், காமப்பால் வலுவறிந்த மச்ச யோகி கற்பமதி லுற்பனத்தை யென்னசொல்வேன், தாமப்பா தாமெனவே தன்னைக்கண்டார் தயவான மச்சமுனி யானூர்பாரே.

பிரமலபியென்பது—ஆயுர்நிர்ணயம்.

கமலமுனி கற்பம்

பாரப்பா கமலமுனி யையர்தானும் பத்தியுட னுரை செய்த முறையென்சொல்வேன், நேரப்பா சுழிமுனைதா அகார பீடம் நிலையறிந்த பீடமடா கமலமாதி, ஆரப்பா வறிவார்கள் கமலபீட மரகரா வாசியீது வடங்கும்பீடம், தூரப்பா வடிமுடியா மாதியந்தந் தூண்டாத மணிவிளக்கின் முடிதான்பாரே. (218)

முடியான முடியறிந்து முடியைக்கொண்டார் முடிமேலே யடிமுடியு மொன்றாய்ப்போச்சு, அடியான வாலைதன் பதத்தைப் போற்றி யன்பாக யிவ்வுலகிற் பூசைசெய்து, நெடியான வாதி யந்த முடியைவாங்கி நினைவாக சர்க்கரைதே னதிலேவார்த்து, கடிதான கல்லுரலி லிடித்தால்மைந்தா கமலமென்ற மதியமூர்த மெழுகுமாச்சே (219)

ஆச்சப்பா மெழுகெடுத்து மேருக்கேற்றி யன்பாக விசாணம் பூசைபண்ணி, பேச்சப்பா வொன்றுமில்லை மௌனதீட்சை பெருமையுள்ள தீட்சையிலே யொருமைவைத்து, மூச்சப்பா ரேசகபூ ரகமும்பண்ணி முனையாகக் கும்பகமே யென்றுபோற்றி, காச்சப்பா களவான மெழுகிலேதான் கடுகளவு தானெடுத்துக் கருத்துள்வையே. (220)

கருத்தறிந்து கருத்துள்வைக்குங் கருவைக்கேளு கருவான மெழுகதிலே கடுகளவெடுத்து, திருத்தமுட னுவில்வைத்து வமுர்தங்கொண்டார் திறமாகச் சிவயோகத் திறமுங்கண்டார், பொருத்தமுடன் சிவயோகத் திறந்தான்கண்ட போதையினாற் கமலமுனி யானாரப்பா, பெருத்ததொரு பேரண்டக் கமலந்தன்னாற் பேரான கமலமுனி யானார்பாரே (221)

இடைக்காடர் கற்பம்.

பேரான விடைக்காட்டார் கொச்சிதேசம் பெருமையுள்ள சுந்தரரைத் தேடிக்கொண்டு, ஊரான ஆருமடா பதியுந்தேடி யுரிமையுட னதிக்கரையி லொடுக்கந்தேடி, நீரான கண்ணீரா நந்தம்பொங்கி நீடுலகிற் காணும னதியோரத்தில், கூரான தளாக் காட்டிற் றவசிருந்தார் கூர்மையுள்ள சுந்தரரும் வந்தார்பாரே. ()

கமலபீடமென்பது—அண்டம்.

வந்தவரு மிடைக்காடர் மனதுமெய்க்க வாக்குறுதி மன துறுதி யிரண்டுநல்கி, அந்தமுள்ள வாதியந்த மவருக்கீய்ந்து வருமையுடன் செய்தமுறை காப்பமைந்து, எந்தவூ ரெந்தா டென்றுகேட்டா ரென்குருவே யிந்தவூ ரென்றுசொன்னார், சொந்தவூர் கண்டவனே நீயேயென்று துருவமுட னிருந்தவிட மிடைக்காடாமே. (223)

இடைக்காடு வில்லமென்று வுகந்தசித்த ரெல்லவரு மிடைக்காடுச் சித்தரென்றார், படைக்கமனந் தெளிந்தகுரு செபத் தாற்பெற்ற பாலகனே நீடூழி காலம்வாழ்க, விடைத்தபொரு ளனுக்கிரக மவருக்கீய்ந்து விஞ்சையெனுஞ் சத்திசிவப் பொருளு மீய்ந்து துடைத்தவரு ளனுகாமற் றீபங்காட்டிச் சந்தருந் தன் பதிக்குச் சுகமானாரே. (224)

கோரக்கர் கற்பம்.

சுகமான கோரக்கர் செய்தமார்க்கஞ் சொல்லுதற்கு நாவு முண்டோ கருவிதன்னை, அகமான வகமறிந்து கோரைவாங்கி யக்கோரை வாங்கினன்றாய்ச் சுத்திபண்ணி, உகமான மில்லாத கோரைதன்னை யுத்தமனே ரவிமுகத்தி லுலர்த்திக்கொண்டு, முக மான மதியமுர்தங் கடத்தில்வாங்கி மூர்க்கமுள்ள கோரையைநீ யமர்த்திடாயே. (225)

அமர்த்திமெள்ளப் பதப்படுத்தி ரவியிற்போடு வரகாவிப் படியே பத்துமுறைபோடு, நிமிர்த்திமெல்ல விரையளவு கண்ட மாக்கி நினைவாகப் பரணிதனிற் பதனம்பண்ணி, குமிழ்க் குறியைக் குணமாகக் குறித்துக்கொண்டு குருவான ப்ராபரத்தி னருளைப்போற்றி, தமிழ்க்கதிக மகத்தீசா வென்றுபோற்றி தன தாகக் கோரையிலோர் கண்டம்வாங்கே. (226)

வாங்கியந்தக் கோரையைநீ ரவியிற்போட்டு வரிசையுடன் மெல்லுவது பதமாயென்றால், ஓங்கியே யமுர்தமது வருவிபாயு முத்தமனே யந்தருவி நீரைக்கொள்ளு, தீங்கான பசிதாகமமர்ந்து நல்ல சிவயோகப் போதையைநா னென்னசொல்வேன், பாங்கு பெறு மென்றுவரி லமுர்தமுரும் பசியாமற் கோடிவரை வாழலாமே. (227)

தீபமென்பது—சோதி.

ஆமப்பா விந்தமுறை யார்தான்செய்வா ரருமையுள்ள கோரக்க ரறிந்துசெய்வார், தாமப்பா விந்தமுறை செய்துகொண் டாற் றனவரு மென்றறிந்து வாழலாகும், காமப்பா வென்றபத நீயோகி நலமான சற்குருவைத் தொழுதுபோற்று, வாமப்பா லந்தமதா னீறியேறி, வரையான வண்டவரை யேறலாமே. (228)

அகப்பைசித்தர் கற்பம்.

ஏறுதற்கு யின்னமொரு மார்க்கங்கேளு விதமாகச் சொல் லுகிறே னகப்பைசித்தர், பேறுபெற்ற பெருமையென்ன சொல் லப்போறேன் பிலமாகத் தன்னுரிமை யறிந்துகொண்டு, கூறு தற்கு அம்மெனவே யகாரதீட்சை குறிப்பான தசதீட்டை மௌனவாலே, தேறுதற்கு வவ்வாலே பீசந்தன்னைச் செம்மை யுடன் றினநூறு செபித்தார்பாரே. (229)

பாரப்பா தசதீட்சை யகாரபீடம் பத்திகொண்ட பீட மடா மென்னசோதி, நேரப்பா நின்றதனு லகப்பேசித்தர் நீடூழி காலமெல்லா மகப்பையானூர், ஆரப்பா வவர்பெற்ற சித்திதன்னை யாரறியப் போறூர்கள் அகாரவாலே, தீரப்பா லட்சமுரு செபித்த தாலே திறமாக வகம்வலுத்து சித்தியாச்சே. (230)

சித்தியென்ன சித்தியென்று கேட்டால்மைந்தா செடம் வலுத்து வருபமய மானதாலே, முத்திகொண்ட சித்தனடா வகப்பேய்சித்தர் மூர்க்கமுடன் வெகுகோடி காலம்வாழ்ந்தார், பத்தியென்ன மூர்க்கமென்ன சொல்லப்போறேன் பாலகனுய் வெகுகோடி பாரின்மீதே, சுத்திகொண்ட சித்தனென்று துருவ மானூர் சுருதியுள்ள மனோன்மணியைப் பூசைபண்ணே. (231)

பூசையென்ன மனோன்மணியைப் பூசைபண்ண பூரண மாய் நின்றபரி பூரணமேயாகும், வாசமுள்ள பூரணமே மனோன் மணியாய்நிற்கும் மகத்தான பூரணமே யகாரதீட்சை, நேச முள்ள தீட்சையிலே தசதீட்சைபெற்று நின்றதினுற் சித்தரென்ற பேரேயாச்சு, தேசமெங்குங் கொண்டாடப் பேர்தான்பெற்ற சித் தனென்ற வகப்பையெனுஞ் சித்தனுச்சே. (232)

பீசமேன்பது—மூலம்.

அழுகண்ணிச்சித்தர் கற்பம்.

ஆச்சப்பா வழுகண்ணிச் சித்தர்மார்க்க மாச்சரிய மாச்சரி யஞ் சொல்லப்போமோ, நீச்சப்பா வெகுநீச்சு வாதியந்த நிலை யான வக்தம்டா பிரமவல்லி, காச்சப்பா தேங்காய்போற் கொடி யிற் றொங்கும் கருணையுட னக்காயை வெதுப்பிகொண்டு, பாச் சப்பா கல்லிலிட்டி வுடைத்துப்பாரு, பலாச்சுளைபோ லதிலிருக்கும் வழுக்கைதானே. (233)

தானான வழூர்தரசச் சுளையைமைந்தா தன்மையுட னெடுத்துப் பீங்கானில்வைத்து, தேனான வழூர்தரசத் தேனை வார்த்துத் திறமான ரவியில்வைக்க மைந்தாகேளு, ஊனான சுளை யும்ரச தேனுமொன்று யுடன்சேர்த்து மெழுகதுபோ லுறுதி யாச்சு, கோனான குருவருளாற் றொழுதுபோற்றிக் குறிப்பாக மேருவினிற் பதனம்பண்ணே. (234)

பதனமிகு பதனமதாய்ப் பதனம்பண்ணி பரமான குரு பதத்திற் பணிந்துகொண்டு, நிதமாக ரேசகபூ ரகமும்பண்ணி விசையாகக் கும்பகத்தில் மனதைவைத்து, சதமான மெழு கெடுத்துத் தியானஞ்செய்து சாதகமாய்க் குன்றியிடை கொண் டால்மைந்தா, பதமான தேகமது சித்தியாச்சு பராபரத்தோ டொப்பாச்சு பருவந்தானே. (235)

பருவமுடன் பருவமதிற் பருவங்கண்டு பக்குவமாய்த் தச தீட்சை பணிந்துகேட்டு, ஒருமையுடன் புருவநடு வொளியைப் போற்றி யூடாடும் வாசியைநீ யுறுதிகொண்டு, துருவமுடன் பூரகரே சகமும்பண்ணிச் சுடரொளியாங் கும்பகத்திற் பணிந்து நின்றால், தருவான சர்வாங்க மெல்லாஞ்சித்தி தன்மையுள்ள பூரணமுஞ் சித்தியாச்சே. (236)

சிவவாக்கியர் கற்பம்.

சித்தியுள்ள சிவவாக்கியர் செய்தமார்க்கஞ் சிவசிவா வென்ன சொல்வேன் சித்திமுத்தி, பத்திகொண்ட முத்தியதாற் சிவவாக்கி யரானார் பரமான சிவவாக்கியர்செய்த மகிமைகேளு, முத்தி கொண்ட பத்தியினால் மூலங்கண்டு முனையான சுழினையிலே தாண்டியேறி, சத்தியென்ற சிவசத்தி யிரண்டுங்கண்டு தன்மை யுடன் பூரணத்தை வாங்கினாரே. (237)

மூலமேன்பது—மூலாதாரம்.

வாங்கினதோர் பூரணத்தைப் பீங்கான்றன்னில் வளமையுள்ள பூரணத்தை வைத்துமைந்தா, பாங்குபெறப் பூரணத்துக் கரைவாசிதானும் பார்த்துமா வெனும்ரவி பீசங்கூட, சாங்கமா ரெண்டுமொன்ருய்ப் பிசைந்துமைந்தா சங்கையுடன் ரவிமுகத்தில் வைத்துக்கொண்டு, தீங்கில்லா ரசமதனைப் பத்துக்கொன்று சேர்த்துரவி முகத்தில்வைக்கச் சேர்ந்துபோமே. (238)

சேர்ந்துநின்ற ரசமூன்று மொன்ருய்ச்சேர்ந்து திறமான மெழுகாகு மென்னசொல்வேன், பாந்தமா யம்மெழுகு நாமங்கேளு பக்குவமாய்த் திரிமூர்த்தி யென்றும்பேரு, காந்தமாய்க் கருநீல வர்னமென்றுங் கருதினுர் பெரியோர்கள் ரிஷிகள்தானும்; சார்ந்தமாய் மூன்றுரசஞ் சேர்ந்ததாலே தயவான மும்மூர்த்தி யானுர்பாரே. (239)

பாரப்பா வம்மெழுகை மேருக்கேற்றிப் பக்குவமாய்ச் சற்குருவின் பதத்தைப்போற்றி, நேரப்பா நின்றநிலை தவராமற்ருனினைவாக ரேசகபூ ரகமும்பண்ணி, வீரப்பா செய்யாமற் கும்பகத்தினின்று விசையான மெழுகிலொரு பணவிடைதானெடுத்து, காரப்பா குருபதத்தைக் கருத்துள்வைத்து கருவான [1]வம்மெழுகைப் பொசித்திடாயே (240)

பொசித்திடுநீ மண்டலத்தில் மைந்தாகேளு புதுமையுடன் சடத்திலொரு சட்டைபோகும், பசித்ததொரு தூலமது கரைந்துநல்ல, பக்குவம தாயிருந்து விருகுந்தேகம் விசித்திமே லாக்கினையிற் றீபந்தோன்றும் வேதாந்த ரூபமதாய் விளங்கும்பாரு, சுசித்ததொரு வாக்கையது வரூபமான சுகமதனுற் சிவவாக்கியரெனும் பேராருரே. 241)

போரான பெருமையினுற் சிவவாக்கியர்தானும் பேருலகில் மாந்தருக்குக் குருவானுர்கேள், கூரான சிவவாக்கியர்போலார் தான்மைந்தா கூர்மையுடன் சுரூபமதா யிருந்தாரப்பா, தூரான வடிமூல மாராதாரஞ் சுற்றிவந்த திறமதனைச் சொல்லப்போமோ, ஆரான வாறுதல மவனைப்போலே யடங்கினவ ராருமில்லை யருளைப்போற்றே. (242)

[1] பணவிடையென்பது—ஒரு காசிடை.

போற்றுவது யின்னூலைப் போற்றவேணும் புகழ்பெரிய கும்பமுனி வரத்தாற்சொன்ன, தேற்றியதோ ராயிரத்து கிருநூற் றன்னை திறமான மனதறிவாற் பார்க்கவேண்டும், தோற்றியதோ ரன்னூலைக் கண்டோரையா துருவமுள்ள துருவமதிற் றுலங்குவார்கள், சாற்றியமா யின்னூலை வெளிவிட்டோர்கள் சண்டாள தத்துவமா யானவாறே. (243)

சூரியானந்தர் கற்பம்.

வாறான சூரியா னந்தர்தானும் வகையுடனே யவர் முறையை வழுத்தக்கேளு, கூறான காந்தியிலே யனந்தமுண்டு குறிப்பான காந்தியடா வன்னிவன்னி, நீறான வன்னியடா செம்மைசெம்மை நிறைந்துநின்ற செம்மையடா சத்தியாச்சு, பேறான சத்தியடா நாதமப்பா பெருமையுள்ள நாதமது காரமாமே. (244)

ஆமப்பா வதனிதொரு விபரமுண்டு வகையடக்கஞ் சொல்லுகிறே னறிந்துகேளு, காமப்பாற் கலவியுள்ள நாதமாகா கன்னியிலே முதலுமிரு வகையுமாகுந், தாமப்பா சத்தியைநீ பூசை பண்ணித் தன்மையுடன் பீங்கானில் நாதம்வாங்கி, நாமப்பா சொல்லுகிறேன் . தண்ணீருப்பு நன்மையுள்ள நாதமது பத்துக் கொன்றே. (245)

ஒன்றான நாதமதில் விந்துசேர்க்க வுரிமையுட னுதவிந்து மொன்றாய்ச்சேர்ந்து, நன்றான மெழுகதுபோ லிறங்கிநிற்கும் நாத விந்து செயலதனை நவிலப்போமோ, குன்றான மெழுகதனைச் சிமிழில்வைக்கக் கூறான சிமிழதுதா னென்னவென்றால் பன்றான தங்கமதாற் சிமிழ்தான்செய்து பத்தியுடன் மெழுகுவைத்துப் பதனம்பண்ணே. (246)

பதனமுட னீசானம் பூசைபண்ணிப் பக்குவமாய் சற்குருவைப் பணிந்துபோற்றி, சதமாக மெழுகிலொரு பணவிடை தானெடுத்து சாதகமாய்ச் சடமதற்குத் தனதாயூட்டு, விதனமதைத் தானொடுக்கி மண்டலமேகொண்டால் வேதாந்த சடலமது சட்டைபோகும், நிதமாக வளவிடையாய்ச் செலுத்திணுக்கா னேர்மையுள்ள தேகவச்சிர காயமாமே. (247)

விதனமேன்பது—மனவேதனை.

பாம்பாட்டிசித்தர் கற்பம்.

ஆமப்பா சித்தரிலே பாம்புசித்த ரவருடைய மார்க்க மதை யறியப்போமோ, தாமப்பா தன்னிலையைத் தானேகண்டு தானவனாய் நின்றுதவம் பெற்றாரையா, நாமப்பா சொல்லுகிறே மவர்தான்செய்த நன்மைகுணஞ் சொல்லுகிறே நன்மையாக, காமப்பா கருவிருந்த கருவைக்கேளு கருவான மயேந்திரமலை சார்பிற்றானே. (248)

தானான மலைச்சார்பிற் றுன்றானென்று சாதகமா யம்மலை யில் வாழும்போது, கோனான குருவருளாற் பாம்புசித்தர் கொடி தான நாகமடா ராகுகேது, ஆனான ராகுடனே கேதுசேர்ந்து வருமையுடன் வெண்சாரை யொருமையாக, தேனான வெண் சாரை யருமையாகுந் திடமான சாரைவெகு மாயமாமே. (249)

மாயமாய்ப் போனதுதா னென்னவென்றால் மார்க்கமுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு, நேயமுள்ள வெண்சாரை மலைமே னின்று நிசமாகக் கீழ்நோக்கிப் பாயும்பாரு, தாயகமாய்க் கண்ட வுடன் றம்பித்தேதான் றன்பிடித்துத் தயவாகப் பூசைபண்ணி, காயமெனப் பிடித்தவிடங் கையிற்றங்குங் கருவாக விருபுறமு மொன்றாய்ப்போமே. (250)

ஒன்றாகக் கூட்டியல்லோ மைந்தாகேளு வொருமையுடன் பிருதிவியி லொன்றாய்ப்போகு, நன்றாக வதைக்காண வேண்டு மென்றால் நம்மாலு மவனாலு முடியாதப்பா, நின்றுடு மச்சாரை சித்தர்காண்பார் நிச்சயமாய்ச் சாரைதனை வாங்கிமைந்தா, குன் றாக வைந்தெழுத்தைக் குறியாயெண்ணி குணமாக மனதறிவாற் பொசித்திடாயே. (251)

பொசித்தவுடன் வாசியைநீ வணங்கிமைந்தா பூரணமாய் ரேசகபூ ரகமும்பண்ணி, விசித்திமேற் கும்பகத்தைக் குருவைப் போற்றி வெற்றிபெற மெய்யெனவே புத்திகொண்டு, பசித்தமன மலையாதே தினமுங்கொண்டாற் பாலனாய் வயதுபதி னாறதாகுங், கசித்தமன துறுதியினாற் பொசித்ததாலே கரும்பாம்பு சித்தனென்ற பேர்தானச்சே. (252)

மனதுறுதியென்பது—மனோதிடம்.

ஆச்சப்பா சித்தரிலே பாம்புசித்த ரவர்போலே பேரு பெற்ற ராருமில்லை, மூச்சப்பா தானடங்கும் வாசுகினாலே மூதண்டங் கைலாய மறிந்தாரையா, பேச்சப்பா வவர்பேச்சு பேசவென்றால் பேருலகிற் சித்தருண்டோ வென்னசொல்வேன், காச்சப்பா கருஞ்சாரை வெண்சாரைரெண்டுங் கருத்துறவே கொண்டுகரை யேறினாரே. (253)

கமலமுனி கற்பம்.

கரைகண்ட கமலமுனி கற்பங்கேளு கமலமென்ற வாயிரத்தெட் டிதழைப்போற்றி, வரைகடந்து மேல்வரையில் மனதைநாட்டி மந்திரபஞ் சாக்ஷரத்தை மனதிற்கொண்டு, திரைகடந்து கமலமல ரமுர்தம் வாங்கித் திறமான பீங்கானிற் பதனம்பண்ணி, நிரையறிந்து முப்பூவை பத்துக்கொன்று நீட்டிநன்றாய் ரவிமுகத்தில் வைத்துப்பாரே. (254)

பார்க்கையிலே யமுர்தரச வாதந்தன்னைப் பரமான முப்பூவாற் படிந்துபோகும், ஏர்க்கையுடன் முப்பூவு மமுர்தம்ரெண்டு மிணங்கிரச மெழுகதுபோ லிருக்குமப்பா, மார்க்கமுள்ள மெழுகதனைப் பதனம்பண்ணி மந்திரபஞ் சாக்ஷரத்தை மனதினாட்டி, சேர்க்கையுடன் சுழிமுனையில் வாசிநாட்டித் திறமாக ரேசகபூரகமும்பண்ணே. (255)

பண்ணப்பா கும்பகத்திற் குருவைப்போற்றி பத்தியுடன் மெழுகதிலே பணவிடைதானெடுத்து, விண்ணப்பா தானேக்கிப் பொசித்தால்மைந்தா விபரமுள்ள போதையைநா னென்னசொல்வேன், கண்ணப்பா மனக்கண்ணாற் சுழினைபார்த்துக் கருணையுள்ள சுழினையினாற் றீபமேற்றி, உண்ணப்பா தீபமதாற் பரத்திற்சென்று வொருமையுடன் கமலரசம் பொசித்திடாயே. (256)

பொசித்தமன தாறுதியினால் மைந்தாகேளு பொருளான கமலமுனி யானாரப்பா, கசித்துமனக் கசிவதனாற் கமலனயன் காயசித்தி யோகமதாற் கருணைசேர்ந்து, பசித்துபரி பூரணத்தாற் பதவியான பங்கயத்தின் றரிசனத்தாற் பாரின்மீதே, வசித்த பஞ்சா க்ஷரமகிமை வலுமைபெற்று வாசிமல ராற்றீபம் வணங்கினாரே. (257)

பஞ்சாக்ஷரமென்பது—சிவநாம அக்ஷரம் ஐந்து.

சூதமுனி கற்பம்.

வணக்கமுள்ள சூதமுனி மகிமைகேளு வரிசையுடன் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா, இணக்கமுள்ள சூதமடா மந்திரவாலே யேகாந்த வாலேரச மென்னசொல்வேன், மனக்கமல வாலேரச மென்னசொல்வேன், வாலேயுட மதியமுர்த மகத்தாம் போதந், தனக்குமதி யமுர்தமது சூதமாகுந் தனதான சூதமது சூதபற்பம். (258)

சூதமென்ற பற்பமது சுத்தவெள்ளைத் துலங்குகின்ற வெள்ளையடா மதிதானுச்சு, நீதமென்ற மதிதானும் விந்து விந்து நிசமான விந்ததுவுஞ் சூதமாகும், பூதமென்ற சூதமது பாலாம்விந்து பக்குவமாய் விந்துநிலே பருவங்கண்டு, போதமுள்ள விந்துரச நிலேயைக்கண்டு புத்தியுடன் வாங்குதற்கு வரிசைகேளே. (259)

கேளப்பா வரிசையென்ன வென்றுகேட்டால் கெணிதமுடன் பூர்வமாம் பக்ஷநாளில், நாளப்பா குருவாரந் தன்னிலேதா னடுவான மதியமுர்தக் காலேயூணு, கோளப்பா யில்லாமல் விந்துரசம்விழுங் குறிப்பாகப் பீங்கானில் வாங்கிக்கொண்டு, நீளப்பா விந்துரச மென்னசொல்வே னிலேயான ரசமதிலே சொல்லக்கேளே. (260)

சொல்லக்கேள் விந்துரசந் தன்னிலேதான் சுகமாகச் செயவீரம் பத்துக்கொன்று, வில்லக்கேள் வீரமுடன் பூரஞ் சேர்த்து விசையான பூரமுட னமுர்தஞ்சேர்த்து, அல்லக்கேள் நாகரச மதனிற்சேர்த்து வன்பாக விரலாலே யமர்த்திமத்தி, சொல்லக்கேள் ரவிமுகத்தில் வைத்துப்பாரு சோதனையாய் ரசநாக மாண்டுபோமே. (261)

போமப்பா ரசமஞ்சு மாண்டுநல்ல பொன்னிறம்போல் மெழுகாகு மென்னசொல்வேன், தாமப்பா தன்னருளாற் றன்னுற்கண்ட தனித்தரச மெழுகதனைப் பதனம்பண்ணி, நாமப்பா சொல்லுகிறேன் குருவைப் போற்றி நலமாக வின்னம்வெகு பூசைபண்ணி, வாமப்பா வமுர்தரசம் பணவிடைதான்கொண்டால் வரிசையுள்ள போதைவெகு போதமாமே. (262)

விந்துவென்பது—ரசம்.

ஆமப்பா போதமய மென்னசொல்வே னுதியந்தப் பருவ மனுதக் கண்ணிற்காண, போமப்பா வாசிமல ரதனிற்செல்லும் புகழான தீபசுட ரதிலேசெல்லும், நாமப்பா விதனைத்தா னுடி நீதா னலமாக வாலையுட பதத்தைக்கண்டால், தாமப்பா தன்னிலையைத் தானேகாட்டுந் தனதான சடத்திலொரு சட்டைபோமே. (263)

சட்டையொன்று கருப்பாக வுரிந்துபோகுஞ் சடாட் சரமே மென்மேலும் வலுத்துப்போகும், நிட்டையிலே வாசியது சுழிளைக்கேறும் நேரான சுழினையிலே தீபந்தோன்றுந், திட்ட முட னத்திப வொளியிற்சென்று சிவசிவா கமலமூல வமுதர்தங் கொண்டு, அட்டாங்க யோகமுதற் சித்தும்பெற்று வனுக்கிரக சூதமுனி யானார்பாரே. (264)

பாரப்பா சூதமுனி பெற்றபேறு பாருலகிற் சித்தர்களோ காணப்போமூர், பேரப்பா பேறுபெற்ற பெருமையென்ன பெரி தான விந்துநிலை பெருமையாலே, வீரப்பா தானடங்கி விசையங் கொண்டு வீரியத்தை வீரியத்தால் வினவிப்போற்றி, காரப்பா கருத்தறிந்து கார்த்தாயானற் கைலாயப் பதவிதனைக் காட்டும்பாரே.

நந்தீசர் கற்பம்.

பாரப்பா நந்தீசர் கற்பக்கூறு பக்குவமாய்ச் சொல்லு கிறேன் மைந்தாகேளு, நேரப்பா வடிமூல மேலாதாரம் நின்றபதி யோங்கார மூலாதாரங், காரப்பா மூலமென்றால் நந்திநந்தி கரு வான நந்தியடா சத்தியாச்சு, ஆரப்பா வறிவார்கள் நந்திதண்ணீ ரிதான நந்தியடா நாதமாமே. (266)

நாதமடா நந்தியென்ற தண்ணீர்வாங்கி நலமான விந்து நீர்சாயவிட்டு பேதமடா விளையாம லப்புவுப்பும் பிரியமுடன் றன்கரைக்கும் போதுமைந்தா, நீதமுடன் கற்பூரம்கூ பத்துக் கொன்று நிறுத்துநன்றாய் ரவியில்வைக்க நிசமேயாகும், நாத மென்ற நந்தியடா மெழுகாய்ப்போகும் நலமான மெழுகதனைப் பதனம்பண்ணே. (267)

அட்டாங்கமென்பது—எட்டுவித யோகாப்பியாசம்.

பண்ணுவது பரலிதனிற் பதனம்பண்ணி, பக்குவமாய்ச் சற்குருவின் பாதம்போற்றி, நண்ணுவது சுழினையிலே நாட்ட முற்று நாதாந்த கமலமல ரமுர்தங்கொண்டு, தண்ணுறவா லதன் மூலக் கனலைத்தூண்டித் தப்பாமல் ரேசகபூ ரகமும்பண்ணி, விண்ணுதய மானகும் பகத்திற்சென்று மெய்த்தீபச் சுடரதனை மேவிப்போற்றே. (268)

போற்றுவது பூரணமே யென்றுபோற்றிப் புனிதமுடன் மெழுகெடுத்துத் தியானஞ்செய்து, பார்த்திபனே குன்றியிடை கொண்டாயாறுற் பக்குவமாய் நந்தியொளி பிரகாசிக்கும், கார்த் துநீ யப்பிரயைக் கண்ணிற்கண்டாற் கற்பூர தீபமது போலேதேகம், நாற்றிசையி லுள்ளசித்தர் மெச்சுவார்கள் நாதாந்த நந்தீசர் முறை தப்பாதே. (269)

பிர்மமுனி கற்பம்.

முறைதவறுப் பிர்மமுனி தவம்நான்சொல்ல முடியாது முடிந்ததொரு முடிவைச்சொல்வேன், நிரைதவறு நிறையினின்ற நிரஞ்சனமாமண்டம் நேரான வண்டமடா பிர்மகற்பம், உரை தவறு வாசியது வுறைந்துநின்ற வூமையென்ற மௌனமடா யகாரபீடம், மறைமுதலாய்ச் சொன்னதொரு மைந்தாமைந்தா மதிசிறந்த வமுர்தமடா பூரணமுமாமே. (270)

ஆமப்பா பூரணமா மமுர்தமண்ட மமுர்தரச வண்டமடா ஞானமார்க்கந், தாமப்பா தன்னருளா னிலையைப்பெற்றுத் தன தான நிலையிதுவென் றறிந்துகொண்டு, நாமப்பா சொல்லுகிறே முறுதிபெற்று நடுவான பூரணத்தை வாங்கிமைந்தா, காமப்பா விட்டுவொரு பீங்கான்றன்னிற் கருத்துறவே[1] மத்தித்து ரவி யில்வையே. (271)

வையப்பா ரவிதனிலே வைக்கும்போது மார்க்கமுள்ள பூரமுடன் வீரம்ரெண்டு, நையப்பா நுறுக்கியதிற் சேர்த்துக் கொண்டு நன்மையுடன் ரவிமுகத்தில் நவநாள்தானும், பையப்பா வைத்தெடுப்பாய்ப் பதனமாக பக்குவமாய் நவநாட்போய் பத்தா நாளில், மெய்யப்பா சொல்லுகிறே னென்னசொல்வேன் வேதாந்த வண்டமது மெழுகாய்ப்போமே. (272)

[1] நையப்பாயென்பது—பொடியாக்குதல்.

மெழுகான வண்டமதின் மெழுகைமைந்தா மெய்யான பரணிதனி லடக்கம்பண்ணி, நழுகாமல் நடுவணையைப் போற்றியேறி நடுவான பூரணத்தில் மனதைநாட்டி, வழுவாமல் ரேசகபூ ரகமும் பண்ணி, வணக்கமுடன் கும்பகத்தில் மருவிநின்று, சழுக்கான சுடரொளியைத் தாண்டிமைந்தா சோதியென்னுஞ் செகச்சோதி தன்னைக்காரே. (273)

தன்னைத்தான் கார்த்துநீ தனதாய்மைந்தா தன்மையுள்ள பூரணமே யென்றுசொல்லி, உன்னைத்தா னுன்கார்த்தே னென்னைநீயும் முகந்தடுமை கொண்டுமன துறுதியாக, என்னைத்தா னிரக்ஷிக்குந் தாயேயென்று வின்பமுட னண்டமதின் மெழுகுவாங்கி, விண்ணைத்தா னேக்கிமனக் கசடுபோக்கி வேதாந்த மெழுகிற் பண விடைதான்கொள்ளே. (274)

க த கொள்ளப்பா மெழுகிலொரு பணவிடைதானெடுத்து கொண்டபின்பு சற்குருவைத் தொழுதுபோற்றி, மெள்ளப்பா வந்திசந்தி யிருநேரந்தான் விரும்பியே யம்மெழுகை மெய்யிலூட்டி, செல்லப்பா நடுமணையில் ரவியின்வீட்டிற் செம்மையுடன் கற்பூர தீபம் பாரு, உள்ளப்பா வானந்த வமுர்தம்பாயு முத்தமனே யந்தமுர்த மதியமுர்தமாமே. (275)

ஆமப்பா வமுர்தரசங் கொண்டால்மைந்தா வாதிமுதலந்தவரை மூலந்தோற்றுந், தாமப்பா வம்மூலங் கண்டபோதே தன்மையுள்ள தேகவச்சிர காயமாகும், நாமப்பா வவ்வமுர்தங் கொண்டபோது நாடிநின்ற போதையென்ன சொல்லப்போறேன், வாமப்பா லகிரியடா மைந்தாமைந்தா மகத்தான லகிரியடா மார்க்கங்கேளே. (276)

மார்க்கமென்ன சொல்லுகிறே னண்டந்தோற்று மகத்தான வண்டமடா மூளையாச்சு, ஏர்க்கையுடன் சுழிமுனையின் வாசியென்று வின்பமுள்ள வாசியதற் கிடமேதென்றார், சேர்க்கையுடன் கற்பூர தீபந்தன்னிற் சிறந்தந்தச் சுடரொளியின் செம்மையாக, மார்க்கமுள்ள மூலமதிற் சேர்ந்துஅந்த மகாமுத்தியுள்ளதேக வச்சிரமாச்சே. (277)

லகிரியென்பது—போதை.

கும்பமுனி நூலிற்சொல்லிய கருக்கள்.

ஆச்சப்பா தேகவச்சிர காயமான வருள்பெருகும் கும்பமுனியையர்தாமும், பேச்சப்பா பேசுதற்கு நாவோவில்லை பேயின்ப சிற்றின்ப மிரண்டுங்கண்டார், மாச்சப்பா யில்லாத கருவின்போக்கு, மகத்தான மாரணமு ம்மையும்பேர்க்கு, காச்சப்பா வாயிரத் திருநூறுக்குள் கருணையுள்ள வட்டசித்து மெட்டுமாமே. 278)

ஆமப்பா வட்டசித்துத் திலதப்போக்கு மாச்சரிய மான கரு வழலைப்போக்கு, தாமப்பா வஞ்சனமு மறைப்புப்போக்கு சாலமென்ற வகைகளிலே யனந்தம்போக்கு, நாமப்பா சொல்லுகிறேஞ் செயநீர்ப்போக்கு கலமான செந்தூரப் பற்பப்போக்குங், காமப்பாற் கலவியிலே குளிகைப்போக்கு கட்டுவகை சாக்குவைப்பு மின்னங்கேளே. (279)

கேளப்பா சொல்லுகிறேந் தைலப்போக்கு கிருபையுள்ள சவர்க்கார வழலைப்போக்கு, வாளப்பா முப்பூவின் குருவின் போக்கு வரிசையுள்ள வேதையிலே யனந்தம்போக்கு, கோளப்பா வில்லாத சத்தகோடி குறிப்பாக மந்திரத்தின் சத்தப்போக்கு, நாளப்பா மோடியிலே மறைப்புப்போக்கு, நன்மையுள்ள வித்தைகள்தான் சொல்லப்போமோ. (280)

கும்பமுனி கலைக்ஞானம் இந்த ஆயிரமும் பார்க்கவும்.

சொல்லவென்றாற் பொருள்களெல்லா மைந்தாகேளு சொல்லுகிறே னாயிரத்திருநூறுக்குள், விள்ளாத பொருள்களெல்லாம் வெளியாய்த்தோன்ற விளம்பினார் கும்பமுனி யையர்தானுங், கல்லாத கற்பனைகள் காணச்சொன்ன கருவான வாயிரத் திருநூற்றன்னை, எல்லார்க்கு மேகதரு வாகிநின்ற வேதாந்த புலத்தியர்தா னெனக்கீய்ந்தாரே. (281)

எனக்கீய்ந்தா ராயிரத் திருநூற்றன்னை யீய்ந்துமிசக் கருக்கடைக ளெல்லாந்தோன்ற, கணக்காகக் கைமுறைகள் கருவுருஞ் சொல்லி கற்பனையும் பிறப்பினையுங் காணச்சொல்லி, வணக்கமுள்ள வணிமுறைகள் வண்மைசொல்லி வரிசையுடன் வாராமதேவாவென்றார், இணக்கமுட னவர்பதத்தைக் கொண்டுநானுமிருந்தனடா கோடிவரை யோகந்தானே (282)

அட்டசித்து-அணிமா, மகிமா; யென்னும் எட்டுவகைச்சித்திகள்.

தானான யோகமதிற் றானேதானாய்த் தன்மையுட னின்ற னடா வுண்மையாக, கோனான குருவருளாற் குருவைப்போற்றி குருசொல்ல வின்னூலைக் குணமாய்ப்பாடி, தேனான கமலமல ரமுர்தங்கொண்டு திறமாக வாயிரமாய்ப் பாடினேன்யான், வீணான பொருள்களொன்றுஞ் சொல்லவில்லை வேதாந்த வாயிரத்தை விரும்பிப்பாரே. (283)

பாரப்பா வாயிரத் திருநூற்தானும் , பருவமுட னின்னூ லாயிரமும்பாரு, நேரப்பா நின்றபொருட் டானேதோன்றும் நிச் சயமா யாதியந்த நிலைமைகாட்டுஞ், தேரப்பா மனந்தேறு மறி வுஞ்சேருந் திறமாக வாசியுட கருவுந்தோற்றும், சாரப்பா யோகமுடன் ஞானம்ரெண்டுங் கருணையுடன் றேன்றுமடா கரு வாய்ப்பாரே. (284)

கருவான கருக்குருவா மின்னூல்மைந்தா காட்டாதே யொருவருக்குங் காட்டினுக்கால், உருவான தேகமப்பா வழிந்துபோகு மொருவரிடங் காட்டாதே யுண்மையுண்மை, தருவான வைத் துருவா மிந்தநூலைத் தானவனாய் நின்றநிலை தானேகாட்டுங், குரு வான சற்குருவின் பாதம்போற்றிக் கூர்மையுட னின்னூலைப் பதனம்பண்ணே. (285)

பதனமுட னேயெடுத்துப் பதனமாகப் பக்குவமாய்ப் பார்க்கையிலே மௌனம்பூண்டு, விதனமெல்லாந் தானகற்றி யறி விற்சேர்ந்து விபரமுட னூல்பார்த்துக் குகைக்குள்வைத்து, நித மாக மலரெடுத்து வர்ச்சனைகள்செய்து நீமகனே பூசித்தா லெல் லாஞ்சித்தி, சதமாக கருக்களெல்லாந் தானேதோற்றுந் தானவ னாய் நின்றபொருள் தன்மைதானே. (286)

தானென்ற கும்பமுனி புலத்தியமாரிஷியுந் தனதாக யிவர் களுட முறைதானப்பா, தேனென்ற வாயிரத் திருநூற்பார்த் தாற் றேறாத சிந்தையெல்லாந் தேறுந்தேறும், ஊனென்ற கற்பாதி கற்பந்தோன்று முறுதியுடன் வாசியது வுண்மையாகும், கோனென்ற ஞானமுடன் யோகமெய்துங் குறிப்பான தீபவொளி குணமாம்பாரே. (287)

ஆதியந்தமென்பது—அடிமுடி.

பாரப்பா சித்தாதி கற்பமுறையெல்லாம் பாடினே னநு போகம் பலநாள்மைந்தா, நேரப்பா யானறிந்து பரமானுப்போல் நீழ்புவியி லாரறியப் போமூரப்பா, தேரப்பா நூலறிந்து நூலைப் பார்த்தாற் சிவசிவா சிவகலையுந் தானேதோற்றுஞ், சீரப்பா வவரவர்கள் கற்பமுறைசொன்னேன் செம்மையுடன் வாதமுறை செய்யக்கேளே. (288)

வாசுதேவர் வாத அரிதாரக் குரு.

கேளப்பா தேவர்களில் வாசுதேவர் கிருபையுட னவர்க ளூட தெரிசனத்தைக்கேளு, வேளப்பா வெரித்தநெற்றிக் கண் ணுல்மைந்தா விசையான முச்சுடரின் சுண்ணத்தாலே, ஆளப்பா நவலோகம் வேதையாகும் அரனுரு முமையவட்கு முரைத்தா ரப்பர், கோளப்பா பொருளெல்லா முப்பூவாங்கி சுகமாக விடைக்கிடையாய்த் தூரிசுசேரே. (289)

சேர்த்துமிகக் கல்வத்தி லிட்டுக்கொண்டு திறமாக வைங் கோலத் தைலத்தாலே, கார்த்துமிகச் சாமவரை நன்றுயாட்டிக் கருவான தாளகற்றுக் கவசம்பூட்டி, பார்த்திபனே ரவியில்வைத் துக் காய்ந்தபின்பு பக்குவமாய் மண்சீலை வலுவாய்ச்செய்து, போற்றியே வெயிலில்வைப்பாய் மூன்றுநாள்தான் புண்ணியனே தானெடுத்துப் புடத்தைக்கேளே. (290)

கேளப்பா நிலத்திலொரு குழிதான்வெட்டி கிருபையுடன் பத்தெருவிற் புடத்தைப்போடு, ஆளப்பா வரிதார மென்ன சொல்வே னப்பனே புகையடங்கிக்கட்டிப்போகும், வாளப்பா சற்குருவைத் தொழுதுபோற்றி வரிசையுட னீசானம் பூசை பண்ணி, காளப்பா புடமாறி யெடுத்துப்பாரு நன்மையுடன் றன்னிறமாய்க் கட்டிப்போமே. (291)

கட்டிநின்ற தாரமதை யெடுத்துக்கொண்டு கணக்காக விடைக்கிடைதான் றங்கஞ்சேர்த்து, திட்டமுட னுருக்கிடவே மணியாய்நிற்குஞ் செம்மையுட னிறையதுவுங் குறையாதய்யா, சட்டமதாய் வெள்ளிசெம்பு வெட்டுரெண்டுந் தன்மையுடன் குகைதனிலே யுருகும்போது, மட்டாகக் கலங்கமதிற் குன்றியிய மார்க்கமுள்ள வயதுவீ ராறுமாமே. (292)

வேதையென்பது—போன்.

ஈராறு பணிரெண்டு சுத்தவெள்ளை யென்மகனே விராக னிடை குகையிலிட்டு, நீராக வுருக்குமுகந் தன்னிலேதா னிசமாகக் களங்கதிலே குன்றியீய, கூராக வெடுத்துப்பா ரென்னசொல்வேன் குருவான தங்கத்துக் கதிகமாகும், பேரான தங்கமதை யார்தான்காண்பார் பெருமையுள்ள தங்கமது அங்கந்தானே. (293)

அங்கமதாய்க் குடவணிலே பத்துக்கொன்று வப்பனே களங்கதனைக் குன்றியீய, பங்கமின்றி யீரேழு வயதேகாணும் பக்குவமாய்ப் புடம்போடத் தங்கமாகும், வங்கமதிற் பதினாறுக் கொன்றேயீய வயதுசொல்ல முடியாது மைந்தாமைந்தா, தங்க நின்ற சரக்கதுதான் முரமாகுந் தன்மையுடன் றன்னிறத்தைக் காட்டும்பாரே. (294)

பார்ப்பதற் கின்னூலைப் பார்க்கவேண்டும் பக்குவமாய்ப் பூரணத்தைப் பணியவேண்டும், ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்க வேண்டு மாதியந்தப்பதவியிலே யடுக்கவேண்டும் கூர்ப்பதற்குக் குண்டலியின் குறியைக்காண குருவான தேகமடா சித்தியாக, கார்ப்பதற்குக் காயாதி கற்பந்தன்னைக் கருத்துறவே யுண்டுடுத்திக் காணுவாயே. (295)

திருமூலர் முறை.

காணுதற்குத் திருமூல ரையர்செய்து கருணைபெற்ற தரி சனத்தைக் கருதக்கேளு, பேணுதற்குக் கருவங்கக் கட்டிவாங்கிப் பெருமையுள்ள சருகுடனே முப்பூச்சேர்த்து, பூணுதற்குக் கல்வமதி விட்டுக்கொண்டு புதுமையுடன் கட்டினதோர் தாரந் தானுந், வேணுதற்காய் விராகனிடை சேர்த்துக்கொண்டு விபர முடன் றன்சாற்றி லரைத்திடாயே. (296)

அரைத்ததொரு மருந்ததனை வங்கத்திற்கு வப்பிறன்றாய்க் காய்ந்தபின்பு மண்ணுஞ்செய்து, வரைக்கடங்கா ரவிதனிலே காயப்போட்டு வளமாக நீர்வற்றக் காய்ந்ததானாற், றிரைக்கடங் காப் பத்தெருவிற் புடத்தைப்போடு சிவசிவா கருவங்கமென்ன சொல்வேன், நிரைக்கடங்கா நீர்வற்றிக் கட்டிப்போகும் நீர்வற்றிக் கட்டினதை யுடைத்துப்பாரே. (297)

கருவங்கமென்பது—காரீயம்.

உடைத்துமிகப் பார்க்கையிலே நாகம்போலே யொளி யான கண்விழுந்து தெறிக்குங்கட்டி, புடைத்ததொரு வங்கத்தை யுருக்கிப்பாரு புதுமையுள்ள காரமாங் கண்விட்டாடுங், திடத் துடனே யுருகினதோர் வங்கமப்பா செம்மையுள்ள வெள்ளிபோ லிருக்கும்பாரு, படைத்ததொரு வங்கமதற் கிடைதான் றங்கம் பக் குவமாய்ச் சேர்த்துருக்கிப் பரிசுபாரே. (298)

பாரப்பா சுத்திசெய்த செம்புதன்னிற் பக்குவமாய்ப் பத் துக்கு வொன்றுதாக்கி, நேரப்பா யுருக்கிப்பார் வயதெட்டாகும் நீமகனே தகடுதட்டிப் புடத்தைப்போடு, வீரப்பா தான்விலகி யிறக்கமாகும் விபரமுட னிறங்கியது தங்கமாகும், ஆரப்பா வறி வார்கள் தங்கப்போக்கு வப்பனே தங்கமென்றால் வங்கமாமே. ()

சட்டநாதர் முறை.

தங்கமென்ற நாதரிலே சட்டநாதர் தன்மையுடன் செய்த தொரு வாதப்போக்கு, அங்கமுடன் சொல்லுகிறே னையாகேளு வாச்சரியமாச்சரி மயத்தின் மார்க்கம், சங்கையுட னுதியந்த வடி முடியுமாச்சு சதுரான வடிமுடியு மொன்றாய்க்கூட்டி, பங்க மில்லாக் கல்வமதி லாட்டிப்பார்க்கப் பருவமுடன் மெழுகாகு மதனிற்கேளே. (300)

கேளப்பா மெழுகிடைதா னரைப்பொடியாய்ச் சேர்த்துக் கிருபைபெறப் பிசைந்துருட்டிக் குகைக்குள்வைத்து, கோளப்பா வாராம லூலையில்வைத்து குமுறவே குகையமுக வூதிப்பாரு, தாளப்பா திரைபுரைதா னடங்கிமைந்தா தன்மையுட னுருகி யது மணிபோலாடும், வாளப்பா வம்மணியை புடைத்துப் பார்க்க வளமாகச் சுக்கதுபோற் றெறிக்கும்பாரே (301)

தெறித்ததொரு வயமணியை வாங்கிமைந்தா செம்மை யுடன் குடகரியிற் காரமூட்டி, கருத்துடனே யுருக்கிப்பார் கண் விட்டாடுங் கறுப்பில்லா வெண்மையென்ன சொல்லப்போறேன், திருத்தமுட னுருக்கியதோ ரயத்தைவாங்கித் திறபாகக் களங்கு வகை செப்புறேன்கேள், குறித்தகரு வயத்தினிடை தங்கஞ் சேர்த்துக் கூர்மையுடன் குகைதனிலே யுருக்குவாயே. (302)

அயமேன்பது—இரும்பு.

உருக்கமுட னுருக்கையிலே நாகஞ்சேரு உத்தமனே முக்கருவு முடனேசேர்த்து, வருக்கமுள்ள களங்கதனை யென்ன சொல்வேன் மகத்தான களங்கமதைப் பதனம்பண்ணி, கருக்கள் வெள்ளி தனிலேதா னூற்றுக்கொன்று காட்டினால் வயதுபதி னறதாகும், அருக்கான வெள்ளிபுணர் பூசத்தாற்கண்ட வாச் சரிய மாயிரத்தை யழுத்திப்பாரே. (303)

அழுத்திமுனே பார்க்கையிலே கமலபீட மதில்விளங்கும் கற்பூர தீபம்போலே, நெளித்தவிருள் வெளியொளியை யென்ன சொல்வே னேர்மையுள்ள பரிதிமதி சுழல்மூன்றப்பால், துளிர்த்த துளிர் சோதியென்ன சொல்லப்போறேன் சொற்பெரிய பூர ணத்தை யார்தான்காண்பார், பளித்தபளிங் கதுபோலே யிருக்கு மைந்தா பங்கயத்தின் றெரிசனத்தைப் பாருபாரே. (304)

போகர், கருவூரார், கொங்கணர், முறை.

பாரப்பா போகருடன் கருவூராரும் பத்தியுள்ள கொங்க ணரு மூன்றுபேரும், பேரப்பா பெற்றபேர் சொல்லக்கேளு பேருலகில் சித்தர்களு முனிதானப்பா, ஆரப்பா யிவர்போலே பெற்றார்பேரு அருமையுள்ள துருசுவெகு பெருமையாகும், நேரப்பா வத்துரிசு சுத்தப்பச்சை நிகரான பச்சையொன்று மில்லைதானே. ()

தானென்ற பச்சையுள்ள துருசுவாங்கித் தன்மையுள்ள நாதநீர் சுருக்குத்தாக்கி, ஊனென்ற உப்பதனாற் கவசம்பண்ணி யுத்தமனே மண்சீலை வலுவாய்ச்செய்து, தேனென்ற ரெண்டுரு விற் புடத்தைப்போடு செம்மையுட றுரிசதுவுங் கட்டிப்போகும், கோனென்ற குருவளா லெடுத்துக்கொண்டு குருவான ரசமதனை வாங்கிக்கொள்ளே. (306)

வாங்கியந்த ரசமதனைக் கல்வத்திட்டு வளமான துரிச தனைப் பத்துக்கொன்று, தாங்கியே வாய்நீராற் சாமமாட்டு தன்மைபெறச் சாமமாம் பழச்சாற்றன்றாற், நீங்கில்லா மூலைப் பாலாற் சாமமாட்டு செம்மையுள்ள தேனதனாற் சாமமாட்டு, பாங்குபெறச் சாமனு லாட்டித்தீர்ந்தா பக்குவமா யுருட்டியதை வட்டுப்பண்ணே, (307)

பச்சையென்பது—பச்சை நிறம்.

பண்ணியதோர் வட்டதனை ரவியில்வைத்துப் பசுமையறக்
காய்ந்தபின்பு மைந்தாகேளு, புண்ணியனே செப்போடு தன்
னில்வைத்துப் புத்தியுடன் மேலோடு பதியமுடித், தன்மை
யுடன் மண்சீலை வலுவாய்ச்செய்து தானொரு குழிவெட்டிக்
குழிக்குள்மைந்தா, நன்மையா யொருமுழத்திற் புடந்தான்போடு
நாடிநின்ற அப்புவுப்பும் கட்டிப்போமே. (308)

கட்டிநின்ற பக்குவந்தா னென்னவென்றாற் கறுப்பில்லாப்
படிகமது போலேகட்டுந், திட்டமுடன் கட்டினதோர் ரசத்தை
வாங்கிச் சிவசிவா யிடைக்கிடைதான் றங்கஞ்சேர்த்து, சட்ட
முடன் குகைதனிலே யுருக்கிப்பாரு சமர்த்தான களங்காகுந்
திறந்தான்மெத்த, பட்டமரம் பாலூறுங் களங்கைக்கண்டாற்
பத்தியுடன் களங்கதனைப் பதனஞ்செய்யே (309)

பதனமதாய் ரசக்களங்கை வைத்துக்கொண்டு பரமான குரு
பரத்திற் பணிந்துமைந்தா, விதமான நவலோகந் தன்னிலேதான்
விபரமுட னினமறிந்து விரைவதாக, சுதமான செம்பதிலே நூற்
றுக்கொன்று சுருக்கான வெள்ளியது நூற்றுக்கொன்று, மத
மான குடவனிலே நூற்றுக்கொன்று மகத்தான காரியம்
வகையைக்கேளே. (310)

வகையான வீயமதில் நூற்றுக்கொன்று மார்க்கமுடன்
மற்றதிலே யன்பதுக்கொன்று, பகையான வினமறிந்து பாச்சி
னுக்கால் பக்குவமாய் நானூறு மாற்றுக்காணும், நகையாதே
யிவ்வேதை கண்டால்மைந்தா நடுவான பூரணத்தி னூட்டிப்பாரு,
தகையாமல் ரேசகபூ ரகமும்பண்ணித் தன்மையுடன் கும்பகத்தில்
யோகம்பாரே. (311)

சுந்தரானந்தர் முறை.

பாரப்பா சுந்தரா னந்தர்செய்த பக்குவத்தை யென்ன
சொல்வேன் பண்பாய்க்கேளு, நேரப்பா நின்றதொரு நாதம்
வாங்கி நேர்மையுள்ள கட்டுவகை செயநீர்தன்னில், வாரப்பா
நாகமதை யுருக்கிச்சாய்க்க வரிசையுட னைந்துமுறை சாய்த்தா
யானால், வீரப்பா தானொடுங்கி நாகந்தானும் விசையாகக் கட்டு
மடா விசையைப்பாரே. (312)

குடவன்என்பது—பித்தளை.

விசையாகக் கட்டினதோர ரசத்தைவாங்கி, விபரமுட னுக மதிற் பத்துக்கொன்று, கசகவே யுருக்கியதில் ரசத்தைவாறு கரு வான நாகரச மொன்றாய்ச்சேர்த்து, பிசகாமற் கட்டியது மணி போலாடும் பிரியமுடன் றானெடுத்து வைத்துக்கொண்டு, சுக மாகக் கட்டினதோர் சாரந்தன்னிற் சமர்த்தாகக் காரமிட்டுக் கல்வத்தாட்டே. (313)

ஆட்டுவது பழச்சாற்றா லாட்டிக்கொண்டு வழகாக நாகரச மணிக்குப்பூசி, பூட்டுவது வம்மணிக்கு நாலிலொன்று பூநீறுமை யுட னப்பிமேல் மண்ணுஞ்செய்து, நாட்டியே யொருமுழத்திற் புடத்தைப்போடு நன்றாகப் புடமாறி யெடுத்துப்பாரு, தாட் டிகமாய்ப் படிகம்போற் கட்டிப்போகுந் தனதாக நாகமணிப் பதனம்பண்ணே. (314)

பண்ணியதோர் நாகரச மணியைத்தூக்கி பக்குவமா யிடைக்குவரை யயமுஞ்சேர்த்து, உண்ணியே குகைதனிலே யுருக்கிப்பார்க்க வுத்தமனே யயநாக மொன்றாய்க்கூடி, திண் ணியனே ரவியேழு மதிமூன்றாகும் திறமான குருவதுதா னென் றேயாகும், புண்ணியனே யம்மணிக்குச் சரியிடைதான் றங்கம் பூட்டியது குகைதனிலே யுருக்கிப்பாரே, (315)

பார்க்கவே நாகரச மயமுமொன்றாய்ப் பக்குவமா யுருக்கிய தோர் மணியினஞ்சொல்வேன், சேர்க்கையுடன் மணியெடுத்து வைத்துக்கொண்டு சிவசிவா மணிக்குநிகர் தங்கங்கூட்டி, மார்க்க முடன் குகைதனிலே யுருக்கிப்பாரு மகத்தான களங்கதனை யென்னசொல்வேன், வாக்குமன தொன்றாக மனதுகூர்ந்து மார்க்க முடன் களங்கதனை வைத்துப்போற்றே. (316)

போற்றுவது மனோன்மணியென் றதனைப்போற்று புக ழாக மணியினுட விபரங்கேளு, பார்த்திபனே செம்பதிலே நூற்றுக்கொன்று பக்குவமாய் வெள்ளிதனி லிருநூறுக்கொன்று நேர்த்தியாய் வெள்ளிசெம்பு யெட்டுக்கொன்று நேர்மையுடன் கணக்குடனே நூற்றுக்கொன்று, வார்த்துமே யுருக்கிப்பா ரென்ன சொல்வேன் வரிசையுள்ள களங்கதனைச் சொல்லொண்ணாதே. ()

படிகம்என்பது—பளிங்கு.

செந்தூரம்.

சொல்லவொண்ணு வங்கமடா தங்கவங்கஞ் சோதியடா செகசோதி சொல்லப்போமோ, நல்லதொரு களங்கதனைச் செந் தூரிக்க நாவடங்கா வேதையென்ன சொல்லப்போமோ, வல்ல தொரு களங்கதனைச் செந்தூரிக்க வகைசொல்வேன் நன்றாக வரிசை கேளு, சில்லான களங்கதனை நொறுக்கிக்கொண்டு சிவசிவா வவ் விடைக்கு வீரஞ்சேரே. (318)

சேரப்பா வவ்விடைக்குக் கெந்திகூட்டி செம்மையுடன் கல்வமதிற் பொடித்துக்கொண்டு, வாரப்பா செந்தூரச் செயநீர் விட்டு வரிசையுடன் கிண்டிநன்றாய் ரவியிற்போட்டு, காரப்பா நீர்வற்றிக் காய்ந்ததாறு கட்டியில்லா தேபொடித்துக் கருவைக் கேளு, ஆரப்பா வறிவார்கள் காசிகுப்பி அந்தமுள்ள குப்பிதனை வாங்குவாயே, (319)

வாங்கியந்தக் குப்பிக்கு யரைமட்டிட்டு மகத்தான குப் பிக்கு வலுவாய்மைந்தா, பாங்குபெற மண்சீலை யேழுஞ்செய்து பக்குவமாய் ரவிதனிலே காயப்போட்டு, சாங்கமா யுப்புநன்றாய்ப் பொடித்துக்கொண்டு சமுசயமில் லாப்பாண்டத் தரைமட்டிட்டு, தூக்கியே குப்பியதன் மேலேவைத்து துடையறவே குப்பிவாய் தணியக்கேளே. (320)

தணியவே யுப்பிட்டு வரைத்துநன்றாய்ச் சற்குருவைத் தியானித்துத் தனதாய்நின்று, பணியவே ஈசானம் பூசைபண்ணி பரபூசை விஷ்ணுபூசை பாங்காய்ச்செய்து, புனிதமுட னடுப் பேற்றிச் சொல்லக்கேளு புத்தியுடன் சருகுகம்பு விறகால்மைந்தா கனியவே சொன்னமுறை தவறுமற்றுன் கருத்துறவே யனல் மூட்டிக் காருகாரே. (321)

கார்த்துமிக வனல்மூட்டி வகையைக்கேளு கற்பூரத் தீபம் போற் சருகால்மைந்தா, பார்த்துமிகச் சாமமது வெரித்துத் தீர்ந்தாற் பதனமாய்க் கம்புநாற் கமலம்போலே, நார்த்துமிகப் போகாமல் நன்றாய்நீயும் நன்மையுடன் சாமமது வெரித்துத்திரு, நேர்த்தியா யெரித்தபின்பு விறகால்மைந்தா நேர்மையுடன் வனல் மூட்டி நினைவாய்நில்லே. (322)

ஈசானம்—வடகீழ்திசை.

நினைவாக நீயிருந்து வகோரமாக நிச்சயமா யனல்மூட்டிச் சாமமட்டு, மனதாகச் சாமமட்டு மெரித்துத்தீர்ந்தால் மைந் தனே தீப்பிறித்த வனலிற்றுனுந், தனதாகச் சாமமட்டும் பண் பிலேதான் றன்மையுட னிருந்தபின்பு விறக்கியேதான், சின மாறுந் தன்மையது போலேமைந்தா செலம்போலே குளிரவைத் துத் திறந்துபாரே. (323)

பாரப்பா பதனமதாய்த் திறந்துகொண்டு பக்குவமாய்க் குப்பிதனைப் பதனமாக, வீரப்பா செய்யாமற் குப்பிவாங்கி வினை யமாய்க் கவசத்தை யகலத்தள்ளி, நேரப்பா குப்பிதனை நினை வாய்வாங்கி நேர்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி, காரப்பா குப்பிதனைக் கலைத்துப்பாரு கருவான செந்தூர மதிகந்தானே. (324)

அதிகமுள்ள செந்தூர மென்னசொல்வே னரகரா விதற்கு நிக ரேதுசொல்வேன், கெதிமோட்ச மிதுவென்று மனதி லெண்ணிக் கிருபையுள்ள செந்தூர மதனைமைந்தா, மதியான படிகமுள்ள குப்பிதன்னில் மார்க்கமுட னேயடைத்து மைந்தா கேளு, சதிரான சுழிமுனையில் வாசிபூட்டி சமரசமாய்ச் சிவசத்தி பூசைபண்ணே. (325)

பண்ணப்பா சிவசத்தி பூசைபண்ணி பரமான சற் குருவைத் தொழுதுபோற்றி, விண்ணப்பா தானோக்கி மைந்தா கேளு விசையான செந்தூரந் தன்னைவாங்கி, நண்ணப்பா செம் பதனைக் குகையிலிட்டு நலமாக வுருக்கியதிற் சொல்லக்கேளு, பொன்னப்பா பொன்விளையுஞ் செந்தூரத்தைப் போற்றியே §பண விடைதா னெடுத்துக்கொள்ளே. (326)

எடுத்துநீ சற்குருவைத் தியானம்பண்ணி யிதமாக வுருக் கியுதோர் செம்பிலேதான், விடுத்துமிகக் கொடுத்திடவே வாங் கிக்கொண்டு விபரமுள்ள செம்பதனை யென்னசொல்வேன், தொடுத்ததொரு மாற்றென்ன சொல்லப்போமோ துருவமுள்ள மாற்றதிகந் தங்கமாகும், அடுத்ததொரு தங்கத்தை வைத்துக் கொண்டு அப்பனே வெள்ளிதனிற் பத்துக்கொன்றே. (327)

§ பணவிடையென்பது—மூனறைக் குண்டுமணியிடை.

ஒன்றான தங்கமதை வெள்ளிதன்னி லுரிமையுட னோம் பதுக்கு வொன்றேதாக்கி, நன்றாக வுருக்கிப்பார் மாற்றுப்பத்தாய் நாடிநின்ற தீபமது போலேகாணும், குன்றாத தங்கமடா குறை தானில்லை குறைவில்லாச் செந்தூரங் குணந்தானப்பா, பன்றான பரப்பிரம வஸ்துவென்று பாச்சினால் நவலோகம் பலிக்கும்பாரே. ()

மச்சமுனி முறை.

பாரப்பா மச்சமுனி மெழுகுநேர்மை பாருலகிற் சித்தர் களோர் காணப்போறார், நேரப்பா நின்றநிலை பூரணமாகும் நிலையான பூரணத்தை மைந்தாகேளு, வாரப்பா பீங்கானில் வாங்கிக் கொண்டு வண்மையுடன் சுண்ணமடா பூரச்சுண்ணஞ், சேரப்ப. வக்கருவிற் பத்துக்கொன்று சேர்த்துமிக மத்தித்து ரவியில்வையே

வைத்ததோர் மூன்றுநாள் மெழுகாய்ப்போகும் மார்க்க முள்ள மெழுகுக்கு ரெட்டிதானுஞ், சுத்தமுள்ள ரசமதனை வார்த்து துக்கொண்டு சோதியென்ற கெந்தகத்தின் றயிலம்வார்த்து, மத் தித்து ரவிதனிலே நவநாள்வைக்க மகத்தான மெழுகாகு மென்ன சொல்வேன், பத்தியுடன் சுழிமுனையி லங்கென்றாணிப் பர மான பராபரத்தைப் பணிந்துபோற்றே. (330)

பணிந்துமிகப் பூரணத்தில் மெழுகைமைந்தா பக்குவமாய்ப் பாணிதனி லடக்கம்பண்ணி, கனிந்துமிக வெள்ளியது தகட்டிலே தான் கருவான மெழுகதிலே தடவிமைந்தா, தணிந்துமிக வோட் டில்வைத்துப் புடத்தைப்போடு தாயான தங்கமதை யென்ன சொல்வேன், அணிந்ததொரு செம்பதனிற் பத்துமாற்று வழுக் கான குடவனிலே யாறேழாமே. (331)

கமலமுனி முறை.

ஆமப்பா கமலமுனி நாதர்சேதி யருள்பெருகுந் தைல மதை யன்பாய்க்கேளு, தாமப்பாற் கமலமல ரமுர்தம்வாங்கித் தப்பாமற் பீங்கானில் வைத்துக்கொண்டு, நாமப்பா சொல்லு கிறேன் நினைவாய்க்கேளு நன்றான சாதியடா லிங்கம்வாங்கி வாமப்பா லமுர்தமதிற் றேய்த்துத்தோய்த்து வரிசையுட னிப் படியே பத்துமுறைவாட்டே (332)

நவநாள் யென்பது—ஒன்பதுநாள்.

வாட்டுவது விளக்கொளியில் வாட்டினுக்கால் மகத்தான ரசஞ்சேர்ந்து கட்டிப்போகுங், தாட்டிமையாய்க் கட்டினதோர் லிங்கத்துக்குச் சரியிடையாய் ரேக்கதிலே சுத்திக்கொண்டு, மாட்டுவாய் காரமதில் வாய்நீர்விட்டு மத்தித்து ரேக்கதிலே வளமாய்ப் பூசி, நாட்டியே மண்சீலை வலுவாய்ச்செய்து நன்றாகக் காய வைத்துச் சொல்லக்கேளே. (333)

கேளப்பா நாலெருவிற் புடத்தைப்போடு கெட்டியா யெடுத்துவைத்து ஆறப்பாரு, காளப்பா வலுத்ததுவும் மணியோ னிற்கும் கனகமணி சாதிலிங்க மணியைவாங்கி, ஆளப்பா செம்பதிலே நூற்றுக்கொன்று வன்பாகக் கொடுத்துருக்கி யெடுத்துப் பார்த்தால், கோளப்பா யில்லாத தங்கம்வாங்கி குமுறவே தகடு தட்டிப் புடத்தைப்போடே. (334)

போடப்பா புடந்தன்னில் வேகந்தான்மீறி புத்தியுள்ள தங் கத்தின் வயதைக்கேளு, கோடப்பா வக்கோடி லொளிதா னென்ன குருவான தங்கமதி லதிகமாகும், வீடப்பா பிலத்தகுறி யார்தான்காண்பார் விசையான மூப்பூவின் விபரங்காணார், நாடப்பா நாடறிந்து நாட்டினலோ நாலான பூரணத்தை யறிவார்பாரே. (335)

பஞ்ச பூதச்சரக்கு.

பாரான பிருதிவியு மப்புந்தேய்வும் பதிவான வாய்வோடு வாகாயமைந்து, நேரான வைந்துமடா *பஞ்சபூதம் நேர்மையுள்ள பூதமைந்து மார்தான்காண்பார், கூரான வைந்துபஞ்ச பூதங் கண்டாற் கோடான கோடிவித்தை கைக்குள்ளாகும், பேரான சித்தர்கள்தாள் பஞ்சபூதம் பெருமையுள்ள சரக்குகளாய்ப் பாடினரே. (336)

பாடினர் சரக்குவிதிப் பருவங்காணார் பாருலகிற் சித்தர் கள்தான் செய்யுமார்க்கம், நாடிநின்ற பக்குவங்கள் தெரியாமற்ற ஞட்டிலுள்ள சரக்குகளை வாங்கிக்கொண்டு, கூடிநின்ற வினஞ் சேர்க்க வறியாமற்றன் குணங்கெடவே புடம்போட்டுத் தியங்குவார் கள், பேடிகளாற் செய்ததனு லென்னவாகும் பெருமையுட னினமறிந்து பேசுவாயே. (337)

* பஞ்சபூதம்—அப்பு, பிருதிவு, தேய்வு, வாய்வு, ஆகாயம்.

சத்துரு மித்துரு.

பேசுவது பிருதிவுக்கு சத்துருவப்பு பேரான அப்பதற்கு சத்துருதேய்வு, நேசமுள்ள தேயுவுக்கு சத்துருவுவாய்வு நெறியான வாய்க்கு சத்துருவாகாயம், பாசமுட னினமறிந்து பாச்சுவதால் மைந்தா பக்குவமாய்ச் சரக்குகளைக் கட்டுவதுதுரிதம், வாசமுள்ள பூரணமா மதியமுர்த மிரண்டு மனநுங்குவிந்து கொண்டவனே மகாசித்தானுமே. (338)

இடைக்காடர் முறை.

சித்தமுள்ள விடைக்காடர் செய்தபாகஞ் செயமான வீரத்தின் மெழுகுநேர்மை, சுத்தமுள்ள செயவீரம் வாங்கிமைந்தா துருவமுள்ள வைங்கோலத் தைலம் வார்த்து, பத்தியுடன் றீபமதிற் பதமாய்வாட்டு பக்குவமாயிப்படியே பத்துமுறைதீர்ந்தால், முத்தியுள்ள வீரமது மெழுகாம்பாரு மூர்க்கமுள்ள மெழுகெடுத்துப் பீங்கான் வையே. (339)

வையப்பா பீங்கானில் மெழுகைவைத்து வரிசையுள்ள தங்கத்தைத் தகடாய்த்தட்டி, மையப்பா அவல்போலே நறுக்கிமைந்தா நலமான மெழுகிலே § விரவிக்கொண்டு, பையப்பா ரவியில் வைக்க வென்னசொல்வேன் பரிவான தங்கத்தை வீரந்தின்னும், மைய்ப்பா போலவுமே தங்கவீரம் மார்க்கமுட மெழுகதனைப் பதனம்பண்ணே. (340)

பண்ணியதோர் மெழுகதனைப் பதனம்பண்ணி பக்குவமாய் வெள்ளிதனில் நூற்றுக்கொன்று, புண்ணியனே மெழுகதனை யீய்ந்தாயாகிற் பொருளான தங்கமதை யென்னசொல்வேன், வன்னியென நின்றிலங்கும் வீராசன் மார்க்கம்வெகு மார்க்கம் விட்டு சொல்கிறேன்கேள், உண்ணியே செம்பதனிற் றடவிநல்லவுச்சிதமாய்ப் புடம்போடத் தங்கமாமே. (341)

தங்கமதைத் துட்டதுபோற் றட்டிக்கொண்டு தன்மையுட னரைவாசி மெழுகைப்பூசி, அங்கமுடன் புடம்போடத் தங்கம்நீறு மப்பனே வெள்ளிமுத லோகம்நீறும், பங்கமில்லா மண்ணீறு மலையினீறும் பருவமுள்ள கற்கரடு வயிரநீறுஞ் சங்கையுடன் சராசரங்க ளெல்லாநீறுஞ், சார்பான பூரணத்தின் றன்மைதானே, (342)

விரவியென்பது—பிசறுதல்,

புத்தி

தன்மையுட பூரணத்தைச் சாரவேண்டுஞ் சதாகால மதி யமுர்தங் கொள்ளவேண்டும், உண்மையுள்ள சதாசிவத்தின் பூசை வேண்டு முறுதியுடன் வாசியினில் நிலைக்கவேண்டும், நன்மை யுடன் குருபதத்தைப் பணியவேண்டும் நடுவான பூரணமே கமல பீடம், விண்ணிமையாய்க் கற்பூர தீபந்தன்னில் விபரமுடன் வாசியைநீ விரும்பிப்பூட்டே. (343)

பூட்டுதற்குத் திறவுகோற் கன்னக்கோற்போற் பூரண மாம் வாதமுறை திறவுகோல்தான், தேட்டுதற்குத் திறவுகோ லின்னூல்மைந்தா சிவசிவா வாயிரமே சாஸ்திரபீடம் நாட்டுக்கு நற்பீடங் கமலபீடம், நலமான மதியமுர்தஞ் சொலிக்கும்பீடம், வீட்டுக்குப் பிலமான மூலபீடம் மெஞ்ஞான பீடமடா சாஸ் திரமாமே. (344)

ஆமப்பா சாஸ்திரமா மலருக்குள்ளே யானந்த போத முள்ள வமுர்தமுண்டு, நாமப்பா சொல்லுகிறே மமுர்தங் கொள்ள நலமான யின்னூ லாயிரத்தைப்பாரு, காமப்பாற் கசிந்து மதி யமுர்தத்தோடே கலந்துரவி மதியான பூரணமுமாச்சு, வாமப்பாற் பூரணமே மகத்தாம்போதை மக்களே யப்போதை வுண்மைபாரே. (345)

சூதமுனி முறை.

பாரப்பா சூதமுனி யையர்தானும் பாடுபட்ட வாதமுறை பகரக்கேளு, நேரப்பா நின்றநிலை யமுர்தமாகும் நிலையான வமுர் தரச் சூதமுனியாகும், காரப்பா சூதமுனி யேதென்றுக்காற் கருவான லிங்கமடா சாதிலிங்கம், ஆரப்பா வறிவார்க ளந்தலிங்க மப்பனே யதற்குநிர் சவ்வீரம்வாங்கே (346)

வாங்கப்பா § வீரநிகர் வெள்ளைசேரு வரிசையுள்ள வெள்ளை நிகர் தாரஞ்சேரு, பாங்குபெறத் தாரநிகர் காரசாரம் பக்குவ மாய்ச் சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து பூங்கமலக் கல்வத்திற் பொடித்துக்கொண்டு புண்ணியனே கலசத்தரை பொடிதானிட்டு, சாங்கமாய் மேலோடு பதியமுடித் தளமாக மண்சீலை வலு வாய்செய்யே. (347)

---

§ வீரநிகர் என்பது—வீரத்திற்குச்சரியிடை,

செய்யப்பா மண்சிலை வலுவாய்ச்செய்து சிவசிவா சத்தி சிவ பூசைபண்ணி, வையப்பா குழிவெட்டிக் குழிக்குள்மைந்தா ஊாக்கமுடன் நிகரான வெருவைக்கொட்டி, வையப்பா வனற்சேருந் திரணைபோட்டு பக்குவமாய்த் திரணையின் மேலேசீயும் மெய்யப்பா சுத்தியா சனமும்போட்டு மேன்மைபெற ரேசகபூரகமும்பண்ணே. (348)

பண்ணப்பா கும்பகத்திற் பதியநின்று பராபரமாஞ் சற்குருவைப் பணிந்துபோற்றி, விண்ணப்பா தாணுக்கி வாசிகூட்டி மேலான வாசியைநீ தீபத்தேற்றி, உண்ணப்பா வத்தீபச் சுடர்தானப்பா வூக்கமுள்ள வாசியைநீ யுடனேசேர்த்து கண்ணப்பா கடைக்கண்ணை யார்தான்காண்பார் காணரிது கடைக்கண்தான் நந்தியாமே. (349)

நந்தியென்ற மூலமதில் மனதைவைத்து நாள்தவறு §மண்டலமே தவமேசெய்து, அந்திசந்தி யிருவேளை தியானஞ்செய்து வன்புடனே யீசானம் பூசைபண்ணி, சிந்தைமன தொன்றாகி நின்றுகொண்டு சிக்கெனவே சாமாதிவைத்துக் கவசம்வாங்கி, தந்திரமாய்க் கவசமதை யெடுத்துப்பாரு தங்கநிற மானமெழுகாகும்பாரே. (350)

பாரப்பா மெழுகெடுத்துப் பதனமாகப் பக்குவமாய்ப் பரணிதனிற் பதனம்பண்ணி, காரப்பா வம்மெழுகி லிங்கோலத் தைலங் கட்டாக ரவியில்வைக்க மெழுகுமாகுஞ், சாரப்பா மெழுகுடனே தைலஞ்சேர்த்து சங்கையுள்ள மெழுகதனை யென்ன சொல்வேன், வீரப்பா வம்மெழுகை வைத்துக்கொண்டு வேணு மென்ற ரசமதனை விட்டுக்கிண்டே. (351)

கிண்டினால் ரவியில்வைக்க வென்னசொல்வேன் கெம்பீரமானரச மழிந்துபோச்சு, சுண்டிமிக ரசமடிந்த தென்னசொல்வேன் சுகமான மெழுகினுட சுருக்காமப்பா, கண்டிதமாய் நின்றதொரு மெழுகிலேதான் கணக்காகப் பணவிடைதா னெடுத்துக்கொண்டு, அண்டர்தொழுஞ் செம்பதிலே யன்னூற்றுக் கொன்று வணைத்திடமாற் றென்னசொல்வே னுயிரமாமே. (352)

§ மண்டலம்—நாற்பது நாள்

ஆமப்பா வாயிரத்தைப் பதனம்பண்ணி அரிபூசை சிவ பூசை குருவின்பூசை, நாமப்பா மனதுரிமை யாகச்செய்து நல் லோர்க்கு மெளியோர்க்கும் நாட்டினேன்பார், தாமப்பா யிவ் வேதை பூரணத்தின்வேதை சங்கையில்லா வேதையைநீ தானே கண்டால், காமப்பாற் கொண்டவெறி யெடுத்தாப்போலே கண் டதோ ராயிரத்தைச் சொல்லிடாதே. (353)

சொல்லவொண்ணு வந்தரங்க மின்னூல்மைந்தா துருவ முள்ள வாயிரமே பிரமபீடம், நல்லதோ ரின்னூலா யிரமுமையா நடுவான கும்பமுனி நாயன்சொன்ன பல்லர்தொழு மாயிரத் திரு நூறுந்தான் பார்த்தவற்குப் பரமகை லாயந்தோற்றும், கல்லாத மானிடர்கள் கண்டாலுந்தான் காலறிந்து ஞானவழி கருதுவானே

கருவான சரியையொடு கிரியைமார்க்கங் கைகண்ட யோக மொடு ஞானமார்க்கம், உறுதியுடன் றனெடுத்துப் பேசுவான்கே ளுண்மையென்ற ஞானமெல்லா முறுதியாகும், பரிதிமதி தனை யறிந்து சுடரைப்போற்றி பக்குவமாய்ப் பூரணத்தி லமுர்தங் கொண்டு, துரிதமுட னண்டர்கோன் பதியினின்றல் தூண்டாத மணிவிளக்கின் சுடர்காண்பாயே. (355)

கமலமுனி முறை.

காணுதற்கு கமலமுனி முறையைக்கேளு கமலமென்ற பிரமமடா கல்லுப்பாச்சு, பேணுகிற கல்லுப்பை யென்ன சொல் வேன் பேசாத மௌனமடா விந்துவிந்து, தோணுகிற விந்து வென்ன வாகாயந்தான் சுடரான தீபமடா சுத்தவெள்ளை, § பானு வினிற் போட்டாலுங் கரையுமோதான் பச்சையொன்று மிச்ச மடா கல்லுப்பாமே. (356)

உப்பான கல்லுப்பை வாங்கிமைந்தா யுறுதியுடன் கட்டு வகை செயநீர்தன்னில் தப்பாமல் துவைத்துரவி முகத்திற்போடு தயங்காமற் பத்துமுறை ரவியிற்போட்டால், அப்பாகேள் கசடற் றுச் சுத்தியாச்சு வரகாா சுத்திசெய்த வுப்பைவாங்கி, செப்பாத வுப்பினிடை துரிசுகூட்டிச் செம்மையுடன் துரிசுனிடை கெந்தி கூட்டே. (357)

§ பானுவென்பது—சூரியன்.

கூட்டியெல்லா மோரிடையாய்க் கல்வத்திட்டு குருவான கட்டுவகை செயநீராலே, நாட்டிநன்று யரைத்துமெழு கான போது நன்மையுள்ள ரசம்வாங்கிச் சுத்திசெய்து, பூட்டியந்த ரசத் தினிடை நாகஞ்சேர்த்து பொடியாக்கி முன்மெழுகிற் போட்டு மைந்தா தாட்டிகமாய்க் கட்டுவகை செயநீர்விட்டுத் தயங்காம § லறுசாம மரைத்திடாயே (358)

அரைத்துநன்றாய் வழித்துருட்டி வட்டுப்பண்ணி யனலேற ரவிமுகத்தி லாறப்போட்டு, விரைத்துநன்றாய்க் காய்ந்த பின்பு வரைத்தெடுத்து விபரமுட னோட்டில்வைத்து மேலோ டிட்டு, நிறத்துடனே மண்சீலை வலுவாய்ப்பத்து செம்மையுடன் காயவைத்துச் சொல்லக்கேளு, தரைக்குளொரு குழிவெட்டிப் புடத்தைப்போடு சற்குருவைத் தொழுதுவனல் மூட்டுவாயே. ()

மூட்டியன லேற்றிமன தொன்றாய்நின்று மூன்றுதரஞ் சுற்றிவந்து முன்னேநின்று, தாட்டிகமா யென்னக்காக்குந் தாயே யென்று தன்மையுடன் றன்தொழுது தனதாய்நின்று, மாட்டி னதோர் புடமாறி யெடுத்துப்பாரு மகத்தான வமுர்தரசங் கட் டிப்போகுந், தேட்டமென்ன விதனைவிட்ட தேட்டமுண்டோ சிவசிவா தங்கமாய்க் களங்கம்பாரே. (360)

பாரப்பா கட்டினதோ ரசத்தைவாங்கி பக்குவமாய்க் குகை தனிலே யுருக்கும்போது, வாரப்பா தங்கமதை நாலுக்கொன்று மாட்டிநன்று யுருக்கிப்பார் மலரிபோலாகுங், காரப்பா வம் மணியைக் கருவைப்போலே கருவான வெள்ளியிலே நூற்றுக் கொன்று சேரப்பா சேர்த்துநன்று யுருக்கிப்பாரு சிவசிவா வெள்ளியெல்லாங் குருவாய்ப்போச்சே. (361)

குருவான வெள்ளியைநீ யெடுத்துமைந்தா குணமாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, கருவான செம்பெடுத்து வுருக் கிக்கொண்டு காட்டுவாய் செம்பதிலே நூற்றுக்கொன்று, தருகா மற் றன்கொடுத்து வுருக்கிப்பாரு தயவான செம்பதுவை யென்ன சொல்வேன், திருவான லட்சுமிப்பெண் வயதைச்சொல்ல செகத் திலே யாரறியப் போறார்தானே. (362)

---

§ அறுசாமம் என்பது—ஆறுசாமம்.

தானவனாய் நின்றபொருள் தானேயாகுந் தானுமென்ற நாதா னேதென்றாக்கால், ஊனவனு முறுதியுள்ள காயங்காய முண்மையென்ற காயமடா வைங்காயந்தான், நானவனாய் நின்றதோ ருப்பேயாச்சு, நன்மையுட னுப்பறிந்து வுப்பைக்கொண் டால், கோனவனாய் நீயாகி யுலகுக்கெல்லாங் குருவான சற் குருவா யாவாய்பாரே. (363)

பாரப்பா பரப்பிரம கமலபீடம் பாருலகிற் பீடமதை யார்தான்காண்பார், தேரப்பா வப்பீடஞ் சாஸ்திரமாகுந் திறமான சாஸ்திரமா மாயிரத்தைக், காரப்பா வாயிரத்தை வெளிவிடாதே கருத்துறவே மனதறிவால் வைத்துப்பாரு, பேரப்பா யிப்பேரின் பெருமைகண்டால் பெருமையுட னண்டவரை காணலாமே. ()

காணவே யின்னமொரு கருவைச்சொல்வேன் கைலாச நந் தீசர் கருத்தானப்பா, தோணவே நந்தியென்ற மூலந்தன்னைத் தொடுகுறிபோ லாறியப் போறாரப்பா, பேணவே சொல்லுகிறே னன்றாய்க்கேளு பெருமையுள்ள நாதவிந்து காரசாரம், பூணவே காரமுடன் சாரம்ரெண்டும் போக்கான வப்பாச்சு வுப்புமாச்சே.

ஆச்சப்பா வப்புமுப்பு மொன்றாய்ச்சேர்த்து வருமையுள்ள ரவிபீசந் தன்னிற்கூட்டி, பேச்சப்பா பேசாதே மூன்றுமொன்றாய்ப் பெருமையுடன் றான்கரைத்துக் கலசத்தூட்டி, பாச்சப்பா மேலோடு பதியமூடி பக்குவமாய் ரவிமுகத்தில் நவநாட்போடு, காச்சப்பா § தசைநாள்தா னெடுத்துக்கொண்டு கருவான கட்டு வகை செயநீர்வாரே. 366)

வார்த்துநீ குழம்பாகக் கரைத்துக்கொண்டு வகையாக ரச மதிலே வார்த்துநீயும், பார்த்திபனே மேல்மூடி சீலைசெய்து பக்குவமாய்க் குழிவெட்டிப் புதைக்கும்போது, கார்த்துநீ யானை யுட கத்தம்போட்டுக் கவசமதைப் பதியவைத்துக் கருத்தாய்மூடி, போற்றியே மந்திரத்தைத் தியானஞ்செய்து பூரணமென் றேநீ யுங் காருகாரே. (367)

§ தசைநாள் என்பது—பத்துநாள்.

கார்த்துமிக மண்டலந்தான் சென்றபின்பு கருவான கலசமதை யெடுத்துக்கொண்டு, போற்றியே மேல்கவச மெடுத்துப் பாரு பொல்லாத ரசமதுவும் வாலையாகும், பார்த்திபனே யக்கவசந் தன்னிலேதான் பருவமுடன் கட்டுவகை செயநீர்விட்டு, தேற்றியே முப்பூவும் கூடச்சேர்த்து சிவசிவா முன்போலக் கவசம் பண்ணே. (368)

கவசமது வலுவாகச் செய்துகொண்டு கருவான கழுதையுட கத்தம்போட்டு, நவரசமாய்க் கவசமதை நடுவேவைத்து நன்ருக மணல்பரப்பி நடுவணையைப்போற்றி, தவரசநீர் கருணையதால் விளங்குஞ்சோதி தானவனும் நின்றதவத் தானேதோற்றும், பவரசநீர் பொருளதனு லென்னைக்கார்க்கப் பரப்பிரம வஸ்துவெனப் பணிந்துபோற்றே. (369)

போற்றியே மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு பொன்னனிறம்போல் வெண்ணையதாய்த் திரண்டுநிற்கும், பார்த்திபனே யமுரிவிட்டுப் பதனமாகப் பக்குவமாய்க் கமூவிரவி முகத்தில்வைக்க, தேற்றியதோர் வெண்ணைதனில் நின்றநீரை செம்மையுடன் வைத்தவெண்ணை திறமாய்க்காணும், தோற்றியந்த ரசவெள்ளை சுத்தவாலை சுரூபமுள்ள § வாலையைநீ வணங்கிக்கொள்ளே. (370)

வணங்குவது யமுர்தரச வாலைதன்னை வரிசையுள்ள பரணிதனில் வைத்துக்கொண்டு, இணங்கினிலை யாடுவது தேகமானவெனதுடைய மாதாவே யென்றுபோற்றி, தனங்கள்விளை வித்தரச நவநீதத்தில் தான்செய்யுந் தொழிலதனைச் சாற்றக்கேளு, குணங்களொரு மனதாகக் குருவைப்போற்றி குருவான வெள்ளிசெம்பிலெட்டிரண்டே. (371)

எட்டிரண்டுமாய்ச் சேர்த்துத் தகடுதட்டி யென்மகனே யத்தகட்டில் வெண்ணைபூசி, சட்டமுட னோட்டில்வைத்துப் புடத்தைப்போடு சார்பாகப் புடமாறி யெடுத்துப்பாரு, கட்டான தங்கமடா மகத்தானதங்கம் கருவான தங்கமதை யென்னசொல்வேன், திட்டமுடன் வாலையையா ரறியப்போருர் சிவசிவா வயதுபதினறுகளைதானே. (372)

§ வாலையேன்பது—சத்தி.

கலைதவறு தின்னமொரு கருவைக்கேளு கருத்தாகும் வெள்ளிசெம்பு பொன்மூன்றொன்றாய், வலைதவறாக் குகைதனிலே யுருக்கிக்கொண்டு மார்க்கமுடன் தகடுதட்டி வைத்துக்கொண்டு, இலைதவறுத் தகட்டில்நவ நீதம்பூசி கிருபையுடன் புடம்போட வென்னசொல்வேன், அலைதவறு வகண்டபரி பூரணமேயாகும் அரகரா யமர்ந்ததொரு வாதியந்தமாமே. (373)

ஆதியந்தப் பொருளறிந்தா லெல்லாஞ்சித்தி அரகரா ஞானமொடு வாதமெய்தும், நீதியுள்ள காயாதி கற்பந்தோன்றும் நிலைதவறு மந்திரங்க ளெல்லாஞ்சித்தி, சோதியெனும் ஞானவொளி தீபஞ்சித்தி சுருபமுள்ள தேகமடா வனுவேயாகும், சாதியெனுஞ் சமரசங்க ளெல்லாந்தானாய்த் தனதுள்ளே தானவனாய்த் தானுவாயே. (374)

வாயார மந்திரத்தை வழுத்தவேண்டும் மனதாகக் கற்பமுறை கொள்ளவேண்டும், நேயமுள்ள வாசிதனை யறியவேண்டும் நினைவாக யவ்வாசி பற்றவேண்டும், தாயகமாய் வாசியிலே மனதைநாட்டித் தனதான சுழினையிலே சாரவேண்டும், மாயமென்ற § சுழினைவழிக் குள்ளேபுக்கி மகத்தான பூரணத்தில் மருவிச்சாரே. (375)

சார்பறிந்து சாராத மடையர்மெத்த தன்சார்பு நிலையறிந்து சாராமாண்பர், கூரறிந்து குறியறிந்து குறியிற்சாரான் குறிப்பறிந்து வக்குறியிற் கூடான்பாவி, வேரறிந்து நடுவறிந்து முடியினில்லான் வேதாந்த மின்னதென்று விளம்பமாட்டான், பாரறிந்து நிகரறிந்து பருகமாட்டான் பக்குவங்க ளறியாத பாசர்சர்தானே (376)

பாம்பு சித்தர் வாதமுறை

தானென்ற சித்தரிலே பாம்புசித்தர் தனதான வாதமுறை தன்னைக்கேளு, ஊனென்ற காயமடா சித்தியான வுறுதியுள்ள சித்தனவன் செய்யுமார்க்கம், தேனென்ற வமுர்தமடா தண்ணீரப்பா தெளிவான தண்ணீரிற் பூரச்சுண்ணம், நானென்ற சுண்ணமதிற் கலக்கிக்கொண்டு நடுவான விந்துவடா வெள்ளைபாரே.

§ சுழினையென்பது—சுழிமுனை.

வெள்ளையென்ற பாஷாணக் கட்டிவாங்கி விபரமுள்ள தண்ணீரைப் பாண்டத்தூட்டி, நல்லதொரு பாஷாணக் கட்டி தன்னை நடுவாகத் § தோளேந்திர மாகக்கட்டி, சுள்ளையென்ற வடுப்பேற்றி யனலைமூட்டிச் சுருக்காக நீர்வற்ற வெரிப்பாயப்பா, வல்லமையாய் நீர்வற்ற வெரித்துத்தீர்ந்தால் மகத்தான பாஷாணங் கட்டிபோமே. (378)

கட்டினதோர் பாஷாணக் கட்டிவாங்கிக் கருவானை மூப் பூவும் வீரஞ்சேர்த்து, திட்டமுடன் வாய்நீரா லரைத்துமைந்தா திறமான பாஷாணக் கட்டிக்கப்பி, சட்டமுடன் மண்சீலை வலு வாய்ச்செய்து சாதகமாய்ப் பூப்புடத்தில் முழுக்கட்டாகும், மூட் டடங்கக் கட்டிணதோர் பாஷாணத்தை முக்கியமாய்க் கல்வத் திற் பொடித்துக்கொள்ளே. (379)

பொடித்ததொரு பொடிக்குரெட்டி ரசத்தைவார்த்துப் புக ழான கட்டுவகைச் செயநீராலே, விடுத்துமிக யிருசாம மரைக்கும் போது விசையான பாஷாணம் ரசத்தைக்கொல்லும், தடுத்துமிக ரசமிரண்டும் மெழுகாய்ப்போகுந் தனதான மெழுகதனைப் பத ன்ம்பண்ணி, கனத்ததொரு வெள்ளியக் கட்டிவாங்கிக் கருங் குகையி லுருக்கையிலே மெழுகைப்போடே. (380)

போடப்பா யிம்மெழுகைப் பத்துக்கொன்று பூட்டிமிக வுருக்கியதைக் குகைக்குள்மைந்தா, நாடப்பா குகையாறி யெடுத் துப்பாரு நலமான வெள்ளியங் கட்டிப்போகும், ஆடப்பா வெள் ளியக் கட்டிதன்னை யப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, தேடப்பா குகைதனிலே வெள்ளிபோட்டுச் செம்மையுட னுருக் கையிலே கட்டுசேரே. (381)

சேர்ப்பதுதான் வகையென்ன சொல்லக்கேளு திறமான ரெண்டுகட்டு ரெண்டுவெள்ளி, கூர்ப்புடனே ரெண்டுமொன்று யுருகிப்போனால் குருவான வெள்ளியுடன் கட்டுச்சேர்த்து, கேர்ப் புடனே யுருகியது மணிபோலாகும் நிச்சயமா யம்மணியை யுடைத்துக்கொண்டு, பார்ப்பதுதான் செம்புருக்கிப் பத்துக் கொன்று பக்குவமாய்த் தான்கொடுத்து வுருக்கிப்பாரே. (382)

§ தோளேந்திரம்—தொங்கவிடுதல்.

உருக்கிமிகப் பார்க்கையிலே வெள்ளிமாற்று வுயர்த்திமிக மாற்றதிக மென்னசொல்வேன், கருக்கான வெள்ளிதனில் நூற்றுக்கொன்று காட்டினால் மாற்றுபதி னாறுமப்பா, திருக்கான வெள்ளிவித்தை யாதிவித்தை திருவான லட்சுமிப்பெண் ணிருக்கும்பீடம், அருக்கான வெள்ளிபுண ரறிந்தோர்க்கெல்லா மதி வித்தை வெள்ளிவித்தை யறிவான்பாரே. (383)

புத்தி.

அறிவான போதமடா வமுர்தபோத மந்தமிர்த போத மதை யார்தான்காண்பார், நெறியான வமுர்தநிலை யறிந்தோர்க் கெல்லாம் நேரான மதியமுர்த பூரணமுமாகும், குறியான பூர ணமே தெய்வமென்று கும்பமுனி யெந்தனுக்குக் § குறியுங்காட்டி, சரியான நிலைகாட்டி சாஸ்திரமுமீய்ந்து தன்மையுள்ள தேவர்க ளோடொப்பென்றாரே. (384)

ஒப்பென்று சொன்னவுடன் தேவரெல்லா முறுதியுடன் றான்மகிழ்ந்து வுண்மையாக, செப்பமுடன் வீராம தேவா வென்று திறமான தசதீட்சை வைத்தாரப்பா, அப்பென்று விந்துவுட னாதமைந்து அருளான காயாதி காயமீய்ந்து, உப் பென்று வுன்னீருக் குருதிசொல்லி யுறுதியுடன் யோகமதி லிருவென்றாரே. (385)

இருவென்று சொன்னவுடன் பொதிகைமேவி யிருந்த னடா கும்பமுனி தஞ்சமென்று, அருமையுடன் மதியமுர்தத் தங் கங் கொண்டு அடங்கிமன தடங்கிமனக் குகையைக்கார்த்தேன், வருமையென்ற மனதுள்வைத்து வதட்டுதற்கு வந்தாரே புலத்தி யரு மகனேயென்று, உருமையுட னென்னையழைத்தா ரப்போ தானும் உளமகிழ்ந்து மலரடியி லொடுங்கினேனே. (386)

ஒடுங்கிநிலை தனையறிந்து யருட்பாலீய்ந்து வுபதேச வாக் கிய முடனேசொல்லி, அடங்கிவிளை யாடுதற்கு யஷ்டசித்து அடைவாக யறுபத்து நான்குஞ்சொல்லி, திடங்கொண்ட வாத முறை தீட்சைசொல்லித் திடமாக காயாதி கற்பஞ்சொல்லி, நடங்கொண்ட நாதவெளி நாட்டங்காட்டி நன்மையுட னென்னை யாண்டு கொண்டார்பாரே. (387)

§ குறியென்பது—இடம்.

வாதிகள் பிரட்டு.

பாரப்பா பின்னமொரு சேதிகேளு பாருலகில் வாதிகள்தான் செய்யுமார்க்கம், நேரப்பா நின்றநிலை தவறவிட்டு நிச்சயமாகப் § பிலத்திற் சரக்கைக்கட்டி, சாரப்பா வச்சரக்கில் காரஞ்சேர்த்து சணத்திலே வாதமுறை நாலைந்தாகும், வீரப்பா தான்கொண்டு செய்யும் வேதை விபரமுடன் மாற்றதிகங் காணுதெண்ணே. (388)

காணுமல் கலங்கிமிக அலைவார்மெத்த காசினியில் கன்மவினை தீராதப்பா தோணுமல் கருவெடுத்து வாடப்போவான் துருத்திவைத்துச் சரக்குகளை யூதிப்பார்ப்பான், பூணுமல் சரக்குவெகு புகையாய்ப்போகும் புகைந்தவகை யென்னவகை யென்பான்பின்பு கோணுத சாஸ்திரங்கள் பொய்யென்றெண்ணிக் குவலயத்திற் சண்டிதான் கூறுவாரே. (389)

கூர்வசனம் தவருத குருவைக்கண்டு குணமாக வவர்பதத்திற் பணிந்துகொண்டு, நேர்வசன நிசவசன மாகப்பெற்று நின்றதனுற் சகலசித்து நேரதாகும், ஆர்வசனம் சொன்னுலுங் கேட்டுக்கொண்டு அலைவார்க ளுலகமதி லசட்டுவாதி, பேர்வசனப் பெருமையினுற் பேரண்டத்தைப் பேணியே பெற்றவனே சித்தனுமே. ()

சித்தரிலே கும்பமுனி புலத்தியமாமுனியுஞ் செய்பாகங் கைபாகந் தீட்சையாக, பெத்தநிலே யவர்களைப்போ லார்தான் பெற்றுர் பேர்பெற்ற வகைவிபரம் பணிப்பாராச்சு, சித்தமுள்ள வாயிரத் திருநூறுக்குந் தோன்றுத பொருளையெல்லா தோற்றி வைத்தார், பத்தியுட னன்னூலைத் தேடிப்பார்த்து பகருவாய் கண்டவர்கள் பரமாம்பாரே. (391)

பரமான பராபரத்தி னருளைப்போற்றிப் பரமகுரு புலத்தியர்தன் பதமேற்கொண்டு, சிரமான வயிர்தனிலே பெற்றுநானுஞ் சிவசத்தி சத்திசிவ பூசைசெய்து, திரமாகச் சிதம்பரத்தின் பூசைசெய்தேன் தீர்க்கமாய்ப் பூசைசத்தி திறத்தைக்கேளு, வரமான பூசையைநான் சொல்லப்போமோ வஞ்சமற்ற சீஷனென்றே சொல்வேன்பாரே. (392)

---

§ பிலம் என்பது—குகை.

சிதம்பர சக்கர தீட்சை.

பாரப்பா சிதம்பரத்தின் தீட்சைகேளு பக்குவமா யாறு வரை நேரேகீறி, சேரப்பா வாறுவரை குறுக்கேகீறிச் செம்மை யுடன் கீறியதோ ரரையைக்கேளு, நேரப்பா யிருபத்தைந் தரை யுமாகும் நேர்மையுட னந்தரையி லெழுத்தைக்கேளு, காரப்பா வைந்தெழுத்து பஞ்சபூதங் கருவான பூதமடா ந-ம-சி-வ-ய மென்னே. (393)

என்னவே ந-ம-சி-வ-ய மென்றுபோட்டு ஏறடா நடு வெழுத்தைப் பிடித்துமாற, சொன்னதோர் சக்கரத்தைச் சூழ மூன்று துருவமுடன் § விந்திட்டு விந்துக்குள்ளே, நன்னவே முதற்சுற்றில் மூன்றிதழைப்போடு நடுச்சுற்றி லிதழீ ரெட்டும் போடு, முன்னுன மேற்சுற்றில் முப்பத்திரண்டு மூன்றுசுற்றி லைம்பத்தோ ரிதழுமாச்சே. (394)

ஆச்சப்பா ரேகைமேற் கோட்டைவசியம்போட்டு அக் கோட்டை தனக்குநால் வாசல்விட்டு, காச்சப்பா கீழ்வாசல் கணபதியின்பீசங் கருணைபெற வட்சரத்தைக் கருவாப்போட்டு, மூச்சப்பா தானெடுக்கு மேல்வாசல்தன்னில் முக்கியமாய் வடுக னுட பீசம்போட்டு. பாச்சப்பா தென்வாசல் வடக்குவாசல் பத்தியுடன் ரவிமதியின் பீசம்போடே. (395)

போடப்பா வறிந்துவகை பீடம்போட்டுப் புத்தியுடன் தேவதைக்குப் புகலக்கேளு, நாடப்பா வந்தந்தத் தேவதைகள் தனக்கு நன்மைபெறப் பூசைநை வேத்தியமுஞ்செய்து, கோடப்பா மறவாமற் கோட்டில்நின்று குறிப்பாக ந-ம-சி-வ-ய மென்றுமாறி, சூடப்பா வாசியின்மே லேறிக்கொண்டு துருவமுடன் ரேசகபூ ரகமும்பண்ணே. (396)

பண்ணப்பா கும்பகத்தில் பரவிந்தேறிப் பக்குவமாய் நங் கென்று செபித்தாயானல், முண்ணப்பா செபித்ததெல்லாம் வசி கரமேயாகு மூவுலகி லுனதுசொல் மேலாயிருக்கும், நண்ணப்பா பசிக்காது யிதுவேசூட்சம் நாட்டிலுள்ளோர்க் கிச்சூட்சம் நவில வேண்டாம், பொன்னப்பா குவித்தாலும் புகலாற்சூட்சம் புத்தி யுடன் மோகனத்தைப் புகலக்கேளே. (397)

---

§ விந்திட்டு யென்பது—வட்டமிடுதல்.

மோகனம்.

கேளப்பா மோகனத்தைச் சொல்லக்கேளு கெணிதமுடன் சிதம்பரசக் கரத்தைக்கீறி, நாளப்பா சி-வ-ய-ந-ம வென்று போட்டு நன்மையுடன் நடுவெழுத்தை நன்றாய்மாறி, கோளப்பா வாராமற் சக்கரத்தைச்சுற்றிக் குறிப்பாக மூன்றுசுற்று விருத்தம் போட்டு, சூளப்பா விருத்தமதி லிதழ்தான்போட்டு சுகமாக முன்கோட்டைக் கட்டுகட்டே (398)

கட்டியதோ ரக்கோட்டை வாசல்தன்னிற் கருத்துடனே முன்போலே தேவதைகளிட்டு, திட்டமுட னவரவர்க்கு பணையே செய்து செம்மையுடன் தானிருந்து சிங்-வங்கென்று, சட்டமுட னுருவேற்றி வாசிதனில்நின்று சமரசமாய் ரேசகபூ ரகமும்பண்ணி, இட்டமுடன் கும்பகத்தில் மேவிச்சென்று இருளறுக்கு மெஞ்ஞான தீபம்பாரே. (399)

பாரப்பா தூபமுடன் தீபம்ரெண்டு பக்குவமா யற்புதமே பணிந்துசெய்து, நேரப்பா விபூதிதனை நெற்றிக்கிட்டு நேமமுடன்நீயிருக்க வுலகமெல்லாம், வீரப்பா தாநொடுங்கி மோகமே செய்வார் விசையான மந்திரத்தின் சித்துமார்க்கம், ஆரப்பா யறிவர்கள் சிதம்பரத்தினேர்மை அரகரா நடுவணையின் னுமைந்தனே. (400)

தம்பனம்,

தானென்ற மோகனத்தின் கிரியைசொன்னேன் றன்மையுடன் தம்பனத்தின் மார்க்கங்கேளு. ஊனென்ற சக்கரத்தில் ய - ந - ம - சி - வ வென்றே யுண்மையுடன் றானெழுதி நடுவணையை மாறு, மானென்ற நடுவணையை மாறியபின்மைந்தா மார்க்கமுடன் முன்போலே வரிசையுடனெழுதி, கோனென்ற தேவதைகள் குணமறிந்துபூசி குறிப்புடனேசெய்துவந்தங் கூறுவகைகேளே. ()

கேளப்பா அங்கென்று § திருவுருவைச்செய்து கிருபையுடன் வாசியைநீ திறமாய்க்கூவி, நாளப்பா ரேசகபூ ரகமுஞ்செய்து நன்மையுடன் கும்பகத்தில் மருவிச்சார்ந்து, ஆளப்பா தூபமொடு தீபஞ்செய்து அணைத்திடுவாய் விபூதிதனை யன்பாய்மைந்தா, கோளப்பா செய்துமன துரிமையில்லான் குணமாக மோகமதாய் வணங்குவானே. (402)

§ திருவுருவென்பது—பாவை

வணங்குமடா லோகமதில் மாமோகமாகி மார்க்கமுட னுன்னடியைப் பணிவேனையா, இணங்கிவிளை யாடுவதற் கதிக மோக மிக்கருதான் மந்திரத்தி ·னின்பமின்பங், குணங்களொரு மனதாகு னொன்றுமில்லை கூர்மையுட னொருமனதாய்க் குறித்துப் போற்றி, மனங்குவிந்து வைந்தெழுத்தை யறிந்துமாறி மகத்தான வஷ்டசித்துங் கைக்குள்ளாமே. (403)

ஆமப்பா மோகமதாய்த் தம்பனமேயாகு மம்பரத்திலோடு கிற வருமையப்பா, நாமப்பா தம்பனத்தை நன்றாய்ச்சொன்னே நன்மையுள்ள வைந்தெழுத்தி னுட்டமப்பா, காமப்பாற் கலவியினு லொன்றுமில்லை கருவான வகாரமடா சிவத்தின்கூறு வாமப்பா லகிரியினுற் சிவனைப்போற்றி வரிசையுடன் சத்தியைநீ வணங் குவாயே. (404)

வாயார மந்திரத்தை வழுத்தவேணும் மனதாகப் பூர ணத்தை வணங்கவேணும், ஓயாமல் வாசியைநீ வணங்கிக்கொண்டு உறுதியுடன் யோகமதி லிருக்கவேண்டும், நேயமுட னுலகமதி லிருந்தாலுந்தான் நிருதிகற்பச் சமாதியிலே நிலைக்கவேண்டுந், தாயகமாய்ச் சமாதியிலே நிலைத்தாலுந்தான் தனதாகத் தானவ னாய்த் தன்னைப்பாரே. (405)

உச்சாடனம்.

பாரப்பா தம்பனத்தைப் பகுந்துசொன்னேன் பயனறிந்து க்தியறிந்து பண்பாய்ப்பாரு, வீரப்பா செய்யாம லுச்சாடனத்தைச் சொல்வேன் விபரமுடன் சிதம்பரத்தை விரும்பிக்கீறி, நேரப்பா மேல்வரையில் ந-ம-சி-வ-ய மென்று நினைவாகத் தானெழுதி நடு வணையைமாறி, சேரப்பா விருபத்தைந் தரையுமாறிச் செம்மை யுள்ள சக்கரம்போல் விருத்தம்போடே. (406)

போடப்பா விறுத்தமதி லிதழ்மூன்போட்டுப் புத்தியுடன் கோட்டையினுல் வாசல்விட்டு, நாடப்பா வாசலிலே தேவதை கள்பீசம் நன்றாகச் சமர்ப்பித்து வவரவர்க்கோ, வீடப்பா சுத்தி செய்து § வமுர்தகறிவர்க்கம் விபரமுள்ள பரமானம் பால்பழங்க ளுடனே, கூடப்பா தான்படைத்துத் தூபதீபஞ் சுகமாகத் தான் செய்து சுருதிபாரே. (407)

§ அமுர்தகறியேன்பது—மதுமாமிசம்,

சுருதியென்று லாரறியப் போறாரப்பா சுரூபமுள்ள சுருதி யடா முன்பின்னோந்து, வருதியினாற் சுருதிமுறை யறிந்துகொண்டு மார்க்கமுள்ள வாசியிலே மனதைவைத்து, சரியையொடு கிரியை யோ கத்தில்நின்று சண்முகமா மைந்தலகில் ஞானதீபம், உரி மையுடன் தீபங்கள் காணவேண்டி யொருமனதாய் ரேசகபூ ரக மும்பண்ணே. (408)

பண்ணியதோர் கும்பகத்தில் அம்-உம்-என்று பக்குவ மாய்ப் பதிறு வுருவேசெய்து, நண்ணியதோர் விபூதிதனை நெற் றியிலிட்டு நானினைத்த காரியமுச் சாடாவென்று, வன்னியிலே யனலேற்ற வுலகமெல்லாம் வாய்மனவுச் சாடனமா மைந்தா மைந்தா, சென்னியிலே கண்டிறந்து நெற்றிக்கண்ணில் தீக் கொளுத்தி வாசியினா லூதிப்போடே. (409)

போடப்பா வுச்சாடனத்தை நன்றாய்ச்சொன்னேன் புண் ணியனே மனதறிந்து புகழ்ந்துபாரு, நாடப்பா வாகிருஷ்ணத்தி னுட்டங்கேளு நாடறிந்து சிதம்பரத்தில் வ-ய-ந-ம-சியென்று, வீடப்பா தானறிந்து வெழுத்தைநாட்டி மெஞ்ஞான நடுவணையிற் பிடித்துமாறு, கூடப்பா சக்கரத்தில் மாறித்தானுங் குறிப்பாக முன்விருத்த மிட்டுப்போடே. (410)

போடப்பா விதழிருந்த சமயத்தோறும் புத்தியுடன் கோட்டையு நால்வாசலிட்டு, நாடப்பா வாசலிலே தேவதை கள்பீசம் நடுவறிந்துவப்பீச நாட்டிப்பின்பு, கூடப்பா யவரவர்க ளமுதுகறிவர்க்கங் கூர்மையுடன் பால்பழமுங் குணமாய்ச்செய்து, வீடப்பா பிலப்பதாகும் வாசிபூட்டி விபரமுடன் ரேசகபூ ரகமுஞ்செய்யே. (411)

செய்தபின்பு கும்பகத்திற் றிறமாய்நின்று செம்மையுடன் ஐயுங்-கிலியும்- சவ்வென்றோதி, உய்தமுட னேயிருந்து விபூதி சாற்றி உரிமையுட னினைத்ததெல்லாங் கைவசமாகுந், தொய்த முள்ள வாகிருஷ்ணத்தின் றுடுக்குமெத்த துருவமுடன் கண்ட தெல்லா நினைக்கச்சித்தி, பைதலர்கள் தனக்குமிதைப் புகலா தையா § பஞ்சா க்ஷரத்தின் ப்யங்கள்தானே. (412)

§ பஞ்சாட்சரமென்பது—ந-ம-சி-வ-ய ஐந்து அட்சரம்.

தானவனுய்த் தன்னருளைத் தானேகண்டு தனதான காய மடா வைங்காயந்தான், ஊனுன காயமடா வுறுதிமெத்த வுறுதி யுள்ள வாக்கையை நீ யறிந்துகொண்டால், காணுத காட்சியெல் லாங் காணலாகும் கருக்களெல்லா முடிக்கலா மறிவிற்சேர்வான், பூணுத பொருள்முடிக்க வின்னூல்தன்னைப் புத்தியுட னுதிதொடுத் தந்தம்பாரே. (413)

அந்தமென்று லாரறியப் போருரையா வமுர்தரச மதி யமுர்த மருளைக்கண்டேன், சொந்தமென்ற நிலையறியான் சுருதி கண்டான் § சுருதியுள்ள வயிரமா மலரைக்காண்பான், பந்தமென்ற மலரினுட பாலைக்கொள்வான் பக்குவமாய்க் கேசரத்தின் பதத்தைக் காண்பான், சிந்தைமன தொன்றாகி யறிவிற்சேர்வான் சிவசிவா கைலாசச் சித்தனுமே. (414)

வித்துவேஷணம்.

சித்தமுட னுகிருஷ்ணஞ் சொன்னேன்மைந்தா செம்மை யுடன் வேஷணத்தைச் செப்பக்கேளு, முத்தியுள்ள சிதம்பரத் தின் வரைகள்தன்னில் முக்கியமாம் வ-சி-ய-ந-ம வென்றுதாக்கி, பத்தியுடன் வேஷணையில் நின்றுமாறி பக்குவமாய் மாறினபின் விருத்தம்போடு, சுத்தமுள்ள விருத்தமிட்டு விதழ்முன்போட்டு துருவமுடன் கோட்டையும் நால்வாசற்போடே (415)

வாசலிட்டுத் தேவதைகள் பீசம்போடு மகத்தான சக் கரத்தை வைத்துமைந்தா, பாசமுட னமுதுகறி பரிமானங்கள் பத்தியுடன் முன்படைத்துத் தூபதீபம், நேசமுட னர்ச்சனைகள் செய்துகொண்டு நினைவாக 'ஐயுங்-கிலியுஞ் சவ்வுமென்றேதான், வாசமுடன் பதினுறு வுருவேசெய்து வணக்கமுட னீறெடுத்துப் பூசிக்கொள்ளே. (416)

கொள்ளடா விபூதிதனை நெற்றிக்கிட்டுக் கொண்டபின்பு ரேசகபூ ரகமும்பண்ணி, செல்லடா கும்பகத்தைச் சென்றுதங்கே சிவசிவா கற்பூர தீபம்பாரு, நல்லடா நினைத்ததெல்லாம் வேஷ ணமேயாகும் நலமான வித்துவே ஷணமாம்வித்தை, மல் லடா விந்தநூற் பதனம்பண்ண மந்திரத்தை யுனக்காக வருட் செய்தேனே (417)

---

§ சுருதியேன்பது—சாஸ்திரம்.

மாரணம்.

அருளான வித்துவே ஷணத்தைச்சொன்னே னருளடக்கும் புலத்தியர்தன் றவத்தினாலே இருளான மாரணத்தை யியம்பக் கேளு யேகாந்த சிதம்பரச்சக் கரத்தைக்கீறி, பொருளான சி-ய-ம-வ-ந வென்றுபோட்டு புத்தியுட னடுவணையைப் பிடித்து மாறி, மருளான மாறினபின் விருத்தப்போட்டு மைந்தனே யிதழ்போட்டுக் கோட்டைகட்டே. (418)

கட்டியதோர் கோட்டையுடன் வாசனுலிற் கருத்தாகத் தேவதைகள் § பீசம்போட்டுத் திட்டமுடன் சக்கரத்தைச் சுத்தி பண்ணிச் செம்மையுடன் றனிருத்தி செப்பக்கேளு, சட்ரசத்தோ டமுதுபல காரவர்க்கஞ் சங்கையுடன் றன்படைத்துத் தூபதீபம், இட்டமுடன் செய்தபின்பு நீறெடுத்துமைந்தா யேகமன தாய்த் தொழுது ஆதிப்போடே. (419)

ஊதிமிகப் போடுவது வென்னவகையென்று உண்மை யுடன் றன்பேசி வஞ்சகமேசெய்தோர், சாதியிலே யெச்சாதி யானாலென்ன சங்கையுட னவன்பேரைச் சுழித்தியிலேநின்று, வீதியிலே யவ்வாசி மேலெழுப்பிமைந்தா மேலான நீபமதி லபூதிதனையூதி, சோதியுள்ள தேகமடா தழன்றுமிகநொந்து சுடு காட்டுக் கதியாகச்சுழன்று தவிப்பானே. (420)

தவித்துமிக வீரைந்திலவனுயிர் மரணமாதல் சந்தேக மில்லையடா சங்கையுடன்பார்த்தால், குவித்துவரும் பகைஞருக்கு மிப்படியேசெய்தால் குலைகுலைந்து யவர்களுயிர் மரணமேயாகுஞ், செவிக்குமவர் சாபமது யிச்சாபந்திரா தேவதைக ளாலுஞ் சிதம்பரத்கிற்கெதிரோ, அவிக்குயிர் பிழைக்குமென்று வாரறியப் போறு ரதிகமப்பா மாரணத்துக் கதிகந்தானே, (421)

தானேதான் றனதாகத் தன்னருளைப்போற்றித் தானிருக்கும் வாசியடா தன்னுயிரேயாகும், ஊனேதா னுயிரான வாசிதனை மைந்தா உண்மையுடன் றனறிந்து வாசிதனைப்பார்க்க, கோனே தான் தானவனுக் குறிகாட்டவேண்டுங் குறிப்பான யக்குறியில் விந்துமனதொன்றாய், நானேதா னென்றவக நடுச்சுழியிலேற்றி நன்மைபெற வாசியைநீ நாட்டிப்பாரே. (422)

---

§ பீசம்யென்பது—உயிரேழுத்துக்கள்,

பேதனம்.

பாரப்பா மாரணத்தை நன்றாய்ச்சொன்னேன் பத்திகொண்ட பத்தியினாற் பலிக்குஞ்சித்தி, ஆரப்பா யறிவார்கள் பேதனத்தின் போக்கை அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு நேரப்பா சிதம்பரசக் கரத்தைக்கீறி நிட்சயமாம் ந-வ-ம-ய-சி யென்று போட்டு, காரப்பா நடுவணையைப் பிடித்துநீயுங் கணக்காக மாறி னபின் கருவைக்கேளே. (423)

கேளப்பா சக்கரத்தைச் சுற்றிமூன்று கெணிதமுடன் விருத்தமிட்டு யிதழ்தான்போட்டு, சூளப்பா கோட்டையுநால் வாசல்விட்டுத் துலங்கவே யவ்வாசல் தேவதைகள்பீசம், வாளப்பா யட்சரங்கள் பிசகாமற்றான் வணக்கமுடன் றனெழுதி மைந்தா கேளு, ஆளப்பா சக்கரத்தைச் சுத்திபண்ணி அதற்குமேல் பிராணப்பிற திட்டைசெய்யே. (424)

செய்யப்பா யமுர்தரச வர்க்கத்தோடே செம்மையுடன் முப்பழங்கள் பரமானங்கள், வையப்பா § வஸ்துவுடன் சுத்திதானும் வரிசையுடன் றன்படைத்து வணக்கமாக, பையப்பா தூபமொடு தீபங்காட்டு பத்திமன தொன்றாகிப் பரத்திற்செல்ல, மெய் யப்பா ரேசகபூ ரகமும்பண்ணி மேன்மைபெறக் கும்பகத்தில் வாசிபூட்டே. (425)

பூட்டியந்த வாசியைநீ தீபத்தேற்றிப் பூரணமா மதியமுர் தம் புகழ்ந்துகொண்டு, தாட்டிகமாய்ச் சர்க்கரை விபூதிவாங்கித் தன்மையுட னீறணிந்து தனதாய்நின்றால், நாட்டினிலே நினைத்த தெல்லாம் பேதமேயாகும் நன்மையுள்ள பேதனந்தா னென்ன வென்றால், காட்டியதோர் கருக்கலைநீ கருத்தாய்ப்பார்த்தால் கரு வாகக் கண்டபொருள் பேதனமாம்பாரே. (426)

அஷ்டகருமத் தைலம்.

பாரப்பா வட்டகர்ம மெட்டுந்தானும் பக்குவமாய் மந்திர பர்டணமாய்ச் சொன்னேன், ஆரப்பா யறிவார்கள் மந்திரபாட மாதியந்த நடுவணையா லானமந்திரங், காரப்பா மந்திரங்க ளென்ன வென்று கசடர்கள்தான் பேசியே கண்ணிற்காணார், பேரப்பா யப்போதான் மந்திரமாகும் பெருமையுள்ள மந்திரத்துக் குயிர் தான்கேளே. (427)

§ வஸ்துவென்பது—கள்ளு, சாராயம்.

உயிரான வுயிரறியு முயிரைக்கேளு உறுதியுள்ள வாதி யடா § யேகமாகும், பயிரான யேகமடா பிரமமாச்சு பாலகனே பிரமமென்று லண்டமாச்சு, வயிரான வண்டமடா சிற்றேரண் டம் வாய்நிறைந்த வண்டமதி கருவைவாங்கி, தயிரான கருவி லொரு விபரங்கேளு தன்மையுட னங்கோலத் தைலம்வாங்கே.

வாங்கியக்தத் தயிரோடே தைலஞ்சேர்த்து வன்மையுடன் றன்குழைத்து ரவியில்வைத்து, பாங்குபெற ரவிதனிலே காய்ந்த தானால் பக்குவமாய்க் கருப்பேறி மெழுகாய்ப்போகும், சாங்கமாய் ரவிதனிலே நவநாள்வைக்கத் தன்மையுள்ள மெழுகதுவை யென்ன சொல்வேன், ஆங்கதுகொண் டேமெழுகைப் பரணிதன்னி லவை யடக்க மாகவுநீ பதனம்பண்ணே. (429)

அஷ்டகர்ம மெழுகு.

பதனமுள்ள மெழுகதிலே விபரங்கேளு பக்குவமா யஷ்ட கர்மம் பண்பாயாடும், மதனமுள்ள மெழுகதிலே முலைப்பால்விட்டு மத்தித்துச் சக்கரத்தில் வளமாய்ப்பூசி, விதனமெல்லாந் தானகற் றிப் பூசைசெய்ய விரும்பியந்த வசிகரத்துக் குயிரேயாச்சு, சத மான வசிகரந்தா னிலேநின்றுடுஞ் சந்தேகமில்லையடா தன்மைபாரே.

மோகனம்.

தன்மையுடன் மோகனத்துக் குயிரைக்கேளு தருவான மெழுகதிலே தேனைவிட்டு, உண்மையுடன் மத்தித்துச் சக்கரத் திற்பூசி உறுதியுடன் பூசையிலே யுகந்துநின்றால், நன்மையுள்ள மோகனந்தான் நன்மையாகும் நாட்டிலுள்ளோர்க் கிக்கருவை நவி லாதையா, தன்மையுள்ள மனதகற்றித் திருவைநோக்கித் திற மாகும் யஷ்டாங்கந் திறந்தான்பாரே. (431)

தம்பனம்.

பாரப்பா தம்பனத்துக் குயிரைக்கேளு பதிவான விந்துவுட னமுரிதன்னால், நேரப்பா மையதனை நன்றாயாட்டி நிச்சய மாய்ச் சக்கரத்தில் வளமாய்ப்பூசி, காரப்பா மனோன்மணியைக் கருத்தில்வைத்து கசடறவே சக்கரத்தைக் கருத்தாய்ப்போற்றி, கூரப்பா தம்பனமே ஓமென்றுசொல்லி குறிப்பாக வெத்தொழி லுந் தம்பனமுமாமே (432)

§ யேகமென்பது—வெளி, ஆகாயம்,

உச்சாடனம்.

ஆமப்பா வுச்சாடனத்துக் குயிலைரக்கேளு வாதியென்ற மெழுகதிலே நாதம்விட்டு, தாமப்பா மத்திக்க ரெண்டுமொன்றாய்த் தடையறவே ரேகித்துச் சக்கரத்திற்பூசி, நாமப்பா சொல்லுகிறேன் மானதமாய்ப்பூசை நன்மையுடன் செய்துநீ றணிந்தால் மைந்தா, காமப்பா வுச்சாடனத்தை யென்னசொல்வேன் கைகண்ட வித்தையடா கருவிற்பாரே (433)

ஆக்கிருஷ்ணம்.

பார்க்கவே யாக்கிருஷ்ணத் தாதிகேளு பத்தியுடன் மெழுகதிலே § வாய்நீர்விட்டு, சேர்க்கையுடன் மத்தித்துச் சக்கரத்திற்பூசி செம்மையுடன் றனிருந்து பூசித்தாக்கால், மார்க்கமுள்ள ஆக்கிருஷ்ணந்தா னதிகமாகும் மகத்தான சித்தியடா வித்தையாகும், ஆர்க்குமிந்தக் கருவதனைச் சொல்லப்போகா அவையடக்க மானதொரு வதீதந்தானே. (434)

வித்துவேஷணம்.

தானென்ற வித்துவே ஷணத்தைக்கேளு தன்மையுள்ள கருவெடுத்து விந்துவிட்டு, கோனென்ற குருவருளால் மத்தித்தே தான் குறிப்பான சக்கரத்திற் பூசிமைந்தா, நானென்ற வகம் போக்கித் தியானஞ்செய்து நழுகாமல் வித்துவே ஷணைநின்றுடும், மானென்ற மௌனமடா மகத்தாம்வித்தை மக்களே மனதடங்கி யறிவாற்பாரே. (435)

மாரணம்.

பாரப்பா மாரணத்திற் கருவைக்கேளு பசுமையுள்ள கருவெடுத்துப் பகருகின்றேன், காரப்பா கருநாக விடத்தைவாங்கிக் கருவோடே மத்தித்துச் சக்கரத்திற்பூசி, வீரப்பா செய்யாமல் அக்கினியில்வாட்ட வெகுசுறுக்கு மாரணத்தை யென்னசொல்வேன், ஆரப்பா அறிவார்க ளட்டகருவித்தை யவையடக்க மாகநீ யறிந்துசெய்யே. (436)

---

§ வாய்நீரென்பது—உமிழ்நீர்

பேதனம்.

செய்யப்பா பேதனத்திற் கருவைக்கேளு செம்மையுடன் மெழுகுடனே புழுகுசேர்த்து, பையப்பா கருவுடனே மத்தித் தேதான் பக்குவமாய்ச் சக்கரத்திற் பதிவாய்ப்பூசி, உய்யவே மனதிலெண்ணிச் செபித்தாயாகி லுருக்கமுள்ள பேதனந்தா னுருதிமெத்த, ஐயனே வட்டகர்ம மாடவென்று லடக்கமுடன் கரு வெடுத்து ஆடுவாயே. (437)

அஷ்டகர்மச்சிலை.

ஆடுவா யஷ்டகர்ம மெட்டெட்டுக்கு மாதியந்த மான தொரு § சிலையைக்கேளு, நாடுவாய் நமதுருப்போற் சிலையாம்பூடு நன்றான பொற்சிலையா மாண்டொன்றப்பா, தேடுவாய் சிலையைத் தான் கண்டால்மைந்தா செம்மையுடன் றனித்தேதான் வாங்கிப் போடு போடுவா யவ்வேரி லங்காயத்தைப் பூரணத்தி னுலரைத்து மேலேபூசே. (438)

பூசிநன்றாய் ரவிதனிலே நவநாள்வைத்துப் புத்தியுடன் றன்னருகே பதனமாக, கூசிமனந் தளராமல் நிதானத்தாலே குறிப்புடனே பதனமதாய்க் காருகாரு, வாசிமன தொன்றாகக் காத்தால்மைந்தா வகையான வஷ்டகர்மச் சிலைக்குத்தானும், மாசிலா ரவியொளிதா னதிலேசென்று மகத்தான சிலையதுவும் பொம்மையாச்சே (439)

பொம்மையென்ற வச்சிலையை வாங்கிமைந்தா பூட்டுதற்கு வின்னமொரு விபரங்கேளு, நன்மையுள்ள சந்தனத்தைப் பன்னீராலே நன்றாகக் கரைத்ததிலே புழுகுசேர்த்து, தன்மையுடன் களபகஸ் தூரிசேர்த்துச் சந்தனத்தைத் தானரைத்துத் தயவாய் மைந்தா, உண்மையுள்ள சிலையதுவை தோய்த்துநீயும் . உறுதியுடன் ரவிதனிலே தசைநாட்போடே. (440)

போட்டுநன்றாய்க் காய்ந்தபின்பு வெடுத்துப்பாரு பொம்மையென்ற சிலையதுவே யென்னசொல்வேன், தாட்டிகமா யச்சிலையைப் பதனம்பண்ணித் தன்மையுட னீயிருக்கு மொடுக்கந்தன்னில், நாட்டிநன்றாய்ச் சிலைதனக்குத் தூபதீபம் நாலுபுறந் தான்போட்டு வேகமாக, வாட்டமில்லா தீபமது நன்றாய்வைத்து வரிசையுடன் தூபத்தை நன்றாப்போடே. (441)

---

§ சிலையென்பது—உருவம்.

போடுவது ரெண்டுதிங்க ளானபின்பு புத்தியுடன் மறுநாள் தான் சிலையைப்பாரு, நாடுவது முன்னேதா நடக்கும்பாரு நடந் தாலும் யாரறியப் போறாரப்பா, மூடுவது வச்சிலேதான் மாயாரூப முன்னேறிப் பாயுதற்கு சுருக்குமெத்த, கூடுவது யிச்சிலேக்குப் பேரைக்கேளு குட்டியென்ற சாதிகுட்டி சாதி யாச்சே. (442)

ஆச்சப்பா சாதியென்ற குட்டித்தன்னை அன்பாக முன் னிருத்தி யதிகதூபம், பாச்சப்பா வதனருகே யிருந்துகொண்டு பத்தியுடன் சரமெடுத்துப் பானஞ்செய்து, பேச்சப்பா பேசா மற் சரத்தைப்பூட்டு பெருமையுள்ள குட்டிவெகு யறிவாய்நிற்கும், காச்சப்பா சரமெடுத்துக் காய்ச்சக்காய்ச்ச கருவேறி யுருவேறிக் களங்கம்போச்சே. (443)

களங்கமென்ற பேர்போன குட்டிச்சாத்தான் காட்டு முன்னே பாயுமடா கால்தான்செம்மை, உளங்கனிய மகிழ்ந் தேற்றிப் பூசைசெய்ய உறுதியுட னின்றுடு வுன்முன்னப்பா, குளங்கனென்ற சாதிகுட்டிச் சாதினேர்மைக் கூறுகிறே னன்றாகக் கூர்ந்துகேளு, விளங்கதிக சித்தில்வெகு சித்துக்கெல்லாம் வேணுமடா வஷ்டகர்மச் சிலையைப்பாரே. (444)

பாரப்பா யிச்சிலையைப் பதனமாகப் பக்குவமாய் நீயிருக் கும் § பதியில்மைந்தா, ஆரப்பா யறியாம லடக்கம்பண்ணி அவை யடக்கம் வெகுபதன மையாவையா, வீரப்பா சொன்னதொரு புத்தியாலே மெய்மறந்து வெகுளியினால் விளக்கஞ்செய்தால் நீரப்பா நிர்மலமாய் கீறிப்போவாய் நிட்சயமாய்த் தலைதெறிக்கும் நினைவாய்க்காணே. (445)

காணவே வசீகரமோ கனமாந்தம்பனக் கருவான வுச்சா டன மாகிருஷ்ணமாகும், பேணவே வேசனமா மாரணமாம்பேதம் பெருமையுள்ள வெட்டுவித்தைத் தொழிலுக்கையா, தோணவே யஷ்டகர்மச் சிலையைநாட்டித் தொழுதுகர்மஞ் செய்திடவே யெட்டுமாடும், பூணவே யெட்டுவிதஞ் சித்தியானாற் பொன்னுல கில் நீயுமொரு சித்தனாமே. (446)

§ பதியென்பது—பூசையறை, இருப்பிடம்.

சித்தனாய் நீயிருந்து வுலகந்தன்னிற் செம்மையுட னஷ்ட கர்மச் சித்தைநன்றாய், உத்துணர்ந்து கருக்குருவா லாடுமைந்தா உருதிவெகு யுருதியடா சிலையின்மார்க்கம், புத்தியுள்ள சீஷனென் றூற் சிலையைநாட்டிப் பூலோக மெய்க்கவெகு சித்துவிளையாடும், பத்தியுடன் சற்குருவின் பாதமலர்காணப் பங்கயமா மோயிரத்தி னிதளமூர்தமுண்ணே. (447)

உண்ணவே யின்னமொரு சேதிகேளு உறுதிபெற வாதி யந்த முகந்துசொல்வேன், நண்ணவே குருவினுட வுபதேசம் பெற்று நடுவாமே காட்சரத்தை நயந்துபோற்றி, தன்னிமையாய் விந்தநிலை தன்னிலேதான் சார்ந்துமன தொன்றாகித் தனதாய் மைந்தா, முன்னிலையைத் தான்பிடித்து நடுவணையில்நின்று மூத் தியுள்ள வகாரமதைத் தினந்தான் போற்றே. (448)

அகார - உகார - தீட்சை.

போற்றியதோர் அகாரமது வென்னசொல்வேன் பூரண மாங் கண்மணியை புகலக்கேளு பார்த்திபனே வகாரமடா விந்து விந்து பதிவான விந்துவடா சாரமாகுஞ், சாற்றியதோர் சார மது வப்புமுப்புஞ் சங்கையில்லா வப்பதுவுந் தண்ணீர்தண்ணீர், தோற்றியதோர் தண்ணீரே வெண்சாரையாகுந் தெவிட்டாத சாரையடா § வமுரிதானே. (449)

தானென்ற யமுரிபஞ்சா க்ஷரத்தைமைந்தா தன்மையுடன் சரமாரி யேற்றினக்கால், ஊனென்ற சரமாரி யாண்டிற்றானும் உத்தமனே சயிலமென்ற பேரேயாச்சு, கோனென்ற குருவருளால் யிரண்டாண்டிற்றான் கூர்மையுள்ள யுதகமென்ற பேரேயாச்சு, தேனென்ற சயிலமது யுதகந்தன்னைச் செம்மையுடன் மாறினதால் தேகஞ்சித்தே. (450)

சித்தான தேகமதற் குறுதியென்ன சிவசிவா சட்டை யொன்று வெளுப்பாய்த்தள்ளும், சத்தான சற்மமது வுரிந்து போனல் சந்திரன்போற் பிரகாசந் தானேதோன்றும், வித்தான வித்துவினாற் சித்தியான விசையான தேகமதற் கசைவோயில்லை, முத்தான அகாரமதை யந்திசந்தி முறையறிந்து கொண்டபின்பு யின்னங்கேளே. (451)

---

§ அமுரியென்பது—சுத்த கெங்கை.

இன்னங்கேள் ரன்னமே அகாரதீட்சை யின்பமுட னுண்டொன்றிற் செய்ததன்பு, சொன்னமொழி தவறுமற் செய்து கொண்டு சுக்காம லடிமூலம் உகாரமாகும், திண்ணமுடன் உகாரமதைச் செபித்துப்பார்க்கச் செப்புகிறேன் கண்மணியே நன்ருய்க்கேளு, உண்ணுவது உகாரமதை யுறுதியாக உத்தமனே மனதுறுதி யாகப்போற்றே. (452)

போற்றியே யுருச்செபிப்பா யந்திசந்தி பூரணமாய் மனதுறுதி யாகிநீயுந், தேற்றியே செபிப்பதற்கு உகாரபீடந் திறமையுடன் சொல்லுகிறே னன்ருய்மைந்தா, தோற்றியதோர் உகாரமடா ரூபமாச்சு துருவமுள்ள உகாரமது வுப்புமுப்பும், பார்த்திபனே வுப்பென்று லார்தான்காண்பார் பருவமுள்ள துருசியடா புளியுமாச்சே. (453)

ஆச்சப்பா புளியுறைந்த சஞ்சீவிவர்ங்கி அப்பனே நசி-மசியென் றருளேநோக்கி, பேச்சப்பா பேசாமல் ந-ம-சியென்றேதப் பெருமையுள்ள சருகுப்புக் கட்டிப்போகும், பாச்சப்பா கட்டினதோர் வுப்பைநீயும் பக்குவமாய்ச் சடமறிந்து பாய்ச்சுபாய்ச்சு, மாச்சப்பா போகாமற் றினமுநோக்க மருவிநின்ற தேகமது வுறுதியாச்சே. (454)

உறுதியுடன் மனதுறுதி யாகநீயு முத்தமனே மூலமதில் மனதைநாட்டி, உருமையென்ற காரமடா சத்திதன்னை உண்மையுட னந்திசந்தி பூசித்தோஞ்சித்தன், வறுமைதனைத் தானகற்றி யுரிமைவைத்து மார்க்கமுடன் சத்தியைநீ வருந்திளுக்கால், சுருதியுள்ள தேகமதின் § சட்டைபோக்கிச் சுடரொளிபோல் தேகவச்சிர காயமாமே (455)

ஆமப்பா வச்சிரமிட்ட காயந்தானும் அணுலுக்கும் நீருக்கும் அசையாதப்பா, தாமப்பா தன்னுடனே தன்னில்நின்றல் தன்மையுள்ள பூரணமாய் நின்றுதையா, நாமப்பா சொல்லுகிறேம் பூரணமேதெய்வம் நாட்டிநின்ற பூரணத்தை நயந்துபாரு, காமப்பாற் கானற்பா விரண்டுங்கூட்டிக் கலந்துநின்ற பூரணத்தின் கருவைக்கேளே. (456)

§ சட்டையென்பது—தோல்.

கருவென்ன வென்றறிநாற் சொல்லக்கேளு கண்மணியே யென்மகனே கருவைச்சொல்வேன், தருவென்ன வகாரமடா சிவந்தானுச்சு தனித்துநின்ற உகாரமது சத்தியாச்சு, உருவென்ன சத்திசிவ மிரண்டுந்தன்னை உண்மையுட னொருமனதா யுகந்து கொண்டு, திருவென்ன் வுதயாதி தன்னிலேதான் தீர்க்கமுள்ள § அகாரமதைச் செபித்துப்பாரே. (457)

பாரப்பா வுதயாதி யகாரதீட்சை பணிந்தபின்பு மாலை யிலே உகாரந்தன்னை, காரப்பா உகாரத்தைச் செபிப்பதாகும் கருத்துறவே செபிப்பதனாற் காலன்மாண்டான், ஆரப்பா யறிவார் கள் சத்திசிவமிரண்டும் அறிந்துமன துறுதியினு லன்புபூண்டு, நேரப்பா நின்றதோ ரருளைப்போற்றி நேர்மையுடன் சத்திசிவம் ரெண்டுங்காணே. (458)

ரெண்டறிந்து வொன்றறிந்தால் ரெண்டுமொன்று நேர்மை யுடன் காலமதில் நினைவாய்க்கண்டு, வொன்றறிந்து வொன்று விடந் தன்னைக்காரு வொருமையுடன் மனதுகந்து கார்த்தால் மைந்தா, அண்டர்பிரான் தொண்டர்தனக் கடுமையாகி ஆதி யந்தப் பதவியிலே அருளைச்சேர்வான், கண்டதென்ன காலைசிவ மாலைசசத்தி கலைதவறு நின்றவனே கருத்துள்ளோனே. (459)

கருத்துறவே முதல்தீட்சை அகாரமாகும் காத்துமிக ஆண்டொன்று செபித்தபின்பு, திருத்தமுட னுகாரமது ரெண் டாந்தீட்சை திருவேற வுருவேறச் செய்தபின்பு, பொருத்தமதா யகாரமுடன் உகாரங்கூட்டி பூரணமாய் மதியமூர்தங் கொண்டால் மைந்தா, வருத்தமென்ற வருத்தமெல்லா மகன்றுபோகும் வாசி நின்ற தீபமதை வணங்குந்தானே. (460)

ரவிமதிக்குறி—கற்சிப்பி கைபாகம்.

வணங்கிநின்ற வாசியது சுடறிற்சென்று மகத்தான சுட ரதுவு மூலத்தேகும், இணங்கியந்த மூலமதிற் கனல்தான்கொண்டு எழும்புமடா வண்டம்வரை யாவிதானுங், குணங்கமழு மாவியது வாசியாச்சு கூர்மையுள்ள வாசியதற் கொடுக்கங்கேளு, மணங் கமழு மாதியடா வாகாயந்தான் மகத்தான வாகாயம் தன் னிற்கேளே. (461)

§ அகாரம்யென்பது—சிவன், அறிவு.

கேளப்பா வாகாயந் தன்னிலேதான் கிருபையுள்ள மேக மதாய்த் திரண்டுதையா, வாளப்பா புகையெழும்பி மேகமாகி மார்க்கமுள்ள மேகமது சாகரத்திற்சென்று, நீளப்பா வாங்கி மிக வுயரத்தூக்கி நின்றதடா ரவியினுட வன்னீர்தானுங், காளப்பா வோங்கிநின்ற தலத்தினாலே கசடான வுவர்வாங்கிச் சுத்தமாச்சே. (462)

சுத்தமுள்ள நல்லதண்ணீ ரென்னசெல்வேன் சுகமாக வப்பூமி தன்னில்வீழ்ந்து, பத்தமுள்ள வுயிர்ப்பயிருக் குதவியாகி பார்தனிலே நன்மையதாய்ப் பணிந்துநின்று, சித்தமுள்ளோ தெளிவாகித் தெளிந்துநின்று சிவசிவா வத்தெளிவை யென்ன சொல்வேன், வித்தெனவும் விந்தெனவும் பேருண்டாகி மேதினி யெல் லாம்படைத்து விளங்குந்தானே. (463)

தானென்ற விந்துநீர்த் தைலமாச்சு தன்மையுள்ள ரவி சேர உகாரமாச்சு, கோனென்ற உகாரமது தண்ணீருப்பு கூர்மை யுள்ள வுப்பதுவும் ரவியின்பிள்ளை, மானென்ற மதிவிந்து ரவி தானாச்சு மார்க்கமுள்ள ரவிமதியுங் காரமாச்சு, ஊனென்ற காரமுடன் சாரம்ரெண்டு மூண்மையுடன் கண்டுகொண்டு தெளிந்திடாயே. (464)

தெளிந்துநீ சத்திசிவந் தன்னைப்போற்றித் திறமாக மன துறுதி யானபின்பு, அளிந்துமன தொருமையினால் யகாரதீட்சை அவையடக்கஞ் சொல்லுகிறே மறிந்துகேளு, தெளிந்தமன தானுக்கா லகலநில்லு நேர்மையுள்ள நினைவாக நின்றுகேளு, குளிர்ந்தமனங் குளிராத கல்லுகல்லு கூர்மையென்ற கல்லூன்றி மவுனமாமே. (465)

ஆமப்பா மௌனமென்ற சிப்பித்தோடு அவையடக்க மாகநீ கொண்டுவந்து, நாமப்பா தெளிந்ததண்ணீர் தன்னிற் காய்ச்சி நன்மையுடன் சுத்திசெய் தெடுத்துக்கொண்டு, தாமப்பா யதற்குநிகர் சருகுகூட்டித் தன்மையுட னமுரியினா லரைத்து மைந்தா, காமப்பாற் கருவியினா லரைத்துவில்லைக் § கடுரவியி லுலர்த்திடுவாய்க் கடுகத்தானே. (466)

§ கடுரவியென்பது—உக்கிரமான, சூரியவெப்பம்.

தானென்ற வில்லைதனை யோட்டில்வைத்துத் தன்மை யுடன் மேலோடு பதியமூடி, வீணென்று நினையாமல் மனதாய்ச் செய்து விபரமுடன் புடம்போட்டு யெடுத்துப்பாரு, நானென்ற குருவருளால் மலர்ந்துன்ற நலமான பற்பமதை யெடுத்துக் கொண்டு, கோனென்ற யமுரியிலுற் கொண்டால்மைந்தா குண மாகும் யாக்கைவெகு திறந்தான்பாரே. (467)

பாரப்பா வண்டபற்ப யமுரிதன்னிற் பக்குவமாய் மண்ட லமே கொண்டால்மைந்தா, நேரப்பா நின்றசடந் தன்னிலேதான் நிட்சயமாய்ச் சட்டைதள்ளும் நினைவாய்ப்பாரு, காரப்பா § ஆண் டொன்றிற் கசடுபோக்கும் கன்மவினை தான்றொலையுங் கனகமாகும் ஆரப்பா யறிவார்க ளண்டக்கூறு ஆதியென்ற வண்டமடா மௌனமாமே. (468)

மௌனமென்ற வடிநடுவு முடிவுஞ்சொல்லி மார்க்கமுடன் செய்பாக வகையுஞ்சொல்லி, கவனமுடன் காலவர்த்த மானஞ் சொல்லி கருவேற யுருவேறக் கருத்துஞ்சொல்லி, கெவுனமுடன் கேசரத்தின் கிருபைசொல்லி கிருபையுட னீயிருக்கத் தலமுஞ் சொல்லி தவனமில்லாச் சங்கைகளை யெடுத்துக்காட்டித் தன்மை யுட னுண்மையெல்லாஞ் சாற்றினேனே. (469)

சாற்றியதோர் கும்பமுனி தவத்தாற்சொன்னேன் சங்கை யுள்ள வாயிரத் திருநூறுக்குள், தேற்றியதோர் கற்பமுறை நன் றாய்ச்சொன்னீர் செய்பாகங் கைபாகஞ் செம்மையாகப், பார்த் திபனே பக்குவமாய்ச் சொன்னேனையா பக்குவத்தை யானறிந்து பத்தியாகப் காற்றிசையு முள்ளசித்தர் மெச்சிக்கொள்ள நலமாக வாயிரமாய்ப் பாடினேனே (470)

பாடினே னின்னூலின் பலத்தையெல்லாம் பத்தியுட னாலெடுத்து நீயும்நன்றாய், நாடினதோர் கருவெடுத்து நன்றா யாடு நாட்டிலுள்ளோ ரறியாமல் நயந்துபார்த்தால், கூடின தோர் குறிப்பெல்லாங் குணமாய்த்தோற்றுங் குறிப்பாக வின்னமொரு விபரங்கேளு, ஆடினதோர் திருநடனத் தாதியான வரகரா குருவருளா லறிந்துபாரே (471)

§ ஆண்டுயேன்பது—வருடம்.

நவக்கிரகம்—ரவிமதி.

பாரப்பா வின்னமொரு கருவைக்கேளு பரிவான நவக்கிரகந் தன்னிலேதான், நேரப்பா ரவியுடனே திங்கள்ரெண்டும் நேர்மையுள்ள கண்கள்ரெண்டும் நேத்திரமாச்சு, காரப்பா நேத்திரமென்ற யிரண்டுகண்கள் கருவான ரவிமதியுமானவாறு, ஆரப்பா ரவிமதியு யறியப்போறூர் அறிந்தவனே மெஞ்ஞானி யருள்தான்பாரே. (472)

அருள்காண யதனிலொரு விபரங்கேளு அப்பனே கண்ணறிந்து கருவைவாங்கி, மருளாமற் கல்வமதில் வைத்துக்கொண்டு மார்க்கமொடு கோசமுடன் பீசஞ்சேர்த்து, சுருளான வைங்கோலத் தைலத்தாலே சுழற்றிமிகத் தானரைத்து வழித்துமைந்தா, உருளாமல் மனந்திறமாய் நின்றுகொண்டு ஓமெனவே சிமிழ்தனிலே வைத்துப்போற்றே (473)

போற்றுவது தன்மையதாய் வைத்துப்போற்றி பொருளான பூரணத்தைப் பூசித்தேதான், கார்த்துநீ ரேசகபூ சகமும் பண்ணிக் கமலமலர்க் கும்பகத்திற் கருத்தைவைத்து, நாற்றிசையு மெய்க்கவே திலதம்போடு நாடுநகர் தனில்வாழும் நாதாக்களெல்லாந், தோத்திரமா யுனதுபதம் பணிவார்மைந்தா சுகமாக யின்னமொரு கருவைக்கேளே. (474)

மெய்க்குறி யஞ்சனம்.

கேளப்பா மங்களமும் புதனிரண்டு கெந்தவகை யனுசரிக்கும் மூக்கேயாகும், நாளப்பா மூக்குமேற் கண்ணுகீழே, நலமான மஞ்சனிறக் கருவேதோன்றும், ஆளப்பா யக்கருவை புத்திகொண்டு அவையடக்க மாகநீ யறிந்துவாங்கி, கோளப்பா வாராமற் கல்வத்திட்டுக் கூர்மையுட னேங்கோலத் தைலம்வாங்கே. ()

வார்த்துநன்றாய் மத்திக்கும் போதிலேயா வரிசையுடன் புழுகுரசஞ் சேர்த்துநீதான், போற்றியே பதனமதா யரைக்கும் போதிற் § பூரணத்தின் கிருபையினால் மையாய்ப்போகும், சாற்றியதோர் மையெடுத்துச் சிமிழில்வைத்துச் சங்கையில்லாப் பரமகுரு தாளைப்போற்றி, பார்த்திபனே யொருமனதாய் நின்றுகொண்டு பக்குவமாய் ரேசகபூ ரகமும்பண்ணே. (476)

§ பூரணத்தின் கிருபையென்பது—வாலையின் சகாயம்.

பண்ணப்பா கும்பகத்திற் பதிவாய்நின்று பக்குவமாய் மையெடுத்துக் கருவைத்தீத்து, கண்ணப்பா மேல்நோக்கிப் பார்க்கும்போது கருத்தாகத் தோற்றுமடா காட்சியெல்லாம், விண்ணப்பா தானோக்கிப் பார்த்தாயானால் மேலேழு லோகமெல்லாம் மெய்யாய்க்காணுந் தண்ணப்பா தன்னொளியிற் சகலசித்துந் தன்மயமே யல்லாது தன்னைப்பாரே (477)

காதுநஞ்சுக் கரு.

பாரப்பா வின்னமொரு கருவைக்கேளு பத்தியுள்ள குருவெள்ளி காதுகாது, காரப்பா காதுநஞ்சுக் கருவைச்சொல்வேன் களிபோலே திரண்டுநிற்குஞ் சிவப்பாய்க்காணும், ஆரப்பா யறிவார்கள் செவியில்நஞ்சு அந்தநஞ்சு துஞ்சுவகை யறிந்துவாங்கி, சேரப்பா வைங்கோலத் தைலஞ்சேர்த்துச் செம்மையுட னரைக்கையிலே புழுகுசேரே. (478)

சேர்த்துமிகத் தானரைத்து வழித்துவாங்கித் திறமாகச் சிமிழ்தனிலே பதனம்பண்ணி, போற்றிமிகத் தான்வணங்கிக் குருவைப்போற்றி புத்தியினால் ரேசகபூ ரகமும்பண்ணி, பார்த்தினே கும்பகத்திற் பதிவாய்நின்று பத்தியுடன் மையெடுத்துத் திலதம்போட்டு, கார்த்துநீ நாலுதிக்கும் பார்த்தாயானால் கண்சிமிட்டும் போதில்பா தாளந்தோற்றும். (479)

தோற்றியதோர் பாதாளந் தலைதானேடுந் துருவமுடன் தன்னில்வெகு § நிதிகள்காணுந், தோற்றியதோ ரன்னிதியைப் பார்க்கவேண்டாந் திறமாக மைவழித்துச் சிமிழில்வைத்து, ஆற்றியதோ ரருபசித்து யின்னங்கேளு, அரகரா வாயிரத்தி னருமைதானும், பூத்தமலர் வாசனைபோற் கிரகசித்து புகழுகின்றோம் புத்தியினாற் கேளுகேளே. (480)

கிரகசித்து.

கேளப்பா சனியினுட கிரகமேது கேசரத்தி னுச்சியாம் வாக்குவாக்கு, நாளப்பா யவரவர்க்கு நாக்கிலேதான் நலமான சரஸ்வதியு மிருந்தாள்பாரு, தேமப்பா யவளிருந்த வீட்டைப்பாரு செம்மையடா வெண்மையுள்ள விதழிலேதான், சூளப்பா யமூர்தரசந் துஞ்சிநிற்குஞ் சத்தியுட னந்தரசம் வழித்துவாங்கே ()

§ நிதியென்பது—புதையல்.

திலத லிங்கம்.

வாங்கியதோர் ரசத்தோடே தைலஞ்சேர்த்து வண்மையுள்ள புழுகிட்டு மத்தித்தேதான், பாங்குபெற ரவிதனிலே யொருநாள் வைத்துப் பத்தியுடன் மறுநாள்தா னெடுத்துப்பாரு, சாங்கமாய் மைபோலே திரண்டுநிற்குஞ் சாதகமாய்ச் சிமிழ்தனிலே பதனம் பண்ணி, பூங்கமல மாதுசகச் சோதியென்று புத்தியுடன் திலத மிட்டு வணங்கிநில்லே. (482)

வணங்கியே நிற்கையிலே மாதுசரச்சோதி வாலைவய தாமு னது மனதிடமேநிற்பாள், இணங்கியவள் பாதமதைத் தொழுது கொண்டா லிருதயத்திற் சகலகருப் பொருள்கடோன்றும், குணங்களொரு மனதாகிக் குவிந்துநின்றால் கூறுவாள் வேதமொடு சாத்திரங்களெல்லாம், மணங்கமழு மாதுசரச் சோதிநின்று வச னிப்பா ளவ்வசன மேலதாமே. (483)

ஆமப்பா சரச்சோதி நிருத்தத்தாலே அடங்காத § வாரிதி போ லமுர்தமூறும், தாமப்பா தன்னருளா லமுர்தங்கொண்டால் தலைவனையுந் தலைவியையுங் காட்டிவிப்பாள், நாமப்பா நவக்கிரகக் குறிப்பைநன்றாய் நலமாகப் பார்த்தவனே சீவன்முத்தன், காமப் பால் வேகத்தாற் கிரகந்தன்னைக் காராட்டாற் கருத்தழிந்த கழுதை மாடே (484)

மாடான பசுவுக்குப் பதிதான்பாச மார்க்கமுடன் பாச பதி பசுவுக்காகும், நாடான பசுபதியாம் பாசமூன்றும் நல் லோர்கள் தானறிந்து நாட்டம்பார்ப்பார், வாடாதமுப்பொருளு மூன்றேயுப்பு வாசமுள்ள முப்பூவை யார்தான்காண்பார், சோடான சிவசத்தி பூசையோர்கள் சுழிமுனையின் சுடரொளியிற் காண் பான்பாரே. (485)

இராகுவின் பதி.

பாரப்பா இராகுவின் பதியைக்கேளு பதிவான கிரகமடா லிங்கலிங்கம், ஆரப்பா வறிவார்கள் சுயம்புலிங்கம் அந்தரத்தில் நடுவான வாதிலிங்கம், நீரப்பா நிறைந்துவரும் அமுர்தலிங்கம் நீள் புவியிற் சராசரங்க ளடைத்தலிங்கஞ் சாரப்பா லிங்கமென்ற அங் கந்தன்னைச் சதாகாலந் தொழுதுநின்று அறிவாய்நில்லே. (486)

§ வாரிதியென்பது— கடல்.

அறிவான தலமிதுதான் யார்தான்காண்பார் அப்பனே யத்தலத்தில் ராகுவாழ்வார், குறியான ராகுவின் னமுதர்வாங்கிக் குணமாகக் கொள்வதற்கு விபரங்கேளு, நெறியான தலமறிந்து வாசிபூட்டி நினைவாக ரேசகபூ ரகமுஞ்செய்தால், பறியான கும்பகத்தி லமுர்தம்நின்று பாயுமடா லிங்கமதின் சிரசிற்றானே. ()

சிரசான வமுர்தமதைக் கொண்டால்மைந்தா சிக்கெனவே யமுர்தரசம் ரவியிற்சேரும், உரமறிந்து ரவியினுட யமுர்தஞ் சேர்ந்தால் உத்தமனே யுன்னுடம்பு குளிர்ச்சிகாணும், நிறமறிந்து யக்குளிர்ச்சி கண்டபோதே நீமகனே யட்சரத்தை நினைவாயோது, சரமறிந்து வோதினு லாகாயந்தான் சாய்கைநிழ லத்துவச்சிர தேகமாமே. (488)

அமாவாசி.

ஆமப்பா சதுர்த்தசி விரதமாகி அப்பனே மறுநாள்தான் யம்மாவாசி, தாமப்பா யமாவாசி தன்னிலேதான் தருவான § யமுர்தமதைத் தணிந்துகொள்ளு, நாமப்பா சொன்னபடி யம்மாவாசி நலமான நாள்தனிலே யமுர்தங்கொண்டால், காமப்பா தன்னருளாற் கவுனசித்துக் கைகண்ட சித்திதுதான் கருதிப்பாரே.

கருத்தறியாக் காமியற்குக் கருவங்கேது காலறியா மூடருக்குக் கண்ணாங்கேது, உருத்தறிந்து வொப்பனையை யறியார் மூடர் உலகமதில் வாசமதா யுருண்டுபோவார், திருத்தமுட னின்னூலா யிரத்தைக்காணார் சிவசிவா சிவவேட மறியாமாந்தர், வருத்தமுட னுலகமதிற் றிரிந்தலைந்து வணக்கமில்லா திணக்கமதில் மாளுவானே. (490)

கேதுகிரகம்.

வானான கேதுவின் கிரகந்தன்னை வரிசையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு, ஊனான மூலமடா வபானந்தன்னிலேநின்ற வண்டமடா கீதமாச்சு, தேனான கீதமடா கேதுவுடவித்து தெவிட்டாத கேதுவின் வித்தைவாங்கி, கோனான ரவிபீசங் கூடச்சேர்த்துக் கூர்மையுடன் ரவிமுகத்தில் வைத்துப்பாரே. ()

§ அமுர்தமென்பது—மதிப்பால்.

பாக்கவே கேதுவுட வித்துதானும் பக்குவமாய் ரவிபீசங் கூடச்சேர்த்து, ஏர்க்கவே மெழுகாகு மைந்தாகேளு யின்பமுடன் அம்மெழுகைத் தினமுங்கொண்டால், மார்க்கமுள்ள தேகமதிற் காந்திமீறி மகத்தான போதையையு மென்னசொல்வேன், தீர்க்க முள்ள போதையிலே நின்றுதேர்ந்தால் திவ்வியமுள்ள கயிலாயத் தேகமாமே. (492)

தேகமென்ற வகமதனை யறிந்துகொண்டு தீர்க்கமுள்ள வறு சுவையிற் பாகங்கண்டு, பாகமென்ற வறுசுவையை யகற்றிநீயும் பக்குவமாய்ச் சுவையறிந்து பணிந்தாயானால், தாகமென்ற பசி தாகந் தானேதானாய்த் தன்னுள்ளே யடங்குமடா விண்ணைப்பாரு, ஆகமென்ற நவக்கிரகம் நன்றாய்த்தோன்றும் அரகரா கிரகமதி லமர்ந்துநில்லே. (493)

அமர்ந்தமொரு நவக்கிரகந் தனக்குமேலே ஆதியென்ற யனுக்கிரம் யார்தான்காண்பார், சுமந்தபிணம் போல்திரிவார் கிரகங் காணார் சுருதியுள்ள கிரகமதைச் சொல்வேன்மைந்தா, நமர்ந்த மன மாய்கையைநீ யகலத்தள்ளி நலமாக புத்தியைத்தா னுட் டங்கண்டு, சமர்ந்தமர்ந்த மனுக்கிரகந் தன்னிலேதான் சதாசிவ மனோன்மணியைத் தான்காண்பானே. (494)

காணப்பா § மனோன்மணியைக் கண்ணாற்கண்டு கருணை பெற்ற யவள்பதத்தைப் பூசைபண்ணி, பேணப்பா யனுக்கிரகந் தன்னில்நின்ற பெருமையுள்ள நாதமதை வாங்கிமைந்தா, தோணப்பா வண்டரண்டத் தைபிலஞ்சேர்த்துச் சுருக்காக ரவி முகத்தில் வைத்துப்பாரு, தோணப்பா தன்னிறம்போல் மெழு காய்ப்போகுந் தெவிட்டாத மெழுகைவைத்துப் பூசைபண்ணே. ()

பூசையென்ன தூபமுடன் தீபங்காட்டிப் புகழுடனே மனதுகந்து புத்தியாக, ஆசைவைத்து மெழுகுபண விடைதான் கொண்டால் அரகரா வாக்கையதற் கழிவோயில்லை, நேசமுடன் சதாகாலங் கொண்டால்மைந்தா நீடுலகில் நீடூழி காலம்வாழ்வாய், வாசமுள்ள யனுக்கிரக மகிமைதன்னை வசனிக்க நாவுமுண்டோ மனதாய்க்காரே. (496)

§ மனோன்மணியென்பது—புவனை.

காரப்பா வின்னூலா யிரத்தைமைந்தா கருத்தினாற் சகலகலை காணலாகும், ஆரப்பா யாயிரத்தி னமுர்தங்கொண்டல் அவ்வமுர்தங் கொண்டவனே யாதிவஸ்து, பேரப்பா பெற்றவனும் புலகிலேதான் பெருமையுள்ள சித்தனென்று பேசுவார்கள், நோப்பா நவக்கிரக மனுக்கிரகந்தன்னை நிட்சயமாய்க் காட்டிவிக்கு மின்னூல்பாரே. (497)

பார்க்கவே நவக்கிரகப் பதியுஞ்சொன்னேன் பரமான யனுக்கிரக நிலையுஞ்சொன்னேன், ஏர்க்கவே யதனுடைய நிலையுஞ் சொன்னேன் யேகாந்த மானகுரு வறியச்சொன்னேன், கார்க்கவே கைபாக முறையுஞ்சொன்னேன் கருணையா யதனில்வினை யாட்டுச்சொன்னேன், சேர்க்கையுட னினமறியத் தன்னைக்காட்டித் திறமாக நீயிருக்க வகைசொன்னேனே. (498)

சொன்னவகை தனையறிந்து கருவைப்பாரு துருவமுள்ள மேருவைநீ தொண்டுபண்ணி, இன்னவகை சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு இன்பமுற்றுக் கேளாட்டாற் சவமேயென்பான், சின்னவய தானாலும் புத்தியுண்டு திறமாக வயதுமுற்றிக் கிழமேயானால், என்னவகை யாகுமடா மானுக்காகேள் எட்டிரண்டு மெத்தநன்று பத்தைப்பாரே. (499)

பத்தான அகாரமடா வண்டமேறு பகருதற்கு நாவுண்டோ பாரின்மீதே, வித்தான பொருளாகும் வேதமாகும் வினையான வைந்துருவுக் காணியாருஞ், சித்தான சித்துவினை யாடுதற்குத் திறமான தலமாகு மௌனமாகும், முத்தாகச் சிப்பியடா முனையுமாகும் மூதண்ட நிறைந்தமதி முத்திதானே. (500)

அண்ட மெழுகு.

தானென்ற முத்தியுட தலைமைகண்டு தப்பாம லத்தலைமை தான்றானென்று, கோனென்ற குருவருளால் நானீயென்று குருவான வண்டமடா ஞானியண்டம், ஊனென்ற § ஞானியண்டம் வாங்கிநல்ல உறுதியுள்ள மெழுகுவகை யுரைப்பேனையா, தேனென்ற வண்டமதின் சவ்வுப்போக்கித் தீங்கில்லாத் திராவகத் தாற் சுத்திபண்ணே. (501)

§ ஞானி அண்டமென்பது—கோழிமுட்டை.

சுத்திபண்ணும் வகையேது சொல்லக்கேளு சுகமானவெடியுப்பு திராவகத்தைவாங்கி, பத்தியுட னண்டமதைத் தோய்த்துத் தோய்த்துப் பதிவான ரவிமுகத்தில் நவநாட்போடு, அத்தியுட நீர்கள்வற்றிச் சுத்தியாச்சு வருமையுள்ள வண்டமது வெற்றியாச்சு, முத்தியுள்ள வண்டவது வெற்றியானால் மூர்க்கமுள்ள மெழுகுவகைக் குறுதிகேளே. (502)

உறுதியுள்ள வீரமது பலந்தானைந்து உண்மையுள்ள யவ்வீரக் தன்னைவாங்கி, பரிதியென்னு நாதமதில் தன்னாலாட்டிப் பரமான வண்டமது கவசஞ்செய்து, கருதுவது § வைந்தெழுத்தை யுச்சரித்துக் கருணையுடன் ரவிமுகத்திற் காயப்போடு, சுருதியுள்ள வண்டமது நன்றாய்க்காய்ந்தாற் சுகமான யதன்மேலோர் கவசங் கேளே. (503)

கேளப்பா கவசமது சொல்லக்கேளு கேடில்லாப் பூரமடா காரங்காரம், ஆளப்பா காரமுள்ள பூரம்வாங்கி அக்கருவாற் றூட்டி யதன்மேற்பூசு, கோளப்பா வாராமற் பூசிநன்றாய்க் கொடிதான ரவிமுகத்தில் நவநாட்போடு, வேளப்பா வெரித்த நெற்றிக் கண்ணினாலே விசையான யண்டமது விஞ்சையாச்சே. ()

நிலப்பூரக் கவசம்.

விஞ்சையெனும் பொருளான வண்டந்தன்மேல் மேற்கவசமதன்மேலோர் கவசங்கேளு, நஞ்சையெனும் நஞ்சறுப்பா னூர்தான் காண்பார் நவிலுகிறே மதன்பெருமை நன்றாய்க்கேளு, பஞ்சையென்ற பஞ்சையடா நிலப்பூரந்தான் பக்குவமா யதன் செனனம் பரிதியாலே; ஐஞ்சரைமே லாரைக்கு மேலதாக வருணை நிற மானநிலப் பூரந்தானே. (505)

தானான நிலப்பூரம் பலந்தானைந்து தன்மையுடன் சட்டுவகை சயநீர்தன்னால், கோனான குருவருளாற் கல்வத்தாட்டிக் கூர்மையுடன் கவசமது குணமாய்ச்செய்து, நானான நாதன்பதம் நன்றாய்ப்போற்றி நலங்காமல் ரவிமுகத்திற் காயப்போடு, தேனான கமலமதி லமுர்தந்தானுஞ் செம்மையுடன் கசிந்துருகித் திறமதாமே. (506)

§ ஐந்தெழுத்தென்பது—பஞ்சாட்சரம்.

திறமாக யதன்மேலோர் கவசஞ்கேளு சிவசிவா பாண்டமென்ற புதுப்பாண்டத்தில், உறமான சல்லியைத்தான் நீற்றிக் கொண்டு உரிசையுள்ள வுப்புநீ ரொன்றாய்ச்சேர்த்து, கறமான பாண்டமதி லரைமட்டிட்டுக் கருணையுள்ள கவசமதை யதன்மேல் வைத்து, சிரமான கவசமதில் முன்பொடியைத்தூவி திறமாக மேல்மூடிக் கவசஞ்செய்யே. (507)

செய்தவொரு கவசமதை வலுவாய்ச்செய்து தீர்க்கமுடனின்னமொரு வகையைக்கேளு, தொய்தவொரு பூமியிலே குகை போல்வெட்டிக் குகையான குகைதனிலே § யானைக்கஷ்டம் உய்த முடன் குகையிலரை வாசிபோட்டு உண்மையுள்ள கவசமதை யதன்மேல்வைத்து, கைதவறு மற்கஷ்ட மதன்மேல்போட்டுக் கருத்துறவே மணல்போட்டு மூடிடாயே. (508)

மூடியே யதன்மேலே திரணைபோட்டு மூர்க்கமுடன் சிதம்பரச்சக் கரத்தைக்கீறி, நாடியே நீயிருந்து தபசுபண்ணு நடுவான பூரணத்தை மனதிற்கொண்டு, வாடிமனந் தளராமற் கும்பகத்தினின்று வாசியுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, கூடியே குருபதத்தில் மனதைநாட்டிக் குணமாக நீயிருந்து தபசு பண்ணே. (509)

பண்ணப்பா தபசுபஞ்சாக் கினியில்நின்று பாலகனே மண்டலமோ ரெண்டுசென்றால், விண்ணப்பா தானேக்கி வைரவர் பூசை மேலான குருபூசை யஷ்டசித்தி, நண்ணப்பா யஷ்டகஜ யஷ்டநாகம் நாடிநின்ற துவாரபால கர்க்குப்பூசை, கண்ணப்பா கருவடையர் தவறுமற்செய்து கருணையுடன் சரணமென்று தண்டஞ்செய்யே. (510)

தெண்டமது பதினாறு கோணந்தன்னில் தீர்க்கமுடன் செய்துகொண்டு தூபதீபம், கொண்டுநடுத் தீபமதைக் குறிப்பாய்ப் பண்ணி குறியான சமாதிதனைத் திறந்துமந்தா கண்டவொரு மண்டலத்தைப் பையவாங்கிக் கருவான கவசமதைக் கழற்றிநீயுஞ், சண்டமா ருதமான வண்டந்தன்னைச் சாந்தமுடன் றானெடுத்து வைத்துக்கொள்ளே. (511)

§ யானைக்கஷ்டமென்பது—யானைலத்தி.

வைத்ததொரு வண்டத்திற் கவசந்தன்னை வரிசையாய் நீயெடுத்து மைந்தாகேளு, முத்தியுள்ள வீரமதின் கவசந்தானு மூதண்ட வண்டவோ டதனிற்சென்று, கைத்ததொரு பூரணத் தோ டிட்கலந்து கருவான முத்திசிவ மொன்றாய்க்கூடி, மெய்த்த தொரு மெழுகதுபோற் றிரண்டுநிற்கு மேலான வண்டர்பிரா னருளாற்பாரே. (512)

பாரப்பா திரண்டுநின்ற மெழுகெடுத்து பத்தியுடன் பரணி தனிற் பதனம்பண்ணி, நேரப்பா நின்றதொரு பூரணத்தை நேர்மையுடன் பூசைசெய்து பூசித்தாக்கால், ஆரப்பா அறிவார்கள் பூசைநேர்மை அன்பான பூசையைநா னருளக்கேளு, வீரப்பா செய்யாமல் சதாசிவத்தை வீறடங்க ரேசகபூ ரகமும்பண்ணே. ()

பண்ணுவது கும்பகமென் றருளென்றெண்ணிப் பணிந்து மிகப் பராபரனைத் தொழுதுபோற்றி, உண்ணுவதற் கமுர்தரச கற்ப மென்று உறுதியுடன் சடத்தினுட வுறுதிகண்டு, நண்ணுவது மெழுகிலொரு பணவிடைதானெடுத்து நாவதனில் வைக்கரச மரு விப்பாயும், புண்ணியனே யந்தரசங் கொண்டாயானால் புதுமை வெகு புதுமைதனைச் சொல்லக்கேளே. (514)

சொல்லக்கே ளமுர்தரச கற்பந்தன்னைச் சுருதியுடன் மண் லமே கொண்டாயானால், அல்லக்கே ளென்மகனே யாக்கைதன் னில் அழுத்தமதாய்ச் சட்டையொன்று வெழுத்துத்தள்ளும், விள்ளக்கேள் மேலான சட்டைபோனால் விசையான வாதநீ ரற் றுப்போச்சு, சொல்லக்கேள் வாதநீர் சட்டைபோனால் திறமான பிரமகுலத் தேகமாச்சே. (515)

ஆச்சப்பா யந்தரசம் யமுரியோடே அருமையுடன் றனெடுத்து மனதுட்கொண்டு, பேச்சப்பா மற்றதொரு மௌனம் நோக்கிப் பிசகாமல் மூன்றுமண் டலமேகொண்டால், காச்சப்பா வைம்பொறியின் றழலினாலே கசடறவே மனதுறுதி யாகநின்றால், போச்சப்பா § திரோதகையின் பாசம்பாசம் போக்கறிந்தா லதன் மேலோர் சட்டைபோமே. (516)

---

§ திரோதகையென்பது—மாய்கை.

லிங்கமெழுகு.

சட்டையென்ற தேகமதிற் சட்டைபோனால் சங்கையில்லா ரவிகாந்தி யென்னசொல்வேன், இட்டமுட னிதனிலொரு விபரங் கேளு மென்மக்காள் முன்மெழுகிற் கழஞ்சுவாங்கி, கட்டான லிங்கமதிற் கவசஞ்செய்து கருணையுள்ள தீபமதில் வாட்டினக்கால், முட்டையுடன் மெழுகதுதான் லிங்கத்தேறி முழுதுமது மெழு காகும் லிங்கந்தானே. (517)

தானென்ற லிங்கமதின் மெழுகைவாங்கி சமரசமாய் மதி தனிலே நூற்றுக்கொன்று, கோனென்ற குருவருளாற் கொடுத் துப்பாரு குருவான தங்கமடா வென்னசொல்வேன், தேனென்ற யமுர்தரச கற்பத்தாலே செயமான தங்கமதைப் பணவிடை தான்வாங்கி, நானென்ற வாணுவத்தால் வெள்ளிசெம்பில் நன்மை யுடன் பத்துக்கு வொன்றுதாக்கே. (518)

ஒன்றான தங்கமதைத் தாக்கினக்கால் ஒகோகோ வென்ன சொல்வே னுத்தாள்ரூபங் குன்றாத குழந்தையடா § வயதோவெட்டு குறையாத செல்வமடா வாதியாதி, கன்றுட வந்தாதி யனாதி யாகுங் கசடற்ற தங்கமடா அங்கமங்கம், பன்றான வங்கமடா வாதிகற்பம் பாலகனே நீயறிந்தால் பயமும்போச்சே. (519)

அரிதாரம்

போச்சென்று விடுகாதே யின்னங்கேளு பொருளான யமுர்தரச மெழுகிற்றானும், பேச்சொன்றும் பேசாமல் மௌன மாகிப் பேணியே யம்மெழுகிற் கழஞ்சுவாங்கி, பூச்சென்ற வரி தாரக் கட்டிதன்னில் போதரவா யிடைக்கிடைதான் கவசம்பண்ணி, மூச்சென்ற மண்சீலை யைந்துசெய்து மூர்க்கமுள்ள ரவிதனிலே காயப்போடே. (520)

போடப்பா ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால் பூரணமாஞ் செகசோதி பாதம்போற்றி, நாடப்பா நிதானமதாய்ப் புடத்தைப் போடு நன்மையுடன் புடமாறி யெடுத்துப்பார்த்தால், வீடப்பா பிலத்ததொரு தாரந்தானும் வீறடங்கிக் கட்டியது மணிபோ லாடும், ஆடப்பா அம்மணியை யெடுத்துக்கொண்டு அருளான தங்கமதற் கிடையேசேரே. (521)

§ வயதுயென்பது—மாற்று.

சேரப்பா தங்கமது குகையிலிட்டுத் திறமாக வுருக்கையிலே தாரந்தாக்கு, சேரப்பா தானடங்கித் தாரந்தன்னைச் செம்மையுடன் வாங்குமடா தங்கந்தானுந், நேரப்பா நின்றதங்கம் யென்னசொல்வேன் நேர்மையுட னதனிறத்தை யார்தான்காண்பார், பாரப்பா யதனுடைய பேரைக்கேளு பிரபலமா மரிதார மென்றும்பேரே. (522)

பேரான அரிதாரத்தின் தன்மைகேளு பெரிதான செம்பிலே நூற்றுக்கொன்று, நேரக்கொடுத்துடனே யென்னசொல்வேன் நிசமான தங்கமது பத்தேகாணும், தூரான வெள்ளியிலே யைந்நூற்றுக்கொன்று சூட்டினூர் வயததனைச் சொல்லப்போமோ, சீரான யரிதாரத் தன்மைசொல்லச் சிவசிவா நாவடங்காச் சித்துதானே (523)

பாஷாணக்கட்டு.

சித்தான சித்தியொன்று சொல்லக்கேளு சிவசிவா கைலாய மென்னசொல்வேன், சுத்தமுள்ள வெள்ளியடா மதிதானென்ன சுருதியுள்ள மதிகோடி யிதற்கொவ்வாது, பத்தான வெள்ளையடா பரப்பிரமரூபம் பார்க்கரிது பார்க்கரிது கண்ணுக்கும், வித்தான வித்துதா ஞர்தான்காண்பார் வேரான வித்துமதி வெள்ளிதானே.

வெள்ளிமதிக் கதிரொளியை யார்தான்காண்பார் வேரான கதிர்மதிதான் வீரம்வெள்ளை, உள்ளியென்ற தைலமதா லிரண்டுஞ் சேர்த்து உரிமையுடன் கல்வமதி லாட்டிமைந்தா தெள்ளிமையாய் வழித்துருட்டி வட்டுப்பண்ணி § செங்கதிரோன் தன்முகத்திலுலரவைத்து, வள்ளியெனுங் கிழங்கதனை ரெண்டாய்க்கீறி வைத்திடுநீ யுலந்தவட்டை வைத்துமூடே. (525)

மூடிநன்றாய்க் கிழங்கதனை மண்ணுஞ்செய்து முக்கியமாய் நிறையறிந்து புடத்தைப்போடு, வாடிநின்று மலையாதே வீர வெள்ளை மகிழ்ந்திரண்டு முறவாகக் கட்டிப்போகும், நாடிநின்ற சற்குருவைத் தொழுதுபோற்றி நலமான வைரவர்க்குப் பூசை பண்ணி, கூடிநின்ற புடமதனை யெடுத்துப்பார்த்தால் குருவான வெள்ளையடா வீரந்தானே. (526)

§ செங்கதிரோனென்பது—சூரியன்.

வீரமென்ற வெள்ளைதனைப் பிறர்தான்காணார் விபரமுடன் சொல்லுகிறே னன்றுய்க்கேளு, காரமென்ன தங்கமதில் நாலுக்கொன்று களங்கமுற்று வுருக்கிடுவாய் கண்விட்டாடும், சாரமென்ற சாரமடா தங்கப்போக்கு சற்குருவாய் நின்றதொரு தங்கந்தன்னை, பாரமென்று வெண்ணியதை வெள்ளிசெம்பில் பத்துக்கு வொன்றுவிடப் பழுக்கும்பாரே. (527)

பழுக்குமென்று சொன்னபொரு ளென்னவென்றால் பரமான வண்டமடா § செயவீரந்தான், செழிக்குமன மம்பரத்தின் செயல்தானுகுந் திருவான வாலையடா செம்மைசெம்மை, களிக்குமனங் களிக்காமற் கருத்தைக்காரு கமலமலர் பூமாதைக் கருத்திற்சேரு, சுழிக்குமனஞ் செருக்காமற் சுருதிபாரு சுருதிமுடிந் தந்தமடா சோதிதானே. (528)

வெடியுப்புச் சுண்ணம்,

தானென்ற வெடியுப்புச் சுண்ணஞ்சொல்வேன் தன்மையுட னேகேளு மாணுக்கா நீ, தேனென்ற வெடியுப்பு பலமோரெண்டு திறமான கல்லுப்புப் பலமும்ரெண்டு, ஊனென்ற சீனமது பலமிரண்டு உத்தமனே மூன்றுமென்றுய்க் கல்வத்திட்டு, நானென்ற செயநீரா லரைத்துவில்லை நன்றாகக் காயவைத்துப் புடத்தைப்போடே. (529)

வெடியுப்புச் செயநீர்.

போட்டதொரு புடமாறி யெடுத்துப்பாரு புண்ணியனே சுண்ணும்பாய்க் கட்டிநிற்கும், வாட்டமென்ன சுண்ணும்பைக் கண்டபோதே மகத்தான சாரஞ்சேர் நாலுக்கொன்று ஓட்டமென்ற நீரப்பா செயநீராகு முத்தமனே யன்னீரில் வீரம்பூரம், காட்டமுடன் செயநீரில் சேர்த்தாயானல் நன்மையுள்ள செயநீரு முறுதியாச்சே (530

உறுதியுள்ள செயநீரில் சரக்கெல்லாந்தா னுகமடிந்து போகுமடா நீரின்வேகஞ் சுருதியுட னிமறிந்து வேதைபார்த்தால் சொர்க்கமென்ற சொர்க்கமடா சோதிதோன்றும், பரிதிமதி ரெண்டினுட பலமேகாணும் பாலகனே பயனறிந்து பலனைக்கண்டால், கருதுமன மொன்றுகுங் கவலைநீங்குங் காரணமும் பூரணமுங் கைக்குள்ளாமே. (531)

§ செயவீரமென்பது—சவ்வீரம்.

அண்டத் தைலம்.

ஆமப்பா தைலமொன்று சொல்லக்கேளு அருளான வண்டமது பலம்பத்தாகும், ஓமப்பா சருகதுவும் பலம்பத்தாகு முண்மையுள்ள பூநீரு பலமொன்றாகும், நாமப்ப வெடியுப்பு பலமொன்றாகும் நன்றான சீனமது பலமொன்றாகும், ஏமப்பா விந் துப்பு பலமொன்றாகு முண்மையுள்ள சாரமது பலமொன்றுமே. ()

பலமான பொரிகாரம் பலமொன்றப்பா பண்பான வளையலுப்பு பலமொன்றப்பா, குலமான கல்லுப்பு பலமொன்றப்பா கூர்மையுள்ள சூடனைப் பலமேபோடு, வலமான கெந்தியது பலமொன்றப்பா வகையான சரக்குவகை பத்துங்கூட்டி, பில மாக விடித்ததனைப் பொடியாய்ப்பண்ணி பேரண்ட சருகதுவுங் கூடச்சேரே. (533)

வீரமெழுகு.

கூட்டியெல்லா மொன்றாக்கி பாண்டத்திட்டுக் குலமான நீர்விட்டுப் பிசறிநன்றாய், நாட்டியே மேற்சட்டி கவித்துமூடி நன்றாக மண்செய்து தமர்தான்போட்டு, தேட்டமுடன் தைல மதை யிறக்கிக்கொண்டு சிவசிவா பரணிதனி லடக்கம்பண்ணி, வாட்டமில்லா வீரமதிற் சுருக்குத்தாக்க மைந்தனே யவ்வீர மெழுகாய்ப்போமே. (534)

மெழுகான வீரமொடு துருசுகாரம் மேன்மையுள்ள பூரமு டன் கெந்திகூட்டி, நழுகாம லைந்துமொரு விடையாய்க்கூட்டி நன் மையுள்ள கல்மவதில் காட்டிக்கொண்டு, உழுகான வாய்நீரா லரைத் துக்கொண்டு, வுண்மையுடன் வில்லைதட்டிக் காயப்போடு, சழுக் காகக் காய்ந்தபின்பு சீலைசெய்து சுத்தியுடன் காடையென்ற புடத்தைப்போடே. (535)

போட்டபுட மாறவிட் டெடுத்துப்பாரு பொற்குருவாஞ் சற்குருவாம் போற்றிக்காரு, நாட்டமுடன் குருவெடுத்து வைத் துக்கொண்டு நன்மையுள்ள தங்கமது § கழஞ்சிரெண்டு, தேட்ட முடன் முன்குருவிற் பணவிடைதானெடுத்து திருவான தங்கத் தில் வாய்நீராற்பூசி, வாட்டமில்லா வோட்டில்வைத்து மண்சீலை செய்து மக்களே புடம்போடக் குருவாம்பாரே. (536)

§ கழஞ்சியென்பது—ஒன்னேகால் விராகனிடை.

பாரப்பா பொற்குருவில் பணவிடை-தானெடுத்து பாய்ச், சடா காரீயம் பத்துக்கொன்று, நீரப்பா தான்வற்றிக் காரீயந்தான் நிமிஷத்திற் பழுக்குமடா யென்னசொல்வேன், காரப்பா சற்குருவின் பாதந்தன்னைக் கருணைபெறப் பூசித்துக் கருணைகூர்ந்து, தேரப்பா மனதைமிகத் தேர்ந்துகொண்டு திறமாகப் பூரணத்தைத் தினமுநோக்கே. (537)

நோக்குவது பூரணத்தை நோக்கவேண்டும் நொடியான திருவடியைக் காக்கவேண்டும், தாக்குவது கும்பகத்தில் வாசி பூட்டித் தனலான வக்கினியாற் றன்னைத்தாண்டி, நீக்குமலர் வாசனையாற் சகஸ்திரபீடம் நேரான பிரமபதத் தருளைநோக்கி, வாக்குமன தறிவுடைய மனதினலே மானதமாம் பூசைதனை மனதிற்காணே. (538)

காணவென்றால் ராமனுட வாக்கியத்தில் கருணையுள்ள வாயிரத்தைக் காணவேண்டும், பூணவென்றால் மனதுருகி யாலே மைந்தா பொற்குருவாஞ் சற்குருவைப் பூணவேண்டும், நாணவென்றால் நாணுகிற தாருக்கென்றால் நன்மையில்லா துஷ்டரிடம் காணவேண்டாம், ஆணவங்கள் மிகப்பேசி யழிந்திடாம லண்ட சரா சரங்களைத்தான் வசமாயெண்ணே. (539)

எண்ணுவது வைந்தெழுத்தை யெண்ணியெண்ணி § யெட்டிரண்டு மறியாத விடும்பர்தானும், அன்னமது சுவைதனையே காணமாட்டான் அதனுடைய சாரமதை யறியான்மட்டி, பெண்ணுடைய பெருமைதனைப் பேணிப்பார்த்து பேய்கூத்தாய்த் திரிவார்கள் கோடாகோடி, தன்னுலேத் தானறிந்து வழுத்தங்கொண்டாற் றலைவனையுந் தன்னையுந்தான் காணலாமே (540)

காணவொரு கருவைப்பு சொல்லகேளு கைலாய புலத்தியர்தன் கடாட்சத்தாலே, தோணுகிற வுருப்பேதங் கோடாகோடி சொற்பேதம் பொருட்பேதம் கோடாகோடி, பூணுகிற பொற்குறிபோற் சித்தர்கோடி பூவுலகில் யானறிந்து புனிதமாக, வானுலகிற் சென்றுகை லாசம்புக்கி மகிழ்ந்திருந்தேனந்தியுட மாபிற்றனே (541)

§ எட்டிரண்டேன்பது—அகாரஉகாரம்.

நந்தியுட மரபில்வெகு நாளிருந்து நான்பணிந்தே னவர் பதத்தைத் தெண்டம்பண்ணி, யுந்தியுயிர் சபைநிலை யகாரபீட மோங்கார மானதோ ருகாரபீடஞ், சிந்தைதனிற் றெளிவான மூலந்தன்னைச் செப்புகிறே னவர்பதத்தைத் தெண்டம்பண்ணி, தந்தைதா யானதோ ரேகமூலந் தயவான மூலமது மகாரமாமே. ()

சத்திசிவம்.

மகாரமென்ற மௌனமதை யார்தான்காண்பார் மக்களே யுங்களுக்காய்ப் பிரித்துச்சொல்வேன், அகாரமென்ற வட்சரமே சிவமாமூல மப்பனே சிவத்துக்குச் சத்திகேளு, உகாரமென்ற வட்சரமே சத்தியாகு முறுதியுட னிருவருமே யொன்றும்போது, அகாரமா யெட்டிரண்டும் பத்துமாச்சு வடியந்த மொன்றான வறிவைக்கேளே. (543)

கேளப்பா வறிவான அகாரபீடங் கிருபையுட ஞெங்காரக் கம்பமாகி, மேலப்பா வளர்ந்துவா காயம்புக்கி மேன்மையுள்ள வட்டமதாய் விந்துவாச்சு, வாளப்பா விந்தென்றுங் காரமென்று மகத்தான மௌனமென்றும் போகமென்றும், ஆளப்பா போக மென்ற வஸ்துதன்னை யாரறியப் போறார்க ளப்புப்பாமே. (544)

உப்பான வுப்பதுதான் § பூமிநாத முரிமையுடன் மண் பிறப்பு மதனைநாதம், அப்பான வமுர்தமுண்ணும் பசனைநாதம் அடங்காத சிந்தையுற்ற வருமைநாதஞ், செப்பாத நாதமடா பச்சை நாதஞ் செகத்தோரை மயக்குகின்ற செகநாதந்தான், கொப்பான குருவிருந்த குருநாதந்தான் குழந்தையென்ற மதனைபச்சை மண் தான்பாரே. (545)

பாரப்பா செனித்தமுதற் பத்துநாள்மட்டும் பாலகனே யமைத்தவிதி யெழுத்துமாறில், சீரப்பா பிருதுவியில் பிருது வியைச்சேரப்பா செனித்தவிதி யெழுத்தெனவே திகைத்துநிற்பார், காரப்பா வப்பதியைக் காருகாரு காத்துமிகக் கருவெடுத்துக் கருத் தாய்நீயும், ஊரப்பா வந்துவிடு முலகத்தோர்க ளொருவ ரறி யாமல்நீ பதனம்பண்ணே. (546)

---

§ பூமிநாதமென்பது—பூநீர்.

பதனமுள்ள கருவைமிகக் கண்டமாக்கிப் பாலகனே யிதற்குரெட்டி யுப்பைவாங்கி, விதனமதைத் தானகற்றி ரவிபீசந் தான் விருப்பமுடன் பலம்பத்து பொடிதான்செய்து, வதன முள்ள குப்பிக்கு ளடக்கஞ்செய்து வாகுபெற மண்சீலை வலுவாய்ப் பூட்டி, மதனமுள்ள மௌனமதைத் தொழுதுபோற்றி மகத் தான வப்புமுப்பு மொன்றாய்ச்சேரே. (547)

சேர்த்துமிகச் சட்டிகொண்டு நன்றாய்மூடித் திறமாகச் சீலைசுத்தி மண்தான்பூசி பார்த்திபனே குழிவெட்டிப் பாண்டம் வைத்து பத்தியுடன் மண்பரப்பித் திரணைபோட்டு, கார்த்திருந்து வாறுநா ளெடுத்துப்பாரு கனலேறிக் கற்பூர வாசம்வீசும், போற் றிமிகத் தாமெடுத்து வைத்துக்கொண்டு பூரணமே யாதியந்தப் பொருள்தானென்னே. (548)

சவர்க்காரம்.

தானென்ற சவர்க்கார வுப்புதன்னைச் சங்கையுடன் கல்வ மதி லாட்டிமைந்தா, கோனென்ற குருவருளால் நன்றாயாட்டிக் குருபரனைத் தியானித்துப் பாண்டத்திட்டு, தேனென்ற மொழி மாதைத் தியானம்பண்ணிச் சிவசிவா முன்போலே சமாதிவைத்து, நானென்ற வாணுவத்தை நன்றாய்ப்போக்கி நன்மைபெற மண் டலந்தான் காருகாரே. (549)

காரப்பா மண்டலந்தான் சென்றபின்பு கருவான கரு வெடுத்து முன்போலாட்டி, சேரப்பா வாயகண்ட § தாழிதன் னில் செம்மையுடன் றன்சேர்த்துத் திருவைநோக்கி, காரப்பா மனதறிவா லடுப்பிலேற்றிக் கனலேறத் தீயெரிப்பாய் மெதுவாய் மைந்தா, தேறப்பா மனந்தேறி மெதுவாய்மைந்தா, தீயெரிக்கும் போதிலது பொங்குந்தானே. (550)

பொங்காமற் றீயெரித்துப் பதத்தைப்பாரு புஷ்டியெல்லாம் தான்கரைந்து நீராய்நிற்கும், ஏங்காமல் நீயெடுத்துப் பாண்டத் தூற்றி யென்மகனே வேடுகட்டி ரவியில்வைத்து, தூங்காமற் கார்த் திருந்து வெட்டுநாள்தான் துயர்தீரக் காய்ந்தபின்பு மைந்தாகேளு, பாங்கான வுவர்ப்பூவுஞ் சீனக்காரம் பத்தியுடன் வகைக்கைந்து பலமும்வாங்கே. (551)

---

§ தாழியென்பது—பானை.

வாங்கிநன்றாய்ப் பொடிசெய்து வைத்துக்கொண்டு வளமான களியுப்பிற் சேர்த்துக்கிண்டி, தீங்கில்லா ரவிமுகத்தில் மூன்றுநாள்தான் திறமாகத் தாளெடுத்து வைத்துமைந்தா, தாங்காமல் வீரமுடன் பூரம்ரெண்டுந் தப்பாமல் வகைக்கிரு பலமும் வாங்கி, ஆங்கதிகொண் டேடிடித்துப் பாகிற்சேர்த்து அப்பனே கிண்டிரவி முகத்தில்வையே. (552)

ஞானியண்டம்.

வைத்தபின்பு மறுநாள்தா னேயாகேளு மகத்தான சவர்க்காரங் காரமேற, ஏய்த்துவிட்டுத் திரியாதே ஞானியண்ட மின்புமுட னறுபதுதான் வாங்கிநீயு மைத்துவிட்டு விருகருவுமொன்றிற்சேரு மார்க்கமுடன் றுரிசைந்து பலமும்வாங்கி, நைத்துவிட்டுப் பொடியாக்கிக் கருவிற்சேர்த்து நன்றாக மத்தித்து வுப்பிலூற்றே (553)

சுண்ணப்பெருமை.

ஊற்றிநன்றாய் மத்தித்துக் கிண்டுகிண்டு வரிசையுடன் ரவியில்வைத்து நன்றாய்க்கிண்டு, பார்த்திபனே தினந்தோறும் ரவியில்வைத்து பாலகனே நீர்வற்ற மட்டுங்கிண்டி, கார்ந்திருந்து கிண்டினதா லுப்புக்காரங் கடுங்கார மேரியல்லோ சுண்ணம்வீசும், பூத்தமலர் வாசனைபோற் சுண்ணமாகும் பூரணமாய்ச் சுண்ணமெல்லாம் வெளுத்துப்போமே. (554)

வெளுத்தமலர்ச் சுண்ணமதை யென்னசொல்வேன் வேதாந்த மனோன்மணித்தாய் விளம்பும்வார்த்தை, அழுத்தமுள்ள சுண்ணமடா § வம்பரத்தின்சுண்ண மருள்பெருகும் பூரணத்தி னதிகசுண்ணம், வழுத்துதற் கரிதான வழலைசுண்ண மங்களமா யெங்குநிறைந் திருக்குஞ்சுண்ணம், பழுத்தகைலாயகிரி யானமேரு பருவதம்போ லெங்குநிறை சுண்ணமாமே. (555)

சுண்ணமதின் பெருமைதனைச் சொல்லக்கேளு சூட்சமாய்ச் சற்குருவைத் தொழுதுபோற்றி, வண்ணமென்ற சுண்ணமதுவாடுங்கூத்து வரிசையுடன் சொல்லுகிறே மகிழ்ந்துகேளு, எண்ணவொண்ணு தறுபத்து நான்குபேரு மின்பமுடன் வழலைதனைக் கண்டதாலே, நண்ணியமா யவர்தேகங் கட்டிப்போச்சு நன்கு பெருஞ் சொற்கபத மேவலாச்சே. (556)

§ அம்பரமென்பது—ஆகாயம்.

ஆச்சப்பா சொர்க்கபத மென்னவென்று வருள்பெருகுந் தேவ ரிஷி முனிவரோடு, பேச்சப்பா பேசாத மௌனத்தேகிப் பெருமை யுட னிருந்தார்க ளனேகங்கோடி, நீச்சப்பா பிரளயம்வந் துற்றபோது நீணிலத்திற் கெதியில்லை யென்று சொல்லி, மூச்சப்பா முடித்த விடத் தெய்தினார்கள் முடிந்தவிடத் தெய்திசொற்கங் கண்டிலாரே. ()

சொற்கபதங் கண்டவர்கள் கோடிக்கொன்று துருவமுள்ள மேருவதை யவனேகாண்பான், வற்கமுள்ள சிவயோகி வற்கமா கும் வகையுடனே யட்டமா சித்துமாடும், நற்கமல மாதுபரி பூரணமாய்நிற்பாள் நன்மையுட னுயிராத்தி னுப்புச்சுண்ணந், தற் கபத மில்லாத வழலைச்சுண்ணந் தற்பரத்தி னருள்பெருகுஞ் சுண் ணந்தானே. (558)

சாரக்கட்டு.

சுண்ணமது வாடுகிற தொழிலைக்கேளு துணையான மனோன் மணிதன் றவத்தினாலே, எண்ணமுள்ள சுண்ணமது கழஞ்சுபத்து வெடுத்துநீ கல்வத்தி லிட்டுக்கொண்டு, வண்ணமுள்ள § கருவாலே யாட்டிமைந்தா வரிசையுடன் சாரத்துக் கங்கிபூட்டி, நண்ணய மாய்ச் சட்டிதனில் மண்மீதில்வைத்து நன்றாக மேல்மண்ணைப் பரத்திவையே. (559)

வையப்பா சட்டிதனை யடுப்பில்வைத்து வரிசையுடன் தீயெரிக்க யனலுமீறி, பொய்யப்பா போகாமல் சாரந்தானும் புனிதமுடன் கட்டிநன்று யிறுகிநிற்கும், நையப்பா கல்வமதிற் கவசத்தோடே நன்றாகத் தானரைப்பா யமுர்தம்விட்டு, மெய் யப்பா சொல்லுகிறேன் கெந்திபலம்வாங்கி மேன்மையுடன் கவச மது வலுவாய்ச்செய்யே. (560)

வலுவாகச் செய்ததொரு கவசந்தன்னை மாக்கமுடன் முன் போல்மண் மரபில்வைத்து, நலுகாமல் தீயெரிப்பாய் மைந்தாநீயும் நன்மைபெறத் தீயாறி யெடுத்துப்பாரு, ஒழுகாமல் கெந்தியது நீரய்நின்று வுண்மையுடன் கவசத்தோ டொத்துப்போகும், அழுகாமற் கவசமது கல்வத்திட்டு அப்பனே வாய்நீரா லரைத் திடாயே. (561)

---

§ கருவேன்பது—வேண்கரு.

நாகக்கட்டு.

அரைத்ததொரு கவசமதை நன்றாயாட்டி, அப்பனே மெழுகுபோ லாட்டிமைந்தா, புரைத்ததொரு நாகத்துக் கையா வையா புண்ணியனே யதற்கு § ரெட்டி கவசம்பண்ணி, விரைத் துமிகக் காயநன்றாய் ரவியிற்போடு விறடங்க நன்றாகக் காய்ந்த பின்பு, நிரைத்துடனே மண்சீலை வலுவாய்ச்செய்து நீர்வற்ற நன்றாகக் காயப்போடே. (562)

காய்ந்ததொரு கவசத்தை யெடுத்துமைந்தா கணபதிக்கும் வடுகனுக்கும் பூசைசெய்து, பாய்ந்தோடிப் போகாமற் கெஜபுடத் திற் பத்தியுடன் வைத்துநன்றாய்ப் பூசைபண்ணி, சாய்ந்துமனங் கோணாமல் நிலையில்நின்று தன்மையுடன் றானுருகி யாடுநாகம், மாய்ந்துநின் றுடுகிற நாகந்தன்னை மக்களே புடமாறி யெடுத் துப்பாரே. (563)

பாரப்பா புடமாறி யெடுத்துநல்ல பக்குவமாய்க் கவச மதை யுடைத்துப்பாரு, வீரப்பா தானடங்கி நாகந்தானும் விபர முடன் கட்டியது மணியாய்நிற்கும் ஆரப்பா வறிவார்கள் நாத மணிதன்னை யாயிரமாஞ் சிரசுடைய வாதிசேடன், நேரப்பா நின்றல்லோ பூமிதாங்கி நின்றதினாற் பூலோக மானவாரே. (564)

லோகமென்று லோகமல்ல நாகலோகம் நுண்ணிமையாய்ப் பெருந்தீவாய் நின்றதப்பா, ஆகமென்ற கருவறிந்தோ னவனே வாதி யம்பரத்தின் குறிப்பறிந்தோ னவனேஞானி, பாகமென்ற ருசியறிந்தோ னவனேயோகி பலகலையுந் தெரிந்துகற்ற மவனே சித்தன், தேகமென்ற நாகமதை யடக்குமந்த சிவஞான கவச மதைப் பதனம்பண்ணே. (565)

பதனமப்பா கவசமதைப் பதனம்பண்ணிப் பாலகனே கவசமதிற் சாரஞ்சேர்த்து விதனமப்பா தானகலக் கல்வத்தாட்டி மேலான நாகத்துக்குக் கங்கிபூட்டி, அதனமப்பா வெண்ணி ரெண்டு புடத்திற்போடு அப்பனே யன்னுகங் கட்டிப்போகும், மதனமுட னிப்படியே நூறுதொந்தங்கட்டு மகத்தான கவச மதை வைத்துப்போற்றே. (566)

§ ரெட்டிகவசமென்பது—இரண்டுமேண்சீலை.

நாற்றெருகை.

போற்றுவது வாயிரத்தைப் போற்றவேண்டும் பூரணமா மைந்நூறு பலதிரட்டு, மார்க்கமெத்த வுள்ளவிரு நூறுயோக மகத்தான விஞ்ஞேதவகை நூறுஞ்சொன்னேன், பார்த்திபனே யெண்பதிலே வைத்தியஞ்சொன்னேன் பரிபாஷை யறிவதற்குப் பதினெட்டும்பார், தோற்றமுடன் சோசியத்தைப் பத்திற் சொன்னேன் சுருக்கமுள்ள வைம்பதுவும் பாருபாரே. (567)

பார்க்கவென்றால் ராமனுட வாக்கியந்தேடி பாடுபட்டுக் கோர்வைநூல் நன்றாய்ப்பாரு, சேர்க்கையுடன் பத்துமுத லாயிரத் தோடையா செம்மையுட னொருகோர்வை யாகச்சேர்த்து, மார்க் கமுடன் பார்ப்பவருக் கெல்லாஞ்சித்தி மாநிலத்தி லவர்கள்சிவ யோகியாகும், தீர்க்கமுள்ள § சிவயோகி யாகிப்பின்னுஞ் சிவசிவா மதியமுர்த தேகமாமே. (568)

ஆமப்பா கட்டினதோர் நாகந்தன்னை அன்பாக யிடைக் கிடைதான் பரியைக்கூட்டி, தாமப்பா சொல்லுகிறே மிரண்டு மொன்றாய்த் தடையறவே யொன்றாகி மணியாய்நிற்கும், வாமப் பால் மதியமுர்தம் பூசைபண்ணி மார்க்கமுடன் குகைதனிலே யுருக்கிப்பாரு, நாமப்பா கண்டபடி வெள்ளிபோலே நன்றாகக் கட்டுமடா களங்கமாச்சே. (569)

களங்கமென்ற நாகமணி யெடுத்துக்கொண்டு கணக்காக வெள்ளிசெம்பை நன்றாய்ச்சேர்த்து, உளங்கனியப் பத்துக்கு வொன்றுதாக்கு வுத்தமனே யுருக்கிப்பார் மாற்றெட்டாகத், துல ங்குமடா வதையெடுத்துத் தகடுதட்டித் துப்புறவாய்ப் புடம்போ டத் தங்கமாகும், நலங்கமழும் நாதாந்த சோதிபாதம் நாதாந்தம் பெற்றவற்கே நண்ணும்பாரே. (570)

நாகச் செந்தூரம்.

பாரப்பா வெள்ளியிலே பத்துக்கொன்று பாய்ச்சினால் பத் தரைக்கு மேலேகாணும், ஆரப்பா வறிவார்கள் நாகக்கட்டு அப் பனே யாதியந்த மறிந்தோன்செய்வான், நேரப்பா பரிசேர்ந்த தங் கந்தன்னை நீமகனே கல்வத்திற் பொடித்துக்கொண்டு, சேரப்பா அய்மொன்று ரசமுமொன்று செம்மையுள்ள லிங்கமொன்று கெந்தியொன்றே (571)

§ சிவயோகியென்பது—கற்பசாதனை யுள்ளவர்.

ஒன்ருகத் தான்பொடித்துக் § குமரிச்சாற்ருல் உத்தமனே யீராறு சாமமாட்டி, நன்றப்பா வயற்சட்டி தன்னில்வைத்து நழு காமல் மேற்சட்டி கொண்டுமூடி, குன்ருமல் மண்சீலே வழுவாய்ச் செய்து குறிப்பாகப் பக்குவமாய்ப் புடத்தைப்போடு, அண்டாஞர் பதம்போற்றி யெடுத்துப்பாரு அப்பனே சிவந்துசெந் தூரமாமே. ()

ஆமப்பா செந்தூரம் பதனம்பண்ணி அப்பனே பணவிடை தான் பாலிலுண்ணு, நாமப்பா சொல்லுகிருேம் மண்டலமே கொண்டால் நாதாந்தத் தேகமதிற் சட்டைபோகும், தாமப்பா விருகண்ணுந் துலக்கமாகுந் தவருமல் வாசியது நிலேயில்நிற்குஞ், சாமப்பா நரைதிரையுந் தானேபோகுஞ் சகலகலேக்யானமெல்லாந் தங்குந்தானே. (573)

தானென்ற செந்தூரந் தன்னேவாங்கித் தன்மையுடன் வெள்ளியத் தகடுதட்டி, வீனென்ற தகடுபலம் பத்துக்கேதான் மேலான செந்தூரங் கழஞ்சுபத்து, தேனென்ற வழுர்தமதாற் குழப்பிக்கொண்டு செம்மையுடன் வெள்ளியத் தகட்டிற்பூசி, நானென்ற வாணுவத்தை நீக்கிமைந்தா நலமாக வோட்டில் வைத்துப் புடத்தைப் போடே. (574)

போடப்பா கெஜபுடமாய்ப் போட்டுமைந்தா பூரணமா யாறினபின் னெடுத்துப்பாரு, நாடப்பா வெள்ளிய முருகிக்கட்டி நன்மையுடன் ருனிருக்கும் பொன்போல்மைந்தா, கூடப்பா தான் பிலக்கத் தகடுதட்டிக் குருபரனேத் தாஞேக்கிப் புடத்திற்போடு, ஆடப்பா வொருபுடத்தி லிறங்கித்தங்கம் அப்பனே பதிஞ றுக் கதிகமாச்சே. (575)

ஆச்சப்பா காரீயத் தகட்டில்முன்போ லப்பனே செந்தூர மணிந்துகொண்டு, மூச்சப்பா போகாம லோட்டில்வைத்து முத்தி பெறச் சற்குருவைத் தொழுதுபோற்றி, பாச்சப்பா கெசபுடத் தில் வைத்துமைந்தா பதமாகப் புடமாறி யெடுத்துப்பாரு, பேச்சப்பா காரீய முருகிக்கட்டிப் பெலமான தங்கமதா யிருக்குங்காரே.

§ குமரியென்பது—கற்ருழை.

காரப்பா காரீயத் தங்கந்தன்னைக் கருணைபெறத் தகடடித்துப் புடத்தைப்போடு, வீரப்பா தானொடுங்கி யிறங்குந்தங்கம் மேலான தங்கமதை யென்னசொல்வேன், ஆரப்பா வறிவார்கள் தங்கமாற்று அருமையுள்ள மாற்றதுதா னைம்பத்தொன்று, பேரப்பா பெற்றதொரு தங்கந்தன்னைப் பெருமையுடன் றனெடுத்து வைத்துக்கொள்ளே. (577)

திருவுருத் தைலம்.

கொள்ளுதற்கு வின்னமொரு கருவைக்கேளு குருவானதிருவுருவாம் வாமப்பூடு, நள்ளுறவாய் நிறைந்தாண்டு கொண்டபூடு நலமான பூடுதனை யெடுத்துவந்து, தெள்ளிமையாய்க் கசடுதனை நீக்கிமைந்தா சிறுகதனைக் கண்டமதாய்ப் பொடித்துக்கொண்டு உள்ளுறவாய் ரவிதனிலே காயப்போட்டு உண்மையுடன் தானெடுத்துப் பதனம்பண்ணே. (578)

பண்ணியதோர் கருவுக்கு நிகராய்நீயும் பாய்ச்சடா சருகுடனே வண்டஞ்சேர்த்து, உண்ணியதோர் சூடனது நாலுக்கொன்று உத்தமனே யொன்றாக்கிப் பாண்டத்திட்டு, தண்ணிமையாய்க் குழித்தைல மிறக்கிமைந்தா சாதகமாய்க் குப்பிதனி லடைத்துக்கொண்டு, விண்ணிறைந்த பதிநோக்கித் தியானஞ்செய்து மேலான குருபதத்தை மேவிப்பூணே. (579)

சிப்பி பற்பம்.

பூணுவதற் கின்னமொரு கருவைக்கேளு புகழான வருள்பெருகுஞ் சிப்பிவாங்கி, தோணுவதற் கிதற்குநிகர் § தாரஞ்சேர்த்து சுத்தமுள்ள சருகதாவும் பாதிகூட்டி, பாணியெனுந் தண்ணீரா லரைத்துமைந்தா பருவமுடன் றனுருட்டி வட்டுப்பண்ணி, பேணியே ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு பெருமையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்யே. (580)

செய்ததொரு கவசமதை நிதானங்கண்டு திருவருளை நோக்கியொரு புடத்தைப்போடு, உய்தமுடன் புடமாறி யெடுத்துப்பாரு வுத்தமனே நீறியது நீறாய்நிற்கும், தொய்தமுள்ள பற்பமதைப் பதனம்பண்ணித் துணையான சற்குருவைத் தொழுதுபோற்றி, சைதன்யமானதொரு தைலந்தன்னில் தருவானபற்பமது பணவிடை தான்கொள்ளே. (581)

§ தாரமென்பது—அரிதாரம்.

கொள்ளுதற்கு விதமென்ன வென்றுகேட்டால் கொடிதான வெண்ணெயொடு புளியுந்தள்ளி, துள்ளுகிற மீனிறைச்சி நாலுந்தள்ளி சொற்கபத மேவுதற்கு வழியைக்கேளு, கள்ளமனக் கசடகற்றிக் கருணைநோக்கி கனியான சிவமதனைப் பூசைபண்ணு, உள்ளுறவா யக்கிசந்தி பூசைசெய்தா லுற்றதொரு தேகமதி லக்கிபோமே. (582)

சத்திசிவ பூசை.

அக்கியது தேகமது கழண்டுதானு லாயிதிரோ மாய்கையது வகன்றுபோகும், சிக்குமடா சிவவித்து தன்னுலந்த திருவான சத்தியைநீ பூசித்தாக்கால், தக்குமடா காயாதி கற்பங்கொண்டால் சதாசிவன்போல் தேகவச்சிர காயமகும், கைக்குள்வெகு சித்துவிளையாடலாகுங் கருணைபெறச் சத்திசிவ பூசைபண்ணே. (583)

சத்திசிவ பூசையைத்தான் செய்யவேண்டித் தாரணியில் மானிடர்கள் மாயைகேளு, உற்றதொரு சிவமதுதான் தண்ணீர் தண்ணீ ருரிமையுட னன்னீர்கொண் டறிந்தோர்தாமும், அத்தியுட தேகமதில் வாய்வுமீறு மதையகற்ற மாட்டாம லையோவையோ புத்தியுட னன்னீரைத் தள்ளிப்போட்டுப் போக்கறியா மடையர்கள்தான் போற்றுவாரே. (584)

வாறான சத்திதனை யறியாமற்றான் மாதர்கள்தன் மாதவிடை சத்தியென்று, வீரான மானிடர்கள் பெண்ணைக்கூடி மெய்யாக மாதாக்தங் கொள்வாரப்பா, கூறான மாதவிடை கொண்டபேர்கள் கொடிதான தேகமதி லனலோமீறி, தீராத விருமலொடு யிளைகாசஞ் சிக்கியே தேகமது § மழிந்துபோமே. (585)

அழியாது வுண்டாரச முண்டோர்தேக மனலுக்கு நீருக்கு மசையாதப்பா, வழியான மூலமடா புளியுமாகும் மகத்தான வமுரியடா வுப்புமாகுந், தெளிவான புளியுடனே யுப்புங்கொண்டாற் றேகவச்சிர காயமடா சிவன்தான்சாட்சி, பழியாம லிப்பொருளைக் கண்டுகொண்டாற் பத்தியுள்ள கற்பமதற் குறுதியாமே, (586)

---

§ அழிந்துபோமேஎன்பது—மாண்டு போதல்,

உருதியுள்ள புளியுப்பு சத்திசிவமாச்சு வோகோகோ விவ்விரண்டுமுட னுயிருமாச்சு, பருதிமதி யிவைதானே மைந்தா மைந்தா பதிவான சுடரதுதா னெங்கேயென்றால், கருதுகிறேன் குருவருளாற் கேளுகேளு கருவான கொடிமுடிதா னிர்தானுச்சு, திருவான.§ கொடிமுடியா யண்டந்தன்னிற் சிறந்திருந்த சுடரது தான் பூரணமுமாமே. (587)

பரிதிமதி சுடர்கற்பம்.

பூரணந்தா னுவதுவும் பிரத்தியாகாரம் யுத்தியுட னுண்டொன் றி லமைப்போனால், காரணமாக் குருவெடுத்து வைத்துக்கொண்டு கமலமென்ற பிங்கானில் சுன்னையைக்கொட்டி, மாரணமாய்ச் செய்வதற்குச் சரியாய்ப்பூர மாட்டிநன்றாய்ப் பிசைந்துரவி முகத்தில் வைப்பாய், தாரணையாய்த் தினந்தோறும் ரவியில் வைத்தாற் றன்மையுள்ள ரவியதனால் நஞ்சுபோச்சே. (588)

போச்சடா நஞ்சுநீ ரவிதன்னாலே புத்தியுட னதற்கினி பூரங் கூட்டி, பாச்சடா நாலிலொன்று சாமந்தானும் பதிவாகக் கல்வத்தில் நன்றாயாட்டி, காச்சடா ரவிமுகத்தில் வைத்துப்பாரு கருவான சுடரதுதான் மெழுகாய்ப்போகும், பேச்சடா பேசுதற்கு நாவு முண்டோ போரான பரிதிமதி சுடரைப்பாரே. (589)

பாரப்பா தன்னகத்தி லிரண்டுதன்னைப் பரிவான வெளிதனிலே யொன்றைப்பாரு, ஆரப்பா வறிவார்கள் ?வீட்டில்ரெண்டு வமைத்தகரு வெளியிலொன்று வழுத்திப்பார்க்க, வீரப்பா செய்யாது வீட்டில்ரெண்டு வெளியிலொன்று கூட்டிடவே குருவாய்ப் போகும், பேரப்பா முப்பொருளு மிதுவேயாகும் பெலமான புத்திகொண்டு வறிவில் நில்லே. (590)

அறிவான சரியைவழி சிவத்தின்கூறு அடங்காத சத்தியடா கிரியையாச்ச, குறியான யோகவழி யென்னவென்றால் குணமான சத்திசிவ பூசைமார்க்கம், நெறியான ஞானவழி யென்னவென்றால் நேரான கமலமலர் பூரணமேயாகும், துரியமுடன் பூரணமா மௌனந்தன்னைத் தொண்டுசெய்து கொண்டவனே சுகிர்தவானே. (591)

§ கோடிமுடியென்பது—கைலாயம்.

விந்தின் மகிமை.

வானான வாகாச வமுர்தந்தன்னில் வழிதுறையா யனுவ ளவு கொண்டாயானால், விஞான தேகமது வனுத்துப்போச்சு மெய்யான வவமிர்த்து விலகிப்போச்சு, கோனான வாசியது நிலை த்துதையா குண்டலியி னந்தியொளி கூர்மையாலே, தேனான வமுர்தமடா தேகமாச்சு தேவாதி தேவனெனப் பேருமாச்சே. ()

ஆச்சப்பா வின்னமொரு முறைமைகேளு வசைந்தாடு மண்டமடா பீசம்பீசம், நீச்சப்பா பீசமென்ற சக்கரமாம்வித்து நிசமான வித்துவாம் விதைதான் மைந்தா, மூச்சப்பா நின்றில ங்கு முனையாம்விந்து மூதண்டமானதொரு வித்துதன்னை, பேச்ச ப்பா வென்னசொல்வேன் வித்தின் நேர்மை பெருமையுட னெடு க்கும்வகை சொல்லுவேனே. (593)

சொல்லுவேன் கருவமைப்பு வெள்ளைதன்னில் சொக்கியந்த விதைகள்ரெண்டு மேலேயேறி, நல்லுறவாய் மணிவீட்டிற் சென் றுநிற்கும் நாடியந்த விதையெடுத்து மைந்தாகேளு, தெள்ளி மையா யிடதுவலங் கண்டெடுத்துத் திறமாக மஞ்சளுடனுப்புங் கூட்டி, கல்லான கல்வமதி லாட்டிமைந்தா கருவான விதைக ளுக்குக் கவசம்பண்ணே. (594)

வித்துக்குக் கவசம்.

பண்ணியந்தக் கவசமதை யுலரப்போட்டு பாலகனே தண் ணீரில் வித்துகொண்டு, உண்ணியதோ ரிந்தவிதம் பத்துமுறை செய்தா லுரிமையுள்ள விதையதுவுங் கட்டிப்போகுந், தண்ணி மையாய்க் கவசமதை யெடுத்துப்போட்டுத் தாக்கிநின்ற ரவித னிலே காயப்போடு, புண்ணியனே நன்றாகக் காய்ந்ததானால் புதுக் § கலசப் பாலிலதை யூறப்போடே. (595)

போட்டவிதை யூறிநன்றாய்ச் சுண்டிற்றானால் புத்தியுட னதையெடுத்து வைத்துக்கொண்டு, தாட்டிமையாய்க் கமலநெய்யில் வறுத்துமைந்தா தனதாக வலதுவிதை பொடித்துகொண்டு, பூட் டியந்த நல்லெண்ணெ யிடதுவிதைதன்னைப் பொருந்ததனை வறு த்துமிகப் பொடித்துநன்றாய், நாட்டியந்தப் பொடியதனை வை த்துக்கொண்டு நன்றாக விரும்பொடியுஞ் சிமிழில்வையே. (596)

§ கலசப்பால்யென்பது—மாதர்பால்.

வைத்தடுதாரு வலதுவிதைப் பொடியதன்னை மைந்தனே பணவிடைதான் தேனிற்கொள்ளு, உய்த்தடுதாரு மண்டலமே கொண்டுதேறி, உறுதியுடன் பூரணத்தி லுகந்துநில்லு, பெற்றதோ ரிடதுவிதைப் பொடியதன்னைப் பேணியே மண்டலமே முன் போற்கொள்ளு, பத்தியுடன் மண்டலமே கொண்டுதேறிற் பால கனு முன்னுடைய தேகந்தானே. (597)

முன் விதைகொள்ள அனுப்பானம்.

உன்னுடைய தேகமதைக் கண்டால்மைந்தா ஒருவேளைக் கோர்நிறமா யுற்றுதி தோன்றும், பின்னழகு முன்னழகு மென்ன சொல்வேன் போரான தேகமது வலுத்துப்போச்சு, நன்னயமாய் விதையருந்தப் பிறவிபோச்சு நாதாந்த வாசியது வுரைத்துதையா, தன்னிமையாய் வெகுகோடி யூழிகாலம் தளராது தேகவச்சிர காயமாமே. (598)

ஆமப்பா விருபொடியு மொன்றாய்க்கூட்டி அருளான குருப ரனைத் தியானஞ்செய்து, தாமப்பா தன்னிலையில் மனதைநாட்டிச் சாதகமாய்ப் பொடியதனை முலைப்பால்தன்னில், ஓமப்பா பணவி டைகால் கொண்டுதேறி வுருதியுடன் மண்டலமே கொண்டுதீர்ந் தால், நாமப்பா சொல்லுகிறோ மிறுகுந் தேகம் நாடிநரம் பத் தனையும் வலுத்துப்போச்சே. (599)

போச்சென்று விடுகாதே தினமுங்கொண்டு புத்தியுடன் சத்திசிவ பூசைசெய்தால், நீச்சென்ற நரைதிரையு மகன்றுபோச்சு நிலையாத வாசியது நிலைத்துப்போச்சு, பேச்சென்ற பூரணமும் பெரு கலாச்சு போரான மண்டலமுந் தோணலாச்சு, ஆச்சென்ற வடிப் படையும் வலுத்துப்போச்சு வசையாத தேகமென்ற பேருமாச்சே.

போராச்சு § தூரதிஷ்டி நடத்தையெல்லாம் பெருமையுடன் சொல்லுதற்குப் பூரணமேசொல்லும், வேராச்சு வித்தினுட மகி மைதன்னால் விளையாட வெகுகால மிருக்கலாகும், நீராச்சு பிறவி யெல்லா மற்றுப்போச்சு நேரான பூரணமுஞ் சொலிக்கலாச்சு, ஆராச்சு வஷ்டசித்து மடங்கிப்போச்சு அரகரா யின்னமொரு கருவைக்கேளே. (601)

§ தூரதிஷ்டியென்பது—ஞானதிஷ்டி.

வெள்ளாட்டுவிரல் கற்பம்.

கருவான வெள்ளாட்டு விரல்வாங்கிக் கடுகுமஞ்ச ளுப்பு நன்று யரைத்துப்பூசி, உருவான தண்ணீரால் வித்தெடுத்து உண் மையுடன் பொடியாக்கி யுலர்த்திமைந்தா, தருவாக வுலர்த்தினதை யெடுத்துக்கொண்டு சாதகமாய் நெய்தனிலே வறுத்துநீயும், குரு வான பதிநோக்கி யுதையகால்தான் கொண்டுவிடு பொடியென்று குணமாய்த்தானே. (602)

குணமான விப்பொடியை மண்டலமேகொண்டால் குழை ந்துநின்ற நரம்புகள்தா னிருகிநிற்கும், கனமான தேகமடா வச்சிர காயங் காயமதிற் காயாதி கற்பஞ்சென்றால், இனமான தத்துவங்க ளொடுங்கிமைந்தா விருக்கலா மெந்தநா ளாகிலுந்தான், மனமான கெவுனமென்ற கெவுனந்தங்கு மாதாந்தச் சேர்வையுடன் வண் மைகேளே. (603)

கேளடா தன்னுடைய தாரந்தன்னில் கெணிதமுடன் மாதாந்த வரிசைவாங்கு, வாளடா வர்ல்மிளகு பூரம்ரெண்டும் வண் மையுடன் காசிடைதான் பொடித்துப்போடு, நீளடா கலக்கிநன்றாய் வைத்துச்சற்றே நேரமதிற் றன்பொசித்தால் மைந்தாகேளு, வே ளடா வெறித்தநெற்றிக் கண்ணுதானு மெய்யாகச் சிவந்துரவி போலாம்பாரே. (604)

பார்க்கரெண்டு கண்களுமே சிவந்துநல்ல பரிதிமதி சுடரொ ளியை யென்னசொல்வேன், தீர்க்கமுட னின்னமொரு விபரங் கேளு திருவான மாதாந்தத் திறத்தைமைந்தா, மார்க்கமுடன் பீங்கானில் வாங்கிக்கொண்டு மகத்தான தண்ணீருங் கூடச்சேர்த்து, தாக்கிநன்றாய் விரலைவிட்டுக் குழப்பிமைந்தா தாகமது தீரநீ பொ சித்திடாயே, (605)

பொசித்திடவே கண்சிவப்பு வாங்கிப்போகும் பொன்னொ ளிபோற் கண்களிரண்டுந் தெளிவாமைந்தா, கசித்ததொரு கண் ணெரிவு மோடிப்போகுங் கபாலவிடி பீனிசமுங் காணுதோடும், நசித்தமன வுறுதியினு லறிவுதங்கும் நாதாந்த தேகமதிற் காந்தி மீறும், விசித்திரியின்மே § லாக்கினையி லமுர்தஞ்சிந்தும் மேன்மை யுள்ளதேகமது விசிதமாமே. (606)

§ ஆக்கினையென்பது—லலாடஸ்தானம்,

ஆமப்பா வின்னமொரு விபரஞ்சொல்வே னரகரா வவை யடக்க மாகநில்லு, தாமப்பா தன்னருளால் நாதாந்தத்தில் தரு வான முப்பூவில் காசிடைதான்போட்டு, ஓமப்பா வென்றுமே சொல்லிச் சுழற்றிமைந்தா வுரிமையுடன் மனதுறுதி யாகக்கொண் டால், காமப்பா கருணையினு லனலேமீறி கைலாய போதைவெகு போதையாமே. (607)

போதையிலே மனதுருகி யறிவில்நின்றுற் பூரணமாய்ச் சகலகலைக் கியானந்தோற்றும், பாதையிலே வாசியது நடக்கும் போதில் பக்குவமாய்த் தீபமதிற் புக்கும்பாரு, பேதையிலே பெரும்பைதள்ளி மங்கைமேலே பெருமைவிட்டு வுரிமையிலே பேணிநில்லு வாதையென்ற வருத்தமெல்லா மகன்றுபோகு மார்க்கமுட னின்னமொரு வகையைக்கேளே. (608)

வகையான மாதாந்த வருவி தன்னில் மார்க்கமுடன் பூர ணத்தில் மைந்தாமைந்தா, துகையாகப் பணவிடைதா னதனிற் சேர்த்துத் துருவமுடன் றன்கலக்கிக் கொண்டாலையா, தகையான தகையொடுங்கு மனலோமீறி சதா § போதை மார்க்கமதை யென்ன சொல்வேன், பகையான சத்துருக்க ளொன்றுமில்லை பார்த்திபனே நீயுமொரு முனியாவாயே. (609)

முனியாகி மூதண்டச் சித்துமாகி மூவுலகில் நீயுமொரு தேவனாகி, பிணியான தில்லறமும் பிலத்துப்போகும் பேரண்டச் சத்திபெறக் கெவுனமாகும், கனியாலே கருநெல்லிக் கருணையாலே கருவான மாதாந்தக் கருணையாகு, மணியான மனோன்மணியாஞ் சத்திபூசை வகையறியான் கொண்டதினால் மாளுவானே. (610)

மாளுவான் தேகமதிற் செந்தீப்பட்டு மைந்தனே நீறியவன் மாண்டுபோவான், ஆளுவான் சத்திசிவ பூசையாலே யானந்தமான ந்த மடங்குமையா, வாழுவான் வாசியது வருளைநோக்கு மகத்தான தீபவொளி மயங்காதையா, தாழ்வதில்லை யிரண்டுமொன்று யதனில் நின்று சதாசிவன்போல் நீயிருந்து தன்னைப்பாரே. (611)

---

§ போதையென்பது—மயக்கம்.

பாரப்பா விடிந்தமனை தன்னில்மைந்தா பக்குவமா யதற்கு மொரு முட்டுக்கால்தான், நேரப்பா கொடுத்துவிட்டா லையயா தில்லம் நேர்மையுள்ள பூரணமே தேகமாகும், ஆரப்பா வறிவார்கள் வழிதுறையின்மார்க்கம் அரகரா வாயிரத்தைப் பதனம்பண்ணு, பேரப்பா பெற்றதொரு வாயிரத்தைநீயும் பேருலகி லறிவுடையோர்க் கறிந்துபேசே. (612)

பேச்சறிந்து பேசுவதே யுண்மையாகும் பேருலகில் மானிட்ரோ சாத்திரங்கள்பார்த்து வாய்ச்சமர்த்தாய்ப் பேசிடுவா னறிவான்போல மனநிலைக்க மாட்டாத மாடுமாடு, கூச்சமற்றுக் குறியோடே பேசமாட்டான் கூறுவான் முன்பின்னாய்க் குலைநாய்போலே, மாச்சல்கொண் டலைவானை யடுக்கவேண்டா மகத்தான காயாதி கற்பந்தின்னே (613)

செந்தூரக் கற்பம்.

கற்பமதற் கின்னமொரு முறையைக்கேளு கைலாய புலத்தியர்தங் கருணையாலே, சிற்பமென்ற செந்துவடா மைந்தாகேளு செனித்தவுடன் மறித்ததனைத் தேடிப்பார்த்து, உற்பனமாய்க் கொண்டுவந்து கோரைபோக்கி யொடுக்கமுடன் ருனரிந்து யுலரப்போட்டு, விற்பனமா யுப்புடனே மஞ்சள்கூட்டி விபரமுடன் ருனரைத்துப் பிசறிப்போடே. (614)

போடப்பா பிசறிநன்றாய்க் காயப்போட்டு புண்ணியனே தானிடித்து மாவதாக்கி, நாடப்பா பாண்டமதிற் காடிவிட்டு நன்றாகத் தான்பிசைந்து யிறுத்துப்போடு, தேடப்பா யிப்படியே பத்துமுறைசெய்து சிவசிவா ரவிதனிலே யுலர்த்திமைந்தா, § வீடப்பா பிலப்பதற்கு நன்றாய்க்கூட்டி விபரமுடன் வடிகட்டிப் பதனம்பண்ணே. (615)

பண்ணினதோர் சூரணத்துக் கரைதானுப்பு பண்பானமிளகுடனே சீரகமுங்கூட்டி, தண்ணிமையாய்ப் பொடிபண்ணிச் சூரணத்திற்சேர்த்து தயவாக ரேகித்து வொன்றாய்க்கூட்டி, புண்ணியனே பீங்கான்றன் மேலேவைத்து புத்தியுடன் சற்குருவைத் தியானம்பண்ணி, வண்ணியென்ற கடுக்காய்ச்சூ ரணத்தில்மைந்தா மார்க்கமுடன் காசிடைதா னிநபோதுண்ணே. (616)

§ வீடேயென்பது—திரேகம்.

உண்மையிலே மலசலங்கள் கழிந்துபோகு முறுதியுள்ள தேகமதா யிருக்குமப்பா, விண்ணிறைந்த காட்சியடா கடுக்காய்மூல மேலானமூலமதை விரும்பிக்கொண்டால், புண்ணியமாம் தேக மதற் கழிவோயில்லை புத்தியுள்ள கற்பமது பிரமகற்பந், தண் ணிமையாய்ப் பெருமீனுக் கிறைதான்குஞ்சு தானறிந்து வுலகமது தயங்கும்பாரே (617)

பாரப்பா சாஸ்திரத்தை யெடுத்துப்பார்த்து பத்தியுடன் கருக்குருவை யறிந்துகொண்டு, வீரப்பா செய்யாமல் மனமடங்கி நல்ல விருப்பமுடன் சூரணத்திற் பணவிடைதானெடுத்து, காரப்பா வுதயாதி யமுர்தமதைக்கொண்டு கருவான சூரணத்தை மனதறிவாற்கொண்டு, பேரப்பா பெற்றதொரு தேகமதற்குறுதி பலமான வுறுதியடா பேணிமிகக்கொள்ளே. (618)

கொள்ளுவதற் கின்னமொரு வுறுதிகேளு குருவான சூர ணத்திற் பணவிடைதானெடுத்து, தெள்ளிமையாய் வமுரிதன்னிற் கலக்கிக்கொண்டாற் சிவசிவா தேகமதற் குறுதியுண்டாம், நள் ளுறவாய் மண்டலம்நால் பொசித்தாயாகில் நாடிநின்ற நரைதிரையு முதிர்ந்துபோகுந், துள்ளிநின்ற விந்ததுவுங் கட்டிப்போகுஞ் சுக மாகுந் தேகமது சுத்தமாமே. (619)

சவர்க்காரம்.

சுத்தமுள்ள சவர்க்காரஞ் சொல்லக்கேளு சுகமான வாதி யந்த மண்டபிண்டம், வித்தான பிண்டமதை யெடுத்துமைந்தா விசையான கோரையைநீ யகற்றிப்போட்டு, பத்தாசை கொள் வதற்கு நொறுக்கியந்தப் பதிவாகக் கல்லுரலி லிடித்துமைந்தா, வற்றுத § காடிதன்னில் தோண்டிப்போட்டு மாக்கமுட னடுப் பேற்றி யெரித்திடாயே. (620)

எரித்துநன்றாய்க் கிண்டிவரில் மைந்தாகேளு இதமான புஷ்டியெல்லாங் கரைந்துபோகும், குரித்ததோ ரஸ்தியெல்லாம் பொறுக்கிநன்றாய்க், கூர்மையுடன் தவிடதுபோ லிடித்துக்கொண்டு தரித்ததொரு முன்மாவிற் சேர்த்துமைந்தா தன்மையுடன் மறுபடி யுங் காடிவிட்டு, திருத்தமுடன் துடுப்பதனாற் கிண்டிக்கிண்டிச் சிவந்தபதக் குழம்பான பாகிற்கேளே. (621)

§ காடியென்பது—ஆறுமாதம் புளித்தகாடி.

கேளடா வெடியுப்புச் சீனக்காரங் கிருபையுள்ள நவச்சாரஞ் சூடனுப்பு, நாளடா விந்துப்பு வைந்துமொன்றாய் நன்மை யுடன் வகைவகைக்குப் பலம்பத்தாகச் சூளடா வைந்துப்பு மொன் றாய்ச்சேர்த்துத் துருவமுடன் மாவாக்கிப் பாகிற்சேர்த்து, கோளடா வாராமல் நன்றாய்க்கிண்டி குணமான பதங்கண்டு யிறக்கிடாயே. (622)

இறக்கியந்தச் சூட்டுடனே விளாங்காய்போல இதமாக வுருட்டிவிடு விறுகிப்போகுந், திறக்குமிந்தச் சவர்க்கார வுண்டை மைந்தா சிவசிவா வென்னசொல்வேன் வழலைப்போக்கு, அரக்கு மணி மாளிகையாஞ் சவர்க்காரந்தான் ஆரறிந்து செய்வார்களையா வையா, சரக்கில்வெகு சரக்கிதுதான் சவர்க்காரந்தான் தன்மை யுட னின்னமொரு வகையைக்கேளே. (623)

கேளடா யேரியிலே வளர்ந்தபிண்டங் கெணிதமுட னைந்து திங்க ளானபின்பு, நாளடா பகிரதிக்கு வெல்லத்தோடே நடு வான ரவிபீசங் கூடச்சேர்த்து, தாளடா வவள்தனக்கு வீந்தால் மைந்தா தன்மையுடன் விதனமன்றி வருகும்பாரு, பாளடா யமுரிதனி லெடுத்துப்போட்டு பக்குவமா யடுப்பேற்றி யெரித் திடாயே. (624)

எரித்தபத மென்னவென்றா லழுத்திப்பாரு விதமான மெதுவாக விருந்ததானால், தரித்ததோ ரூரல்தனிலே யிடித்து மைந்தா தன்மையுள்ள காடிதனில் கலக்கிக்கொண்டு, குறித்த தோர் பாண்டமதை யடுப்பிலேற்றிக் குழம்பாகும் பருவமட்டுங் காய்ச்சிநன்றாய், நெறித்தபதம் வருமளவும் நன்றாய்க்காய்ச்சி நீமகனே பருவமதில் நன்றாய்க்காய்ச்சே. (625)

காய்ச்சிநன்றா யிருக்குமந்தப் பாகுதன்னில் கருவான வுப்பு வகை சொல்லக்கேளு, பாய்ச்சிடுவாய் கறியுப்பு வளையலுப்பு பாங்கான கல்லுப்புப் § படிகஞ்சூடன், மாய்ச்சலுடன் செய்யாமல் வகைக்குநீதான் மார்க்கமுட னைந்துபலம் வாங்கிக்கொண்டு, தாட்சியென்றும் வாராமற் பொடித்துமந்தத் தழலான பாகுதனிற் போட்டுக்கிண்டே. (626)

§ படிகம்யென்பது — சீனக்காரம்.

கிண்டியந்தப் பதந்தனிலே யிறக்கிக்கொண்டு கிருபையுட னுருட்டிடுவாய் விளாங்காய்போலக், கண்டிதமா யுருட்டிவிடு விறுகிப்போகுங் கருவான சவர்க்காரங் காரங்காரங், துண்டித மாய்க் கண்டிக்குஞ் சரக்கைமைந்தா துடியான சவர்க்காரம் வழு லைப்பாம்பு, எண்டிசையுங் காக்குமடா வழலைக்கார மேகாந்த மென்குருவும் பாடினாரே. (627)

பாடினா ராயிரத் திருநூறுக்குள் பண்பான சவர்க்காரம் வழலைப்போக்கு, ஆடினார் வெகுபோக்கு சவர்க்காரத்தை ஆதி யந்தப் பொருளதிலே யடங்கிப்போச்சு, நாடினார் போதகிரி தன் னிலேதா னானந்தச் சின்மயனு ரறிந்துகொண்டு, கூடினா ரட் டமா சித்துதன்னைக் குவிந்துமன தொன்றாக்கிக் குருவைக்காரே ()

தென்னங்காய்ச் சவர்க்காரம்.

கார்க்கவே யின்னமொரு காரங்கேளு கருவான § தென் னங்கா யெடுத்துவந்து, மூர்க்கமுடன் றுனுடைத்து வழுக்கை தோண்டி வரிசையுள்ள சிப்பிதனைப் பொடித்துச்சேர்த்து, தீர்க்க முள்ள வமுரிதனிற் கலக்கிமைந்தா சிவசிவா யடுப்பேற்றி யெரிப்பா யப்பா, பார்க்குமன தறிவாலே யெறிக்கும்போதில் பக்குவமாய் நீர்வற்றிக் குழம்பாம்பாரே. (629)

குழம்பான பருவமதிற் சூடன்காரந் துரிசான லிங்கமொடு வீரம்வெள்ளை, தளம்பாமற் சரக்காறு பலமேவாங்கித் தன்மை யுடன் தான்பொடித்து வைத்துக்கொண்டு, வளம்பெறவே தூவி யதை நன்றாய்க்கிண்டி மார்க்கமுட னுருட்டிவிடு விளாங்காய் போல, நலம்பெறவே சூடாறி யிறுகிப்போகும் நாதாந்தந்தச் சவர்க்கார வுண்டையாமே. (630)

துருசு சவர்க்காரம்.

ஆமப்பா யிக்கார மதிககார மாரறிவா ரிந்தமுறை யொரு வர்காணார், தாமப்பா தன்னருளா லறிந்துகொண்டு தயவாக வின்னமொரு காரங்கேளு, நாமப்பா சொல்லுகிறேன் துருசு சவர்க்காரம் நன்றாகப் பன்றியுட கொழுப்பைவாங்கி, ஓமப்பா மனதறிவா லயக்கிண்ணத்தி லொடுக்கியடுப் பேற்றியன லெரித் திடாயே. (631)

§ தென்னங்காய்யென்பது—தேங்காய்,

எரித்திடவே செய்யதுவு முருகிநிற்கு மின்பமுட னெய்யி லிட் மருந்துகேளு, குறித்ததொரு துருசதுவும் பலமேவாங்கி குருவான லிங்கமொடு வீரம்வெள்ளை, விரித்ததொரு நாகரசந் தாரங்கார மேலான வெழுசரக்குங் காலேகூட்டி, நெரித்ததொரு துரிசதுவை யொன்றுச்சேர்த்து நேர்மையுடன் பொடித்ததனை நெய்யிற்றாவே. (632)

தூவிநன்றாய்க் கிண்டியதை யிறக்கிக்கொண்டு சூடாறு முன்பாக வுருட்டிமைந்தா, ஆவியென்ற சூட்டுதுவு மாறிற்றுறு லசையாத கல்லுபோ லிறுகிநிற்கும், நாவியென்ற துருசுசவர்க் காரமாச்சு நல்லசவர்க் காரமது பதனம்பண்ணி, காவியென்ற காரமதில் முறைமேயாகோடி கருவறிந்து செய்வோர்க்குக் கடாட் சந்தானே. (633)

லிங்கச் சவர்க்காரம்.

தானென்ற துருசுசவர்க் காரஞ்சொன்னேன் தன்மையுடன் லிங்கசவர்க் காரங்கேளு, ஊனென்ற லிங்கமடா பலந்தானொன்று வொருமையுள்ள வீரமுடன் பூரம்வெள்ளை, கோனென்ற தார மொடு காரமைந்து குணமாகக் கர்ப்பலமா யெடுத்துக்கொண்டு, தேனென்ற லிங்கமுட னொன்றாய்க்கூட்டிச் செம்மையுடன் றான் பொடித்து வைத்துக்கொள்ளே. (634)

கொள்ளடா § கத்தபத்தின் கொழுப்பைவாங்கிக் கூர்மை யுட னெய்யுருக்கி வைத்துக்கொண்டு, சொல்லடா வப்பொடியைத் தூவித்தூவி செலுத்திமிகக் கிண்டியதை யிறக்கிமைந்தா, நல்ல தொரு சூட்டினே யுருட்டிப்போடு நலமாக யாறினபின் னிறிப் போகுஞ், சொல்லடா லிங்கசவர்க் காரமென்று சுகமாக யிதனில் வெகு வேதையாமே. (635)

வீர சவர்க்காரம்.

வேதையென்ற லிங்கசவர்க் காரஞ்சொன்னேன் விபர முள்ள வீரசவர்க் காரங்கேளு, கோதையென்ற வீரமடா பலந்தா னொன்று குருலிங்க தாரமொடு காரசாரம், நீதமென்ற வெள்ளை யுடன் காலேபூட்டி நிசமாக வீரமுடன் பொடித்துக்கொண்டு, பாதமென்ற முடியான பூரணத்தைவாங்கி பருவமுடன் கொழுப் பெடுத்து நெய்யாய்க்காய்ச்சே. (636)

§ கத்தபம்என்பது—கழுதை.

காய்ச்சியந்த நெய்தனிலே பொடியைத்தூவி கருத்துறவே கிண்டியதை யிறக்கிமைந்தா, பாய்ச்சியது யெடுத்துநன்று யுருட்டிப்போடு பருவமுடன் சூடாறி யிறுகிநிற்கும், தாய்ச்சியில்லாக் காரமது வீரசவர்க்காரந் தன்மையுள்ள காரமதை யாரறியப்போறார், நீய்ச்சியந்தக் காரமதில் வெகுபோக்குண்டு நிலையறிந்து கலையறிந்து நேர்ந்துபாரே. (637)

கௌரி சவர்க்காரம்.

பாரப்பா கெவுரிசவர்க் காரஞ்சொல்வேன் பரிவான கெவுரியது பலந்தாநென்று, நேரப்பா வீரமொடு தாரங்காரம் நிலையான நிலையுடனே லிங்கமைந்தும், சேரப்பா வகைக்குக்காற் பலமேசொல்வேன் செம்மையுள்ள கௌரியுடன் பொடித்துக்கொண்டு, ஆரப்பா வறிவார்கள் ஞானியண்டம் அன்பான வண்டமதில் தைலம்வாங்கே. (638)

வாங்கியந்தத் தைலத்திற் பொடியைத்தூவி மார்க்கமுடன் கிண்டியதை யுருட்டிமைந்தா, தாங்கியதை வைத்துப்பார் யிறுகிப் போகுந் தன்மையுள்ள காரமது கௌரிசவர்க்காரந், தீங்கில்லாக் காரமதை யாரறிந்துசெய்வார் திருவான பூரணத்திற் சேர்ந்தோன் செய்வான், காங்கையுள்ள கௌரிசவர்க் காரமதில்மைந்தா கனவேதை க்ஷணவேதை கண்டுபாரே. (639)

கெந்தி சவர்க்காரம்.

பாரடா கெந்திசவர்க் காரஞ்சொல்வேன் பத்தியுடன் கெந்தியுடன் பலமோவாங்கி, சேரடா துரிசுடனே தாரங்காரந் திறமான லிங்கமொடு வெள்ளையைந்தும், நேரடா வகைக்குக்காற் பலமேவாங்கி நேர்மையுள்ள கெந்தியுடன் பொடித்துக்கொண்டு, ஆரடா யறிவார்கள் வெள்ளாட்டுண்மை அதன்கொழுப்பை வாங்கிமிக நெய்யாய்க்காய்ச்சே. (640)

நெய்யாகக் காய்ச்சினதிற் பொடியைத்தூவி நெருக்கிநன்றாய்க் கிண்டியதை யுருட்டிமைந்தா கையாற வுருட்டினதை யெடுத்துப்பாரு கனலாறி யிறுகியது கல்லுபோலாம், மெய்யாக வுருட்டினதோர் காரந்தானும் மேன்மையுள்ள கெந்திசவர்க் காரமாகும், துய்யனவே யிதன்வேதை கோடாகோடி தாரறிந்து § துறையறிந்து பருவம்பாரே. (641)

§ துறையென்பது—வகைவிபரம்.

பாரான பிருதிவியை யறிந்துகொண்டு பக்குவமா யாயி ரத்தைப் பார்த்துமைந்தா, நேரான வாசியிற்சென் றேறியந்த நிலைத்ததொரு தீபமதை நினைவாற்கண்டு, பேரான குருபதத்தைத் தொண்டுபண்ணி பெருமையுள்ள மௌனமதிற் பேணிநில்லு, கூரான சிவயோகக் குறிகண்ணூட்டு குறியறிந்து நெறியறிந்து குருவைக்காரே. (642)

காரப்பா கருக்குருவாய்ச் சொன்னஇந்தக் கருவான வாயி ரத்தைக் கசடரோடு, சாரப்பா விருந்ததனைப் பேசவேண்டாந் தன்மையுள்ள பொருளதனைக் கூறவேண்டாம், நேரப்பா நின்ற பொருள் விள்ளவேண்டாம் நிட்டூற மானமன முடையோர்கோடி, சீரப்பா யவர்கள்குண மறிந்துதள்ளு சிவயோக மானகற்பந் தின்றுதேறே. (643)

தேறுதற்கு வழிமுறையை நன்றாய்ச்சொன்னேன் தெளி வான சவர்க்கார முறையைச்சொன்னேன், கூறுதற்கு மந்திரத் தின் குறியுஞ்சொன்னேன் குறியான வாலையுட பூசைசொன் னேன், ஏறுதற்கு சித்தருட வழியுஞ்சொன்னேன் இதமான காயாதி கற்பஞ்சொன்னேன். வீறுபெற்ற நன்மைதுன்மை விபரஞ் சொன்னேன் வேதாந்த சாரமதின் வெளிசொன்னோமே. (644)

சுரபாண்டத் தைலம்.

சொன்னமொழி துலங்கவொரு விபரங்கேளு சுத்தமுள்ள தைலமதின் றுடைகடன்னை, வின்னமில்லாப் பாண்டமடா சுர பாண்டந்தான் மேன்மையுடன் றுன்வறுத்துப் பாண்டத்திட்டு, நன்னயமாய்ச் சத்தியுட வெடியுங்கூட்டி நலமான காரமுடன் கூடஞ்சேர்த்து, நுண்ணிமையாய் வகைக்கைந்து பலமேவாங்கி நொறுக்கிநன்றாய்ப் பொடித்ததனைப் பாண்டத்தாக்கே. (645)

தாக்கிநன்றாய்க் காடியதைப் பாண்டந்தன்னில் தன்மை யுடன் நீரைவிட்டு யடுப்பிலேற்றி, பாக்கியமென் றேமகனே யன லைத்தாக்கு பக்குவாய்நீர்வற்றப் பதமாய்க்கிண்டு, நோக்கியதைக் கிண்டிவரில் நீர்கள்வற்றி நுண்மையுள்ள தைலமது மேலேநிற்கும், தூக்கியதோர் தைலமதை வடித்துக்கொண்டு துப்பறவாய் § மேரு தனி லடைத்திடாயே. (646)

§ மேருவென்பது—சீசா.

அடைத்ததொரு தைலமதைப் பணவிடைதானெடுத்து அருளான குருபதத்தைத் தியானம்பண்ணி, திடத்துடனே கொண்டுவிடு மண்டலந்தானப்பா தீர்க்கமுடன் வாசியது திறந்துபோகும், § கடத்திலோர் சட்டைநன்று யுரிந்துபோகுங் கன்மவினை தானோடிக் கழன்றுபோகும், மடத்தனமாய்த் திரியாமற் குருவைக்காத்து மார்க்கமுடன் சத்திசிவ பூசைபண்ணே. (647)

பண்ணப்பா சத்திசிவ பூசையாலே பலபலவாங் கற்பமெல்லா முறுதியாகும், எண்ணப்பா வென்றுசிவ சத்திபூசை இகழ்ந்துவிட்டாற் கற்பமதால் தேகம்போகும், மண்ணப்பா வென்றுசடம் போனதுகில் மானிலத்தி லவன்றவசு வீணேயாச்சு, பொண்ணப்பா பொன்னதுபோற் சடத்தைப்பேணிற் பூவுலகில் நீயுமொரு சித்தனுமே. (648)

சித்தனுப் பிறந்திருந்தும் புத்திதன்னில் செம்மையுடனறியாட்டா லென்னசொல்வேன், சுத்தமுள்ள தேகமடா தேவரூப சுருபமுள்ள தேகமதை யறியாமற்றான், பத்தாசை கொண்டு பல ருசியைத்தின்று பாழ்நரகிற் போவார்க்குப் பலனுண்டாமோ, சத்தமாய் நின்றசிவ சத்திதன்னைச் சாதகமாய்ப் பூசையனுஷ்டானஞ்செய்யே. (649)

வஞ்சிப்பால் பிட்டு.

செய்யவே யின்னமொரு தைலங்கேளு சிவசிவா குழித்தைலஞ் செய்யவண்மை, தொய்யவே வஞ்சியென்ற கொடியிற்றானுஞ், சுத்தமுடனிரண்டுமூன் றுண்டுபார்த்து, பையவே தானறுத்துப் பாலைவாங்கிப் பக்குவமா யடுப்பேற்றி யவிக்கும்போது, நையவே யுப்புடனே முளகாய்கூட்டி நன்றாகப் பொடித்தந்தப் பாலிற்சேரே. (650)

சேர்த்துநன்றாய்க் கிண்டிவரிற் பிட்டுப்போலாந் திறமான பிட்டதனை வைத்துக்கொண்டு, பார்த்திபனே காசிடைதான் கொண்டாயானால் பருத்துநின்ற நரைதிரைகள் பாழாய்ப்போகும், ஏற்றிநின்ற வாசியது விறுகுந்தேக மெந்தநா ளாகிலுந்தா னழியாதப்பா, சாற்றியதோர் வஞ்சியென்ற கொடியைமைந்தா தான்கரைத்து ரவிதனிலே காயப்போடே. (651)

§ கடம்யென்பது—தேகம்.

வஞ்சிக்கொடிக் குழித்தைலம்.

போட்டதொரு கொடிக்குநிகர் சருகுசேர்த்துப் புத்தியுட ஞலிலொன்று § பூரஞ்சேர்த்து, தாட்டிமையாய்ப் பாண்டமதி லடக்கம்பண்ணிச் சட்டிகொண்டு மூடிமண் சாந்துசெய்து நாட்டியதோர் சட்டியின்மேல் தமரும்போட்டு நன்மையுடன் குழிவெட்டிக் கலசம்வைத்து, பூட்டியதோர் கலசமதில் தமர்நிறுத்திப் புத்தியுடன் மணலிட்டுப் புடத்தைப்போடே. (652)

போட்டபுட மாறினபின் பதனமாகப் புத்தியுடன் ருனெடுப்பாய்க் கலசந்தன்னை, தாட்டிகமாய்க் கலசமதில் தைலந் தானுந் தன்மையுடன் ருனிறங்கி யிருக்குமைந்தா, தேட்டிமையாய்த் தைலமதை மோரில்விட்டு சிவசிவா பதனமதாய் வைத்துக்கொண்டு, கூட்டியதோர் தைலத்திற் பணவிடைதானெடுத்துக் குருவான பதிநோக்கிப் பொசித்துநில்லே. (653)

நில்லடா வந்தநிலை யதனிலேதான் நினைவுகொண்டு வாசியதில் நிறுத்திப்பாரு, கல்லடா வுன்றேகங் கசியாதப்பா கருவான வாசியது கழ்ருதப்பா, அல்லடா தேகமதிற் சட்டைபோகும் ஆண்டுமொரு கோடிவரை யிறுத்துமப்பா, செல்லடா மதியமுர்த மொன்றுகேளு செம்மையுட னண்டமைந்திற் கருவைவாங்கே. ()

மதியமுர்த மெழுகு.

கருவான கருவதனில் முப்பூச்சேர்த்துச் கையாறப் பிசைந்துவிடு பலமைந்தப்பா திருவான கற்பூரம் பலமைந்தைநீ செம்மையுடன் ருன்பொடித்துக் கூடச்சேர்த்து, உருவான பூரணத்தை ரவியிற்போடு உண்மையுள்ள ரவியதனுற் காய்ந்துநல்ல, தருவான மெழுகதுபோ லிருக்குமப்பா சங்கையுள்ள மதியமுர்த விந்துபாரே. (655)

பேரான மதியமுர்தந் தன்னைவாங்கி பெருமையுடன் பரணிதனி லடக்கம்பண்ணி, ஊரான நடுவூரைக் கண்டுதேறி உறுதியுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, நேரான கும்பகத்தில் வாசிபூட்டி நின்றிலங்குந் தீபமதை நோக்கிக்கொண்டு, கூரான மதியமுர்தந் தன்னிலேதான் குவிந்தெடுகொற் பணவிடையுங் குணமாய்த்தானே. ()

§ பூரம்யென்பது—பச்சைக்கற்பூரம்.

தானான மதியமுர்தந் தன்னைவாங்கி சமரசமாய் மண்டலமே கொண்டாயானால், வீனான தேகவச்சிர காயமாகி மேன்மைபெற்ற யமுர்தரச தேகமாகும், கோனான யமுர்தசரங் கொண்டோர்தம்மை குவலயத்திற் காண்பதறி தாகுமையா, வானான வாகாய மதிதன்னாலே மகத்தான சித்தருட மார்க்கங்கேளே. ()

ஞானக் கூறு.

மார்க்கமென்ன சொல்லுகிறேன் மைந்தாமைந்தா மகத்தானவுலகிலில்லத் தோடிருந்து, தீர்க்கமுட னறுசுவையைத் தள்ளிப்போட்டுச் செம்மையுடன் வறுமையொத் திருப்பானையா, ஆர்க்கும்வெகு நோய்கள்வந்து வவரைக்கண்டால் அப்போதே விலகிவிடு மமுர்தக்கூறு, வாக்குமனந் தவறாத மகத்தாஞ்சித்தன் வணக்கமுட னுலகதனில் திரிவான்பாரே. (658)

திரிந்திடுவான் சிறுவனைப்போல் பேதையாகத் திரிந்தாலுஞ் சதாயோக நிஷ்டையாவான், அரிந்திடுவான் லோகமதி லவரவர்கள்மனதை அறிந்துமவன் மனதோடே பேசிக்கொள்வான், விரிந்துமனந் தனைநிறுத்தி மௌனவான் மெய்யான குருபதத்தில் மேவிநிற்பான், சொரிந்துநீ ரனலுக்குங் கனலுக்குந்தான் சோர்வனடி பராபரத்திற் சொக்குவானே. (659)

சொக்கிமன வாசியினா லாராதாரந் தொடர்ந்தேறி மேல்வரையா மேலாதாரம், § புக்கியந்தச் சிலம்பொலியைக் கண்டுதேறி பூரணமாங் கீழ்வரையிற் புத்தியாலே, நிற்குநிலை தனையறிந்து திரும்புவான்பார் நேரான கொங்கணவ ராடுங்கூத்து, திக்குவிசை யஞ்செலுத்தி வந்ததாலே சிங்கமவன் கொங்கணவன் திறந்தான்பாரே. (660)

அமுரி கற்பம்.

பாரப்பா கொங்கணவர் பற்பந்தன்னைப் பக்குவமாய்க் கொண்டதினா லாராதாரம், நேரப்பா நிலையறிந்து சென்றுதாவி நேரான வாறுவரை கடந்தப்பாலே, மேரப்பா தனில்வாசி கொண்டுபுக்கி மேலான தீபமதில் மேவிச்சென்று, சீரப்பா சிந்தைமனதொன்றதாகிச் சிவகற்ப காலம்வரை செலுத்தினாரே. (661)

§ புக்கியென்பது—சென்று.

செலுத்துதற் கின்னமொரு முறையைச்சொல்வேன் செப்பு முறை தனைமறந்தா லேதுசெய்வோம், பழுத்துவிடுந் தேகமது வாறலென்ன பக்குவத்தைச் சொல்லுகிறேன் பணிந்துகேளு, கொழுத்தமீ னிறைச்சியெண்ணை புளிதாம்பூலம் குருவருளால் தள்ளிவிடு மண்டலந்தானப்பா, அழுத்தமன துறுதியினால் தள்ளிப் போட்டு அப்பனே தன்னமுரி யிறக்குவாயே. (662

இறக்குவாய் பீங்கானி லிறக்கிக்கொண்டு இன்பமுள்ள ரவிபீசங் கூடச்சேர்த்து, சிறக்கவதை மூடிவைத்து மறுநாடானுந் செம்மையுட னேரளவாய்ச் செலுத்திமைந்தா, மறக்கமதி யில்லாமல் தினமுங்கொண்டு மார்க்கமுட னமுதெடுத்து வரையில் நில்லு, உறக்கமதைச் சாதகமா யகற்றிநீயு உண்மையுடன் சதா காலங் கொண்டுநில்லே. (663)

கொண்டதினால் வாய்வகலுஞ் சூடேறாது குடிலமென்ற நோய்களெல்லாங் குணமாய்த்தீரும், அண்டபிரா னருளாறுவு மகத்தில்தங்கும் ஆயிதிரோதாயியுட மாய்கைநீங்குஞ், § சண்டனவன் றான்விலகி மாண்டுபோவான் சமரசமாய்த் தன்னமுர்தங் கொண்டதாலே, மண்டலமா மண்டமதில் வாசிதங்கும் வாசியென்ற மூலமதின் வரிசைகேளே. (664)

சத்திசிவ மெழுகு கற்பம்.

வரிசையென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு வண்மையுள்ள வமுரிதனிற் புளியைச்சேர்த்து, பரிசுடனே தான்கரைத்து திறுத்துநல்ல பக்குவமாய் ரவிமுகத்தி லுலரப்போடு, புரிசமுடன் றானுலர்ந்தா லதுமேற்பின்னும் புத்தியுடன் முன்போல கரைத்திறுத்து, உரிசையுட னிப்படியே பத்துமுறைசெய்தால் உண்மையுடன் சத்திசிவ மெழுகாய்ப்போமே. (665)

மெழுகாகி நின்றசிவ சத்திதன்னை மெய்யாக மாலையிலே பணவிடைதான்கொள்ளு, நெழுகான சதாகாலங் கொண்டுதேறு நேர்மையுள்ள திசைவாய்வு நிலையில்நிற்கும், ஒழுகான மூலமுத லாராதார முறுதியுடன் றான்நிலைக்கு முண்மையுண்மை, அழுகான தேகமதிற் சட்டைதள்ளுஞ் சோதியென்ற ரவிபோலே காந்தியாமே. (666)

---

§ சண்டன்யென்பது—யமன்.

காந்தியென்ற மூலமதில் வாசிநின்று கருவான தீபமதிற் புக்கும்பாரு, சாந்தியென்ற வாய்வதிலே தீபம்புக்குந் தன்மையுடன் றுனிறங்கி மூலஞ்சேர, பாந்திபமாய்த் தீபமது மூலஞ் சேர்ந்தால் பதியான பதியதுவும் பதியாய்க்காணுஞ், சேர்ந்ததொரு பசுபாசந் தீர்ந்துபோகுஞ் சிவசிவா பிரமாதிதேகமாமே. ()

ஆமப்பா வுடலுயிரு நிலைத்ததானல் அருளான யருள் பெறுகப் பூரணத்தைக்கொள்ளு, தாமப்பா பூரணமும் பிரத்தியாகாரந் தருவான காரமடா வாதியந்தங் காமப்பாற் கசிந்தொழுகிக் கருவாய்நிற்குங் கருவான மூலமடா வண்டமாச்சு, நாமப்பா வண்டமென்ற ஞானியண்டம் நலமான வண்டமதின் வளமைகேளே. ()

இளநீர் வழுக்கை மெழுகு.

வளமையென்ற வண்டமடா சிற்றோண்ட மார்க்கமென்ற வண்டமதை யார்தான்காண்பார், இளமையென்ற பருவமதாயிருக்குமண்ட மேகாந்த வண்டமென்ற யிளநீர்வாங்கி, தலைமை பெறத் தானுடைத்து வழுக்கைதோண்டித் தன்மையுள்ள பீங் கான்றன் றுலத்திட்டு, குலம்பெறவே காடியென்ற யழரிவிட்டுக் கூர்மையுடன் கரைத்துநன்று யிறுத்துப்போடே. (669)

இறுத்துநன்றுய் ரவிதனிலே காயப்போடு ஈரம்வற்றிச் சுண்டினபின் யின்னங்கேளு, கருத்துறவே யின்னமதிற் கரைத்துவாரு கருவாக யிப்படியே பத்துமுறைசெய்து, திருத்தமுடன் பத்துமுறை செய்தபின்பு சிவசிவா ரவிதனிலே காயப்போடு, § கிருத்துவமா யிருக்காம லுரித்தாய்ப்பாரு கிருபையுடன் சிவந்த மெழு காகும்பாரே. (670)

பாரான மெழுகெடுத்து மைந்தாகேளும் பதிவான ரவிபீசஞ் சரியாய்ச்சேர்த்து, கூராகச் சேர்த்ததனைக் கல்வத்திட்டுக் குருவான பொருளினை மனதிலெண்ணி, நேராக நின்றகுரு தன்னைப் போற்றி நினைவாக மத்தித்து மைந்தாமைந்தா, பேரான பீங்கான் றன் பேரில்வைத்துப் பிலமாகத் தான்மூடி வைத்துக்கொள்ளே. ()

---

§ கிருத்துவமென்பது—செருக்கு.

மேற்ருேட்டின் பற்பம்.

கொள்ளுகிற விதமென்ன வென்ருயாகிற் குணமாக மேற்ருேட்டைச் சுத்திசெய்து, நல்லுறவா யிடைக்கிடைதான் மாலாம்பிசம் நன்மையுடன் ருன்சேர்த்துப் § பழச்சார்விட்டு, கல் லுறவாய்த் தானரைத்து வட்டுப்பண்ணிக் கடிதான ரவிதனிலே யுலரவைத்து, புல்லுறவாய் மண்சீலே வலுவாய்ச்செய்து புட மதுவு நிதானமதாய்ப் பொருந்தச்செய்யே. (672)

பொருந்திநின்ற புடமதனை யெடுத்துப்பாரு புட்பமலர் போலவுந்தான் நீறிநிற்கும் வருந்தியந்தப் பற்பமதை வைத்துக் கொண்டு மார்க்கமுடன் பணவிடைதா னிருபோதுண்ணு, திருந் தியந்தப் படிதானே மண்டலமேகொண்டு திறமாகச் சத்திசிவ பூசைபண்ணு, தெரிந்துகொள்ளு பூரணத்தை யெடுத்துமைந்தா திறமாகக் கடுகளவு யெடுத்திடாயே. (673)

எடுத்ததோர் பூரணத்தைத் தியானஞ்செய்து இன்பமுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, நடுத்தறமாய்க் கும்பகத்தில் வாசிபூட்டி நடுவான பூரணத்தைப் பூசைபண்ணு, தொடுத்ததொரு பூரணத் தின் பூசையாலே சுகமாகத் தேகமது தளராதையா, முடித்த தொரு பூரணத்தின் மகிமையாலே மூவுலகுந் தெரிசனையாய் முத்தியாமே. (674)

முத்திகொண்டு மண்டலமே கொண்டாயானுல் மீறிநின்ற தேகமதிற் சட்டைபோகும், பத்தியுட னுண்டதுமேற் கொண்டு நின்ருல் பதிவான பூரணமாந் தேகமாகுஞ், சித்தியுள்ள வாசி யது வகலாதையா தீபமதில் தாெனாடுங்கித் திறமாய்நிற்கும், புத்தியுடன் சதாகாலங் கொண்டுதேறிப் பூவுலகில் பிரமரிஷி யாவாய்பாரே. (675)

பாரப்பா வாதிதொடுத் தந்தஞ்சேரிற் பரமகை லாய மென்ற தேகமாகும், நேரப்பா கைலாய தேகமானுல் நேர்ந்து கொண்ட கற்பமெல்லாஞ் சித்தியாகும், பேரப்பா பெற்றதொரு கற்பதேகம் பெருமையுள்ள தேகமதை யென்னசொல்வேன், காரப்பா குருவருளைக் கண்டுதேறிக் கருவான கற்பமெல்லாங் கண்டுதேறே (676)

§ பழச்சாரேன்பது—எழுமிச்சம்பழச்சார்.

வசிய விபூதி.

தேறுதற்கு பூரணமே தெய்வந்தெய்வஞ் சிவாலயத்தில் தெய்வமெல்லா § மாசுவாகும், கூறுதற் கின்னமொரு புத்திசொல் வேன் குஞ்சரம்போல் நின்றபொரு டன்னைவாங்கி, ஏறுதற்கு வெருவடுக்கிக் கண்டுபோட்டு வேகாந்த மாகநீ புடத்தைப்போடு, நீறுதற்கு மேலுமந்தக் கண்டுபோட்டு நிட்சயமாய் நீறினபின் னெடுத்துப்பாரே. (677)

பாரப்பா நன்றாக நீறவிட்டால் பதிவான வெருவுடனே கருவுங்கூட்டி, நேரப்பா தண்ணீரால் பிசைந்துருட்டி நீமகனே ரவிதனிலே காயப்போடு, வீரப்பா தாணெடுங்கிக் காய்ந்ததானால் மேன்மைபெற முன்போலே புடத்தைப்போடு, காரப்பா புட மாறியெடுத்துப்பார்க்கக் கருவான பூதிநன்றாய் நீறிப்போமே. ()

நீறிப்போய் நின்றதொரு பூதிதன்னை நீயெடுத்து வடி கட்டி வைத்துக்கொண்டு, பேறுபெற்ற பூதிதன்னை யெடுத்து மைந்தா பெருமையுள்ள மௌனமதைத் தியானம்பண்ணி, வீறு பெற்ற தேகமதில் தளமாய்ப்பூசி விஞ்சையென்ற பொருளதனை மேவிக்கொண்டு, நேருபெற்ற சின்மயத்தி னினைவாய்நின்றால் நின்சமுகம் வசியமென்ற சமுகமாமே. (679)

வல்லாரை லேகியம்.

ஆமப்பா வல்லாரை லேகியஞ்சொல்வேன் ஆறுதிங்க ளானசத்துத் தன்னைவாங்கி, காமப்பா கொண்டதொரு காடி வாங்கிக் கருவான கருவிட்டு யவித்துமைந்தா, ஓமப்பா கருவெடுத் துக் கல்வத்தாட்டி உண்மையுடன் காடிதனைக் கலக்கிக்கொண்டு, தாமப்பா நன்றாகக் காய்ச்சிக்கிண்டித் தன்மையுடன் குழம்பான பருவம்பாரே. (680)

பருவமுடன் பார்த்துநன்றாய்ப் பாகிற்சேர்க்கப் பதிவான சரக்குவகை சொல்லக்கேளு, கருவான வால்மிளகு பூரங்கூட்டிக் கனமாகப் பொடித்ததனைப் பாகிற்சேரு, உருவான கருவுடனே சேர்த்துகிண்டி யுண்மையுடன் றானெடுத்து வைத்துக்கொண்டு, திருவான பதிநோக்கிக் குன்றியுண்ணத் தேகவச்சிர காயமதா யிருக்கும்பாரே, (681)

§ மாசுயென்பது—குற்றம்.

பாரப்பா மண்டலமே கொண்டாயானால் பதிவான தேக மதிற் சட்டைபோகும், நேரப்பா நின்றதொரு வாசிதானும் நினை வாகத் தன்னகத்தி லடங்கும்பாரு, தேரப்பா யாண்டுவரை கொண்டுதேர்ந்தாற் செம்மையுள்ள தேகமதாய்ச் சிவந்துகாணும், கூரப்பா சதாகாலங் கொண்டுதேர்ந்தால் § கோடான கோடிவரை யிருக்கலாமே. (682)

கடுக்காய் லேகியம்

இருக்கவே கடுக்காய்லேகி யத்தைகேளு யிருளகன்று வெளியில்வந்த மப்பேயானால், திருக்கறவே கொண்டுவந்து சகடு போக்கி சிறுகதனைப் பொடியாக்கிக் கண்டித்தேதான், உருக்க முடன் வெடியுப்பு சூடன்கூட்டி யுண்மையுடன் பொடித்ததனைப் பிசறிவைத்து, பெருக்கமுடன் மூடிநன்றாய் மூன்றுநாளில் பெரு மையுடன் ரவிதனிலே யுலரப்போடே. (683)

உலர்ந்ததொரு பொடியதனை யிடித்துமைந்தா உண்மை யுள்ள காடிதனில் பிசைந்துகொண்டு, கலந்ததொரு ரவிதனிலே காயப்போடு கருவெடுத்து முன்போல யிடித்துக்கொண்டு, விளைந் ததொரு காடிதனில் விரவிமைந்தா விபரமுடன் பத்துமுறை செய் தாயாகில், நலந்தரு நற்சூரணத்தின் மருந்துசொல்வேன் நன்மை யுள்ள சாரமுடன் பூரம்வாங்கே. (684)

வாங்கப்பா காரமொடு மூன்றுங்கேளு வணக்கமுடன் வகைக்குநாற் பலமேவாங்கி, பாங்காகப் பொடித்துச்சூ ரணத்திற் சேர்த்துப் பதிவாக யிடித்துநன்றாய் வடித்துக்கொண்டு, சாங்க மாய்ப் பீங்கான்றன் மேரிற்சேர்த்துத் தன்மையுடன் குரு பதத்தைத் தியானம்பண்ணி, ஏங்காம லந்திசந்தி பணவிடைதான் கொண்டால் ஏகாந்த தேகமதிற் சட்டைபோமே. (685)

சட்டையென்ற தேகமதிற் சட்டைதானுஞ் சதிரான விருள் ளிச் சருகுபோலே, இட்டமுடன் றுனுரியும் வெளுப்பாய் மைந்தா யிரவிமதி சுடரதுபோ லிருக்குந்தேகம், முட்டையென்ற மூலமதிற் கெட்டியாகு முனையான சுழிமுனையுந் துலங்கும்பாரு, சட்டமுடன் தேகமது தயங்காதையா சதுராகக் கோடிவரை யிருத்தும்பாரே. (686)

§ கோடான கோடியென்பது—யுகாந்தகாலம்.

இருத்துகின்ற வாசியது வகலாதையா இன்பமுள்ள வாசியது விருதயத்தில், திருத்தமுட னின்றிலங்கு மசபைதன்னை சிவசிவா வந்தசபை நிறுத்திப்பாரு, விருத்தமுள்ள சக்கரமு மசையாதையா வேதாந்த சூத்திரத்திரத்தின் விபரத்தாலே, கருத்துறவே கருவான கடுக்காய்தன்னுற் காலனவன் மாண்டிடுவான் கருவாய்ப்பாரே (687)

பாரான கடுக்காய்தான் தினமுங்கொண்டாற் பதினறுவயதுசென்ற மதன்போலாவாய், வாரான சிறுத்தொண்ட னடத்தைதன்னை வசனிப்பா ருலகமதிற் கேட்டுக்கொள்ளு, கூரான சஞ்சீவி மலையிற்றானும் குறுஞ்சித்தர் நடத்தைதன்னைக் கூறுங் காவியம் பேரான கஞ்சமலை சித்தர்செய்த பெருமைபரி பூரணநூற்பேணிப்பாரே. (688)

நூல் வகை.

பாரடா காவியநூல் தன்னைப்பாரு பரிபூர ணந்தனையேப் பற்றிப்பாரு, வீரடா கொண்டதொரு சித்தர்மார்க்கம் விபரமுடன் கற்பமுறை நன்ருய்ச்சொல்லும், கோரடா விருநூற்கு மின்னூல்மிச்ச நிசமான வாயிரம்போ லொருநூற்பேசார், காரமுட னுயிரத்தைக் கருவையெண்ணிக் கைமுறையின் பாகமதைக் கருத்தாய்ப்பாரே (689)

கருத்தறிந்து கருவறிந்து கருவைக்கொண்டாற் காரணமும் பூரணமுங் கலங்காதயையா, உருத்துடனே யுருபாகங் குருவின்பாக முரிமையுடன் செய்பாக முறைமையெல்லாந், திறத்துடனே பாடினதோ ரின்னூல்மைந்தா திருவான வாயிரத்தைச் செகத்தோர்கண்டால், உறத்துடனே மலையேறி யொடுங்கிநிற்பாருகமுடிந்த கைலாயமிடங்கொள்ளாதே. (690)

அசட்டு வாதி.

கொள்ளாத மனத்தோர்க்குக் கண்ணங்கேது குருவறியாமாந்தருக்கு மனமங்கேது, தள்ளாத கோபியர்க்குத் § தனமங்கேது தன்மைமதி யில்லார்க்கு வறிவங்கேது, கல்லாத மூடருக்குக் கருத்தங்கேது காமவிடாய் கொண்டவர்க்கு வாமமேது, துள்ளுவது வாசிதனை நிறுத்துவோர்கள் துருவமென்ற வுலகதனிற் றுலங்குவாரே. (691)

§ தனமென்பது—திரவியம்.

வெள்ளாட்டின் பூமால்.

துலங்குகின்ற முறைமையொன்று சொல்லக்கேளு துள்ளு கின்ற வெள்ளாட்டின் கொழுப்பினோடே, களங்கமற வீரலுடன் மூளைமூன்றுங் கண்டிடைக்கு கெந்திரசங் கூடச்சேர்த்து, விளங்க நன்று யிடித்துவொரு பாண்டத்திட்டு விபரமுட னமுரிகொஞ் சம் விட்டுக்கிண்டி, மலங்காமல் மேற்சட்டி கொண்டுமூடி வரி சையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்யே. (692)

செய்ததொரு சட்டிநடுத் தமருபோட்டுச் செம்மையுடன் குழிவெட்டிப் பாண்டம்வைத்து, தொய்துமணற் கொட்டிநடுத் தமர்மேல்வைத்து துப்பறவாய்த் தான்மெழுகி வைத்துக்கொண்டு, கொய்துவந்த மலராலே யர்ச்சனைகள்செய்து கூர்மையுடன் வலஞ் சுற்றிக் குருவைப்போற்றி, மெய்தவருப் பூரணமே கமலவல்லி வேதாந்த மனோன்மணியே யென்றுசுற்றே. (693)

புஷ்பம்.

சுற்றிவந்து நிற்கையிலே மனோன்மணியாள்தானுஞ் சுழன்று நின்று தமர்வாசற் குள்ளேபுக்கி, பத்தியுடன் பூரணத்திற் பதி வாய்நின்று பறிவாக வாசிகொண்டு வாழும்போதில், சித்தியுள்ள மனோன்மணியாள் கடாட்சத்தாலே செம்மையுள்ள கடமதிலே சிலபூவுண்டாம், முத்தியுடன் பூவிளைந்து வாழுநாளில் மூர்க்க முள்ள பதினாருநாள் தமரைப்பாரே. (694)

தமர்பார்த்து வெளியொளியிற் பார்க்கும்போது சங்கை யில்லாப் § பூமலர்கள் தானேநின்று, நிமிரவழி தெரியாமல் தமர் மேற் கொள்ளும் நேர்மையுட னந்தவழி கொண்டபோது, குமுதமென்ற பாண்டமதைத் திறந்துகொண்டு கூர்மையுட னம் மலரை யெடுத்துமைந்தா, திமிரநன்று காசியுட குப்பிக்கேற்றித் திறமாகச் சில்லிட்டு மண்ணுஞ்செய்யே. (695)

மண்செய்து ரவிதனிலே காயவைத்து மார்க்கமுடன் நன் றாகக் காய்ந்ததானால், கண்குவிந்த பாண்டமதில் நெற்குள் வைத் துக் கருவான குப்பிவைத்து மேலேமூடி, குணங்களொரு மன தாகத் தீயைமூட்டிக் குழைந்தநெல்லு வவித்தபதந் தன்னைப் பார்த்து, இணங்கநன்று யிறக்கியதை மேரைப்பார்க்க ஏகாந்த மலரதுவுங் குழைந்துபோமே. (696)

---

§ மலரேன்பது—புஷ்பம்.

குழைந்துநின்ற மேருவதில் வீரம்பூரங் கூடகன்ருய்ப் பெரிடித்திட்டுக் குச்சியாலே, வளைந்துமிக மத்தித்து ரவியிற்போடு மகத்தான பூவதுவுங் கரைந்துநல்ல, கலந்துநின்ற மேகசலம் போலேமைந்தா கருவான பூவமுர்த மென்னசொல்வேன், உலைந்து நின்ற தேகமதிற் பணவிடைதான்கொண்டா லுறுதியுள்ள தேக மதாய் நிற்குந்தானே (697)

தானென்ற பூவமுர்தத் தன்மைதன்னைத் தாரணியி லார றிந்து செய்வாரப்பா, கோனென்ற குருவருளா லருளேதங்கிக் குவிந்ததொரு சாஸ்திரமா யிரத்தைப்பாரு, தேனென்ற மதியமுர் தம் பூவமுர்தமிரண்டுஞ் செம்மையுட னதன்விபரந் தெளிவாய்த் தோற்றும்; மானென்ற மதியமுர்தந் தன்னுலந்த மகத்தான பூவமுர்த வரிசையாமே. (698)

வரிசையுட ஞதிதொடுத் தந்தமாக வழிதுரையாய்க் கற்ப மதை மார்க்கமாக உரிசையுடன் கொண்டதினு லந்தவாசி யோடாது § கடமதிலே யொடுங்குமைந்தா, பரிசுடைய மனோன் மணியும் வார்த்தைசொல்வாள் பக்குவமா யஷ்டசித்தும் பதி வாய்த்தோற்றும்,தெரிசனமாய்ச் சொன்னதிந்தப் பொருள்கடன்னைச் சின்மயத்தி னருளாலே தெரிசித்தாயே (699)

தெரிசித்தாய் மூலமுத லாராதாரந் திருவான நடுமூல மேலாதாரம், பரிசித்தாய் நின்றதொரு மூலாதாரம் பருவமா யதிலிருந்து பதியைப்பாரு, குருசித்த மானபரி பூரணமுங்காணுங் கொள்ளுநீ வாசியதிற் குறியுங்காணும், அரிசுத்த மானபர மாத்மா வாலே யதீதமுள்ள நாதவிந்தை யறியலாமே. (700)

ஆமப்பா வாதியென்ற வறிவால்மைந்தா அந்தரங்க மான தொரு வமுர்தந்தன்னை, தாமப்பா பீங்கானில் வாங்கிக்கொண்டு தன்மையுடன் சரக்குகளிற் சுறுக்குதாக்க, ஓமப்பா வெச்சரக்குங் கட்டிப்போகு முரிமையுட னதில்வேதை கோடாகோடி, காமப்பால் கானற்பால் கொண்டார்தாமுங் கருவான கருவறிந்து கரைகாண்பானே. (701)

§ கடமென்பது—சரீரம்.

அறுவகைச் செயநீர்.

கரைகாண வின்னமொரு கருவைக்கேளு கருவான வறு வகைநீர் கருவைத்தானுந், திரையாகச் சொல்லுகிறேன் மைந்தா மைந்தா சுகமான பொட்டிலுடன் படிகங்கூட்டித், திரையாத காரமுடன் சரம்பூரந் திருவான கண்டருட னறுங்கூட்டி, நிறையாகத் தானெடுத்து வழுரிவிட்டு நேரமுடன் கல்வமதி லாட்டுவாயே. (702)

ஆட்டிநன்றாய் வழித்திட்டே மைந்தாகேளு அடவான பீங்கான்றன் றழிதன்னில், போட்டுநன்றாய்ப் பனியில்வைக்க வென்னசொல்வேன் பூரணமாய் நீரதுவும் பொங்கும்பாரு, தாட் டிகமாய்ப் பொங்கிநின்ற செயநீர்தன்னைச் சாதகமா யெச்சரக்குங் கட்டும்பாரு, தேட்டமுட னின்னீரில் வேதைகோடி தெவிட்டாத வேதைமுகஞ் செப்புவேனே. (703)

அரிதார ஈயம்.

செப்புகிறே னரிதார யீயந்தன்னைச் சிவசிவா திருவருளாற் றிறமாய்க்கேளு, உப்பான வெடியுபபுக் காசுகட்டி யுண்மையுள்ள தாரமது மூன்றுமொன்றாய்த் தப்பாமற் சரியிடையா யெடுத்துக் கொண்டு தருவான வாய்நீரா லரைத்துருட்டி, மெய்ப்பான குகை யில்வைத்துச் சில்லுமூடி மேலான மண்சீலை வலுவாய்ச்செய்யே. ()

செய்தபொரு குகையதனைப் புடத்திற்போடு சிவசிவா மூன்றுமொன்றாய் யுருகிநிற்குங், கைதவறு தேயுருகி நின்றயீயங் கருவான தாரமொன்ற யீயமாகும், உய்தமென்ற யீயமதைவைத் துக்கொண்டு வுண்மையென்ற நாகமதை யுருக்கிநன்றாய்த், தொய்தமென்ற தாரமதிற் லீயந்தன்னைச் சுகமாக விடைக்கிடை தான் தாக்குவாயே. (705)

நாககுரு.

தாக்கிநன்று யுருக்கிடவே நாகந்தானுந் தட்டழிந்து கட்டுமடா வெள்ளிபோலே, நோக்கியந்த நாகமதை வைத்துக் கொண்டு நுண்மையுட னதற்குநிகற் § பரியைக்கூட்டி, பாக்கிய மென் றேநினைத்து வுருக்கிப்பாரு பருதிமதிச் சுடரதுவுங் குரு வாய்ப்போகுந், தூக்கிடுவாய்க் குருவான களங்கந்தன்னைச் சுக மான வெள்ளிசெம்பிற் றுக்கநன்றே. (706)

---

§ பரியென்பது—தங்கம்.

நன்றாகத் தூக்குவது வென்னவென்றால் நாலுவெள்ளி யாறுசெம்பு பத்துங்கூட்டி, நின்றபடி யுருகுமதிற் களங்குதன்னை நேராக வொன்றியே வயதெட்டாகும், குன்றாத பொன்னதனைத் தகடுதட்டிக் கூர்மையுடன் புடத்தில்வைக்க வயதுபத்தாம் மன்று தனில் நின்றுவிளை யாடும்பெண்ணை மார்க்கமுடன் கண்டதனை மகிழ்ந்திடாதே. (707)

மகிழ்ந்திடாக் குடவனிலே பத்துக்கொன்று மாக்கமுடன் கொடுத்துருக்க வயதாறாகும், இகழ்ந்திட்ட செம்பதிலே யெட்டுக் கொன்று வேற்கையுடன் கொடுத்துருக்க வெட்டேகாலாம், நிகழ்ந் திட்ட வெள்ளியிலே பத்துமாற்று நேர்மையுடன் புடத்தில்வைக் கப் பதினாறாகும், உகந்திட்ட தாரமதின் களங்குதன்னா லுண்மை யாஞ்செந்தூர முகந்துகேளே. (708)

அரிதாரக் களங்குச் செந்தூரம்.

கேளப்பா வரிதார களங்குதன்னிற் கிருபையுள்ள கெந்தி யதில் நேராய்க்கூட்டி, மேலப்பா நாலிலொன்று வீரஞ்சேர்த்து விபரமுள்ள வறுவகையி னீரலாட்டி, கோளப்பா வாராமல் நன் றுயாட்டிக் குண்டலம்போல் வட்டதனைப் பிழிந்துமைந்தா, நீளப்பா தான்சுவா ரவியில்வைத்து நேர்மையுட னோட்டில்வைத்து மண்ணுஞ்செய்யே. (709)

செய்தவொரு கவசமதை நிதானங்கண்டு செம்மையுடன் புடத் தில்வைத்துச் சிவனைநோக்க, கொய்தவொரு செந்தூரம் என்ன சொல்வேன் குணமாகப் புடமாறி யெடுத்துப்பாரு, உய்தமுள்ள § வருணனிற மிதற்கொவ்வாது வுத்தமனே செந்தூரம் பதனபண் ணித், தொய்தமுள்ளச் சடந்தனக்குப் பணவிடைசெந்தூரந் தோன்றவொரு மண்டலந்தான் கொண்டுதேறே. (710)

தேறுவதாற் றேகவச்சிர காயமாகுஞ் செம்மையதாய்ச் சட் டையொன்று திரைந்துபோகும், கூறுகின்றகுண்டலியில் வாசிநின்று குறுகாம லவ்விட்டிற் குடிகொண்டாடும், வீறுபெற்ற செந்தூர விசையினாலே மேலான வேதைமுகங் கோடாகோடி, சீறு கின்ற நாகரச மகிமைதன்னைச் செப்புகிறேன் கருக்குருவைச் செப்புறேனே. (711)

§ அருணனென்பது—சூரியன்,

நாகரச பற்பம்.

செப்புகிறே னாகரசஞ் சுத்திசெய்து செம்மையுட னொன்
றாகத் தொந்தம்பண்ணித் துப்பரவாய் கெந்திதனைச் சுத்திசெய்துச்
சுருக்காக ரசநாகக் கிணையேசேர்த்து, தப்பாம லறுவகைநீர்
தன்னாலாட்டிச் சாதகமாய் வழித்துருட்டி ரவியிற்போடு, மெய்ப்
பாகக் காய்ந்ததில்லை யோட்டில்வைத்து மேலாக மண்சீலை வலு
வாய்ச்செய்யே. (712)

வலுவாகச் செய்ததொரு கவசந்தன்னை வலுமைகண்டு
புடத்தில்வைக்கக் கட்டிப்போகும், எழுமையுடன் கட்டினதோர்
பற்பமாகி யிருக்குமடா நன்றாக வெடுத்துக்கொண்டு, செழுமை
யுள்ள தங்கமதிற் பற்பம்பூசித் தீர்க்கமுடன் புடத்தில்வைக்க
நீறிப்போகும், குளுமையுள்ள நீரதனை வைத்துக்காண்டு கூசாமற்
பணவிடைதா பொசித்திடாயே. (713)

பொசித்துவிடு மண்டலத்திற் றேகஞ்சித்தி பூரணமாய்ச்
சதாகாலங் கொண்டுநின்றாற், பசித்துநின்ற பசுமையென்ன சொல்
வேன்றேகம் பாலனடா வயதாகும் பாருபாரு, கசிந்தமன துறு
தியிலே வாசிநின்று கருணைபெறப் பூரணமாய்க் கருத்தோடொத்து,
விசித்திமே லாக்கினையு மூலாதார மேவிநின்றுவிளையாடும்
வாசிதானே. (714)

பரிச்சுண்ணம்.

வாசியென்ற பரிச்சுண்ணந் தன்னைவாங்கி மார்க்கமுடன்
பணவிடைதா னெடுத்துக்கொண்டு, நேசமுடன் § கஞ்சமலர் தகடு
தட்டி நிச்சயமாய் வாய்நீராற் குழைத்துப்பூசி, பாசமுட னோட்
டில்வைத்துப் புடத்தைப்போட்டாற் பக்குவமாய்த் தான்பழுத்
துப் பதினாறுகுந், தேசமெங்குந் திரிந்ததினாற் பதினாறுமோ
திருவான லட்சுமியைக் காண்கிலேனே; (715)

காண்கிலார்க் கென்னபலன் வந்தாலென்ன கருவான சிவ
யோகத் திருந்தாலென்ன, பாங்குபெற வட்டசித்து மாடிலென்
னப் பக்குவமாய்க் காயவன்ற யிருந்தாலென்ன, பூங்கமல மாது
திரு வொளிகாணாட்டாற் புத்தியென்ன சித்தியென்ன புகழ்தா
னென்ன, சாங்கமாய்த் தீபமில்லா மனையோடொக்குஞ் சந்ததி
யில்லாத மலடாகும்பாரே. (716)

---

§ கஞ்சமலரென்பது—தாம்பூரம்.

பாரப்பா வாதிமுத லந்தந்தொட்டுப் பச்சையுடன் கெந்திலிங்கந் தாரங்காரம், வீரப்பா கொண்டதொரு வெடியுப் புங்கூட்டி மேன்மைபெற வோரிடையா யெடுத்துக்கொண்டு, நேரப்பா வந்திடைக்கு வலியான்கூட்டி *நினைவாகப் பழச்சாற்று லாட்டிக்கொண்டு, சாரப்பா வாட்டியதை வழித்துருட்டிச் சங் கையுடன் புடம்போடு சிவயோகப்படியே (717)

சிவயோகப் படியறிந்து புடந்தைப்போடு சேர்த்துநன்று யுருகியது கட்டிப்போகுஞ் சிவயோக மிதுவாகு மைந்தாமைந்தா சிறப்புடனே குகையில்வைத்து வுருக்கிப்பார்க்க, அவயோக மில் லாமற் சிவயோகமாகி யம்பரத்தின் குருவருளா லுருகிப்போகும், நவமான வகையுடனே யுருகிநின்ற நாதமணிப் பெருமைதனை நவிலொண்ணுதே. (718)

நாதமணி.

ஒண்ணுகி நின்றமணி தன்னைவாங்கி யுரிமையுட னதற்கு நிகர் பரியைச்சேர்த்துக், கண்ணுன குகைதனிலே யுருக்கிப்பாரு கருவான குருவிரண்டு மொன்றாய்க்கூடி, தன்மையா யுருகியது களங்கதாகுந் தாரணியிற் களங்குவகை யனந்தமுண்டு, பொன் ஞன பொன்விளையுங் களங்குதன்னைப் புத்திகொண்டு செம்பதனை நூற்றுக்கொன்றே. (719)

ஒன்றான களங்குதனை யொன்றுதாக்க வுண்மையுள்ள பசுமைதனை யென்னசொல்வேன், பன்றான பரப்பிரம வாலை யென்று பக்குவமாய்த் தானுருக்கி வைத்துக்கொண்டு, நன்றான மலராலே யர்ச்சனைசெய்து நன்மையுடன் றூபதீபங் கள்செய்து, மன்றான மனதில்நட மாடுகின்ற மகத்தான சோதித்தா யென்று போற்றே. (720)

போற்றியே கைதொழுது தங்கத்தாயை பூரணமாய் நின் றபரி பூரணியேயென்று, வாழ்த்தியே வணக்கமுடன் பணிந்துநின்று வரிசையுடன் ரேசகபூ ரகமும்பண்ணிப், பார்த்திபனே கும்பகத் திற் பதிவாய்நின்று பரஞான கேசரியே § பாக்கியசாலி, சோத்தி யங்கள் வாரம லென்னைக்காத்து தொண்டுசெய்த தொண்ட னெனத் துணைகொள்வாயே. (721)

§ பாக்கியசாலியென்பது—அதிர்ஷ்டசாலி.

கௌரிமணிக் களங்கு.

துணையாக வின்னமொரு சேதிகேளு § சோதியென்ற கௌரியுட மகிமைதன்னை, வினையமன்றிச் சொல்லுகிறேன் மைந்தா கேளு பேன்மையுள்ள கைலாய கிரியைத்தானும், இணையான சத்தியிலோர் கௌரிதானு மிருந்துதவஞ் செய்மகிமை யென்ன சொல்வேன், மணையான நடுமனையில் நின்றுகொண்டு மகத்தான வல்லபங்கள் மகிழ்ந்திட்டாரே (722)

மகிழ்ந்திட்ட கௌரியுட வல்லபங்கேள் வாய்துணிந்து சொல்வதற்கு நாவுமுண்டோ, நெகிழ்ந்திட்ட கௌரியொடு மணியாய்வாங்கி நேர்மையுள்ள வல்லபமா நாதந்தன்னில், சுகதிட்டமாகவேதான் சுருக்குத்தாக்க சோதியென்ற வல்லபத்தாற் சுத்தியாச்சு அருந்திட்ட மானதொரு கௌரித்தாய்தா னன்பான வல்லபத்தா லருள்கண்டாளே. (723)

அருளான வல்லபங்கள் சொல்லக்கேளு வாதியென்ற ரசமுடனே நாகலிங்கம், உருவான சாரமுடன் காரம்பச்சை யுண்மையென்ற வறுசரக்கு மொன்றாய்க்கூட்டி, கருவான வாய்நீரா லரைத்துருட்டிக் கனமான குகைதனிலே வைத்துமூடி, குருவான பதிநோக்கிக் கவசஞ்செய்து கூர்மையுடன் றனெடுத்துப் புடத்தைப்போடே. (724)

போடப்பா புடமதுவு நிதானங்கண்டு பொருந்தநன்றாய்ப் போற்றிமிகப் புடத்தைப்போடு, நாடப்பா வப்புடத்திற் சென்று நீயும் நன்மையுள்ள குகையதனை யெடுத்துப்பாரு, வீடப்பா பெலத்ததொரு கௌரிதானும் விபரமுள்ள வல்லபத்தா லுருகி நிற்குந், தேடப்பா தேடவென்றாற் கவுரிசத்து திறமான சத்துநிகர் தங்கஞ்சேரே. (725)

கௌரிகளங்குச் செந்தூரம்.

தங்கமதைக் குகையில்வைத்து வுருக்கிக்கொண்டு தாயான கௌரியதிற் சாகுமைந்தா, அங்கமுள்ள தங்கமதின் வல்லபத்தா லருளான கௌவுரியது வொன்றாய்க்கூடி, மங்களமா யுருகிநின்ற தெளிவையிந்த வையகத்தி லாரறிந்து வணங்கப்போறார், சங்கையுட னுருகினதோர் மணியைவாங்கிச் சதாசிவனார் பதிநோக்கி வைத்துப்போற்றே. (726)

§ சோதியென்பது—பிரகாசம்.

போற்றியந்த மணியெடுத்து மைந்தாகேளு பூரணமாய் மதிதனிலே நூற்றுக்கொன்று, பார்த்திபனே குகைதனிலே யுருக்கிப்பாரு பங்கயத்தின் தெரிசனத்தை யென்னசொல்வேன், சாற்றியதோர் வயததுவும் பதினாறாகித் தன்மையுடன் வாலையை தான பெண்தான், § கேத்திரத்தின் பேரொளியாய் நின்றமாது நிரஞ்சனமா யெங்குநிறைந் திருந்தாள்பாரே. (727)

பாரப்பா கௌரியுட களங்குதன்னைப் பக்குவமாய்க் கல்வத்திற் பொடித்துக்கொண்டு, சேரப்பா சுத்திசெய்த கெந்தி கூட்டி நேர்மையுள்ள தாரமுடன் லிங்கஞ்சேர்த்து, காரப்பா விரண்டுமொன்றாய்க் கூட்டிநல்ல கருவான வறுவகைநீர் தன்னாலாட்டிச் சேரப்பா வழித்துருட்டி வட்டுப்பண்ணித் திருவான ரவியொளியிற் காயப்போடே. (728)

போடப்பா நீர்வற்றி நன்றாய்க்காய்ந்தால் புத்தோட்டில் வைத்ததன்மே லோடுமூடி, விடப்பா பிலப்பதற்குச் சந்துபேணி விபரமுட னிதானமதை விரும்பிப்பார்த்து, நாடப்பா புடம்போடக் குருவைப்போற்றி நன்மையுள்ள வெருவடுக்கிப் புடத்தைப் போடு, கூடப்பா மனோன்மணியைத் தொழுதுநின்று குவிந்த புடமாறினபின் னெடுத்துக்கொள்ளே. (729)

கொள்ளந்தக் கலசமதை விடுத்துப்பாரு கூர்மையுள்ள செந்தூர மென்னசொல்வேன், சொல்லந்த மானதொரு செந்தூரந்தன்னை துப்பறவாய் நின்றவெள்ளி செம்பில்வைத்து, நில்லந்த நிலைதனிலே குருவைப்போற்றி நிச்சயமாய்ப் பணவிடை செந்தூரங்கொள்ளு, உள்ளந்த மானதொரு தேகந்தானும் ஓம்-ந-ம-சி வா-ய-மதாய் நிற்குந்தானே. (730)

லிங்கக்களங்குச் செந்தூரம்.

தானென்ற தயவாய்த்தான் குணத்தைக்கேளு சங்கையுடன் சொல்லுகிறே னங்கமாக, கோனென்ற குருவருளா லிங்கம்வாங்கிக் குவிந்தமல ரமுர்தமதிற் குணமாய்ச்சேர்த்து, வானென்ற ரவிதனிலே சுண்டிற்றானால் மகத்தான வக்கசடு நீங்கிப் போகும், வீனென்ற கசடதுதா நீங்கிநின்ற மேலான லிங்கமதை யெடுத்துக்கொள்ளே. (731)

§ நேத்திரமேன்பது—கண்.

எடுத்தந்தக் கட்டிதனை மைந்தாகேளு வேகாந்த மாதாந் தந் தன்னிற்சேர்த்து அடுத்து § ரவி கிண்ணமதிற் சேர்த்துமைந்தா வருளான தீபமதில் வைத்துக்காரு, தொடுத்ததொரு தீபமதாய் ஞெதநின்று துலங்கினதோர் லிங்கமதிற் சுவரும்பாரு, கடுத்துநன் ருய்ச் சுவரினதோர் லிங்கந்தானுங் கண்ணடங்கிக் கட்டினது கிண்ணந்தானே. (732)

கிண்ணமுடன் கட்டினதற் கையாகேளு திருவான பச்சையுடன் றேவிபூட்டி, நண்ணயமாப் முப்பூவுங் கூடச்சேர்த்து நாதம்விட் டாட்டியது கவசம்பூசி, தன்மையாய் ரவிதனிலே காயப்போட்டு தளராமல் மண்சீலை வலுவாய்ச்செய்து, வண்ணி யென்ற லிங்கமதைப் புடத்தில்வைத்தால் வரிசையுட னுருகியது மணியுமாமே. (733)

மணியான லிங்கமணி தன்னைவாங்கி மார்க்கமுட னதற்கு நிகர் மைந்தாகேளு கனியான கனிபொருந்துந் தங்கந்தன்னைக் கனியநன்று யுருக்கியதில் மணியைச்சேரு, தணியாத தங்கமுடன் லிங்கஞ்சேர்த்து தன்மையுட னுருகியது வுண்மையாகும், பணியான லிங்கமது பணிந்துநின்ற பத்தியுள்ள களங்கமது முத்தியாச்சே. (734)

ஆச்சப்பா முத்தியுள்ள களங்குதன்னை யாதியந்த வெள்ளி செம்பு நூற்றுக்கொன்று, பாச்சப்பா விக்களங்கி லொன்றுசேர்க்கப் பதிவான சோதியைநா னென்னசொல்வேன், நீச்சப்பா வெகு நீச்சு லிங்கத்தாய்தா னேர்மையினுற் றங்கத்தா யங்கமாளுள், மூச்சப்பா வடங்கிநின்ற களங்குதன்னை முறையாகச் செந்தூர முகிவைக்கேளே. (735)

செந்தூரம்.

முகிவென்ன வென்றுக்கால் மைந்தாகேளு முறையாகக் களங்குநிகர் கெந்திகூட்டி சகியாத வீரமுடன் சாரஞ்சேர்த்துச் சமரசமா யொன்றுகப் பொடித்துமைந்தா, சுகிதமுட னறுவகை நீர் தன்னுலாட்டித் துப்பறவாய் வழித்துருட்டி வட்டுப்பண்ணி, மகிமையுள்ள ரவிதனிலே யுலரப்போடு மார்க்கமுட னுலர்ந்த பின்பு வரிசைகேளே. (736)

§ ரவிக்கிண்ணமென்பது—செம்புக்கிண்ணம்.

வரிசையுள்ள வோட்டில்வைத்து மண்தான்செய்து மார்க்க முட னிதானமதாய்ப் புடத்தைப்போட்டு, கரிசனமாய் நீயிருந்து குருவைப்போற்றி § காங்கைநன்று யாறினபின் னெடுத்துப்பாரு, உரிசையுள்ள செந்தூர மென்னமசொல்வே னுரிமையுடன் சிமிழ் தனிலே பதனம்பண்ணி, தெரிசனமாய்ப் பணவிடைதா னுள்ளே கொண்டாற் றேகவச்சிர காயமதாய்த் திறக்கும்பாரே. (737)

சவ்வீர மணிக்களங்குச் செந்தூரம்.

பாரப்பா சவ்வீர முறையைக்கேளு பக்குவமாய்ச் சொல் கிறேன் பழுக்குமார்க்கம், ஆரப்பா வறிவார்கள் வீரந்தன்னை யந்த ரச வீரமதை யடக்கக்கேளு, நேரப்பா நின்றமா தாந்தந்தன் னில் நிச்சயமாய்ப் பூவிற்பண விடைதான்சேர்த்து, நீரப்பா முறிந்ததுவுந் தண்ணீராகும் நிறமான தண்ணீரில் வீரம்போடே. ()

போட்டதனை யணலில்வைத்துச் சுண்டிற்றானாற் பொன்னி றம்போல் வீரமது கட்டிப்போகும், நாட்டமுடன் கட்டிதனை யெடுத்துமைந்தா நன்மையுள்ள பச்சையுடன் தாரங்கூட்டி, தேட்ட முடன் காரமது மூன்றுமொன்றாய்ச் செம்மையுடன் வாய்நீரா லரைத்துக்கொண்டு வாட்டமில்லா வீரமதற் கங்கிபூட்டி வரிசை யுடன் காயவைத்து மண்தான்செய்யே. (739)

செய்ததொரு கவசமதை யுலரவைத்துச் செம்மையுட னிதானமதாய்ப் புடத்தைப்போடு, சைதன்னிய மானகுரு தன் னைப்போற்றிச் சங்கையுடன் றணலாறி யெடுத்துப்பாரு, கொய்த தொரு கவசமதில் வீரராசன் கொடிதான வக்கினியிற் குணமாய் நின்று, மெய்தவறாச் சங்கையுட னுருகிநின்று மேலான ஞான மணி யாகும்பாரே. (740)

பாரப்பா பாராளும் வீரராசன் பதிவான மணியதனை யெடுத்துக்கொண்டு சேரப்பா வதற்குநிகர் தங்கங்கூட்டி சின்ம யத்தின் குருவருளா லுருக்கிப்பாரு, வீரப்பா கொண்டப்ரி வீரம் ரெண்டு மெய்யாக வுருகியொரு மணியாய்ப்போகும், ஆரப்பா வறிவார்கள் வீரப்போக்கு வமர்ந்தரச வீரமணிக் களங்கைவாங்கே.

§ காங்கையென்பது—சூடு.

வாங்கியந்தக் களங்கதனை வைத்துக்கொண்டு மதியான வெள்ளிசெம்பில் நூற்றுக்கொன்று, பாங்குபெறத் தான்கொடுத்து யுருக்கிப்பாரு பரஞ்சோதி யானதொரு தங்கமாகும், பூங்கமல மாதுதிரு வுதயமானாற் · புத்தியுட னம்மாதைப் பூசைபண்ணு, தீங்ககலுஞ் சுயமான புத்தியுண்டாந் திருவான களங்கமதின் திறத்தைக்கேளே. (742)

செந்தூரம்.

திறமான களங்கதனை யெடுத்துக்கொண்டு செம்மையுள்ள கெந்தகமும் லிங்கங்காரம், உறமான § விடைக்கிடைதான் வைத்து நல்ல வுறுதியுள்ள வறுவகைநீர் தன்னாலந்த, நிறமான நால் வகையும் நன்றாய்ச்சேர நிறுத்திநன்றா யரைத்துருட்டி வட்டுப் பண்ணி, மறவாக நிழலில்வைத்து வுலர்த்திநல்ல மார்க்கமுட ளோட்டில்வைத்து மண்தான்செய்யே. (743)

செய்ததொரு கவசமதை நன்றாய்வாட்டிச் செம்மையுட னிதானமதாய்ப் புடத்தைப்போட்டு மெய்தவறா மனோன்மணி யைத் தொழுதுநில்லு மேன்மையுள்ள புடமதுவுங் குளிர்ந்தால் மைந்தா, உய்தமுள்ள கவசமதைத் திறந்துபார்த்தா லுண்மையுள்ள செந்தூர மென்னசொல்வேன், சைதன்னிய மானசெந் தூர மென்று தன்மையுள்ள சிப்பிதனி லடக்கம்பண்ணே. (744)

அடக்கமுள்ள செந்தூரம் பணவிடைதான்மைந்தா யனு தினமு மந்திசந்தி கொண்டாயானால், முடக்கமுள்ள தேகவச்சிர காயமாகு முத்திநின்ற நரைதிரைக ளகன்றுபோகும், தடைக் கவச மானதிரை விலகிநல்லச் சச்சிதா நந்தமென்ற வுண்மை காட்டும், விடக்கெடுத்த நாய்போலே மருவிநின்றால் மேல் வரம்பு கீழ்வரம்பு தெரியாதென்னே. (745)

அரியெழுத்து மகிமை.

தெரியாமல் மதிமயங்கி நூலைப்பார்த்து செம்மையில்லா வழிதுறைகள் செய்துகொண்டு, குறியான நெறியதனை யறியாமற் றான் குருடராய் வாய்மதங்கள் மெத்தப்பேசி, அறியான வட்ச ரத்தி லடுக்காமற்றா னறுசுவையில் மாண்டிறந்தார் கோடாகோடி, சரியான பதினெட்டு வெழுத்துக்குத்தான் தாயான முதலெழுத்தை யழுத்திப்பாரே. (746)

§ இடைக்கிடையென்பது—சரிக்குச்சரி.

அழுத்திமுனே பாராம லுத்தமாண்ப ராநியந்த நாத விந்தை யறிந்தோமென்று, வழித்தியவ னுயிர்நிலையில் வணங்கா மற்றுன் மார்க்கமுள்ள தபோதனர்போற் பூசைசெய்வான் நெளித் தமனந் தனைநிறுத்தி வாசிபூட்டி நேர்மையுடன் சிவயோகத் திருந்துகொண்டு, சுழித்தியென்ற வவத்தைகளைத் துரத்திமைந்தா சுபஞானத் தீபமதிற் றுலங்கிநில்லே. (747)

பாஷாணக்கட்டுப் பற்பம்.

துலங்கிநின்ற பாஷாணத் தொழிலைக்கேளு சோதியென்ற மனோன்மணியாள் சொன்னவார்த்தை, விளங்குகின்ற § வெள்ளை யடா மாயாரூபம் விரும்பியந்த வெள்ளையிலோர் கட்டிவாங்கி, கலங் காமற் பாண்டமதிற் பழச்சார்விட்டுக் கருவான வெள்ளைதனைக் கட்டித்தூக்கி, அலங்காம லடுப்பில்வைத்துத் தீயைமூட்டி அப் பனே சார்வற்றிக் கட்டும்பாரே. (748)

கட்டிநின்ற பாஷாணந் தன்னைவாங்கிக் கணக்காக வதற் கிடைதான் முப்புச்சேர்த்து, திட்டமுட னதற்கிடைதான் ரசத் தைவார்த்துத் திருவான வறுவகைநீர் தன்னாலாட்டி, நெட்டங்க வரைத்ததனை வழித்துருட்டி நேர்மையுடன் ரவிதனிலே காய வைத்து, சட்டமுடன் காய்ந்தவில்லை யோடுசேர்த்துச் சந்து வாய்ச் சீலைசெய்து வைத்துக்கொள்ளே. (749)

வைத்ததொரு கவசமதை மைந்தர்கேளு மார்க்கமுடனிதா னமாய்ப் புடத்தைப்போட்டு, சுத்தமுடன் சற்குருவைத் தியா னஞ்செய்து சூளைநன்று யாறினபின் கவசந்தன்னை, பத்தியுடன் றனெடுத்துப் பரிவாய்ப்பாரு பரமகுரு வானதொரு பற்பமாகும், புத்தியுடன் பற்பமதைப் பதனம்பண்ணிப் பூரணியே காரணியே யென்றுபோற்றே. (750)

போற்றிநின்ற பற்பமதிற் பணவிடைதானெடுத்துப் பொரு ளான பரித்தகடு கழஞ்சுவாங்கிப், பார்த்திபனே பற்பமதை வாய் நீராலே பரிவாகத் தான்குழைத்துத் தகட்டிற்பூசி நேர்த்தியா யோட்டில்வைத்துப் புடத்தைப்போடு நிசமான பரியதுவும் நீறிப் போகும், சாற்றியதோர் நீரெடுத்து வைத்துக்கொண்டு தன்மை யுட னல்லவெள்ளித் தகட்டிற்பூசே. (751)

§ வெள்ளையென்பது—வெள்ப்பாஷாணம்.

பூசியதோர் தகடதனைப் புடத்திற்போடு பொருளான வெள்ளியது தங்கமாகும், நேசமுள்ள தங்கமதை வைத்துப்பூசி சேர்மையென்ற சிவயோக முத்தியாகும், பாசமுள்ள பொருளதன்மே லாசைகொண்டாற் பாஷாண மாய்கைவந்து மூடிக்கொள்ளும், வாசமுள்ள பொருளதனைக் கண்டாயானால் மனவெறுப்பாய் நீயிருந்து மனதைக்காரே. (752)

ஞானம்.

காரப்பா மனமான வாசிதன்னைக் கருணையுள்ள வாசியினால் யோகம்பாரு, நேரப்பா நின்றபூ ரணத்தைப்பாரு நின்றிலங்குந் தீபமதை நினைவாய்ப்பாரு, வீரப்பா கொண்டதொரு லகிரிபாரு மெய்யான காயாதி கற்பம்பாரு, தூரப்பா வடிமுடியு மொன்றாய்ப்பாரு சுந்தரம்போ லாயிரத்தைச் சுகமாய்ப்பாரே. ()

பார்க்கையிலே யறுசமயம் நன்றாய்த்தோன்றும் பரமகுரு பதிதனிலே தீபந்தோன்றும், தீர்க்கமுடன் § மதிதானுந் தேய்ந்து மெள்ளச் செங்கதிராள் தன்னிடத்திற் சேர்வையாகும், மார்க்கமுடன் மதிதேய்ந்து கதிரைக்கண்டால் மதிமறைந்த சோதிதனை யறியாமூடர், வாக்குமன தொன்றாகிக் கதிரைப்பார்த்தால் மதிவழங்குந் தன்மைதனை வகுக்கலாமே. (754)

ஆமப்பா விப்படியே ரவிமதியைக்காண அடங்காத சிவயோகமதுதானுண்மை, காமப்பால் கானற்பா லகன்றுதேர்ந்த கருணையுள்ள சித்தர்தமக் கடுத்தவாறு, நாமப்பா வென்றமதந் தன்னைக்கொண்டு நாட்டடா வாசியென்ற கம்பந்தன்னை, வாமப்பால் கொண்டுகரை யேறிக்கொண்டால் வரிசையுள்ள வாசியிற்சென் றேறலாமே. (755)

ஏறலா மெந்தவகை யாலுமைந்தா வேதாந்தப் பெருவெளியி லேறிக்கொண்டு, கூறலாஞ் சகலகலைக் கியானந்தன்னைக் கூர்மையுட னக்கலையைக் கூர்ந்துபார்த்து, மாறலா மதிகலைந்து ரவியிலேற வாசியென்ற புரவிதனை மார்க்கமாகப் பாரெலாஞ் சுற்றிவர வேறிக்கொண்டு பதிவான விடந்தனிலே பாய்ச்சலாமே. ()

---

§ மதியென்பது—சந்திரன்.

பாய்ச்சந்தப் பதிதனிலே வாசிபூட்டிப் பணிந்துநின்று ரேசகபூ ரகமும்பண்ணி, நீச்சந்த மலையாத கும்பகத்தில்நின்று நேரோட்டந் தானறிந்து நிலையைக்கண்டு, பேச்சந்த மான தொரு சத்தந்தன்னிற் பேரண்ட மானகுரு தன்னைப்போற்றிக் காய்ச்சந்தக் கனலாலே சுட்டுப்போடு கருவிதா னுதியந்தக் கசடைத்தானே. (757)

தானென்ற கசடகற்றுஞ் சுத்தமாகுந் தாணிதனி லுயிர்ப் பயிர்கள் தயங்காதையா, ஊனென்ற வுடம்பெடுத்தாற் சாகாக் கல்வி உண்மையுடன் கற்பதற்கு வுன்னைப்பாரு, தேனென்ற வமுர்தகலை மீதிலேறி தீயென்ற நெறுப்பாறு மயிர்ப்பாலத்தில், வீனென்ற வாசையைநீ யகற்றியேறி வேகாது மயிர்ப்பாலம் வெற்றியாமே. (758)

வெற்றியென்ற மயிர்ப்பால மீதிலேறி வெகுசுறுக்காய் நாதாந்த வீட்டைத்தாண்டி, பத்தியுடன் விதியதனால் மதியை நீக்கிப் பானுவெனும் ரவியினிடம் பதிவாய்நின்று, முத்தியெனு மத்தியாஞ் சோதிவீட்டில் முன்முகப்பில் நீயிருந்து முழித்துப் பாரு, சுத்தமதாய் நின்றிலங்குஞ் சோதியான சுயஞ்சோதி யான தொரு தீபம்பாரே. (759)

பாரப்பா பரஞ்சோதி யானதீபம் பதிவாகிப் பூரணமாய் நின்றதிடம், மேரப்பா மேருநடு வானதீபம் மேல்கீழாய் நின்றி லங்கு மேலாந்தீபம், காரப்பா வாலைபதம் பணித்திட்டாக்கால் கனமான வட்டமா சித்தியெய்தும், ஆரப்பா வறிவார்க ளாதி தீபம் மரகரா வறிவான தீபந்தானே. (760)

அறிவான தீபமடா அகாரதீபம் மந்தாங்க மானதிது வாம தீபம், நெறியான தீபமதைக் குறியாய்க்கண்டால் நீச்சில்லை பேச் சில்லை நிலையுமில்லை, குறியான குறியோடே காலாலேறிக் குடி யிருந்து மடிந்தவிடங் குணத்தைப்பாரு, சரியான மூலமடா மூப் பாழாகும் § சள்ளையற்ற விடமதுதான் றுய்வீடாமே. (761)

§ சள்ளையென்பது—கவலை.

தாயான மூலமடா உகாரரூபி சங்கையில்லா வாசமுள்ள சலிகைக்காரி, மாயான மாயமுள்ள மார்க்கந்தானு மகத்தான போதையுள்ள வாமரூபி, பேயான மதிமயக்கிப் பேசாசித்தம், பேச்சறியாள் மூச்சறியாள் பிணம்போல்நிற்பாள், வாயார மதி யமுர்தங் கொள்ளாப்பேதை வலிமையுள்ள பூரணியை வணங்கி நில்லே. (762)

வணங்கிமன மகிழ்ந்தடிமை யாகிநின்றால் மார்க்கமுள்ள சத்தியவள் வலுமையாகி, இணங்கிவினை யாடியுன திடத்தே நின்று ஈரெழுத்து மோரெழுத்து மிணக்கிவிப்பாள், குணங் குவிந்த நலமான குருவைப்போற்றிக் கூறுடனே வாழாமற் குறிப்பேகொண்டு, § சுணங்கனைப்போற் றிரிந்ததனு லாவதென்ன சுழிமுனையும் வழிதுறையுந் திறந்துபாரே. (763)

மச்சமுனி சரக்குவைப்பு எண்ணூரில் பார்க்கவும்.

பாரான சரக்கினிட வைப்புதானும் பாடினர் மச்சமுனி யெண்ணூறிற்று, னேராக வெண்ணூறு பாடல்பார்த்து நிச்சய மாய்க் கொங்கணவர் சரக்குவைத்தார், பேரான பேர்க்குமோர் பாடுநூலிற் பெருமையுடன் சரக்குகளைக் கொஞ்சஞ்சொன்னர், பூரய மாகவேதான் சட்டைநாதர் போக்குடனே பேர்வழிகள் பொருள்சொன்னரே. (764)

சொன்னரே யகத்தியருஞ் சரக்குநேர்மை சுகமான காவி யத்தில் நன்றுய்ப்பாரு, கண்ணார சித்தாதி நோய்கடன்னைக் கருத் துறவே பாரதிலே கசடுநீங்கும், விண்ணான பதிநுலங்கும் விபர மாகும் வேதாந்தஞ் சித்தாந்தம் விபரந்தோன்றும், பண்ணான பலபாஷை பயனுங்காணும் பருவமுடனுயிரத்திற் பணிந்துநில்லே.

கற்பூர வைப்பு.

பணிந்துநின்றுற் சொல்லுகிறேஞ் சரக்குநேர்மை பத்தி யுடன் வைக்குவ லாறுதன்னைக் கனிந்துமன தருதியினுற் பாரு பாரு கருவான வீரத்தின் வைப்புதன்னை அணிந்தவெடி யுப்பு டனே சீனக்கார மன்பான நவச்சார மன்னபேதி, தணிந்ததொரு இந்துப்பு துரிசுவெள்ளை தப்பாமலெழுசரக்குஞ் சரியாய்வேண்டே.

§ சுணங்கனென்பது—நாய்.

வேண்டியதோர் சரக்குநிறை ரசமுங்கூட்டி மேலான தாயதுவும் பத்துக்கொன்று, பூண்டதோர் சரக்கெல்லாங் கல்வத் திட்டு பொடித்துநன்று யறுவகையாய்ப் பிரட்டிக்கொண்டு, ஆண் டபதி யானதொரு காசிக்குப்பி யளவாக மருந்திட்டு மண்ணும் பூசி, பாண்டமென்ற பதிதனிலே மணலுமிட்டுப் பதிவான குப்பி வைத்து மேலும்போடே. (767)

போட்டுநன்று யடுப்பேற்றித் தீயைமூட்டிப் புத்தியுடன் தீயெரிக்கும் போதிலையா, நாட்டினின்ற குப்பிதனிற் § சிலாகைப் போட்டு நன்மையுடன் பதனமதாய்க் கிண்டிப்பாரு, பூட்டிநின்ற சரக்கதுதா னுருகுங்காலம் புத்தியுடன் தீயாற்றிக்கு ளிரவைத்து, தாட்டிகமாய்க் குப்பிதனை யுடைத்துப்பாரு சந்தனம்போ லொளி யாகிக் கட்டுந்தானே. (768)

வீரவைப்பு.

கட்டிநின்ற வீரத்தைப் பொடித்துமைந்தா கருவான செயநீராற் பிசறிக்கொண்டு, இட்டமுடன் முன்போலே குப்பிக் கேற்றித் தீர்க்கமாய்ப் பாண்டமதிற் செலுத்திமைந்தா, சட்ட மதாய் முன்போலே யெரித்துவாங்கத் தூயவான சவ்வீர மென்ன சொல்வேன், மட்டில்லா வேதைய தற்கானவீர மாசற்ற வீர மதை வணங்கிநில்லே. (769)

வணக்கமுள்ள கற்பூரஞ் சொல்லக்கேளு வாணவெடி சீன மொடு காரங்கூட்டி இணக்கமுள்ள குந்துருக்கஞ் சரியாய்க்கூட்டி யெட்டிலொன்று வால்மிளகு விசைந்துநல்ல, கணக்குடனே சரக் கையொரு கல்வத்திட்டுக் கதிக்கநன்றாய்த் தான்பொடித்து வைத் துக்கொண்டு, பிணக்கில்லாக் கற்பூரம் பத்துக்கொன்று பேணி நன்றாய்ச் சேர்த்ததிலே பின்னுங்கேளே. (770)

கேளப்பா வப்பொடியிற் பாணம்பூட்டிக் கிருபையுடன் தான்குழப்பி தாழிக்கேற்றி, நாளப்பா மண்டலமே சமாதிவைத்து நன்மையுடன் தானெடுத்து மைந்தாகேளு, நீளப்பா தான்வற்றி யிட்டுப்போலே நிசமாக விருக்குமடா பூரம்பூரம், ஆளப்பா வப் பூர மதிகபூர மரகரா கற்பத்திற் காதியாமே. (771)

§ சிலாகையென்பது—இரும்புக்கம்பி.

ஆதியந்த கற்பூர மார்தான்காண்பா ரருளான பூரணத்தை யறிந்தோன்காண்பான், சோதியென்ற கற்பூரத் தன்மைதன்னாற் றொல்லுலகி னுதாக்கட்டு றவமேறி, நீதியென்ற காயாதி கற்பங் கொண்டு நிலைத்தார்கள் கற்பவரை நிமிஷமாகச், சாதியென்ற சங்கற்பந் தன்னிற்சத்தி சிவமந் திரத்திற் றுணையில்லை. (772)

தானாகத் தனித்திருந்து கற்பங்கொள்ளு தன்மையுள்ள பூரணத்தி னேக்கிநில்லு, கோனான சற்குருவை வணங்கிக்கொள் ளுக் குருவான பதியறிந்து கூர்ந்துபாரு, தேனான மதியமுர்தங் கொண்டுதேறி சின்மயத்தி னருள்பெருகத் தியானம்பண்ணு, ஊனான காயமடா வலுத்துப்போகு முற்றசிவ யோகமறி லுகந்துநில்லே. (773)

துரிசு வைப்பு.

உகந்துநன்று பின்னமொரு சரக்குச்சொல்வே னுரிமை யென்ற பச்சையடா துரிசுப்போக்கு, வருந்திநன்றுச் சொல்லு கிறேஞ் சீனக்கார மார்க்கமுட னகாரமதை வாங்கிவந்து, உகந்து செய்பு பாத்திரத்தி விட்டுமைந்தா வுண்மையுடன் பழச்சாறுந் தயிரும்வார்த்து அகந்தனிலே குழிவெட்டி சமாதிவைப்பா யப் பனே மண்டலந்தான் சென்றுவாங்கே (774)

வாங்கிநன்றுய் கிண்டியதிற் பின்னுமக்காள் வளமான பழச் சாறுந் தயிரும்வார்த்து, தாங்கிநன்றுய் குழிவெட்டி முன்போ லப்பா சமரசமாய் சமாதிதனில் வைத்துப்பாரு, பாங்குபெறத் துரிசுநிற்கு மென்னசொல்வேன் பச்சையென்ற பச்சைநிற மிதற் கொவ்வாது, சாங்கமுள்ள சரக்குகளுக் கிறுதானப்பா தன்மை யுள்ளத் துரிசுவெகு துரிசாம்பாரே. (775)

நவச்சார வைப்பு.

துரிசான நவச்சாரஞ் சொல்லக்கேளு தூர்கனத்த தாழி யடா பிங்கான்றுழி, பரிசாகக் கொண்டுவந்து மைந்தகேளு பன் றியுட னமுரிமாட் டபுரிதானும், பெரிசான யானை § பரி யொட் டைகூட்டு பெருமையுட னமுரியொன்றுய் சமனுய்க்கூட்டித், தழு சான பாண்டமதி லிட்டுமைந்தா சொல்லுகிறேன் சீனமுடன் காரஞ்சேரே. (776)

§ பரியென்பது—குதிரை.

சேர்த்துநன்றாய்க் கரைத்துவடிப் பேற்றிநீயுஞ் செம்மையுடன் தீயெரித்து வற்றக்காய்ச்சி பார்த்திபனே குழம்பான பருவந்தன்னிற் பற்றிக்கொண்டு பழுந்தயிரை புறையக்குத்தி, போற்றிநன்றாய் மேற்சட்டி கொண்டுமூடி பூமிதனில் § மண்டலமே சமாதிவைத்து, கார்த்திருந்து தானெடுக்க சாரமொன்றாய்க் கட்டியது நவச்சாரங் கருணையாச்சே. (777)

ஆச்சப்பா நவச்சார மதிகச்சார மடங்காத சரக்குகளையடக்குஞ்சார, மூச்சப்பா முன்னிலையா யிறுத்துஞ்சாரம் மூதண்டகாயத்துக் கர்னசாரம், வீச்சப்பா வியாதிகளை விலக்குஞ்சாரம் வேதாந்த சிரோன்மணியாய் நின்றசாரம், பேச்சப்பா பேசாதநவமாய்நின்று பெருமைகொண்ட சாரமடாப் பேணிப்பாரே. ()

பாரப்பா துரிசுபா ஷாணஞ்சொல்வேன் பத்திகொண்டு நாகரச மொன்றாய்ச்சேர்த்து, நேரப்பா கெந்தகமுந் தாரம்பச்சை நிசமான லிங்கமுடன் வீரங்கூட்டி, காரப்பா கல்வமதிற் பொடித்துக்கொண்டு காசியென்ற குப்பியிலே சேர்த்துமைந்தா, நேரப்பா மூடிநன்றாய் மண்ணுஞ்செய்து நேரடங்கத் தாழியொன்று விரும்பிவாங்கே. (779)

வாங்கியந்தத் தாழியரை மண்ணுமிட்டு மணல்மறபிற் குப்பிவைத்து வரிசையாகத் தாங்கியந்த வடுப்பில்வைத்துத் தீயைமூட்டு சமரசமா யுருகுபதந் தன்னைக்காண, பாங்குபெறச் சிலாகையிட்டுக் கிண்டிப்பாரு பருவமுள்ள சரக்கெல்லா முருகிநிற்குந் தூங்காம லப்பதத்தி லிறக்குமைந்தா சுறுங்கநன்றா யாரவைத்து யெடுத்துப்பாரே. (780)

எடுத்துமிக மேருவைநீ யுடைத்துப்பாரு யென்னசொல்வேன் துரிசுபா ஷாணந்தன்னை, அடுத்தசரக் கறுபத்து நான்குமைந்தா வன்பான துரிசுபா ஷாணங்கண்டார், தொடுத்தமன தடங்கியவர் கட்டிப்போவார் நீற்றினமுங் கட்டிவிடுஞ் சுகமாமைந்தா, நடுத்தரமாய்ச் சொன்னதொரு பாஷாணத்தை நலமான குருமுறையாய் நாட்டிப்பாரே. (781)

§ மண்டலமென்பது—நாற்பதுநாள்.

தாளக பாஷாணம்.

நாடிநின்ற தாளகபா ஷாணஞ்சொல்வே னயமான நாக முடன் ரசத்தைக்கூட்டி, கூடியொன்றாய்த் தான்கூட்டிப் பொடித் துக்கொண்டு குணமாக விதற்கிடைதா ரண்டுஞ்சேர்த்து, தேடி நன்றாய்ப் பச்சையுடன் வெடியுப்புங்காரஞ் சேரவே யொன்றுக்கு நிறுத்துக்கொண்டு சூடியதோர் கல்வமதில் பொடித்துமைந்தா சுகமான வறுவகைநீர் பிசறிக்கொள்ளே. (782)

பிசறினதோர் மருந்ததுதான் ரவியிற்போட்டு பிரியமுடன் பொடித்துநன்றாய்க் குப்பிக்கேற்றி, கசகாமல் மண்சீலை வலுவாய்ச் செய்து கருத்துறவே முன்போலே § தாழிக்கேற்றி, நிசமாக வடுப் பேற்றி யனலூட்டி நீமகனே யுருகுபதந் தனிலிறக்க, மசகா மற் குளிரவைத்துக் குருவைப்போற்றி மார்க்கமுட மேருவைநீ யுடைத்துப்பாரே. (783)

உடைத்துமிகப் பார்க்கையிலே சரக்கெல்லாந்தா னுக முடிந்து வொன்றாகி யுருகிநிற்கும், படைத்தகுரு பரமனரு ளாற்கட்டிநின்ற பாஷணாப் பேரதனை பகரக்கேளு, திடத் துடைய தாரபா ஷாணமப்பா திருத்தமுடன் பாஷாணம் பதனம் பண்ணி, விடைத்தநவ லோகமதி னூற்றுக்கொன்று விட்டுருக் கிப் பார்க்கரவி போலாங்காணே. (784)

லிங்க பாஷாணம்.

காணப்பா லிங்கபாஷாணஞ் சொல்வேன் கருவான விந்து வுட னாதங்கூட்டி பேணவே புனல்ரசமுங் கூடச்சேர்த்து பெரு மையுடன் மூன்றுமொன்றாய் பொடித்துக்கொண்டு, தோணவே யிடைக்கிடைதான் லிங்கம்பச்சை சுத்தமுள்ள தாரமுடன் காரம் வீரம், பூணவே யைந்துமவ் விடையேவாங்கி பொருந்தவொன் றாய் ரேசித்துக் கல்வத்தாட்டே. (785)

ஆட்டிநன்றாய்ப் பொடித்துநல்லக் குப்பிக்கேற்றி யழகு பெற மண்சீலை வலுவாய்ச்செய்து பூட்டியதோர் தாழிதனில் முன் போல்வைத்துப் பூரகமாய்த் தீயெரித்துப் பதத்தைப்பாரு, நாட்டிய தோர் குப்பிதனிற் சரக்கெல்லாந்தா னன்மையுட னுருகியது குழம்பாய்நிற்குந், தீட்டியதோர் சிலாகையினாற் சோதித்தேதான் செம்மையுடன் தீயாற்றிக் குளிரவையே. (786)

§ தாழியென்பது—மூடாப்பானை.

வைத்ததொரு குப்பிதனை யெடுத்துமைந்தா வரிசையுடன் றனுடைத்துப் பார்த்தாயாகிற், சுத்தமுள்ள பாஷாண மென்ன சொல்வேன் சோதியென்ற லிங்கபாஷாண மென்பேன், பத்தி யுள்ள பாஷாணந் தன்னில்மைந்தா பழுப்பானவேதையிலே யனந்தமுண்டு, புத்தியுடன் பார்த்தவர்க் கெல்லாமுண்டு பூரணமா மாயிரத்திற் புகுந்துபாரே. (787)

கெந்தி பாஷாணம்.

பார்க்கையிலே சிவயோக நன்றாய்த்தோற்றும் பரஞான கேசரியும் பதிவாய்நிற்பான், ஏர்க்கையுடன் கெந்திபா ஷாணஞ் சொல்வே னின்பமுள்ள ரசமூன்று மொன்றாய்க்கூட்டி, மார்க்க முட னிதற்குநிகர் கெந்திதார மனமில்லாப் பச்சையுடன் வீரங் காரஞ், சேர்க்கையுட னெண்சரக்கு மொன்றாய்க்கூட்டிச் செம்மை யுடன் றன்பொடித்துக் குப்பிக்கேற்றே. (788)

ஏற்றிநன்றாய் மண்சீலை யிறுகச்சுற்றி யின்பமுடன் முன் போலே தாழிக்கேற்றி, போற்றிநன்று யடுப்பேற்றித் தீயை மூட்டிப் புத்தியுடன் பதனமதாய் வைத்துப்பாரு, சோத்தியங்கள் வந்ததினு லில்லம்வேகுஞ் சுருதியுள்ள மனந்தனிலே பயம்வைத் தப்பா, காத்திருந்து தீயெரித்து வுருகும்போதிற் கருணையுடன் றனிறக்கி யாறவையே. (789)

ஆறிநன்றாய்க் குளிர்ந்ததன்மேற் குப்பிவாங்கி யன்பாகத் தானுடைத்துப் பார்க்கும்போது, மீறிநின்ற வெண்சரக்கு மொன் றாய்க்கூடி, விபரமுட னுருகியது கட்டிபோலா, மாறிநின்று மருகாதே யிதுதானப்பா மார்க்கமுள்ள கெந்தபா ஷாணமாகும், வீறியத்தைத் தானடக்குங் கெந்திதன்னை வினையமுற்றுப் பார்த்த தினல் வேதையாமே. (790)

உப்புக் கட்டு.

வேதையென்று லவணமடா வுப்புகட்டு வெகுதெளிவாய்ச் சொல்லுகிறே னின்னங்கேளு, பேதையென்ற குதிரையடி § குழி மீட்டானும் பெருந்தும்பை தாழையுடன் மேனிகூட்டி, நீத முட னைவகைச்சார் சரியாய்க்கூட்டி நேர்மையுள்ள சாறதற்கு நாலுக்கொன்று, போதமுள்ள கரியுப்பைக் கரைத்துக்கொண்டு பொங்காமற் றீயெரித்து வற்றக்காச்சே. (791)

---

§ குழிமீட்டானென்பது—ஓர்பூண்டு.

காய்ச்சினதோ ருப்பதுவுங் கட்டிப்போகுங் கருணையுட னதற்கரைதான் வெடியுஞ்சீனம், பாய்ச்சிநன்று யறுவகையா லரைத்துருட்டிப் பாலகனே யோட்டில்வைத்துப் புடத்தைப்போடு, தாய்ச்சியொன்று மில்லாம லுப்புநீறி தன்மையுள்ள சுண்ணமதா யிருக்கும்பாரு, நீய்ச்சில்லரச் சுண்ணமதை வைத்துக்கொண்டு நினைத்தபடி முடித்துவிடு நிசமாம்பாரே. (792)

கல்லுப்புச் சுண்ணம்.

பாரான கல்லுப்பைப் பொடித்துக்கொண்டு பதிவான சாறதிலே கரைத்துமைந்தா, சீராக வடுப்பேற்றித் தீயைமூட்டிச் செம்மையுட னீர்வற்றிக் காய்ச்சிப்பாரு, கூரான கல்லுப்பு கட்டிப் போகுங் கூறுடனே யிதற்கரைதான் வெடியுஞ்சீன, னேராகக் கூட்டிநல்ல செயநீர்விட்டு நிசமாக வரைத்துருட்டி § வட்டுப் பண்ணே. (973)

பண்ணியந்த வட்டதனை யோட்டில்வைத்துப் பரமகுரு தன்னருளாற் புடத்தைப்போடு, உண்ணியது யோகாம லுப்புநீறி யுரிசையுள்ள சுண்ணமதா யிருக்குமைந்தா புண்ணியமாய் நின்ற வர்க்குச் சுண்ணங்கிட்டும் பொல்லாத பாவியென்றாற் புத்துப்போ லாஞ், சென்னிமையை நோக்கியந்த குருவைக்கார்த்தாற் செம்மை யுடன் கண்டதெல்லாங் குருவாய்ப்போமே. (794)

கற்பூரச் சுண்ணம்.

குருவான கற்பூர சுண்ணங்கேளு கூர்மையுடன் பூரமதின் கட்டிவாங்கி, திருவான வறுவகைநீர் தன்னிற்றோய்த்துச் செம்மை யுடன் ரவியில்விடு பத்துமுறையப்பா உருவான கற்பூரங் கட்டிப் போகு முறுதியுள்ள தீபமதி லேறாதையா, கருவாக விப்படியே கட்டிக்கொண்டு கணக்காக விடைக்கிடையே வெடிசீனங்கூட்டே. ()

கூட்டினன்று யறுவகைநீர் தன்னாலாட்டிக் கூர்மையுடன் வழித்துருட்டி வட்டுச்செய்து நாட்டியே யோட்டில்வைத்துப் புடத்தைப்போடு நலமான கற்பூரச் சுண்ணமாகுந் திட்டியதோர் சுண்ணமதில் வேதைகோடி தெளிவான கற்பத்திற் குறுதியாகும், பூட்டியதோ ரிச்சுண்ண மார்தான்செய்வார் பொருமையுள்ள மச்ச முனி செய்தார்பாரே. (796)

§ வட்டுயென்பது—வில்லை.

பாரப்பா மச்சமுனி யெண்ணூறிற்றான் பதிவான சரக்கு வைப்பு சுண்ணக்காடு, நேரப்பா சொல்லுகிறு ரதைநீபாரு நிசமாக வப்பொருளு மிப்பொருளுமொன்றே, சேரப்பா சித்தாதி நூல்களெல்லாந் திறமாகச் சொன்னபொரு டெரியாதப்பா, பேரப்பா பெலத்ததோ ராயிரத்தைப் பெருமையுட னிருதயத்திற் பேணிக்காணே. (797)

துரிசு சுண்ணம்.

காணவே துரிசுனிட சுண்ணங்கேளு கட்டியொன்று பருமணியங் யெடுத்துமைந்தா பேணவே முப்பூவும் பூரச்சுண்ணம் பிலமாக விடைக்கிடைதான் சேர்த்துக்கொண்டு, நாணவே யறுவகைநீர் தன்னாலாட்டி நன்றாக வழித்துருட்டி யோட்டில் வைத்து, பூணவே மண்சீலை பூட்டிமைந்தா புடம்போட நீறியது சுண்ணமாமே. (798)

சுண்ணமென்றால் வெகுசுறுக்குத் துரிசுச்சுண்ணந் தொட்ட சரக் கத்தனையு மாண்டுபோகுஞ் சொன்னசரக் கத்தனையு மாண்டு தானாற் றகையில்லா வேதைமுறை செந்தூரங்கள், கண்ணிறைந்த களங்குவகை மெழுகுகோடி காணாத காட்சிதருஞ் சிமிட்டுப்போக்கு, விண்ணிறைந்த தீபமதிற் றாமவேதை. வேணபடி யாடிவிளை யாடலாமே (799)

தாம்பர சுண்ணம்.

ஆடலாம் வெகுகோடித் தாம்பரத்தை யருமையுள்ள சுண்ணமதாய்ச் சொல்லக்கேளு, தேடலாம் நாரலுடன் காரங்கூட்டி செம்மையுள்ள வாய்நீரா லரைத்துக்கொண்டு, போடலாந் தாம்பரத் தகட்டுக்கேதான் பூசிநன்று யோட்டில்வைத்துச் சீலை செய்து, நாடலாம் புடமதிலே வைத்துப்பார்க்க நன்மையுள்ள தாம்பரந்தான் § செத்துப்போமே (800)

செத்துநின்ற தாம்பர மெடுத்துமைந்தா சிவசிவா கல்வமதிற் பொடித்துக்கொண்டு, பத்தியுடன் முப்பூவும் பூரச்சுண்ணம் பதிவான துருசுடனே மூன்றுமொன்றாய்ப் புத்தியுடன் பொடிக்கு நிகர் சேர்த்துக்கொண்டு பூரணமாய் ரசமதுவும் பாதிசேர்த்து, சுத்திநன்றாய் யாட்டிவழி வாய்நீராலே துட்டதுபோல் வட்டதனைத் துலங்கச்செய்யே. (801)

§ செத்துப்போமென்பது—நீறிப்போகும்.

செய்ததொரு வட்டதனை யோட்டில்வைத்து சிவசிவா குழிவெட்டிப் புடத்தைப்போடு, கொய்துவைத்தப் புடமாறி யெடுத்துப்பாரு குருவான சுண்ணமதாய் நீறிநிற்கும், கைதவருச் சுண்ணம்வெகு காரங்காரங் § காசினியி லாறிந்து செய்வாரையா, மெய்தவருச் சித்தனென்றுற் செய்வான்பாரு வேதையிநிற் கோடான கோடிதானே. (802)

நந்தியுப்புச் செயநீர்.

தானென்ற தத்துவத்தை யகற்றவேண்டுந் தயவான பூரணத்தைப் பணியவேண்டுங், கோனென்ற குருவருளா னுத்விர்த்து கூடிநின்ற செயலதனை குறிக்கவேண்டுந் தேனென்ற மதியமுர்த பானந்தன்னிற் றெளிவான சத்தியதிற் சேர்த்துகொண்டு ஊனென்ற பூரமதிற் பொடித்துபோட்டா லுண்மையென்ற நந்தியுப்புச் செயநீராச்சே. (803)

ஆச்சப்பா வின்னீரில் வீரம்போட்டு அப்பனே ரவியில் வைக்கக் காரமாகும், போச்சப்பா சவர்க்காரத் தெண்ணைதானும் புத்தியுட னந்திநீர் கண்டபோதே, பேச்சப்பா பேசாம லெண்ணை கக்கிப் பேரண்ட வெள்ளையிதற் கிணையாய் நிற்கும், காச்சப்பா வண்டசவர்க் காரவெள்ளை கருவான பூரணத்தின் வாடைபாரே. ()

பூரண மை.

வாடையென்ற பூரணத்தின் மையைச்சொல்வேன் வரிசையுடன் கேளுமா னுக்காநீயு, மேடையென்ற மேருவடா கமலபீட மெய்யான பீடமதி னமுர்தம்வாங்கி, சாடையென்ற கருவென்ன சல்லிமூலந் தாமரையின் கொடியான சமூலம்வாங்கி, ஆடையென்ற சீலையினுற் கொடியைச்சுத்தி யந்தரமாய்த் திக்கொளுத்தி சுட்டிடாயே. (805)

சுட்டதொரு கருவெடுத்துக் கருவிற்சேர்த்து சுகமான கற்பூரம் நாலுக்கொன்று வட்டமுள்ள புனுகுடன் சவ்வாதுசேர்த்து வாகாகக் குருவண்டுங் கூடச்சேர்த்து, சட்டமுள்ள கஸ்தூரி பச்சைப்பூரம் சாங்கமாய் ரோசினையுஞ் சரியாய்ச்சேர்த்து திட்டமுள்ள கருவினிலே சேர்த்துக்கொண்டு திறமாக விடைக்கிடைதான் கூட்டிக்கொள்ளே. (806)

§ காசினியில்லேன்மது—உலகத்தில்.

கொள்ளவே சாம்பிருணித் தைலம்வாங்கி கொள்கையுட னந்தயிடைத் தனதாய்ச்சேர்த்து, மெள்ளவே கல்வமதி லரைக்கும் போதின் மெய்யான மையுறுதி யென்னசொல்வேன், நில்லவே நிலையறிந்து மையைவாங்கி நேர்மையுள்ள குருபதத்தை நினைவில் வைத்து, சொல்லவே மந்திரந்தான் ஓம்-சவ்வென்று துருவமுள்ள புருவநடுத் திலர்தம்போடே. (807)

போட்டவுடன் மூலமதில் வாசிபூட்டி பூரணமாய் ரேசகபூ ரகமும்பண்ணி, நாட்டமுடன் கும்பகத்தி னின்றுகொண்டு நாதாந்தப் பேரொளியை நண்ணிநில்லு, தேட்டமுட னுனதிடத் தில் வந்தபேர்க்கு தீராத கற்மவினைத் தீர்ந்துபோகும், கூட்ட மென்ற சொல்லாகா நாட்டமாய்நில் குவிந்தபரி பூரணத்தின் கொள்கையாமே. (808)

கேசரி மை.

ஆமப்பா வின்னமொரு மையைக்கேளு வந்தரங்க் மான தொரு கேசரியில்மைந்தா, காமப்பாற் பெருகிநின்ற கருவை வாங்கி கருவான மைதனிலே மையைக்கேளு, வர்மப்பா பேய் பிடித்தவற்குப் புகைக்குங்கிட்டி வலுவான சாம்பிருணி தைலம் வாங்கி, தாமப்பா வண்டமதிற் கருவிற்சேர்க்க தனித்துநின்ற கருவிரண்டு மொன்ருய்ப்போமே. (809)

ஒன்ருன மைதனிலே புழுகுசேர்த்து வுரிமையுட னன் ருக மத்தித்தேதான், நன்ருன கொம்புசிமிழ் தன்னில்வைத்து நடுவான ருத்திரனைத் தொழுதுபோற்றி, குன்ருத வட்சரமா யேகந்தன்னை குறிப்புடனே தான்ருெழுது § திலர்தம்போட்டு பன் ருன மூலமதில் வாசியேற்றி பத்தியுடன் ரேசகபூ ரகமாய்நில்லே ()

நில்லந்தப் பதவியிலே நிட்டைகூடி நேமமுட னீயிருக்கும் போதில்மைந்தா, சொல்லந்த மானவுயிர் பயிர்களெல்லாந் தொழு தடிமை யாகுமடா சொன்னேன்கேளு, உள்ளந்த மான குரு மையைப் போலே யுகமைவெகு மையுண்டு வசியமில்லே, நல்லந்த மானமையை வைத்துக்கொண்டு நடுநாடு சென்றுவலம் வருகலாமே. (811)

---

§ திலர்தமென்பது—பொட்டு.

உப்பு மை.

வருகிறதற் கின்னமொரு வகையைக்கேளு வணங்காத வெடியுப்பு கல்லுப்போடு, உருகினதோ ரிந்துப்பு கரியுப்போடு மூர்க்கமுள்ள சவர்க்கார வுப்புங்கூட்டி, கருக்காம லிந்துப்பு மொன்றாய்ச்சேர்த்து கம்பளத்தின் சாறதனு லரைத்துக்கொண்டு, மருகாமல் வழித்ததனை வட்டுப்பண்ணி மார்க்கமுடன் காய வைத்துப் புடத்திலேற்றே. (812)

புடத்தினிலே வைப்பதற்கு வகையைக்கேளு புதிதான வோட்டிலதை வைத்துமூடி, திடத்தினிலே மண்சீலை வலுவாய்ச் செய்து செம்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு, நடத்தின தோர் புடமாறி யெடுத்துப்பார்க்க நன்மையுள்ள கருக்கலைந்துங் கருகிநிற்கு, மடத்தனமா யிருக்காமற் கரியைவாங்கி வைத்த தின்மே லின்னமொரு கரியைக்கேளே. (813)

கரியான சிப்பியிலே காரஞ்சேர்த்து கருவான சருகதுவுங் கூடச்சேர்த்து, நெறியாகப் பழச்சாறும் விட்டரைத்து நேர்மை யுடன் வழித்துருட்டிக் காயப்போட்டு, குறியான மண்சீலை செய்துநல்ல குறிப்புடனே சிறுபுடம்போட் டெடுத்துப்பாரு, மூறுக்காத காயதுபோ லுருகிநிற்கு முந்தினதோர் கரியுடனே சேர்த்துக்கொள்ளே. (814)

சேர்த்துநன்றா யரைக்கையிலே யிளகிநல்ல செம்மையுள்ள மைநிறத்தை யென்னசொல்வேன், போற்றிநன்றாய் வழித் துருட்டிச் சிமிழில்வைத்து புத்தியுடன் குருபதியிற் றிலர்தம் போடு, பார்த்திபனே யுனையெதிரே கண்டபேர்கள் பத்தி கொண்டு வாய்ப்புதைத்துப் பயந்துநிற்பார், நேர்த்தியிந்த மையிது தான் வசியத்துக்கு நேர்மையுள்ள வாடையொன்று நிலைத்துப்பாரே.

வாடை.

பாரப்பா வாடையொன்று சொல்லக்கேளு பதிவான பூரணத்திற் பலமேவாங்கி, நேரப்பா சூடனுடன் சாம்பிராணி நிசமான வாப்புடனே மட்டிப்பால்தான், சாரப்பா § திரிமஞ்சள் கந்தங்கஸ்தூரி தயவான சாதிக்காய் கிராம்புபத்திரி, பேரான வரத்தையொடு பஞ்சமூலம் பெருமையுள்ள கினியூரல் கோஷ்டந் தூக்கே. (816)

§ திருமஞ்சளென்பது—மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள்.

தூக்கியதைக் கல்வமதிற் பொடித்துக்கொண்டு சுகமான பன்னீரா லரைத்துக்கட்டி, தாக்கியே ரவிதனிலே காயப்போடு தன்மையுட னீர்வற்றிக் காய்ந்ததானாற், பாக்கியமென் றேயதனை யெடுத்துக்கொண்டு பதிவாக நீயிருக்கு மொடுக்கந்தன்னில், வாக்கியந்தான் றவராம லகலினல்ல வலுவான தழலதுவை யெடுத்துக் கொள்ளே. (817)

எடுத்ததொரு வில்லைதனிற் பணவிடைதானெடுத்து வேகாந்த மானதொரு தனல்மேல்வைக்க, தொடுத்தபுகை மேலெழும்பிச் சுற்றும்பாரு சுகமாகப் புகையிலகப் பட்டதெல்லாம், அடுத்ததொரு வாண்டுமை போலேமக்கா ளன்பான வசிகரமாய் வணங்கி கொள்வார், தடுத்ததொரு வசிகரமாம் வாடைதன்னை தனதான வடக்கமதா யடுத்துக்காரே. (818)

காராத மூடருக்கு ஞானமேது கருவறியா மாந்தருக்குக் கருத்தங்கேது, சேராத யோகிக்கு வாசியேது நிட்டையறி வில்லார்க்குப் பொருளங்கேது, கூராத வட்சரத்தைப் பணிந்து கொண்டு குருவிருந்த சன்னிதியிற் குவிந்துநின்றாற், றேறாத சிந்தையெல்லாந் தேறுந்தேறுஞ் சிவசிவா பூரணமுந் திறக்கும்பாரே.

திலர்தம்

திறமாக வின்னமொரு திலர்தஞ்சொல்வேன் சிவசிவா வாசிநின்ற கிளிஞ்சிற்றன்னின், மரமான மஞ்சளுடன் கஸ்தூரி மஞ்சள் வரிசையுள்ள சந்தனமும் வரிசைபூரம், உறமான வெள்ளுரமுங் கோவுங்கூட்டி யுயர்ந்ததொரு புழுகதுவு மொன்பதாச்சு, நிறமான வொன்பதுவுஞ் சரியாய்க்கூட்டி நிச்சயமாய் முலைப்பாலி லரைத்துக்கூட்டே. (820)

கூட்டிநன்று யரைத்துருட்டிக் § கயறுசெய்து கூர்மையுட னிழல்தனிலே யுலர்த்திமைந்தா வாட்டிநன்று யுலரவைத் தெடுத்துக் கொண்டு மக்களே தானுரைத்துத் திலர்தம்போடு, தாட்டிகமா யுனதிடத்தி லார்வந்தாலுந் தன்மையுடன் வணங்கியுன் வசனங் கேட்பான், நாட்டமுள்ள திலர்தவகை யதிகமப்பா நாதாந்தக் குருவுதனை நாடிநில்லே. (821)

§ கயறுஎன்பது—மாத்திரை.

நாடிநின்ற விடமதிலே நாட்டம்பாரு நடுவான பூரணத்தை நயந்துகாரு, கூடிநின்ற § வைம்புலனோர் கூத்தைப்பாரு குருவான கேசரத்தின் குறியைக்காரு, வாடிநின் றலையாதே மைந்தாமைந்தா வரிசையுடன் சத்திசிவ மறவாதேநீ, தேடியெங்குங் கிடையாது விந்தமார்க்கந் திறமான வாயிரத்தின் செய்கைதானே. (822)

அமுர்த சஞ்சீவி.

தானென்ற வமுர்த சஞ்சீவிசொல்வேன் சங்கையில்லாக் கங்கையடா கன்னிகன்னி, தேனென்ற கன்னியவள் குடத்துநீரை செம்மையுடன் பீங்கானிற் சேர்வாங்கி, கோனென்ற கற்பூரங் கொஞ்சம்போட்டு குருவான மேருவென்ற காசிக்குப்பி, வானென்ற குப்பிதனி லடைத்துமைந்தா வணக்கமுடன் காசிடைதான் கொண்டுதேறே. (823)

தேறுவ தென்னவென்றால் மைந்தாகேளு சிந்தைமன தொன்றாகச் சிவனைப்போற்றி, பேறுபெற வெனைக்காக்க வேண்டு மென்று பேணியே சத்திதனைப் பூசைபண்ணி, பூறுவமாய் ரேசகபூ ரகமும்பண்ணி புத்தியுடன் கும்பகத்தில் பத்திவைத்து, நேறுடனே யமுர்தசஞ் சீவிகொண்டா னிலையாத தேகமது நிலைக்குங்காணே. (824)

மூடர்கள்.

நிலையாத மூடர்கள்தான் பேசும்வார்த்தை நிர்மூடபயல்கள் தான் கூடிக்கொண்டு, கலையான நூல்களென்ன கற்பமென்ன கருணையுள்ள சத்திசிவ பூசையென்ன, தலையான மேருவென்ன வமுர்தமென்ன தங்கமென்ன வாதமென்ன குளிகையென்ன, மலையான குகைகளென்ன வனங்களென்ன மாயமென்ன மாயமடா தேகந்தானே. (825)

தானான தேகமதை யறியாமற்றான் றன்மையுள்ள சித்தர் களைத் தற்கம்பண்ணி, வீணான வீண்பயல்கள் மதங்கள்பேசி மெய்நிறைந்த பூரணத்தை யறிமாற்றான் ஊனான வறுசுவைமேல் விருப்பமாக வுழன் றுமிகப் பரதவித்து வுறுதிகெட்டு, தானான வகங்காரந் தலைமேற்கொண்டு நரகமென்ற படுகுழியி னண்ணுவானே.

§ ஐம்புலனுரேன்பது—பஞ்சபூதம்.

நண்ணுவான் படுகுழியில் விழுந்துநல்ல நங்கையர்மே லாசைகொண்டு மயங்கியந்த, புண்ணி னுறவாகியுயிர் தழன்று கண்ணு புகைந்துமதி யறிவழிந்து புலம்பிவாடி, தன்னுயிரைத் தானறிய மாட்டாமற்றான் சங்கையுள்ள சாத்திரத்தைப் பாடம் பண்ணி, கன்னிநிலை யறியாமற் கதறுவான்பார் காசினியிற் கண்டவரைத் தள்ளுதள்ளே. (827)

தள்ளடா நினையறியா மாந்தர்தன்னை தத்துவத்தை யறி யாத சவுங்கல்தன்னை, கொல்லமனந் துணிந்துயிரைக் கொன்று சுட்டு குவலயத்திற் பூசைசெய்யுங் குரும்பர்தன்னை, மெள்ளவரைத் தானகற்றி யறிவின்று வேதாந்த சாத்திரத்தை விரும்பிபார்த்து, நில்லாத வந்தநிலை தன்னிற்சென்று நேசமுடன் வாசமதாய் வாசிபூட்டே. (828)

வாசியென்ற பூரணமே தெய்வந்தெய்வம் வையகத்துத் தெய்வமெல்லா மரங்களாச்சு, நேசமைந்த பூரணத்திற் முன்று ளுகி நிசமான வாசிமனோன் மணியைப்போற்றி, கூசிமனந் தள ராமற் குவிந்துநின்று குருவான பதிநோக்கி யமுர்தங்கொள்ளு, மாசியென்ற மாய்கையெல்லா மகன்றுபோகும் வையகத்து னீயு மொரு சித்தனுமே. (829)

சித்துமய மாவதற்கு சித்துகேளு சித்துவென்ன வென் றுக் காற்பச்சைமண்ணு, சுத்தமுள்ள பச்சையடா சோதிசோதி துஞ்சிநின்ற மண்ணதனைக் கொண்டுவந்து, பத்தியுட னக்கசடு போக்கிநல்ல பருவமுள்ள நாதமதை வைத்துக்கொண்டு, புத்தியுடன் ஆம்பாலில் வைத்துமைந்தா பொரியரிசி மிளகுசீ ரகமுங்கூட்டே. (830)

கூட்டியே மஞ்சளுடன் கொத்தமல்லி குணமான பெருங் காய மொன்றாய்க்கூட்டி, காட்டியே பொடியைநன்றாய்ப் பொடித் துத்தூவி நலமாகத் தானிறக்கி வைத்துக்கொண்டு, தாட்டிக மாய்ச் சட்டிதனி னெய்யைவிட்டு தன்மையுட வெண்காய மரிந்து போட்டு, வாட்டியதோர் பொரிக்கரியைக் கூடச்சேர்த்து மைந் தனே நெய்யாலே வறுத்திடாயே. (831)

§ குரும்பர்யென்பது—உண்மையறியா மூடர்.

வறுத்தபத மென்னவென்றால் மைந்தாகேளு மார்க்கமுடன் பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு, கறுத்துடனே வறுத்ததனை பாணிற்சேர்த்து கருணைபெற வந்நிசந்தி பணவிடைதான்கொள்ளு, திருத்தமுடன் மண்டலமே கொண்டாயானால் சிவசிவா தேகமதிற் காந்திமீறி, பெருத்தவொரு தேகமதிற் சட்டைதள்ளி பெருமை யுடன் றேகமதாய்ச் சூட்சமாமே. (832)

தேகமென்ற வகமதனைக் கண்டுகொண்டு சின்மயத்தி னருளாலே திறமாய்நின்றால், ஆகமென்ற வாகமங்கள் முத்தி யாச்சு, அருள்பெறுஞ் சிவயோகத் தடுக்கலாச்சு தாகமென்ற விகற்பமெல்லாந் தணிபலாச்சு சச்சிதா நந்தமென்ற தேகமாச்சு, பாகமென்ற வறுசுவையைத் தள்ளிமைந்தா பத்திகொண்டு சத்தி சிவ பூசைபண்ணே. (833)

பூசையென்ற சிவபூசை மானதமாம்பூசை புத்திகொண்ட பூரணத்தாற் பூசைமார்க்கம், நேசமுடன் பரமகுரு பூசைசெய்தால் நீனிலத்தி லீயுமொரு தவசியாகும், பாஷையென்ற பலபாஷை நன்றாய்க்கண்டு பத்தியுள்ள ஜோதியதைப் பதிவாய்ப்பார்த்து, ஆசைகொண்டு வாயிரத்தை யடுத்துப்பார்த்து அப்புறந்தான் சிவ யோகத் தடியினில்லே. (834)

அடிவான வடிமுடிதா னண்டபிண்ட மாதியந்த மான தோ ரகாரபீட, முடியான மூலமடா முதலாமூல முத்திகொண்டு நடுவணையாய் நின்றமூலம், படியான மூலமடா சுழினைமூலம் பகுந்துநின்ற மூலமெல்லாம் பதிவாய்ப்பார்த்து, துடியான மூல மடா வேதமூலந் துலங்கிவிளை யாடுமடா பசளைதானே. (835)

பசளை.

பசளையென்றாற் சிறுபசளை பெரும்பசளையுண்டு பதிவான கொடிப்பசளை தன்னைவாங்கி, அசளையென்ற சுரைக்காயைக் கண்ட மாக்கி யதிலிருக்குங் குடல்விதையை யகற்றிப்போட்டு, குசளை யென்ற கடுகுமஞ்ச ளரைத்துப்பூசி குறுகவே ரவிதனிலே காயப் போடு, விசளையென்று காய்ந்துவற்றச் சரியாயந்த விபரமுள்ள சருகதுவு முடியுஞ்சேரே. (836)

§ அகமம்யென்பது—சாஸ்திரம்.

சேரப்பா முப்பூவும் பூரஞ்சேர்த்து செம்மையுட னிடித்து நன்றாய்க் காடிவார்த்து, நேரப்பா பிசைந்துருட்டிக் காயப்போடு நிசமான புதுப்பாண்டந் தன்னிற்சேர்த்து, காரப்பா மேற்சட்டி கொண்டுமூடி கனக்கவே மண்ணிட்டுத் § தமருஞ்செய்து, சாரப்பா குழிவெட்டிக் கலசம்வைத்துத் தன்மையுடன் குழித்தைல மிறக்குவாயே. (837)

இறக்கியந்தத் தைலமதைப் பரணிற்சேர்த்து இன்பமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி, அறக்குமணி மாளிகையாந் தேக மப்பா வத்தேகந் தானறிந்து தைலமூட்டு, நிறக்கருவாய் முப் பூவிற் றைலம்விட்டு நேரமென்ற விருநேர மண்டலமேகொள்ளு, திறக்குமடா காயமது வலுத்துப்போகுந் தேகமென்ற செம்பில் நின்ற களிம்பைப்பாரே. (838)

செம்பு சுத்தி.

களிம்பான செம்பதனைச் சுத்திசெய்ய கருவான கரு வொன்று சொல்லக்கேளு, வளும்பான பாறையுப்பு சத்துச்சூடன் மார்க்கமுள்ள பச்சையுடன் வெடியுங்கூட்டி தளும்பாமல் வாய் நீரா லரைத்துருட்டி சங்கையுடன் ரவிதனிலே யுலரப்போட்டு, அளும்பான மனதைவிட்டுக் கவசஞ்செய்து வடக்கமுள்ள குழி வெட்டிப் புடத்தைப்போடே. (839)

புடந்தனிலே கவசமது வெந்துநல்ல புகழான சுண்ண மதா யிருக்கும்பாரு, மடத்தனமாய்த் திரியாமற் குருவைப்போற்றி மானதமாம் பூசையிலே வணங்கிநில்லு, திடத்துடனே சுண்ண மதை யெடுத்துமைந்தா திடமான குப்பிதனிற் பதனம்பண்ணி, கடத்தினிநல் லெருவெடுத்து சாம்பல்வாங்கிக் களிம்பான செம்பு களை வாங்குவாங்கே. (840)

வாங்கியந்தச் செம்புகளைத் தகடுதட்டி வாய்நீராற் சுண்ண மதைக் குழைத்துப்பூசி, பாங்குபெற வோட்டினிலே சாம்ப லிட்டுப் பதிவாகச் சல்லிவைத்து மேலும்போட்டு, ஓங்கியே யெருவடுக்கிப் புடத்தைப்போடு வுத்தமனே செம்பினின்ற களிம் பெல்லாந்தான், ஏங்கியே பறந்தோடி ரவிபோலப்பா விருக்குமடா செம்புகளிம் பற்றவாரே. (841)

§ தமர்யென்பது—துவாரம்.

வாரான செம்புகளிம் பருவதற்கு வகையுடனே யின்ன மொருவரிசைகேளு, பேரான நாயுருவி சாம்பல்வாங்கி பெருமையுள்ள கல்லுப்பு வளையலுப்பு, கூராக மூன்றுமொன்றாய்ப் பொடித்துக் கொண்டு குருவான பழச்சாற்றி லரைத்துருட்டி, நேராகச்செம்பு கனத் தகடுதட்டி நேர்கூராய் நன்றாகச் செலுத்திடாயே. (842)

செம்பு சுத்தி.

செலுத்திநன்றா யுருட்டியதிற் சீலைசெய்து திறமாக வெரு வடுக்கிப் புடத்தைப்போடு, வழுத்துநின்ற செம்பதனிற் களிம்பு அற்று மார்க்கமுடன் ரவியினுட காந்திபோலாம், அழுத்த முள்ள செம்பதுதான் மக்காள்மக்கா ளருமையுட னின்னமொரு சுத்திகேளு, வெளுத்துநின்ற பொடிக்குஅரை துரிசுகாரம் பொன் னுன வெடியுடனே பூரஞ்சீனம். (843)

தொடுத்துநன்றாய்க் கூட்டியரை வாய்நீராலே துப்பறவா யதையரைத்து வட்டுப்பண்ணி, கொடுத்துவிடு புடந்தனிலே வெளுத்துநீறி குருவான சுண்ணமதா யிருக்குமைந்தா, சடுத்த முடன் வாலையுட பதத்தைப்போற்றி தயவாக § வழுவாமற் செய்து கொண்டு, அடுத்தவொரு சுண்ணமதை செம்பிற்பூசி யருமை யுடன் முன்போலே புடத்தைப்போடே. (844)

புடம்போட்ட செம்பதனை யெடுத்துப்பாரு பொல்லாத களிம்பற்று ரவிபோலாகும், நடம்பற்ற செம்பதனை வைத்துக் கொண்டு நல்வினைந் தீவினையும் நயந்துபாரு, திடம்பெற்ற மாது குதி கொள்வாளப்பா சிந்தைமன தொன்றாகி யறிவினில்லு, திடம்பெற்ற தேகமடா சிவாயரூபந் தெளிவான செம்பதுபோற் சுத்திபண்ணே. (845)

பண்ணப்பா வின்னமொரு செம்புசுத்தி பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பற்றிப்பாரு, நண்ணப்பா வெள்ளியிலே காரீயஞ் சேர்த்து நன்மையுட னிடைக்கிடைதான் சேர்த்துக்கொண்டு, பொன்னப்பா பொன்னதுபோ லுருக்கிக்கொண்டு புதுமையுடன் றானெடுத்து மைந்தாகேளு, விண்ணப்பா நிறைந்தசெம்பைக் குகை யிலிட்டு விரும்பியே காரமிட்டு வுருக்கிக்கொள்ளே. (846)

§ வழுவாமல்யென்பது—குற்றம் வராமல்,

உருக்கமுட னுருகிநின்ற செம்புதன்னி லுண்மையுட னிதற்கிடைதான் சேர்த்துக்கொண்டு, திருக்குடனே யதையெடுத்து வோட்டில்வைத்து செம்மையுடன் காரமிட்டு வூதிப்போட்டால், மருக்குடனே நின்றகளிம் பெல்லாமைந்தா மாண்டுபோய்ச் செம்பதுவும் வளமையாகும், அருக்கெனவே வெள்ளிதன்னுற் சுத்தி செய்த அருமையுள்ள செம்பிதுதா னதிகசித்தே. (847)

குடவன் சுத்தி.

சுத்தியுள்ள குடவனைத்தான் சுத்திபண்ணச் செப்புகிறேன் சிவயோகத் திறத்தாலப்பா, பத்தியுள்ள பூரணமும் வெடியுஞ் சீனம் பாங்கான சாரமுடன் துரிசுகூட்டி, புத்தியுட னொருமனதாய்க் கல்வத்தாட்டி புதிதான வோட்டிலதை வழித்துக்கொண்டு, சுத்திசெய்யக் குடவனைத்தான் தகடுதட்டி சுகமான மருந்திலதை § விரவுவாயே. (848)

விரவியதைப் புடத்தினிலே வைத்துப்பாரு வீசுகின்ற பித்தளைதா னென்னசொல்வேன், திரவியதாய்க் குடவனது செம்பாய்ப்போகுஞ் சிவசிவா விப்படியே மூன்றுதரம்போடு, நிரவியதோர் பித்தளைதான் செம்பாய்ப்போச்சு நிசமான செம்பதனை வைத்துக்கொண்டு, உரமான வெள்ளியிலே நாலுக்கொன்று உண்மையுடன் கொடுத்துருக்கப் பொன்னும்பாரே. (849)

பாரப்பா வின்னமொரு சுத்திகேளு பத்தியில்லாத் பித்தளையைத் தகடுதட்டி, நேரப்பா துரிசுடனே காரஞ்சாரம் நிசமான வெடியுப்புப் புளியுங்கூட்டி, சாரப்பா சம்பழத்தா லாட்டிக்கொண்டு சதுரான வோட்டிலதை வழித்துவைத்து, சேரப்பா தகடுதனிற் குழப்பிக்கொண்டு செம்மையுடன் புடம்போட்டு வெடுத்துப்பாரே. (850)

எடுத்துமிகப் பார்க்கையிலே குடவன்றானு மின்பமுள்ள செம்பதுபோற் சுத்தியாகும், அடுத்ததொரு செம்பதனை வைத்துக்கொண்டு அன்பான வெள்ளியிலே நாலுக்கொன்று, கொடுத்துமிக வுருக்கிடவே நாற்சரக்குங் குருவான தங்கமதைக் கூடச்சேர்த்து, விடுத்துநன்று யுருக்கியதை யெடுத்துப்பார்த்தால் மேலான பொன்னதுபோல் விசிதமாமே. (851)

---

§ விரவுயென்பது—பிசறுதல்.

விசிதமுள்ள குடவணிலே யின்னமொன்று விளம்புகிறே னின்னமொரு புளியுங்கூட்டி, கசிதமுள்ள கல்வமதி லாட்டிமைந்தா களிம்பான குடவெணிலே பூசிக்கொண்டு, உசிதமுடன் புடம்போட் டாற் செம்பாய்ப்போகும் உற்றசெம்பை வெள்ளியிலே நாலுக் கொன்று, நசிதமுடன் கொடுத்துருக்க நாலுமாற்றும் நாட்டமுட னித்தொழில்தா னன்மையாமே. (852)

நாக சுத்தி.

ஆமப்பா நாகத்தின் சுத்திகேளு அருளான மனோன்மணி யாள் சொன்னவார்த்தை, • நாமப்பா சொல்லுகிறோம் பழச்சாற் தன்னில் நலமான ரவிபீசங் கூடச்சேர்த்து, தாமப்பா சார மதி னுகங்கூட்டி• தன்மையுடன் றுனுருக்கிச் சாய்ப்பாயப்பா, சாமப்பா நாலைந்து திறத்துக்குள்ளே தனித்துநின்ற நாகமது கட்டிப்போச்சே. (853)

கட்டிநின்ற நாகமதின் திறத்தைக்கேளு கருவான வெள் ளியைப்போல் சுத்தியாகும், வெட்டிநன்றாய்ப் பணவிடைபோ லெடுத்துக்கொண்டு மேலான காரமது பொடித்துச்சேர்த்து, இட்டமுடன் வாய்கீராற் குழப்பிநல்ல சிமிழ்தனிலே வைத்து நன்றாய் மூடிக்கொண்டு, சட்டமுடன் தங்கமதை யுருக்கிநல்ல சதுரான நாகமதிற் கொடுத்துவாங்கே. (854)

வாங்கிடவே § பரிநாக மொன்றாய்க்கூடி மாசற்ற வெள்ளி மணி போலாமைந்தா, ஏங்கியே திரியாதே நாகமணிதன்னை ஏகாந்த வெள்ளியிலே பத்துக்கொன்று, பாங்குபெறத் தானுருக்கிக் கொடுத்துப்பாரு பசுமையுள்ள பொன்னதுபோ லிருக்குமைந்தா, தாங்கியதோர் பொன்னெடுத்து வைத்துக்கொண்டு தன்மையுடன் சிவயோகஞ் சதுராய்ப்பண்ணே. (855)

நாக பற்பம்.

சதுராக வின்னமொரு நாகசுத்தி தன்மையுடன் சொல்லு கிறேன் மைந்தாகேளு, விதியான காரெள்ளு தைலத்தாலே விபரமுடன் றுனுருக்கித் தேங்காய்ப்பாலில், மதியாம லைந்துதரஞ் சாய்த்தாயானல் மார்க்கமுள்ள நாகமது சுத்தியாகும், நிதியான முப்பூவுஞ் சாரங்கூட்டி நேர்மையுட னரைத்துநன்றாய் நாகத்தப்பே.

§ பரிநாகமென்பது—தங்கநாகம்.

நாகமதிற் கவசமதை நன்றாய்ப்போட்டு நழுகாமல் மண் சீலை வலுவாய்ச்செய்து, பாகமுடன் கெசபுடத்திற் பதிவாய்வைத் தாற் ப்ரமகுரு நாகமது கட்டிப்போகும், ஆகமுடன் கட்டி னதை யெடுத்துக்கொண்டு அன்பாக யதற்கிடைதான் பரியைக் கூட்டி, தாகமுட னுருக்கிப்பா ரொன்றாய்ச்சேர்ந்து தனதான வெள்ளிமணி போலாமென்னே. (857)

என்னவென்று யிருக்காதே மணியைவாங்கி இன்பமுடன் வெள்ளிசெம்பிற் பத்துக்கொன்று, சொன்னமொழி தவறாமற் கொடுத்துப்பாரு சோதியென்ற பொன்னொளியை யென்னசொல் வேன், வின்னமில்லாப் பேரொளியைக் கண்டபோதே வேதாந் தஞ் சித்தாந்த மெய்யில்தங்கும், ஈன்னயமா யின்னமொரு நாகக் கட்டு நாட்டுகிறேன் கருக்குருவாய் நாட்டுறேனே. (858)

நாட்டுகிறேன் § குளப்பாலைக் கொண்டுவந்து நடனமென்ற வெடியுப்புக் கூடச்சேர்த்து, தாட்டிகமாய்த் தானிடித்து வோட் டில்வைத்துத் தன்மையுடன் வெள்ளீயக் கட்டிவாங்கி, மூட்டிநன் றாய்த் தகடுதட்டி மருந்துள்வைத்து மூர்க்கமுட குளிவெட்டிப் புடத்தைப்போடு, சூட்டிநன்றாய்ப் புடமாறி யெடுத்துப்பார்க்கத துப்பறவாய் நீறியது பற்பமாமே. (859)

ஆமப்பா பற்பமதைப் பதனம்பண்ணி அன்பாக வராக னிடை யெடுத்துக்கொண்டு, தாமப்பா நவச்சாரம் விராகன்பத்து தன்மையுள்ள பொரிகாரம் விராகன்பத்து, நாமப்பா மூன்று மொன்றாய்க் கூட்டிக்கொண்டு நன்மையுடன் வாய்நீரா லரைத் துருட்டி, ஓமப்பா நாகமது சுத்திபண்ணி உண்மையுட னதனி லொரு பலத்தைவாங்கே (860)

வாங்கியந்த நாகமதைக் கவசஞ்செய்து விரிசையுடன் மண் சீலை வலுவாய்ப்பூட்டி, பாங்குபெறக் குழிவெட்டிப் புடத்தைப் போடு பச்சையென்ற நாகமது பணிந்துமக்காள், சாங்கமாய்க் கண்ணடங்கி மூச்சடங்கித் தன்மையுள்ள நாகமது கட்டும்பாரு, ஏங்கியே திரியாதே கட்டிநல்ல இன்பமுட னுருகியொரு மணியாம்பாரே. (861)

---

§ குளப்பாலையென்பது—ஓர்மூலிகை.

மணியாகி யுருகிநின்ற நாகந்தன்னில் மார்க்கமுட னிடைக்கிடையே பரியைச்சேர்த்து, தணியான குகைதனிலே காரமூட்டி தானுருக்க வுருகியது களங்கமாகும், அணியான களங்கதனை யெடுத்துக் கொண்டு § அணைத்திடுவாய் வெள்ளிசெம்பிற் பத்துக் கொன்று, பணியான குகைதனிலே யுருக்கிப்பாரு பசுமையென்ற பொன்னதுபோற் பழுக்கும்பாரே. (862)

நாகச் செந்தூரம்.

பழுக்கின்ற களங்கதனைச் செந்தூரிக்கப் பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பணிந்துகேளு, தளுக்கறவே களங்கதனை நொறுக்கிக்கொண்டு சரியாக கெந்தகமும் வீரங்கூட்டி, அழுக்கான காரமுடன் லிங்கங்கூட்டி அன்பாக யறுவகைநீ ராட்டிக்கொண்டு, வழுக்கின்றித் தானரைத்து வழித்துக்கொண்டு வரிசையுட னோட்டில்வைத்து மண்ணுஞ்செய்யே. (863)

செய்யப்பா மண்ணதுதா னன்றாய்ச்செய்து திறமாக வெருவடுக்கிப் புடத்தைப்போடு, மெய்யப்பா சொல்லுகிறே னன்றாய்க்கேளு வேதாந்த சற்குருவைத் தொழுதுநில்லு, கையப்பா சுடுகாமற் குளிர்ந்ததானால் கருவான கவசமதை யெடுத்துப்பாரு, நெய்யப்பா நெளிவதுபோல் செந்தூரந்தான் நிசமாக யிருக்குமடா நேர்ந்துபாரே. (864)

பாரடா செந்தூர முருக்கம்பூப்போல் பக்குவமாய்த் தான் சிவந்து யிருக்கும்பாரு, ஆரடா யறிவார்கள் நாகசெந்தூரம் அரகரா செந்தூரம் பதனம்பண்ணி, காரடா சற்குருவைத் தொழுது போற்றி கருவான செந்தூரம் பணவிடைதான்கொள்ளு, சீரடா வாசியது யடங்கும்வீட்டில் திறமாக ரவியொளிபோல் தேகமாமே. (865)

பாஷாணச் சுத்தி.

ஆமப்பா யின்னமொரு கருவைக்கேளு ஆதியென்ற பாஷாண சுத்திசொல்வேன், காமப்பா லொருகலசந் தன்னில்தாங்கி கருவான பூரணமும் பூரம்சேர்த்து தாமப்பா கருவதனைக் கரைத்து நல்ல தருவான பாஷாணந் தன்னைவாங்கி, போமப்பா தோளேந்திர மாகக்கட்டி பூரணமாய்ச் சலந்தனிலே தூக்கிடாயே. (866)

§ அணைத்திடுவாய்யென்பது—சேர்த்திடுவாய்.

தூக்கிநன்றாய் நீர்வற்ற யெரித்துநல்ல சுத்தமுள்ள பாஷாண சுத்தியாகும், நீக்கியந்தப் § பாஷாணந் தனையெடுத்து நேர்மையுள்ள முப்பூவுங் கூடச்சேர்த்து, பாக்கியமாய் நின்றிலங்கும் விந்து தன்னைப் பத்தியுடன் சுத்திசெய்து பதிவாய்க்கூட்டி தாக்கிநன்றாயரைத்துவிடு செயநீர்விட்டு தன்மையுடன் றானரைத்து வழித்துக் கொள்ளே. (867)

வழித்ததனை யெடுத்துநீ மிளகுபோலே வரிசையுடன் றானுருட்டி வைத்துக்கொண்டு, நெழிந்திடுநல் வெள்ளிய வோட்டில்ரெட்டி. நேர்மையுடன் றானுருக்கி மைந்தாகேளு, அழுத்தமுள்ள பாஷாண வுண்டைதன்னை அன்பாகத் தான்பொடித்துக் கிண்டினுக்காற் கழித்துவிடும் வெள்ளிய நொறுங்கித்தூளாங் கட்டாக நொறுங்கியதைப் பொடித்துக்கொள்ளே. (868)

பொடித்தபொடி சரியிடையாய் வெள்ளிதூக்கு போதரவாய்த் தானுருக்கிப் பொடியைச்சேரு, கடுத்தமுடன் வெள்ளியது கட்டிப்போகுங் களிம்பான செம்புருக்கி மைந்தாகேளு, நடுத்தரமாய்க் கட்டிநின்ற வெள்ளிதன்னை நயமாகக் கொடுத்துவிடு பத்துக்கொன்று, சடுத்தமுள்ள செம்பதுவும் வெளுத்துநல்ல சரிகைவெள்ளிக் கொப்பாகுந் தன்மைபாரே. (869)

பாரப்பா கைலாசந் தன்னைநீதான் பத்திகொண்ட பாஷாண மூத்தியாகில், பேரப்பா பெற்றதொரு வாதிதன்னைப் பெருமையுடன் கண்டவனே சித்தன்சித்தன், ஆரப்பா யறிவார்க ளவிழ்தந் தன்னை அடங்காத வெள்ளியடா வண்டக்கூறு, காரப்பா வண்டமதில் தோன்றிநின்ற கருவான மதியமுர்தங் கண்ணீராமே. ()

கண்ணீருந் தண்ணீரும் ரெண்டுமொன்று கருணையுடன் குருவருளால் கண்டுபாரு, செண்ணீரும் வெண்ணீரு மிதுதானப்பா சேர்ந்துநின்ற பானமுர்த மிதுதானப்பா, மண்ணீரும் பொன்னீரு மண்டநீரு மார்க்கமுள்ள நவலோகந் தானேநீறும், விண்ணீரைத் தானறிந்து தண்ணீர்கொண்டால் விபரமுள்ள நந்தியொளி காணலாமே. (871)

---

§ பாஷாணமென்பது—வெள்ளைப் பாஷாணம்.

காணாத காட்சியெல்லாங் கண்ணிற்காணுங் கருணையுள்ள சத்திசிவ பூசையாலே, தோணாது வொன்றுமில்லை மைந்தாகேளு துருவமுள்ள வாயிரம்போ லொருநூலில்லை, பூணாத பேர்களுக்கு ஞானமுண்டோ புத்தியில்லா மாந்தருக்கு வாதமுண்டோ, ஊனான கற்பமதில் மனதில்லார்க்கு ஒருகோடி நூல்பார்த்தும் பொய்யாய்ப்போமே. (872)

பொய்யாகப் போகாம லின்னமொன்று பூட்டுகிறேன் பாஷாணக் கட்டுதன்னை, மெய்யான சருகுடனே யண்டங்கூட்டி மேன்மையுள்ள வெடியுப்புச் சீனக்காரந், தொய்யாத பச்சையுடன் தாரங்காரந் தொகையாகச் சரக்குவொரு கல்வத்திட்டு, கையாற யறுவகைநீர் தன்னாலாட்டிக் கருவான வெள்ளைதனக் கங்கிபூட்டே

பூட்டிநன்றாய் ரவிதனிலே காயவைத்துப் பொருந்தவே மண்சீலை செய்துகொண்டு, நாட்டிநன்றாய்ப் போட்டுவிரு புடந் தான்மைந்தா நல்லதொரு பாஷாணங் கட்டிப்போகுந், தாட்டிக மாய்க் கட்டினதை யெடுத்துக்கொண்டு தயவான ரசமுடனே முப்பூக்கூட்டி, ஆட்டுவாய் கல்வமதில் பழச்சாற்விட்டு அப்பனே நெட்டடங்க யாட்டிக்கொள்ளே. (874)

ஆட்டிநன்றாய் வழித்துருட்டி வட்டுப்பண்ணி அப்பனே யகலில்வைத்துப் புடத்தைப்போடு, பூட்டிநின்ற பாஷாணம் நீறிப் போகும், புதுமையுட னன்னீரை யெடுத்துக்கொண்டு, தாட்டிக மாய்ப் § பரித்தகட்டில் தடவிமைந்தா தன்மையுட னோட்டில் வைத்துப் புடத்தைப்போடு, தேட்டிமையாய்ப் பரித்தகடு நீறிப் போகுந் தெளிவாக வன்னீற்றைப் பதனம்பண்ணே. (875)

பதனமுள்ள பரிநீற்றை மைந்தாகேளு பதிவான வெள்ளி தனில் நூற்றுக்கொன்று, சதனமதாய்க் கொடுத்துருக்கிப் பாரு மக்காள் தன்மையுள்ள வெள்ளியது சிவந்துபோகும், விதமான செம்பினிலே தாக்கிப்பாரு வித்தான தங்கமது மெத்தவுண்டு, மதமாகிப் போகாமற் சிவயோகத்தில் வாசியென்ற பொருளறிந்து வணங்கிநில்லே. (876)

§ பரித்தகடுயென்பது—தங்கத்தகடு.

வணங்கிநின்ற சிவமதற்கு வுறுதிகேளு மகத்தான வேதாந்த நிலையினின்று, இணங்கிமிக மனதறிவா லறிந்துகொண்டு இன்பமுடன் றனிருந்தா லின்பமெய்தும், மனங்குவிந்த நிட்டைதனைக் குறுதிகேளு மார்க்கமுள்ள கற்பமடா வரிசையாகுஞ், சினங்குவியா கற்பமதற் குறுதிகேளு சிவசிவா வென்னசொல்வேன் சயாதிதானே. (877)

சஞ்சார சமாதி.

தானென்ற § சஞ்சார சமாதிகேளு தன்மையுடன் மனேவிகற்பந் தானேதள்ளி, கோனென்ற குருபதத்தைக் குவிந்துபோற்றி குருவான மூலமதில் வாசிபூட்டி, மானென்ற மௌனமதா யிருந்துகொண்டு மகத்தான பூரணமே தெய்வமென்று, ஊனென்ற வுடலுயிருக் காதாரமான உற்றசிவ சத்திபதம் பூசைசெய்யே. (878)

பூசைமன மொன்றாகச் செய்துகொண்டு புத்தியுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, நேசமுடன் கும்பகத்தில் வாசிபூட்டி நினைவாக நீடுலகில் நேசமாக, வாசமுடன் சஞ்சாரஞ் செய்துகொண்டால் வலுவான தனுவிலே சாகையில்லை, பாசமுட னிப்படிநீ சஞ்சாரஞ்செய்தாற் பதிவான தேகமது முத்தியாமே. (879)

முத்திபெற யின்னமொரு சித்திகேளு மூதண்ட பிரமரிஷி சொன்னவார்த்தை, சித்திபெற காயசித்தி பண்ணிக்கொண்டு சிவாயகுரு தேசிகனைப் பணிந்துநல்ல, பத்தியுடன் கெந்தகமும் ரசமும்வாங்கி பாலகனே சுத்திநன்றாய்ப் பருவமாக, வெற்றிபெறச் செய்துகொண்டு பதனம்பண்ணி வேதாந்த பூரணத்தில் விரும்பிநில்லே. (880)

நில்லடா மனதுரிமை யாகநின்று நேசமுட னுதயாதி தன்னிலேதான், சொல்லடா சிவசிவா வென்றுவந்த சுத்திசெய்த கெந்தகத்தை வாயிற்போட்டு, நில்லடா வென்றவுடன் ரசத்தைவிட்டு மேன்மையுட னுவினிலே குழப்பிக்கொண்டு, உள்ளடா விழுங்கிவிடு மைந்தாகேளு உறுதியுடன் குருபதத்தி லுகந்துநில்லே.

§ சஞ்சாரசமாதியென்பது—சூட்சமசரீரத்தோடுலாவுதல்.

உகந்துநல்ல திட்டைசெய்து மத்தியானந்தா னொருபோது பாலமுர்த முண்டுதேறு உகந்துநீ யிப்படியே யந்திசந்தி உரிமை யுட னுதவித்து வுறுதியாக, உகந்துநீ மண்டலமே கொண்டுதேறி உருமையுடன் சத்திசிவன் றன்னைமைந்தா, உகந்துநீ பீங்கான்றன் றுளிதன்னை உண்மையுடன் விட்டுவதிற் பூரம்போடே. (882)

பூரமென்ற காரசாரம் பொடித்துத்தாவி பூஷணமாய் ரவி முகத்தில் வைத்துப்பாரு, ஈரமென்ற சலமது வற்றிநல்லா யிறுகி நின்ற பருவமதி லெடுத்துக்கொண்டு, வீரமென்ற வீரமது பத்துக் கொன்று விபரமுடன் றன்கொடுத்து வரைத்துப்பாரு, கார மென்ற கடுங்கார மெழுகுமாகுங் கருணையுள்ள மெழுகதுவைப் பதனம்பண்ணே. (883)

பண்ணியதோர் மெழுகதனை வைத்துக்கொண்டு பால கனே யின்னமொரு கருவைக்கேளு, தண்ணிமையாய்த் தங்க மொன்று செம்புவொன்று தவனமென்ற வெள்ளியது மூன்றுங் கூட்டி, புண்ணியனே தானுருக்கித் தகடுதட்டி பூரணமாய்க் காரமென்ற மெழுகைப்பூசி, செண்ணிமையாய் நோக்கிநன்று யோட்டில்வைத்து சிவசிவா புடம்போட்டு யெடுத்துப்பாரே. ()

எடுத்துமிகப் பார்க்கையிலே தகடுதானும் இன்பமுடன் றன்பழுத்துக் கனிபோலாச்சு, தொடுத்தகனி யானதொரு கனி யைத்தானுஞ் சூதமுடன் வயதுபதி னறுபோலே, நடுத்தர மாய் நின்றவளு நடனஞ்செய்வாள் நாதாந்த நடனமதைக் கண்டு தேறி, அடுத்துமிகப் பூரணத்தி னின்றுகொண்டு அசைவற்ற சிவ யோகத் தமர்ந்திடாயே. (885)

அமர்ந்திருக்க யின்னமொரு சித்துசொல்வேன் அரகரா கலியனுக்கு வங்கிபூட்டி, அமர்ந்திருக்க வோட்டில்வைத்துப் புடத்தைப்போடு அடங்காத கலியனுந்தா னடங்கிப்போன்னுய், சமைந்ததொரு பத்துவய தானபெண்போற் § தாரணியி லடங்கி யவள் சமர்த்தியாவாள், சமைந்தபெண்ணைத் தானிறுத்திப் பூசை செய்து சங்கையுட னவள்பதத்தைத் தியானம்பண்ணே. (886)

§ தாரணியென்பது—பூமி.

பண்ணப்பா யின்னமொரு கருவைக்கேளு பதிவான வெட்டியுடன் சூடன்சேர்த்து, நன்னப்பா தாரமுடன் துரிசு வீர நடுவான லிங்கமுட னறுங்கூட்டி, விண்ணப்பா நிறைந்தபிர் தம் வாய்நீராலே விபரமுடன் கல்வமதி லரைத்துருட்டி, மண்ணப்பா குகைதனிலே வைத்துமூடி மண்சீலை செய்துலர்த்திப் புடத்தைப்போடே. (887)

போட்டபுட மாறவிட் டெடுத்துப்பாரு பூரணமாய்க் கட்டியது மணிபோலாடுங், தாட்டிகமா யம்மணியில் தங்கஞ் சேர்த்து தன்மையுடன் ருனுருக்கி யெடுத்துமைந்தா, நாட்டிடு வாய் வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று நன்மையுடன் கொடுத் துருக்கிப் பார்த்தால்மைந்தா, வாட்டமில்லாக் கன்னியவள் வயது பத்தாம் வையகத்தில் தானறிந்து வணங்கிநில்லே. (888)

வணங்கிநின்ற களங்கதனை நொறுக்கிக்கொண்டு மட்டடா யதற்கிடைதான் கெந்திசேர்த்து, சினங்குவிந்த லிங்கமுடன் வீரங் காரஞ் சேர்த்துநன்று யறுவகைநீர் தன்னாலாட்டி, மனங்குவிய வாட்டினபின் வழித்துருட்டி மனதாக § வயவகலில் வைத்துமூடி, கனங்குவியும் வாலைதனைத் தொழுதுகொண்டு கருணையுள்ள பூரண மாய்ப் புடத்தைப்போடே. (889)

போட்டபுட மாறவிட் டெடுத்துப்பாரு பொருமிநன்றாய்ச் சிவந்துசெந் தூரமாகும், நாட்டமுடன் செந்தூர மெடுத்துக் கொண்டு நல்லவெள்ளி செம்பினிலே நூற்றுக்கொன்று, தேட்ட முடன் கொடுத்துருக்கிப் பாருமைந்தா சிவசிவா சோதிவெகு சோதியர்குங், தாட்டிகமாய்ச் செகச்சோதி கண்டாயானால் தனு வான தேகமது முத்தியாச்சே. (890)

முத்தியுள்ள தேகமதிற் பணவிடைசெந்தூர முறையோடே யந்திசந்தி கொண்டால்மைந்தா, பத்தியுள்ள மூலமதில் வாசிநின்ற பதிவாகத் தீபமதிற் பாயும்பாயும், சித்தியுடன் பற்றினதோர் தீபந்தானுந் திறமான மணிவீட்டிற் சென்றுபாயும், புத்திபதி பூரணமாய்ப் போதமாகிப் பூரணமாய் நின்றிலங்குந் தேகந்தானே. ()

---

§ அயவகலில்யென்பது—இரும்புக்கிண்ணத்தில்.

பிருதிவு வகுப்பு.

தானென்ற மச்சமுனி யெண்ணூரும்பாரு சகலகரு மான மெல்லாந் தானேதோன்றும், ஊனென்ற கருமானம் பஞ்சபூதம் உண்மையுட னதில்வகுப்பு வுரைக்கக்கேளு, தேனென்ற § பிருதிவியிற் சேர்ந்தமார்க்கஞ் செப்புகிறேன் கருக்குருவாய் செப்புறேன் யான், கோனென்ற தங்கமடா மண்ணும்மாச்சு. குருவான யிந்துப்புங் கல்லுப்பாமே. (892)

ஆமப்பா கல்லுப்பு தொட்டிசிங்கி அசைவான காரமுகிற் பவழப்புற்று, நாமப்பா சொல்லுகிறே மப்பிரேகங்காந்த நடுவான சிலாசத்து நாதமோடுவர்தான், தாமப்பா சொன்னபதி மூன்றுந்தானே தனுவான பிருதிவியின் மார்க்கமாகும், காமப்பா கருவ்தனுற் கண்டுகொண்டு கருணைபெறப் பிருதிவியைக் கண்டுபாரே. ()

அப்பு வகுப்பு.

பாரப்பா பிருதிவியின் வகுப்புச்சொன்னேன் பதிவான வப்பினுட வகுப்புக்கேளு, ஆரப்பா வறிவார்கள் காரியந்தான் ஆதியென்ற யியமடா வப்புவப்பு, பேரப்பா சாரமுடன் சத்திகாரம் பிலமான கெவுரியுடன் குதிரைப்பல்லு, காரப்பா வெள்ளைப்பாஷாணங்கெந்தி கனமான ஞானிதலை நண்டோடாமே. (894)

ஆமடா நண்டோடு முட்டைதானு ம[illegible]ான நத்தை சங்கு கிளிஞ்சியோடே, தாமடா சொன்னவினம் பதின்மூன்றுந்தான் சங்கையுள்ள வப்பினுட வகுப்பேயாகும், நாமடா சொன்னபடி பஞ்சபூத நாடிநன்றாய்ப் பார்த்தறிந்து குருவைப்பண்ணு, போமடா சகலகலி யோடிப்போகும் புத்தியுடன் தேயுவைநீ புகலக்கேளே. (895)

தேயு வகுப்பு.

கேளப்பா தேவியுட மார்க்கங்கேளு கிருபையுள்ள செம்பதுதான் தேயுவாகும், வேளப்பா வெடியுப்பு சவுட்டுப்புத்தான் மேலான கெந்தகமுஞ் சிலைசவ்வீரம், ஆளப்பா வரிதார நிமிளை நாக மடங்காத வெண்கலமு மிந்திரகோபந், தாளப்பா வெலும்புடனே மயிருங்கூட்டி சங்கையுள்ள பதின்மூன்றுந் தேயுவாமே. ()

---

§ பிருதிவுயென்பது—மண்.

வாயு வகுப்பு.

தேய்வான வகுப்பதனை நன்றாய்ச்சொன்னேன் தெளிவான மனதுறுதி யாலேமைந்தா, § வாய்வான சரக்குவகை சொல்லக்கேளு வலுவான விரும்பதுதான் வாய்வேயாகும், காய்வான துரிசது வெண் காரஞ்சாரங் கண்டாதி லிங்கமுடன் பஞ்சபட்சி, ஓய்வான ரத்தமுகிற் பாஷாணந்தான் ஒடுங்கிநின்ற கல்மதமுங் கன்னாமே. ()

தானென்ற ரோமமுட னன்னபேதி சகலகாத் திரபேதி சங்கையாக, கோனென்ற குருவருளாற் சொன்னமார்க்கங் குறிப்பான பதின்மூன்று சரக்குத்தானும், ஊனென்ற வாய்வுனுட கூறேயாச்சு உத்தமனே யவ்வாய்வைக் கண்டபோதே, நானென்ற வாணுவங்க ளற்றுப்போச்சு நலமான குருபதமு மேவலாச்சே. ()

ஆகாச வகுப்பு.

ஆச்சப்பா வாய்வுனுட வகுப்புச்சொன்னேன் அடங்கிநின்ற வாகாச வகுப்பைக்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை நாகந்தானும் பேரண்ட மானதொரு வாகாசந்தான், நீச்சப்பா சூதமுடன் வழலைபூர நிலையான துத்தமுட னயக்காந்தந்தான், காச்சப்பா சீதபாஷாணமிந்து கல்லான சுக்கான கல்லுமாமே. (899)

ஆமப்பா வாகாசந் தன்னைப்பார்க்க அடங்கிநின்ற சரக்கதுவும் பத்தேபத்து, நாமப்பா கண்டபடி சொன்னோங்கேளு நடுவான பஞ்சகர்த்தாள் பஞ்சமூலந், தாமப்பா முன்னிலையாய்ப் பஞ்சபூதஞ் சரக்கறிந்தோ னவன்வாதி சாஸ்திரயோகி, வாமப்பால் மதியமுர்தங் கண்டயோகி மார்க்கமுள்ள சிவயோகி மனிதனுமே ()

மனிதனென்ற தேவனடா தேவாதிதேவன் வரிசையடா வாதியந்த வளமைகண்டு, அனுசரித்த காயாதி கற்பங்கொண்டு அடங்காத சமாதியிலே யனுசரித்து, தனுசரியாச் சித்தியெல்லா மேற்றுக்கொண்டு சகலகலை மூலமதில் வாசியேறி, மணிபொலியு மணிபூரந் தன்னினின்று மலைகள்வளந் தனிற்றவசு மகிழ்ந்துபாரே. ()

§ வாய்வுயென்பது—காற்று.

துருசு சத்துரு மிருத்து.

பாரப்பா பாஷாணங் காரசாரம் பதிவான வுபரசமும் பகுந்துபார்த்து, நேரப்பா சத்துருமித் துருவறிந்து நேர்மையுடன் முனடக்க நெறியைக்கேளு பேரப்பா மிலத்தமொரு துரிசுதானும் பெருமையுடன் கட்டுதற்கு சத்துருவைக்கேளு, நீரப்பா § விணங்கனொடு சூடன்சீன நெறிவெள்ளைப் பாஷாண மப்பிரகமாமே.

ஆமென்ற வெள்ளைப்பா ஷாணங்கல்லு வடங்காத மிருதார் சிங்கு காந்தந், தாமென்ற விந்துப்பு வங்கநாகஞ் சவர்க்கார மினவு முதலாய்ச் சத்துருவென்றெண்ணு, போமென்ற சத்துருவாற் கொன்றுபோட்டாற் புத்தியுட னெழுப்புதற்குப் புகலக்கேளு, நாமென்ற மித்துருவை நன்றாய்க்கேளு நலமான வெண்காரஞ் சாரமுடன்கேளே. (903)

கேளப்பா வரிதாரம் வீரங்கெந்தி கெடியான சிலைப்பூரஞ் சூதலிங்கம், நாளப்பா கெவுரியொடு நிமிளைபண்ணி, நன்மைபெற மித்துருவை நயந்துபார்த்து, கோளப்பா வாராமல் வாதம்பார்த் தாற் குணமாகு மணமாகுங் குருவைக்காரு, ஆளப்பா வாயிரத்தை யறிந்துபார்த்தால் அருமையுள்ள சாரமெல்லா மறியலாமே. ()

கார சத்துரு மித்துரு.

அறியவே சாரத்தில் சத்துருவைக்கேளு அடங்காத காரீயங் கல்லுச்சுண்ணம், முறியவே யோண்ட மஞ்சள்சுக்கான் முறையான வங்கமிரு காந்தக்கல்லு, தெறியவே கடல்நுரையு மிந்துப்பு படிகஞ் செம்மையுள்ள வப்பிரேகஞ் சவுடுமாகும், குறியாக வித்தனையுஞ் சாரசத்துருவாங் குறிப்பறிந்து கொண்டுநீ மித்துருவைக்கூட்டே.

கூட்டுவது மித்துருதான் காரீயங்கல்நார் குருலிங்கம் வீரவெடி காரமுடன்கெந்தி, நாடுவது சிலைதார நிமிளையொடுகெவுரி நாகமுடன் செம்பதுவும் நல்லமித்துருவாஞ்; சாடுவது மித்துருவைத் தானறிந்துகொண்டு சங்கையுடன் சரக்குகளைத்தானறிந்துகூட்டு ஆடுமிது வேதைக ளட்டமாசித்து அறிந்துகளையேறுவது வதிதமுமாமென்னே. (906)

---

§ இணங்கனேன்பது—வேடியுப்பு.

கல்லுப்புச் சத்துரு.

எண்ணுவது கல்லுப்புச் சத்துருவைக்கேளு வேகாந்த வீர முடன் சகடுசிங்கிசிலையும், உண்ணுவது பழம்புளியும் பதிபவளப் புற்று முத்தமே யிதுவெல்லாஞ் சத்துருவேயாகுந், தண்ணளிமை யாய்ச் சத்துருவைத் தானறிந்துகொண்டு சகலசரக் கத்தனையுஞ் சங்காரம்பண்ணு, சென்னிமனோன் மணியதனை சிந்தைதனிற்கண்டு சிவசிவா மித்துருவாற் பரிபாலஞ்செய்யே. (907)

செயமான மித்துருவைச் செம்மையுடன்கேளு செம்புலிங்க வங்கமொடு வெங்காரங்கவுரி, நயமான பூரமொடு வப்பிரேகவெள்ளை நாகமுடன் றாளகமு நயமானவிரும்பு, மயமான மித்துருவால் வகையறிந்துசெய்தால் மார்க்கமுடன் வகைகளெல்லாம் வரிசையுடன் சேர்த்துத் தயவான புத்தியினாற் றானறிந்துகொண்டு சகலசரக் கத்தனையுந் தன்மையுடன்காரே. (908)

வெடியுப்பு சத்துரு மித்துரு.

தன்மையுடன் வெடியுப்பு § சத்துருவைக்கேளு தருகாந்த சூடனொடு சவுடுகாரீயம், உண்மையுள்ள வெள்ளீயம் துரிசுகாந்தம் ஒடுங்கிநின்ற வெள்ளிசெம்பு விரும்புசிலைதொட்டி, வண்மையென்ற நீமுறுக லண்டங்கெந்தி மடங்காத சிங்கியுடன் சத்துருவேயாகுந், தன்மையுடன் சத்துருவைச் சங்கையுடன்கேட்டாய் தனதான § மித்துருவைத் தானறிந்துகொள்ளே. (909)

கொள்ளடா தந்தமொரு தாளகமுந்துத்தங் குறைநாக லிங்கமுடன் வீரமொடுகாரங், கல்லடா படிகியுடன் கல்லுப்பு மிந்து கடனுறையி நிமிளைவெள்ளை கம்பிளிநல்லோரம், விள்ளடா வெடியுப்பின் மித்துருவைச்சொன்னோ மேன்மைபெறக் கண்டறிந்து வினவுதனாற்பார்த்தால், உள்ளபடி வாதமது வுன்வசமேயாகு முத்திகொண்டு பார்த்ததனை லுன்தேகஞ்சித்தே. (910)

§ சத்துருயென்பது—பகை, § மித்துருயென்பது—சிநேகம்.

கார சத்துரு மித்துரு.

சித்தான காரமதின் சத்துருவைக்கேளு சிவசிவா சிலாசத்து செம்மையுடன்றுத்தம், வத்தாத மித்துருவைக் கண்டபடி சொல்வேன் வலுவான வுபரசங்கள் பர்ஷாணலோகம், வித்தான மித்துருவைக் கண்டவர்களாரும் விபரமுள்ள ரசவாதி மேன்மையுடன்காண்பான், பத்தான சரக்குவகை யறிந்தவனேசித்தன் பரஞான கேசரியைப் பணிந்துநீகாரே. (911)

காரடா சீனத்தின் சத்துருவைக்கேளு கருவான காரத்தின் சத்துருவேயாகும், நேரான மித்துருவின் வகையேதென்றால் நேரான காரமித் துருவைப்பாரு, வேரான காரமித் துருவைப் பார்த்து விசையான சரக்குகளைக் கட்டிக்கொண்டு, ஏரடா வாசியென்ற குதிரைமேலே யேறிவந்த லோகமதி லிருந்துபாரே. ()

தங்கச் சத்துரு.

பாரப்பா தங்கத்தின் சத்துருவைக்கேளு பதிவான காகமுடன் சவுடுவெள்ளை, காரப்பா விணங்கனொடு கெவுரிசிங்கங் கண்டரோடு நிமிளைநாக மப்பிரேகளு, சேரப்பா கிளிஞ்சியொடு சிங்கிமனோசிலையுந் திருவான § வண்டத்தோல் சூதமொடுகெந்தி, நேரப்பா குதிரைப்பல் கோமுகங்காந்தம், நேராகச் சவ்வீரம் பொன்னம்பர்தானே. (913)

தானென்ற தங்கத்தின் சத்துருவைச்சொன்னேன் தயவான மித்துருவின் விபரங்கேளு, கோனென்ற சத்துருவின் சரக்குவகை தள்ளி கொள்கின்ற மற்றதெல்லா மித்துருவேயாகும், வீனென்ற புத்தியினுற் கருவறியாவிட்டால் விபரமுள்ள வாதமெல்லாம் விழலேயாகும், நானென்ற வாணவத்தை யப்புறத்தேதள்ளி நடுவான கேசரியி னடிமிகவூதே. (914)

சூதச் சத்துரு.

நாடிநின்ற சூதத்தின் சத்துருவைக்கேளு நஞ்சான பூநீறு நிமிளையொடுபூரம், தேடிநின்ற கற்சவடு சூடன்வெடியுப்பு திருவான பொன்னம்ப ரிரும்புகாந்தம், கூடினதோர் சாரவெள்ளை கெவுரிசிங்கி கொடிதான சூதத்திற் சத்துருவேயாகும், வாடிநின்ற சத்துருவாற் சூதமதைக்கொண்டு வகையான மித்துருவால் வரிசைபாரே. (915)

---

§ அண்டத்தோலென்பது—குஞ்சுபொரித்த முட்டைத்தோடு.

வரிசையுள்ள மித்துருவைச் சொல்லக்கேளு வாடாத காரீய நாகமப்பிரேகம், உரிசையுள்ள கெந்தகமுஞ் சிலைவங்கந்தாரம் உண்மையுள்ள துரிசுசெம்பு வெள்ளிவெங்காரங், துரிசானச் சாரமுடன் ரொட்டியஞ்சனக்கல் தயங்காக தீமுறுகற் பவழப்புற்று, பெரியான துத்தமுடன் மித்துருவேயாருல் பெருமையுடன் கண்டுநீ பிலமாய்நில்லே. (916)

இரும்பு சத்துரு மித்துரு.

நில்லென்ற யிரும்புக்கு சத்துருவைக்கேளு நிசமான வெங்கலமும் வெண்காரமண்டங், கல்லான வப்பிரேக நிமிளேயோடு வங்கங் கடிதான திராகெந்தி சாரமுடன்சிலேயும், விள்ளென்ற சவ்வீரஞ் சிங்கியொடுகெவுரி மேலான சிலாசத்து வெள்ளைபூநீறு, உள்ளபடி யித்தனையுஞ் சத்துருவேயாகும் உகந்தமித் துருவைநீ யுண்மையுடன்கேளே. (917)

கேளடா மித்துருவை செல்வேன்மைந்தா கெணிதமுடன் வெள்ளிசெம்பு காந்தரூதம், ஆளடர் நாகமொடு பூரந்தங்கம் அரகரா கெந்தியுடன் மயூரச்செப்பு, தாளடா சூடனுடன் மித்துருவேயாகுஞ் சங்கையுட னிப்படியே தாக்கிப்பாரு, கோளடா வாராமலயமுருகும்பாரு கொண்டபடி காந்தத்துக் கிந்தமுறைபாரே. ()

நாக சத்துரு மித்துரு.

பாரப்பா நாகத்தின் சத்துருவைக்கேளு பருவமுடன் கிளிஞ்சியண்டங் கல்லுப்புவெடியுங், தேரப்பா தங்கந்துரு வெள்ளிவீரந் திருவான நண்டோடு வெண்கலமுஞ்சிங்கி, நேரப்பா வயின் மிளகு வெள்ளைப்பாஷாண நிலேயான வளயலுப்பு வன்னபேதியுமாம், ஆரப்பா வறிவார்கள் நாகசத்துருவை அறிந்துநீ மித்துருவை யன்பாய்க்கேளே. (919)

கேளடா மித்துருவை பாகந்தன்னைக் கெவுரிசெம்பு சூதமடா நாகங்கெந்தி, தாளடா வப்பிரேக மிரும்புகாந்தஞ் சாரமுடன் கருநாக § மயூரஞ்செம்பு, நாளடாசிலாசத்து நிமிளையெல்லா நாகத்தின் மித்துருவை நயந்துபாரு, ஆளடா சகலகலை சித்தையெல்லாம் அடங்கிநின்ற சத்திசிவ மருளைப்பாரே. (920)

§ மயூரச்செம்புயென்பது—மயில்தோகையிலுண்டாக்குவது.

காரீய சத்துரு மித்துரு

அருளான காரீயஞ் சத்துருவைக்கேளு அயக்காந்தங் கெவுரிகெந்தி யண்டரத்தை, திருவான கிளிஞ்சியொடு நிமிளை நண்டு செயராச வர்க்கமொடு கற்சுண்ணந்தான், உருவான யிவை யெல்லாஞ் சத்துருவேயாகும் உண்மையுடன் கண்டுநீ யுறுதியாக, குருவான பராபரத்தைக் குவிந்துபோற்றிக் கூர்மையுடன் காரீய மித் துருவைக்கேளே. (921)

வங்க சத்துரு மித்துரு.

கேளப்பா மித்துருதா னுகஞ்செம்பு கிருபையுள்ள மயூர முடன் வெள்ளிவங்கம், நாளப்பா § பூநாக சூதமெல்லாம் நலமான காரீய மித்துருவேயாகும், கோளப்பா வாராமல் மித்துருசத்துருவைக் கூறறிந்து கொண்டவனே சித்தன்சித்தன், வாளப்பா வரிசையுடன் வாரிதியைக்கண்டு வளமையுள்ள வங்கத்தின் சத்துருவைக்கேளே. ()

கேளுநீ வங்கத்தின் சத்துருவைநன்றாய்க் கிருபையுள்ள காரீய முறையாய்ப்பாரு, ஆளுநீ யிப்படியே வங்கத்துக்கு ஆரறி வார் சத்துருவை யறியவேண்டும், வாளுநீ மித்துருவைக் கேளு மைந்தா வரிசையுள்ள காரீயஞ் சூதந்துத்தம், சூளவே யிந்த முறை மித்துருவேயாகுஞ் சுகமாகக் கண்டறிந்து சூட்டிப்பாரே. ()

சூட்டிப்பார் சரக்குவகை தனக்குமைந்தா சுகமான சத் துரு மித்துருவைப்பார்த்து, நாட்டிப்பார் சரக்குகள்தான் கட்டிப் போகும் நடுவான பூரணத்தில் நாடிநின்று, மூட்டிப்பார் மூல மதில் வாசிதன்னை முக்கோண வீடறிந்து முழித்துப்பாரு, நீட் டிப்பார் காலறிந்து நீட்டினுக்கால் நீடூழி காலமொரு காலமாமே. ()

அஷ்டாங்க யோகம்.

ஆமப்பா யஷ்டாங்க யோகமாக்கம் ஆதிதொடுத் தந்த வரை சொல்லக்கேளு, தாமப்பா யோகமுதல் நேமந்தானுந் தரு வான வாசனமும் பிராணுயங்கள், வாமப்பா வரிசையினுல் பிரத்தி யாகார மகத்தான தாரணையுந் தியானமாகும், நாமப்பா சொல்லு கிறேஞ் சமாதியோடு நலமான யெட்டுவகை யோகம்பாரே. (925)

§ பூநாகமென்பது—நாகப்பூச்சி பூமியிலுள்ளது

ஏமம்.

பாரப்பா யெட்டுவகை யோகந்தன்னைப் பதிவாக வறிவற்கு விபரங்கேளு, காரப்பா யேமமென்ற கருவேதென்றால் கருணையுட னறிவுபூ ரணமாய்நின்று, தேரப்பா நால்வகையோ னியில்நன் ருகச் செனித்தவெழு வகையின்றோற் றந் திரமாய்க்கண்டு, வீரப்பா செய்யாமல் தன்னுயிர்போலெண்ணி விபரமுடன் றனிருக்க யேமமாச்சே. (926)

நியமம்.

ஆச்சப்பா நேமமதைச் சொல்லக்கேளு அருளான யேமத்தி லன்பாய்நின்றால், நீச்சப்பா நேமத்துக் குறியாகும் நெறியான நேமமது யென்னவென்றால் பேச்சப்பா பேசாத § மவுனஞானம் பேரண்ட சற்குருவைத் தொழுதுபோற்றி, மூச் சப்பா யவருடைய கடாட்சத்தாலே முதலான வட்சரத்தைக் கேட்டுக்கொள்ளே. (927)

கேட்டுநின்ற வட்சரத்தாற் சத்தகோடி கிருபையுள்ள மந்திரங்க ளெல்லாம்பெற்று, நாட்டியந்த வட்சரத்தா லப்பி யாசிக்க நலமான மந்திரங்க ளெல்லாஞ்சித்தி, கூட்டியந்த குறிப்புடனே யிருந்துகொண்டால் கூரான நேமமதற் குறி யாச்சு, தாட்டிகமாம் நேமத்துக் குறியானால் தனதான வாசன முஞ் சித்தியாமே. (928)

ஆசனம்.

சித்தியுள்ள வாசனத்தைச் செப்பக்கேளு சிவசிவா சிவ தீட்சை திறமாய்ப்பெற்று முத்திபெற்ற தீட்சையது தவறுமற் றுன் முறையோடே குருமுறையாப் முதலைக்கண்டு, பத்தியுட னுபதேசப் படியேநின்று பரமசிவ சித்தனையாய்ப் பதியைக்கண் டால், சுத்தமுள்ள வாசனமு மிதுதானப்பா சுரூபமுள்ள வாச னத்தைத் தொழுதுநில்லே. (929)

§ மவுனமென்பது—வாய்பேசாதிருத்தல்.

பிராணாயம்.

நில்லடா க்ஷணமென்ற வாசனத்தில் நீமகனே மனதுறுதி யாகநின்றால், செல்லடா பிராணாயஞ் சித்தியாகும் சிவசிவா பிராணாய மென்றுசொன்னால், சொல்லவொண்ணாச் சத்தியுடன் தீட்சை யாகுஞ் சுரூபமுள்ள சத்தியென்றால் § மனோன்மணிதானப்பா, நல்லதொரு மனோன்மணியைத் தியானஞ்செய்து நலமாகப் பூசித்தால் பிராணாயமாமே. (930)

பிரத்தியாகாரம்.

ஆமப்பா பிராணாய மறிந்துகொண்டு அந்தநிலை தவறாம லனுட்டித்தாக்கால், நாமப்பா சொல்லுகிறோம் பிரத்தியாகாரம் நடுவான பூரணந்தா னூர்காண்பார்கள், த..மப்பா சொல்லுகிறேன் றன்றாறுதி தயவான காயாதி கற்பங்கற்பம் வாமப்பால் மதியான கற்பங்கொண்டு மகத்தான பூரணத்தில் மருவியேறே. (931)

தாரணை.

மருவியந்த மூலமதில் வாசிகொண்டு மார்க்கமுடனக் கினியை யெழுப்பிமைந்தா, கருவிகர ணாதிகளை சுட்டுநின்றால் கருணையுள்ள பிரத்தியாகாரமாகும், தருவான பிரத்தியா காரங் கொண்டு தன்மையுட னின்றதனால் தாரணையுமாகும், திருவான தாரணைதா னென்னவென்றால் செப்புகிறேன் மூலமதின் வாசிதானே. (932)

தானென்ற தாரணையைச் சொல்லக்கேளு தருவான பிரத்தியாகாரந்தன்னால், தேனென்ற மூலமதில் வாங்கிக்கொண்டு சிவசிவா ரேசகபூ ரகமும்பண்ணி, மானென்ற கும்பகத்தில் நின்றுகொண்டு மயங்காத தீபமதில் மனதைவைத்து, கோனென்ற வவ்வெளியிற் சென்றுவேறிக் குறியுடனே யிருக்கிறது தாரணையுமாமே. (933)

ஆமப்பா தாரணையை யறிந்துஅந்த வகண்டவெளி தானாக வறிந்துகொண்டால், நாமப்பா சொல்லுகிறோந் தியானமாகும் நடுவான தியானமது வென்னவென்றால், தாமப்பா சகலவிசு வாசமெல்லாந் தானல்ல நீயென்று சங்கையாக, போமப்பா நிட்களமாய் நின்றாயானால் பொருந்திநின்ற தியானமதின் பொருளைக்கேளே. ()

---

§ மனோன்மணியேன்பது—வாலை.

சமாதி.

கேளப்பா தியானமதில் மனதுறுத்தால் கிருபையுள்ள சமாதியெனச் சொல்லலாகும், தாளப்பா சொல்லுகிறேன் சமாதி நேர்மை தானென்ற தத்துவத்தை யொடுக்கிமைந்தா, கோளப்பா § குடிலமென்ற மனதொடுக்கிக் குவிந்தமன தொன்றிபத்துக் கூர்மையாக, வாளப்பா மவுனமொத்து நிராசையாக மனநினைவு தான் கடந்தாற் சமாதியாமே. (935)

ஆமப்பா யெட்டுவகை யோகத்திற்கு மவையடக்க மென்ன வென்றால் மனமேயாகும், காமப்பால் கானற்பால் கொண்டுதேறிக் கருவான காயாதி கற்பங்கொண்டு, தாமப்பா தன்னருளைத் தானே கண்டு சச்சிதா னந்தமென வறிவில்நின்றால், வாமப்பால் மதியன வமுர்தந்தானும் வாறுதிபோ லூறுமடா மகிழ்ந்துகொள்ளே. ()

இரவி தெரிசனம்.

கொள்ளடா மதியமுர்தங் கொண்டுநல்ல குருவான ரவியி னுட தெரிசனத்தைக்கேளு, விள்ளடா பங்குனிசித் திரையில்நீயும் விடியவொரு நாளிகையில் தேகசுத்தி, நள்ளடா வுதயமதை விழித் துப்பாரு நயனமது சிமிட்டாமல் நன்றாய்ப்பார்த்தால், உள்ளடா நயனமதிற் கூச்சமாகும் ஓம்ரவி நமாவெனவே யுகந்துபாரே. ()

பாரப்பா வுதயமுத லைந்துமட்டும் பார்த்தபின்பு யிதன் பிறகு மைந்தாகேளு, நேரப்பா நின்றநிலை யதனினின்று நேர்மையுடன் மார்புருளத் தெண்டம்பண்ணு, காரப்பா யிப்படியே நேமமாகக் கனிவாக மண்டலமே தியானித்தாக்கல், தேரப்பா முதுகிடமாய் வட்டமாகச் சிவுசிவா ரவிபிறப்பைக் காந்தியாமே. (938;

காந்திதனைக் கண்டவுடன் மைந்தாகேளு கருவான வாசி யது வகலாதப்பா, சாந்தமாந் தேகமதின் வியாதியெல்லாந் தன்மையுடன் திருமடா தயவாய்ப்பாரு சேர்ந்துநின்ற தேகமது வலுத்துப் போச்சு திறமான ரவிபோலே தேகமாச்சு, பாந்தியமாய் யிப்படியே ரவியைக்கண்டால் பல்லூழி காலமட்டும் வாழலாமே. (939)

---

§ குடிலமேன்பது—ஆகாயம்.

மதி தெரிசனம்.

வாழ்வதற்கு மதியினுட தெரிசனத்தை வரிசையுடன் சொல்லுகிறே னன்றாய்க்கேளு, ஆழ்வதற்குத் தைமாத முதயகாலம் அனுதினமுஞ் சற்குருவைத் தொழுதுகொண்டு, சூழ்வதற்குப் பிறைமூன்றும் பிறையில்நின்று திறமாகப் பூரணைசந் திரனைப் பாரு, தாழ்வதற்குச் சந்திரனற் தியானங்கேளு தன்மையுடன் சிம்மெனவே தாண்டிப்பாரே. (940)

பிரம தெரிசனம்.

பார்க்கையிலே சந்திரனு ரவியிற்சேர்ந்த பக்குவங்கள் நன்றாகத் தோன்றும்பாரு, ஏர்க்கையுடன் மதிரவியிற் சேர்ந்தபோதே யிகபரசா தனமெனவே யிருக்கலாகும், சேர்க்கையுட னிக்கருவை யுலகத்தோர்க்குச் செப்பினற் கைலாய மிடங்கொள்ளாது, மார்க்கமுடன் மனதறிவால் மகிழ்ந்துகொண்டு மாசற்ற சோதியைநீ மருவிப்பாரே. (941)

பாரப்பா § விருநயன மென்றாய்க்கூட்டிப் பதிவான விருசயத்தில் மனதைவைத்து, கோரப்பா சுழிமுனையிற் பற்றியந்த விதமாக வக்கினியில் நின்றுகொண்டு, தேரப்பா பூரணமாம் வாசி தன்னற் சிக்கனவே நங்கென்று திருவைநோக்கி, காரப்பா வறிவு கொண்டு பார்த்தாயானல் கலங்காத பிரமமுட தெரிசனமுமாமே. ()

ஆமென்ற பிரமதெரி சனையைக்கண்டால் அக்கால வப்பிர்த்து வகன்றுபோகும், ஓமென்ற பிரணவமே யுச்சமாகு முருமுகின்ற வாய்வுகளு மொடுங்கும்வீட்டில், தாமென்ற சங்கர்ப்ப விகற்பந்திருஞ், சகலகலை மந்திரமுந் தன்மையாகும், மாவென்ற மவுனமது வனிக்குமையா மகத்தான யோகத்துக் கடிதான்பாரே. ()

விஷ்ணு தெரிசனம்.

அடியான பிரமகலை யறிந்துகொண்டு வாதியென்ற வக்கினியைத் தொழுதுபோற்றி, குடியான மணிபூரந் தன்னினின்று கூர்மையுடன் வாசியின்மேற் குவிந்துயேற்றி, கடிதான கமலமதி னின்றுகொண்டு கருணைபெற மங்கென்று தியானம்பண்ண, வடிவான திருமால்தன் கருணைதங்கு மாய்கையென்ற மயக்கமெல்லாம் வாங்கிப்போமே. (944)

§ விருநயனமென்பது—இரண்டுகண்.

வாங்கிப்போந் திரோதாயின் மயக்கமெல்லா மவுனமென்ற பூரணமு கனதிற்றங்கும், பாங்குபெறக் கமலமதில் தீபந்தோற்றும் பதிவான வாசிகளும் பணியும்வீட்டில், தூங்கிநின்ற தூக்கமது தொடராதையா தூலமென்ற காயமது சுத்தமாகும், சாங்கமாய்ச் சகலகலை தன்னுட்காணுஞ் சச்சிதா னந்தமென்ற வறிவுதானே. ()

மகேஸ்பர தெரிசனம்.

தானென்ற மாலினுட கலையைக்கண்டு சங்கையுள்ள தீப மதிற் சுடரைப்பற்றி, கோனென்ற முக்கோணக் குறியில்நின்று குருவான வாசியைநீ குணமாய்ப்போற்றி, மானென்ற மவுனமதாற் சிம்மென்றேதான் வணக்கமுடன் மனமுருகத் தியானஞ்செய்தால், நானென்ற வுருத்திரனார் கிருபைதங்கி நாடிநின்ற பிறவிகளு மற்றுப்போச்சே. (946)

போச்சென்று விடுகாதே மகேஸ்பரத்தைப் பொருந்திமன மொன்றாகப் புருவமேலே, வீச்சென்ற வாசியைநீ யதனிற்றாக்கி விசைகொண்டு வங்கென்று விரும்பியூது, பேச்சென்ற சத்தமடா பிரளாதையா பிலமான வாய்வதற்கு வுயிருமாச்சு, நீச்சென்ற மகேஸ்பரத்தி னருளேதங்கி நிசமான சிவகலையும் நிலைக்கும்பாரே ()

பாரப்பா மகேஸ்பரத்துச் சித்தரெல்லாம் பணிந்துமலை யேறியவர் பதமேபெற்றார், வீரப்பா கொண்டவர்க்கு வறிவங்கேது விண்ணதனைக் காணாத வீணர்மெத்த, நீரப்பா நின்றநிலை யறிந்து கொண்டு நீஞ்சினாற் கரையேறி நிமிரலாகும், காரப்பா கமலமல ரமுர்தநின்ற கரைகாணு வாவியைநீ கண்டுநீஞ்சே. (948)

சதாசிவ தெரிசனம்.

நீஞ்சினால் சதாசிவத்தை காணலாகு நிலைகாணாப் பாவிகள் தான் காணமாட்டார், § வாஞ்சையினாற் சொல்லுகிறேன் அங்கென் றேதான் வளமான வாசியைநீ வணங்கிக்கொண்டு, பாஞ்சென்று வக்கினியில் முடிவிற்சென்று பதிவாக ரவிமதிக் காலேசென்றால், பூஞ்சென்று பூத்தமலர் வாசந்தன்னைப் புகலுதற்கு வெட்டவெளி யாகும்பாரே. (949)

§ வாஞ்சையென்பது—ஆசை.

பாரப்பா வெட்டவெளி தன்னினின்று பதிவான ரவி மதியைப் பார்த்துப்பார்த்து, தேரப்பா மனதறிவி ஞாலேயப்பா தேறினாற் சிவயோக சித்தியாகும், காரப்பா சிவயோக முத்தி யாலே கைலாய தேகமடா கற்பதேகம், சாரப்பா மூலமுத லாராதாரந் தானறிந்தாற் சிவவேடந் தனதாந்தானே. (950)

சிவவேட தீட்சை.

தானென்ற சிவவேடங் காயாசந்தான் தன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு கோனென்ற சற்குருவைக் கண்டு போற்றிக் குணமாகத் தசதீட்சை பெற்றுக்கொண்டு, தேனென்ற வமூர்தமடா அகாரதீட்சை திருவான சத்தியடா உகாரதீட்சை மானென்ற வண்டமடா மகாரதீட்சை மகத்தான வட்டாங்க யோகங்கேளே. (951)

அட்டாங்க தீட்சை.

கேளப்பா வட்டாங்க யோகதீட்சை கிருபையுட னீராறு தீட்சைபெற்று, வாளப்பா வரிசையுட னிருந்துகொண்டு மார்க்க முட னியிருக்கு மொடுக்கங்கார்த்து, நீளப்பா காலரைதான் பாலுமன்ன நேர்மையுட னொருபோது கொண்டுதேறி, தாளப்பா வுலகமதில் வாழ்வோர்க்கெல்லாம் சங்கையுடன் முன்பணிந்து சஞ்சாரம்பண்ணே. (952)

சிவவேடம்.

சஞ்சார சமாதிமன நிறுத்திக்கொண்டு தாம்பூர வறு கழஞ்சு தயவாய்வாங்கி துஞ்சாம வீராறு சுத்திபண்ணித், துன்ப மென்ற களிம்பற்றுச் சுகமாய்நீயும், நெஞ்சாரச் சற்குருவைத் தொழுதுபோற்றி நேமமுடன் ரவிபோலே வளையமாக, அஞ் சாம லிருவளையஞ் செய்துகொண்டு அப்பனே குருபூசை யன் பாய்ச்செய்யே. (953)

§ காலரைதானென்பது—கால்பங்கு அரைப்பங்கு.

செய்யப்பா குருபூசை பரத்துக்கேதான் சிவசிவா காயகச வேட்டிநல்கி, மெய்யப்பா மெய்யதுவு மெய்தானென்று மேன்மை யுள்ள ரவிவளையங் கையில்வாங்கி, நெய்யப்பா வக்கினியில் தூவி யந்த நேமமென்ற ரவிவளைய மதனிற்காட்டி, கையப்பா விரலைந் தில் மூன்றுதள்ளிக் கருணைபெற நடுவிரலாம் ரெண்டிற்பூட்டே. ()

பூட்டியந்த விபூதியுந் தளமாய்ப்பூசி புகழாடை ரெண்டு வெள்ளை தானெடுத்து, தாட்டிகமா யிடைமேலுந் தரித்துக்கொண்டு சங்கையுட னெட்டியான பெந்தனப்பண்ணி, காட்டினிலைப் பனையாக விருந்துகொண்டு நடராச நீதமதைப் பார்த்துமைந்தா, வாட்டமில்லா மனதுகொண்டு வொடுக்கங்காட்டி மனதொடுங்கச் சிவயோக வளமைபாரே. (955)

பாரப்பா சிவயோகஞ் செய்துகொண்டு பதிவான சதாநிட்டை மூத்தனுகி, நேரப்பா நின்றதனால் மைந்தாகேளு நின்சமுகங் கண்டவர்கள் தனக்குத்தானும், வீரப்பா கொண்டதொரு பீடை யெல்லாம் விட்டோடிப் போகுமடா விருதுமார்க்கம், ஆரப்பா வறிவார்க ளறியாமற்றான் அசடரெல்லாம் விடம்விட்டு வலையுறுரே. (956)

அலையுறுர் வாய்மதங்கள் மெத்தப்பேசி அன்பாகப் பூர ணத்தை யறியாமற்றான், குலையுறுர் சகலம்சம் பத்தில்நின்று § கூட ழிந்து போமெனவே குறியாமற்றான், தலையான தலைதெறித்துத் தத்தியேதான் தன்காலுங் காணுமற் றவறிப்போனுர், வலையான காமவலை தன்னிலேறி மாண்டுதடா வெகுகோடி மச்சந்தானே. ()

தானுன மச்சமது சாகரத்தில் தன்பசியாற் றுனேடித் தான் றுனுகி, ஊனுன சிறுமச்சங் கொண்டுநின்று உறுதிமீனுய் நின்று தடா வுறுதியாக, தேனுன லோகமது சொல்லும்வார்த்தை சிறுத் தொண்டர் தன்கதையைச் செப்பக்கேளு, கோனுன குருமுறையை யெண்ணுமற்றான் குவிந்தநெருப் பாறில்மனங் குளிர்ந்திட்டாரே. ()

§ கூடழிந்து—சடலமழிந்து.

ஆவாரம்பட்டைத் தைலம்.

குழன்றுமனந் திரியாம லின்னமொன்று கூறுகிறேன் மூலி கையின் குணத்தையெல்லாம், அழன்றுமிக வலையாதே யையா கேளு ஆவரையின் பட்டையுடன் வேங்கைப்பட்டை, தழன் றுருகுஞ் சிவன்வேம்பு மூன்றுங்கூட்டித் தன்மையுட னுதியந்தக் கருவுஞ்சேர்த்து, உழன்றுமிகத் திரியாம லொன்றாய்க்கூட்டி உத் தமனே பாண்டமதி விட்டுமூடே. (959)

மூடிநன்றாய்ச் சீலைசெய்து மைந்தாகேளு முக்கியமாய்க் குழித்தைல மிறக்கிக்கொண்டு, நாடியந்தத் தைலமதைப் பதனம் பண்ணி நலமாகச் சண்முகத்தைத் தியானஞ்செய்து, வாடிநின்று தவியாம லையாகேளு மார்க்கமுடன் தைலமதில் பணவிடைதான் கொள்ளு கூடிநின்ற வியாதியெல்லா மோடிப்போகுங் குணமாக மண்டலமுங் கொண்டுதேறே. (960)

கொண்டுவிடு மண்டலத்தில் தேகந்தன்னில் கூறுகிறேன் சட்டையொன்று வெளுப்பாய்ப்போகும், அண்டர்பிரா னருளதனு லாக்கைதானும் அழிவில்லை யென்னுளு மதுதான் § போதம், கண்ட தொரு தைலமதிற் சூதங்கூட்டிக் கையாலே மத்தித்துச் செம்பிற் பூசி, விண்டபடி புடம்போடு தங்கமாகும் வேதாந்த பூரணி யாள் சொல்விதாமே. (961)

சுரைவித்துத் தைலம்.

ஆமப்பா யின்னமொரு தைலங்கேளு அடங்காத சுரை வித்து பீர்க்கம்வித்து, தாமப்பா வாமணக்கு வித்துமூன்று சரிசம னாய்த் தானெடுத்துத் தன்னேடொக்க, நாமப்பா சொல்லுகிறே மாதியந்தம் நன்மையுட னைந்துமொன்றாய்க் கூட்டிக்கொண்டு, சோமப்பால் மதியாலே யிடித்துநல்ல சுகமான பாண்டமதி விட்டுக்கொள்ளே (962)

கொள்ளடா முன்போலே தைலம்வாங்கிக் கூர்மையுள்ள மேருதனிற் பதனம்பண்ணு, செல்லடா குருமதியிற் சென்று கொண்டு சிவசிவா தைலமதிற் பணவிடைதான்கொண்டால், உள் ளடா மயக்கமுற்று மூர்ச்சையாகி உத்தமனே யொருநொடியில் தெளிந்துபோகும், மள்ளடா யிப்படியே மண்டலமேகொண்டால் வசையாது தேகமது கல்லுத்தானே. (963)

§ போதமென்பது—ஞானம்.

தானென்ற தைலமதில் வீரம்பூரந் தன்மையுள்ள ரசமுடனே மத்தித்தேதான், கோனென்ற குருபதத்தைத் தொழுதுபோற்றிக் குருவான நவலோகந் தன்னிற்பூசி, நானென்ற § வாணுவத்தை விட்டுப்போட்டு நன்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு, தேனென்ற வாலையுட கிருபையாலே சிவசிவா நவலோகம் பொன்னாய்ப்போமே. (964)

பூரணத் தைலம்.

போமென்று விடுகாதே யின்னமொன்று பூரணமா தைல வகை புகலக்கேளு, ஓமென்ற குருவருளாற் கெந்திபூர முத்த மனே நவச்சார மொன்றாய்க்கூட்டி, தேனென்ற முப்பூவும் கூடச் சேர்த்து திறமான வெங்கோலத் தைலமூட்டி, ஆமென்ற வுரல்தனிலே யிடித்துக்கொண்டு அன்பான பரணியிலே யமர்த்துவாயே. (965)

அமர்த்திநன்றாய் முன்போலே மைந்தாகேளு அருள் பெருகக் குழித்தைலம் வாங்கிக்கொண்டு, சமர்த்தான தைலமதைப் பதனம்பண்ணிச் சற்குருவின் பாதமதைத் தொழுதுகொண்டு, விமத்தகலுந் தைலமதிற் பணவிடைதான்கொண்டால் மேல்நாடி நரம்புகளு மிறுகிப்போகும், நமக்கான நமனவனும் விலகிப்போவா னுதாந்தத் தேகமது முத்தியாமே. (966)

முத்தியுள்ள தைலமதில் மைந்தாகேளு மூர்க்கமுள்ள வீர முடன் பூரங்காரம், புத்தியுள்ள ரசமதுவுங் கூடச்சேர்த்து பாலகனே கல்வமதி லாட்டிநன்றாய், புத்தியுடன் றான்வழித்து வங்கத் தப்பி பூரணத்தை தொழுதுபுடம் போட்டுக்கொண்டால், சுத்த முள்ள தங்கமதா யிருக்குமைந்தா சிவமாகச் சிவயோகத் துறையில்நில்லே. (967)

மருதோன்றித் தைலம்.

துறையாக யின்னமொரு கருவைக்கேளு துலங்குமருதோன்றிவேர் சமூலம்வாங்கி, நிறையாக வெட்டிவேர் கூடச் சேர்த்து நிசமான வாதியந்தக் கருவுங்கூட்டி, குறையாமல் தானிடித்துப் பாண்டத்திட்டுக் குருவான சற்குருவைத் தியானம் பண்ணி, முறையாகக் குழித்தைல மிறக்கிமைந்தா முன்போலே பதனமதாய் வைத்துக்காரே. (968)

---

§ ஆணுவமென்பது—கெர்வம், அகங்காரம்.

கார்த்துநின்ற தைலமதில் மைந்தாகேளு கருவான தார முடன் கௌரிகூட்டி, பூர்த்துநின்ற பாஷாணந் திருசரூதம் பொருந்தவைத்து மொன்றாக்கி நிறுத்துக்கொண்டு, பார்த்திபனே தைலமதாற் கல்வத்தாட்டி பக்குவவாய் சிமிழ்தனிலே பதனம் பண்ணி, போற்றிநன்றாய்ச் செம்பதிலே தடவிக்கொண்டு பூசித் துப் புடமதனிற் போட்டுப்பாரே. (969)

பாரப்பா செம்பதனை யெடுத்துப்பார்க்கப் பஞ்சவர்ன வொளி வதிலே யுண்டாமைந்தா, காரப்பா வெள்ளிதனிற் றடவிப்போடக் கருவான பெண்ரூப மென்னசொல்வேன், சாரப்பா சரக்குகளிற் றடவிப்போடத் தன்மையுடன் கட்டுமடா கசடற்றேதான், ஆரப்பா வறிந்துசெய்வா ராகிதன்னை அரகரா வதனுடைய வாட்டந்தானே.()

ஆட்டமென்ற வாட்டமெல்லா மாதியந்தம் அருளான வாத முறை யாதியந்தம் ,நாட்டமென்ற வாசியடா நந்திபீடம் நடு வான சோதியடா நாதவீடு, தேட்டமுட னவ்வீட்டில் சென்று கொண்டு திருவான பூரணத்தைக் கொண்டுதேறு, வாட்டமென்ன மயக்கமென்ன மட்டிமாடே, மயக்கமதா லொன்றுமில்லை மன முட்கொள்ளே. (971)

கொண்டுகரை யேர்வதற்கு விந்தநூலைக் கூறினேஞ் செகத் தோர்கள் பிழைக்கவென்று, அண்டர்பிரா னருளதனாற் சொன்ன வாக்கியம் ஆயிரம்போ லொருநூலுங் கிடையாதப்பா, கண்ட வர்கள் பொருளறிந்து செய்துகொள்ள கன்மவினை யொட்டாது நாமென்செய்வோம் விண்டபொருள் கண்டறிந்து செய்யமாட் டார் வீணருக் கென்செய்வோம் விதிதானுமே. (972)

விதிவிலக்கக் கற்பமுறை சொன்னேனந்த வீணரவ ரறு சுவைமேல் விருப்பமாகி, மதிதவறி நின்றார்க ளையோவையோ மாண்டிடு லென்னபலன் வருமோமக்காள், பதியான பதிதனிலே பதிவாய்நின்று பரமசிவ சத்திதனைப் பூசியாமல், § சதிகாரனாக வுட னுயிரைக்கொன்றால் சதாகால நரகமதி லெய்துவானே. ()

§ சதிகாரனாகயென்பது—வஞ்சககாரனாய்.

வானான மதியமுர்தங் கொண்டாலந்த மகத்தான நரகமெல்லாம் விலகிப்போகும், தேனான வமுர்தமதைச் சிச்சியென்று தேசாதி தேசமெல்லா மழிந்ததையோ, ஊனான வுரிசைதனை யுட்கொள்ளாம லுகமுடிந்து போகுதடா வுயிர்களெல்லாம், தானான கருவதனை யறிந்துகொண்டு சகலகலை வல்லவனா யிருக்குபாரே. ()

இருந்துகொண்டு வாதியந்தம் பார்ப்பதற்கு வென்மக்கா ளாயிரமும் நன்றாய்ப்பாரு, அருந்தமிழா லுரைத்தசிவ யோகம்பாரு வருள்பெருகு ஞானகே சரியைப்பாரு, வருந்தியிந்த நூல்களை நீயறிந்திருந்தும் மதிமயக்க மானதைநா னென்னசொல்வேன், திருந்தியந்த வறிவதனல் தேறுமக்காள் தேறாட்டால் காலகெதி யென்றுநில்லை. (975)

நில்லடா நிலையில்மனம் நிலைக்கவென்று நிசமான கருமானஞ் சொல்லக்கேளு, விள்ளடா நாகரசம் வெள்ளைவீரம் விபரமுள்ள சாதிலிங்க மைந்துமைந்து, நல்லடா வரிதாரம் துரிசுசூத்தம் நலமான கெவுரியொடு கெந்தியைந்து, கொள்ளடா வெடியுப்புப் படிகாரங் கூர்மையுள்ள நவச்சாரஞ் சவர்க்காரமாமே. (976)

ஆமப்பா மூவைந்து மொன்றாய்க்கூட்டி அப்பனே யறுவகைநீர் பழச்சாற்றாலே, நாமப்பா சொல்லுகிறோங் கல்வத்திட்டு நன்மைபெற யிறுவகைநீர் தன்னாலாட்டி, ஓமப்பா வேமடிய நன்றாயாட்டி, உரிமையுட னெட்டடங்க ஆட்டிகொண்டு, காமப்பாற் குலவிலே நாதம்வாங்கிக் கருணைபெற விட்டுநன்றா யாட்டிப்பாரே. ()

ஆட்டிமிகப் பார்க்கையிலே மைந்தாகேளு அருளான பரஞான கேசரத்தினருளால், கூட்டிநின்ற சரக்குகள்தா னொன்றோ டொன்று கூடியல்லோ வேரிமடிந்து கட்டிக்கொண்டு, தாட்டிகமாய் மெழுகதுபோ லாச்சுமக்காள் தயவான யிதன்பிலத்தை யென்னசொல்வேன், § மாட்டிவிடு மெழுகதிலே பத்துக்கொன்று மடியாத வெள்ளிய பற்பஞ்சேரே. (978)

§ மாட்டிவிடுயேன்பது—சேர்த்துவிடு.

சேர்த்துமிகத் தானரைத்து நாலுக்கொன்று திறமான தங்கரேக் கதுவுங்கூட்டி, பார்த்தினை நன்ருக வரைத்துருட்டி பதிவான வெள்ளியென்ற சிமிழில்வைத்து, போற்றிநன்ருய்த் தொழு தெடுத்து மைந்தாநீயும் புனிதமுடன் குருபூசை செய்துகொண்டு, நாற்றிசையு மெனேக்காக்குந் தெய்வமென்று நன்மையுள்ள மெழு கதனைப் பதனம்பண்ணே. (979)

பதனமுள்ள பதியிலே மைந்தாகேளு பணவிடை தானெ டுத்துப் பத்தியமேயாக, விதனமில்லா வெள்ளிசெம்பில் தகட் டில்பூசி விரும்பிநன்ருய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு, அதனை முள்ள மாற்றதிக மென்னசொல்வேன் அரகரா பரஞ்சோதி யதிக சோதி, மதனமுள்ள மவுனமடா மகத்தாமார்க்க மூக்களே நவ லோகந் தன்னிற்பூசே. (980)

பூசிநன்ரு யெருவடுக்கிப் புடத்தைப்போடு பூரணமாய் பழுக்குமடா புகழோமெத்த, வாசிநின்ற வடிவதற்கு வுயிராய்நிற்கு மகத்தான சத்திசிவ பூசைபண்ணி, நேசமுட குருபதமே கெதி யென்றெண்ணி நின்றதிறற் சகலசித்து நேரதாகும், நாசிநுனி சுழிமுனேயே வாதகாந்தம் நடுவான பூரணமே தீபமாமே. (981)

தீபமென்ற மெழுகதிலே மைந்தாநீயும் செம்மையுடன் பண விடைதா னெடுத்துக்கொண்டு, தாபமுள்ள குடவனிலே தடவிக் கொண்டு சங்கையுள்ள தியானமதாய்ப் புடத்தைப்போடு, கோப மென்ற ஞற்றமது சுத்தியாகிக் குருவான தங்கமாய்ப் பழுக்கும் பாரு, சாபமென்ற தீவினையை யறுத்துநல்ல சங்கையுள்ள சிவ யோகத் தன்மைபூணே. (982)

தன்மையென்ற வாயிரத்தைப் பதனம்பண்ணிச் சதாகால மவுனமதா யெடுத்துப்பாரு, உண்மையுற்ற சீஷருக்கு வுரைத்துக் காட்டு உறுதியிலே வெகுவுறுதி யாகில்லு, நன்மையதாய் நாட தனில் நடந்துகொள்ளு நல்லோர்கள் பெரியோர்கள் தன்னேக்காரு, § திண்மையென்ற போகத்தில் தெளிவாய்நில்லு தெளிந்தாலு மன துறுதி திறத்தைக்காரே. (983)

§ திண்மையென்பது—உறுதி.

விஷந்தீர விஷமெழுகு.

காரான காலவிஷ மெல்லாந்தீரக் கருவான மூலிகையி லொன்றுகேளு வீரான யறுகம்புல் விஷத்துக்கெல்லாம் விஷமான மூலிகைதா னையாவையா, கூராகப் பிடுங்கியதை யரைத்துருட்டிக் கொண்டுகடி வாயிலதைப் பூசிவிட்டால், நேராகத் தீருமென்று முன்னோர்சொன்ன நிசமான சிவமூலிக் குணமிதாமே. ()

குணமான யின்னமொரு கருவைக்கேளு குருவான வண்டமதில் கருவைவாங்கி, நிணமான கருவதனை ரவியிற்போடு நீர்வற்றித் திரண்டுமெழு காகுமையா, தனமாக யிம்மெழுகைப் பதனம் பண்ணித், தாரணியிற் கால்கடி தலைமேற்கொண்டால், மனமான மெழுகில்கடு களவெடுத்து வையடா கடிவாயில் வெதுப்பித்தானே. ()

தானென்ற கடிவாயில் வைத்தபோது தலைமேலே யேறிநின்ற விஷங்களெல்லாம், கோனென்ற குருவருளால் விஷங்கள் செத்து கூறுகெட்டு மாண்டதுவுங் குணமேயாகும், தேனென்ற மொழியுடையாள் சொன்னவித்தை செகத்தோர்கள் தானறிந்து செய்துகொண்டால், மானென்ற தர்மமடா மக்காள்மக்காள் மகத்தான தர்மமது வருகுந்தானே. (986)

குன்மமெட்டுக்கு லவண லேகியம்.

தானான குன்மமது வெட்டுந்தீரச் சங்கையுடன் § லவணலேகியத்தைக்கேளு, தேனான முப்பூவு மாறுமொன்றாய்ச் செம்மையுடன் றூன்பொடித்து மைந்தாகேளு, ஆனான பாண்டத்தி லிட்டு மைந்தா 'அப்பனே தெளிவிறுத்து பாண்டத்திட்டு, கோனான தண்ணீரை வாங்கிமைந்தா குணமாகப் பனிவெல்லங் கரைத்துக் கொள்ளே. (987)

கரைத்ததனை யடுப்பேற்றிக் கிண்டிக்காய்ச்சி கருவான பொடியதனிற் போட்டுக்கிண்டி, திறத்துடனே கிண்டியதை வழித்துக்கொண்டு செம்மையுடன் பீங்கானிற் பதனம்பண்ணி, வருத்தமுள்ள குன்மமதற் கையாநீயும் வணக்கமுடனெல்லிக்காயளவுகொண்டால், கருத்தழிந்து குன்மமெல்லா மோடிப்போகுங் கருவான லவணலே கியந்தான்பாரே. (988)

§ லவணமேன்பது—உப்பு.

கிரந்தி சூலைக்குக் களிம்பு.

பாரப்பா கிரந்திமுதல் சூலைக்கெல்லாம் பக்குவமாய்க் களிம்பு வகை யொன்றுகேளு, ஆரப்பா வறிவார்கள் காகக்கட்டி அப்பனே துத்தமுட ரசமுங்கூட்டி, வீரப்பா வெள்ளைக்குங் கிலியஞ்சேர்த்து விபரமுள்ள சுண்ணும்பு கூட்டியாட்டி, நேரப்பா வெள்ளையதில் ரெட்டிபோட்டு நெகிழநன்று யரைத்ததனை வழித்துக்கொள்ளே. ()

வழித்தகளிம் பதனைவொரு சிமிழில்வைத்து மகத்தான புண்புரைகள் தனக்குமைந்தா, கிழித்ததுணி தனிற்றடவிப் போட்டுப்பாரு கேடுகெட்ட சூலைமுதல் பவுந்தரங்கள், சுழித்தகண்ட மாலையொடு பிளவைவாழை சுருக்கான கண்ணேசி லிங்கப்புற்று, நெளித்ததொரு கிலந்திமுத லிவைகளெல்லாம் நேர்மையுள்ள களிம்பதற்கு வோடும்பாரே. (990)

பாரப்பா சகலவியா திகள்தான்தீரப் பதிவான லேகியந்தா னென்றுகேளு, கோரப்பா திரிகடுகு வெடுத்துக்கொண்டு நிசமான முப்பூவுங் கூடச்சேர்த்து சேரப்பா பூரணமும் நாலுக்கொன்று சேர்த்துநன்றாய் நாதமென்ற தேனைவிட்டு, சாரப்பா நன்றாகப் பிசைந்துருட்டித் தன்மையுடன் மேருதனிற் பதனம்பண்ணே, ()

பதனமுள்ள லேகியத்தில் மைந்தாநீயும் பக்குவமாய் மிளகளவுகொண்டுதேறு, § அதனமாய் கொள்ளாம லளவாய்க்கொள்ளு அப்பனே மண்டலத்தில் சட்டைபோகும், விதனமென்ற நரைதிரைகள் விலகிப்போகும், வேதாந்த தேகமது முத்தியாகும், கிதமாகக் கொண்டுகரை யேறினுக்கால், நீடூழி காலவரை யிருக்கலாமே. (992)

இருக்கலா மெந்தநா ளாகினுந்தான் என்மக்கா ளறிவுகுரு பூரணமேயானால். சுருக்கலாம் பெருக்கலாஞ் சுகமாமந்த சோதியென்ற சிவசத்தி தன்னைக்கண்டால், முருக்கலாய் நின்றமுருக் கதனைவெட்டி மூடிநின்ற திரையகற்றி முக்கால்கொண்டு, திருக்கெலாந் திருத்தியந்த தீபந்தன்னிற் சிக்கலாஞ் சிக்கறுத்து விறங்கலாமே. ()

---

§ ஆதனமாயென்பது—மிகுதியாய்.

இறங்கலா மறிவுகொண்டு மூலாதாரம் ஏறியந்த மேலாதாரத்தினின்று, உறங்கலா முறக்கமற்ற விடத்திலேதான் உண்மையென்ற பிரணவத்தி னுருதியாலே, சரங்களாய் நின்றதிசை வாய்வைப்பற்றி சாலோக சாமீப சாரூபத்தில் கிரங்கடனைத் தான் கூப்பி யடிதொழுதுகொண்டு கனகசபை சாயுச்சியங் காணலாமே. ()

காணலாங் கருணையுள்ள தெட்சணுயன் காவியமும் பூரணமுங் கலந்துபார்த்தால், தோணலாஞ் சகலகலை சுத்தமெல்லாந் துறையான துறைகளெல்லாந் தோணுதற்கு, பூணலாம் ராமனுட வாக்கியந்தன்னிற் பொதுவான வாயிரத்தைப் பொருந்திப் பார்த்தால், ஊணலாங் காலறிந்து வாசிகொண்டு உண்மையென்ற தீபமதி லொடுங்கலாமே. (995)

ஆமப்பா வொடுங்குமிடந் தனையறிந்து அந்தவிட முறுதியென வமர்ந்துகொண்டு, காமப்பால் கானற்பால் கொண்டுதேறிக் கருவான யிருதயத்தின் கசடறுத்து, வாமப்பால் மதியான வமுர்தமுண்டு வளர்பிறையுந் தேய்பிறையு மருவிப்பார்த்தால், நாமப்பா வென்றமத வொன்றுமில்லை நல்வினையுந் தீவினையு மொன்றும்பாரே. ()

ஒன்றுபடக் கண்டவிட மமாவாசியாகி உறுதியென்ற திரிதிகையுஞ் சூக்ஷமாகும், நன்றுபெறப் § பிரதமையில் வாசிகொண்டு நலங்காமற் றுதிகையினு லமுர்தமுண்டு, நின்றுகொண்டு திரிதிகையில் திருத்தியாகி நேமமுட னவ்வெளியில் வெளிச்சமாகி, கொண்டுநின்று வம்மதியும் வளர்ந்துதையா கூர்மையுட னுனதிடத்திற் கூர்ந்துபாரே (997)

பார்ப்பதுதான் பரிதியது சத்தியாகும் பரிவான மதியதுவுஞ் சிவமதாகும், தீர்ப்புடனே சொல்லுகிறேன் சுடர்தானந்த சிவசிவா யிம்மூன்றுந் தெளிந்துகேளு, மூர்ப்புடைய சல்லியென்றுஞ் சன்னுசியென்றும் மொழிந்தார்கள் பெரியோர்கள் சித்தரப்பா, கூர்ப்புடைய சத்தியது பூமிநாதங் குறியான சிவமதுதான் விந்துவாச்சே. (998)

§ பிரதமையிலேன்பது—பூரணையில்

ஆச்சப்பா நாதவிந்து கூடியொன்று யணுகிநின்ற விடமது தான் சுடர்தானப்பா, மூச்சப்பா தானடங்கித் தியானஞ்செய்ய முறைமையொன்று சொல்லுகிறேன் கர்ப்பக்கூறு, நீச்சப்பா நிலையாது விந்துதண்ணீர் நிசமாக காலசிவம் பூசைபண்ணி, பேச்சப்பா பேசாத நாதவுப்பு பெலமான சத்திவுப்பைப் பேணிக்கொள்ளே. (999)

கொள்ளடா மாலையிலே பூசைபண்ணிக் கொண்டபின்பு குருபதத்திற் கூர்மையாக நில்லடா நினைவுகொண்ட சுடர்தானண்டம் நிசமான பிண்டமடா பிரத்தியாகாரம், அல்லடா அக்காரங்கொண்டுவந்து அதன்ரசத்தில் கற்பூர வுப்புஞ்சேர்த்து, உள்ளடா வுறவாக வுறவுபண்ணி உத்தமனே ரவியில்நின்று பூசைபண்ணே. (1000)

பூசைபண்ணப் பூசைதனையறிந்துகொண்டு பூரணமாம் வாசிதனை மூலத்தேற்றி, நேசமுட னேசமதாய்க் கும்பத்தேகி நினைவாகப் பூரணத்திற் பூரித்தாக்காள், பாசமுள்ள ரவிதேய்ந்து மதிசேரமனுகப் பகிர்ந்தபடி யாதியில்நின் றெழுத்தைப்பார்த்தால், வாசமுள்ள கற்பூரத் தீபதீப மயங்காத கிரிதீபஞ் சோதிசோதி. ()

இந்நூல் பெருமை.

சோதியென்ற வாயிரத்தை யெடுத்துமைந்தா சுகமாக மடிமீதில் வைத்துக்கொண்டு நீதமுடன் மவுனமதாய் பார்த்துஅந்த நிலையறிந்து கருக்குருவாய் நின்றோர்க்கெல்லாம், வாதமுறு ஞானமுறும் வசியமாகு மகத்தான பூரணமும் பூரணமேயாகும், நாதமுட னாதமதா யொடுங்குகின்ற நாதாந்த சிவயோக பாதமுற்றே. ()

முற்றான விந்நூல்தா னாயிரந்தான் முனையான கருக்குருவும் வெளியாய்ச்சொன்னோம், கற்றான தைலங்கள் கிரதப்போக்கு கருவான லேகியங்கள் பற்பமார்க்கம், சொற்றான கபாடங்கள் நசியப்போக்கு, கனுவான கிஷாயங்கள் திலர்தப்போக்கு பற்றான சாலங்கள் பரிசுவேதை பாடினோ மாயிரத்தில் பணிவாமுற்றே. ()

இராமதேவர் வைத்திய காவியம் ௲

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

இராம தேவர் வைத்திய காவியம் ௩.

அவிழ்த அட்டவணை.

பெயர்.	பக்கம்.
அகப்பைச் சித்தர் கற்பம்	47
அகார உகார தீட்சை	91
அசட்டுவாதி	139
அஞ்சனத் தைலம்	23
அட்டசித்துத் தைலம்	20
அட்டகர்ம மெழுகு	87
அட்டகர்மச் சிலை	89
அட்டாங்க யோகம்	186
அட்டாங்க யோக தீட்சை	192
அட்டகர்மத் தைலம்	86
அண்டச் சூரணம்	27
அண்ட மெழுகு	28
அண்ட மெழுகு	101
அண்டத் தைலம்	108
அப்பு வகுப்பு	180
அமாவாசி	99
அமுரி கற்பம்	133
அமுர்த சஞ்சீவி	166
அரிதாரம்	105
அரிதார ஈயம்	142
அரிதாரக்களங்குச்செந்தூரம்	143
அரியெழுத்து மகிமை	150
அழுகண்ணி சித்தர் கற்பம்	48
அறுவகைச் செயநீர்	142
ஆகாச வகுப்பு	181
ஆக்கிருஷ்ணம்	88
ஆசனம்	187
ஆவரம்பட்டைத் தைலம்	194
இடைக்காடார் கற்பம்	45
இடைக்காடார் முறை	69
இந்நூல் பெருமை	202
இரசவாலை	37
இரவி தெரிசனம்	189
இரவிமதிக்குறி	93
இராகுவின் பதி	98
இரும்பு சத்துரு மித்துரு	185
இளநீர் மெழுகு	135
உச்சாடணம்	82
உச்சாடணம்	88
உப்புக் கட்டு	159
உப்பு மை	164
ஏமம்	187
கடுக்காய்ச் சூரணம்	52
கடுக்காய் லேகியம்	138
கட்டுவகைச் செயநீர்	18
கமலமுனி கற்பம்	45
கமலமுனி கற்பம்	52
கமலமுனி முறை	67
கமலமுனி முறை	72
கரியுப்புத் திராவகம்	35
கருவூரார் கற்பம்	43
கல்லுப்புச் சுண்ணம்	160
கல்லுப்புச் சத்துரு	183
கல்லுப்புத் திராவகம்	35
கற்பூரச் சுண்ணம்	9
கற்பூரச் சுண்ணம்	160
கற்பூர வைப்பு	154
காது நஞ்சுக் கரு	97
காயாதி கற்பம்	39
கார சத்துரு மித்துரு	184

பெயர்.	பக்கம்.
காரிய சத்துரு மித்துரு	186
கிரக சித்து	97
கிரந்தி சூலைக்குக் களிம்பு	200
குட்டவன் சுத்தி	171
கும்பமுனி நூற் கருக்கள்	57
கும்பமுனி ஆயிரம் பார்க்க	57
குன்மம்8-க்குலவணலேகியம்	199
கெந்தி சவர்க்காரம்	129
கெந்தி பாஷாணம்	159
கேசரி மை	163
கேது கிரகம்	99
கொங்கணர் கற்பம்	43
கோரக்கர் கற்பம்	46
கௌரி சவர்க்காரம்	129
கௌரி மணிக்களங்கு	146
கௌரி களங்குச் செந்தூரம்	146
சஞ்சார சமாதி	177
சட்டநாதர் கற்பம்	41
சட்டநாதர் முறை	61
சதாசிவ தெரிசனம்	191
சத்துரு மித்துரு	69
சத்திசிவ பூசை	118
சத்தி சிவம்	110
சத்திசிவ மெழுகு கற்பம்	134
சமாதி	189
சருவமேர்கத் தைலம்	24
சவர்க்காரம்	12
சவர்க்காரச் சுண்ணம்	17
சவர்க்காரம்	111
சவர்க்காரம்	125
சவ்வீரமணிக்களங்குச்செந்தூ	194
சாதிலிங்க வாலை	36
சாத்திரம் படிக்கும் விதம்	30
சாரக் கட்டு	113
சார சத்துரு மித்துரு	182
சிதம்பரச் சக்கர தீட்சை	80
சிப்பி பற்பம்	117
சிவவாக்கியர் கற்பம்	48
சிவவேட தீட்சை	192
சிவ வேடம்	192
சுண்ணப் பெருமை	112
சுந்தரானந்தர் கற்பம்	43
சுந்தரானந்தர் முறை	63
சுரபாண்டத் தைலம்	130
சுரைவித்துத் தைலம்	194
சூதமுனி கற்பம்	53
சூதமுனி முறை	70
சூத சத்துரு மித்துரு	184
சூரியானந்தர் கற்பம்	50
செந்தூரம்	65
செந்தூர கற்பம்	124
செந்தூரம்	148
செந்தூரம்	150
செம்பு சுத்தி	169
செம்பு சுத்தி	170
ஞானம்	15
ஞானக்கூறு	133
ஞானம்	162
ஞானி அண்டம்	112
தங்கச் சத்துரு	184
தம்பனம்	81
தம்பனம்	87
தாம்பிரச் சுண்ணம்	161
தாரணை	188
தாளகப் பாஷாணம்	158
திராவகம்	33
திருமூலர் வல்லாரை கற்பம்	40
திருமூலர் முறை	60
திருவுருத் தைலம்	117
திலதவளைத் தைலம்	20
திலத லிங்கம்	98
திலதம்	165

பெயர்.	பக்கம்.
துருசு சுண்ணம்	11
துருசு சவர்க்காரம்	127
துருசு வைப்பு	156
துருசு சுண்ணம்	161
துருசு சத்துரு மித்துரு	182
தென்னங்காய் சவர்க்காரம்	127
தேயு வகுப்பு	180
நந்தீசர் கற்பம்	54
நந்தியுப்புச் செயநீர்	162
நவக்கிரக ரவிமதி	96
நவச்சார வைப்பு	156
நாகக் கட்டு	114
நாகக் குரு	142
நாக சுத்தி	172
நாகரச பற்பம்	144
நாகச் செந்தூரம்	115
நாக செந்தூரம்	174
நாக சத்துரு மித்துரு	185
நாக பற்பம்	172
நாத மணி	145
நியமம்	187
நிலப் பூரக்கவசம்	102
நூல் வகை	139
நூற்கோர்வை	37
நூற்செருகை	115
பசளை	168
பஞ்சபூதச்சரக்கு	68
பரிச் சுண்ணம்	144
பருதிமதிசுடர் கற்பம்	119
பாம்பாட்டிசித்தர் வாதமுறை	76
பாம்பாட்டி சித்தர் கற்பம்	51
பாஷாணக்கட்டு	106
பாஷாணக்கட்டு பற்பம்	151
பாஷாண சுத்தி	174
பிண்டமெழுகு	30
பிரமமுனி கற்பம்	55

பெயர்.	பக்கம்.
பிரம தெரிசனம்	190
பிரத்தியாகாரம்	188
பிராணாயம்	188
பிருதிவு வகுப்பு	180
புத்தி	70
புத்தி	87
புஷ்பம்	140
பூரண மை	162
பூரணத் தைலம்	195
பேதனம்	86
பேதனம்	89
போகர் கற்பம்	42
போகர், கொங்கணர், கருவூரார் முறை	62
மச்சமுனி கற்பம்	44
மச்சமுனி முறை	67
மச்சமுனி சரக்கு வைப்பு	154
மதியமூர்த்த மெழுகு	132
மதி தெரிசனம்	190
மயேஸ்பர தெரிசனம்	190
மருதோன்றித் தைலம்	195
மாரணத் தைலம்	22
மாரணம்	85
மாரணம்	88
முப்பொருளின் அடிமுடிமூலம்	6
முன்விதைகொள்ளஅனுப்பா	121
மூடர்கள்	166
மெய்க்குறியஞ்சனம்	96
மெழுகுவகைத் தைலம்	19
மேற்ருட்டின் பற்பம்	136
மை	31
மோகனம்	81
மோகனம்	87
லிங்க மெழுகு	105
லிங்க சவர்க்காரம்	128

பெயர்.	பக்கம்	பெயர்.	பக்கம்.
லிங்கக் களங்கு செந்தூரம்	147	வித்து வேசனம்	88
லிங்க பாஷாணம்	158	வித்துக் கவசம்	120
வங்கச் சத்துரு மித்துரு	186	விந்தின் மகிமை	120
வசிய விபூதி	137	விஷ்ணு தெரிசனம்	190
வஞ்சிப்பால் பிட்டு	132	விஷந்தீர விஷ மெழுகு	199
வஞ்சிக்கொடித் தைலம்	132	வீர மெழுகு	108
வல்லாரைச் சூரணம்	26	வீர சவர்க்காரம்	128
வல்லாரை லேகியம்	137	வீர வைப்பு	155
வழலை	4	வெடியுப்புச் சுண்ணம்	8
வாசி தேவர் அரிதாரக்குரு	59	வெடியுப்புச் சுண்ணம்	107
வாசி	28	வெடியுப்புத் திராவகம்	34
வாடை	164	வெடியுப்புச் செயநீர்	107
வாசி தேவர் கடுக்காய் பற்பம்	39	வெடியுப்புச் சத்துருமித்துரு	138
வாதிகள் பிரட்டு	79	வெள்ளாட்டீரல் கற்பம்	122
வாய்வு வகுப்பு	181	வெள்ளாட்டின் பூமால்	140

அவிழ்த முறைகள் முற்றிற்று.

உண்மையான நூல்! உண்மையான நூல்!!

ஒன்பது விஷ வைத்திய ஆரூடம்.

இந்தப் புஸ்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் கைவசம் இருக்கவேண்டியது இப்புஸ்தகத்தில் பாம்பு, தேள், நட்டுவாக்காலி, பூரான், செய்யான், எலி, நாய், வண்டு முதலான எல்லா விஷங்களுக்கும் சமீபத்தில் கிடைக்கக்கூடிய பச்சிலை மூலிகைகளினாலும் கடைச் சரக்குகளினாலும் உடனே சவுக்கியப் படுத்தக்கூடிய அநேக விதமாக இலகுவான முறைகளுடனும், யந்திர மந்திர சக்கர பூசாவிதிகளுடனும், கூறப்பட்டிருக்கிறது. ஓலையேட்டுப் பிரதிகளாயிருந்து எமது முன்னோர்களால் கையாண்டு வந்து புதிதாய் அச்சிட்டு வெளியாக்கியிருக்கிறது இப்புஸ்தகத்தை வாங்கிப்பார்த்தால் இதனுண்மை நன்கு விளங்கும். ஒன்பது விஷ வைத்திய ஆரூட சாஸ்திரங்கள் சேர்ந்த

கலிக்கோபயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

☞ குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

பரமபதி துணை.

புத்தக விளம்பரம்.

இந்த வைத்திய காவியம் ஆயிரமும் பாடிய இராம தேவர் மக்கா தேசம் போய் யாக்கோபு என்று பெயர் பெற்றிருக்கும்போது பாடிய நூல்களின் விபரம்.

யாகோபு வயித்திய சிந்தாமணி 700ம்		
	அதற்கு சூஸ்திரம் 50ம் சேர்ந்தது விலை ரூ.	1—2—0
ஷை	சுண்ணக்காண்டம் 600	1—0—0
ஷை	வாத சூஸ்திரம் 400	0—12—0
ஷை	லோகச் செந்தூரம் 300	0—8—0
ஷை	ஷை செந்தூரசூஸ்திரம் 150ம்,	
	அதற்கு சூஸ்திரம் 50ம் சேர்ந்தது	0—7—0
ஷை	சுண்ணம் 300	0—8—0
ஷை	சுண்ண சூஸ்திரம்155ம், ஷை 55ம் சேர்ந்தது	0—7—0
ஷை	பஞ்சமித்திரம் 300	0—8—0
ஷை	வகாரக்களங்கு என்னும் வாத வைதியம் 300	0—8—0
ஷை	வைத்தியம் 300	0—8—0
ஷை	தண்டகபட்சணி 110ம், வைத்திய சூஸ்திரம் 55ம், எடைபாகம் 16ம், கைபாகம் 16ம் சேர்ந்தது	0—7—0
ஷை	இந்த பதினேழு சாஸ்திரத்திற்கும் திறவுகோலான கல்லாடம் அரும்பத உரையுடன்	0—12—0
இந்த சாஸ்திரங்கள் பதினெட்டும் சேர்ந்த யாகோபு வைத்தியக் கோர்வை கலிக்கோ பயிண்டு பெரிய புக்		10—0—0

பச்சிலை மூலிகைகளின்.

சித்த வைத்திய அகராதி.

சித்தர் நூல்களிலுள்ள மருந்துச் சரக்கு, மூலிகைச் சரக்கு உப்புச் சரக்கு, உபரசச் சரக்கு, பாஷாணச் சரக்கு முதலியவைகளின் பரிபாஷைப்பெயர்களை விபரமாய்ச்சொல்லக்கூடியதும், சத்துரு மித்துரு இன்னதெனத் தெளிவாய்க் காட்டக்கூடிய் சாஸ்திரம் சுத்தப் பதிப்பு கலிக்கோபயிண்டு புக் 1-க்கு ரூ. 1—8—0

வைத்திய வாத யோக

ஞான சாஸ்திரத் திரட்டு.

பதினெண் சித்தர்களால் பாடியதும், வெகுகாலமாய் அச்சுக்கு வாராமலிருந்ததுமான ஓலை யேட்டுச்சுவடிகளை ஏராளமான பொருட் செலவுசெய்து நாலாபக்கங்களிலிருந்து சேகரித்து (வைத்திய வாத யோக ஞான சாஸ்திரத் திரட்டு) என்ற பெயருடன் 10 பாகங்களாக திக்குக்கடிதத்தில் சுத்தப்பதிப்பாக அச்சிட்டு, கலிக்கோ பயிண்டு செய்து வெளியாகியிருக்கிறது. பாகம் 1-க்கு விலை ரூ. 1—0—0

அகஸ்தியர்	அமுதகலைக்கியானம் 1200	0—12-0
ஷை	பூரணசூஸ்திரம் 216	0—8—0
ஷை	பூரணம் 205	0—8—0
ஷை	கற்ப முப்புக்குருநூல் 200	0—8—0
ஷை	பன்னிருகாண்டம் 200	0—8—0
ஷை	பரிபாஷை 300	0—8—0
ஷை	வைத்திய ரத்தினச்சுருக்கம் 300	0—8—0
புலஸ்தியர்	கற்பம் 300	0—8—0
ஷை	வாத சூஸ்திரம் 300	0—8—0
திருவள்ளுவர்	கற்பம் 300ம், அதன் சுருக்கம் 100ம், ஷை 50ம், ஷை 30ம், ஷை 16ம், ஷை 11ம், சேர்ந்தது	0—12-0
ஷை	பஞ்ச ரெத்தினம் 500	2—8—0
நந்தீஸ்வரர்	நிகண்டு	0—8—0
கருவூரார்	வாதகாவியம் 700	0—12-0
இராமதேவர்	சிவயோகம்	0—5—0
சுப்பிரமணியர்	ஞானம் 500	0—8—0
ஷை	ஞானம் 200	0—6—0
சட்டமுனி	ஞானம் 200	0—5—0
உரோமரிஷி	பரிபாஷை 300	0—8—0
தன்வந்திரி	வைத்தியக்குருநூல் 200	0—7—0

இன்னும் வேண்டிய புஸ்தகங்கள் நேரிலும் வீ பீ தபால் மூலமா யும் கீழ்க்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

குரு. இராமசாமிக்கோன்

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.